
www.padippakam.com



# தாய்

டேனிஷிலிருந்து

தமிழில்

த.தர்மலிங்கம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

21/01/02

**அனசனின் அமர கதைகள்**

**தாய்**

**டேனிஷிலிருந்து**

**தமிழில்**

**த. தர்மகுலசிங்கம்**

படிப்பகம்

www.padippakam.com

# moderen

## H.C. ANDERSEN

Samlede eventyr og historier

BIND 1

Tamilsk Oversættelse

*Tharmakulasingam Tharuman*

*Skrænten 31*

*6600 Vejen, Danmark*

Cover Design :
T. SOUNDER
Denmark

Published by :
Dr. PON. ANURA

Mithra Publications

1/23 MUNRO STREET, EASTWOOD 2122 AUSTRALIA

375/8-10 ARCOT ROAD, CHENNAI 600 024 INDIA

39 VANNIAH STREET BATTICALOA (EP) SRI LANKA

படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## எச்.ஸி. அனசன்

16 தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள்

தொகுதி -1

தமிழில்
த. தர்மகுலசிங்கம்

ஓவிய அமைப்பு :
T. சௌந்தர்

மித்ர வெளியீடு
சிட்னி - சென்னை - மட்டக்களப்பு

படிப்பகம்

www.padippakam.com

முதற் பதிப்பு : ஆகஸ்டு 1996
மித்ர : 12
உரிமைப் பதிவு
விலை ரூ. 50-00

*THAAI*

Selected Stories
from
HANS CHRISTIAN ANDERSON

Volume - I

First Edition :
15th August, 1996

Tamil Translation
by
T. THARMAKULASINGAM

Price :
Rupees Fifty Only

Pages :
200 + IV

Printers :

Mithra Book Makers

அமைப்பு : இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்

படிப்பகம்

www.padippakam.com

என்னுள்
சுகமாய் - சுருதியாய் -
சக்தியாய் - இயக்கமாய் - தர்மமாய் -
ஒளியாய்
இணைந்தும்

புதியன சாதிக்கும்
சமுதாயப் பணியிலே
சகாவாய் - தோழியாய்
ஊக்கமும் ஆக்கமும்
தந்தும்

என் வாழ்க்கையில்
அர்த்தமும்
வசந்தமும்
புஷ்பிக்கும்

என் மனைவி
பவானி
அன்புக்கு

இந்நூல்
**சமர்ப்பணம்**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பதிப்புரை : 5
என்னுரை : 7
முன்னுரை : 9

கதைகள்

1. பேனாவும் மைக்கூடும் 17
2. சக்கரவர்த்தியின் புதிய ஆடைகள் 22
3. தம்பலினா 32
4. தாய் 54
5. தேநீர் பாண்டம் 65
6. சிவப்புச் சப்பாத்துகள் 69
7. சிறிய தீக்குச்சிப் பெண் 82
8. முட்டாள் ஜாக் 87
9. கடற் கன்னி 97
10. நத்தையும் ரோசாப்புதரும் 138
11. குறும்புச் சிறுவன் 143
12. கூலக் கோதுமை 148
13. நிழல் 152
14. உயரப் பாய்ச்சல்காரர் 175
15. பூரண மெய் 179
16. நீர்த்துளி 185
17. டேனிஷ் மேதையும் இக்கதைகளும் 189

படிப்பகம்

www.padippakam.com

# நன்றிகள்

என்னுள் சமூக அக்கறை உருவாக்கிய ஆசிரியர் **கே. இராசரத்தினம்**

என் சமுதாய வாழ்க்கையில் ஓர் உடன்பிறப்பாக வாழ்ந்து, இந்நூலுக்கான அட்டையை வடிவமைத்துத் தந்த தம்பி **ரி. சௌந்தர்**

டேனிஷ் கலாசாரத்திலும் மொழியிலும் பற்றார்வம் ஏற்படுத்திய சட்டத்தரணி Henrik Luth

இத்தமிழாக்கும் பணியில் ஊக்கமும் உற்சாகமும் வழங்கும் Post Denmark - Vejen அமைப்பினர்

இந்நூலின் உருவாக்கத்திலே ஒத்தாசை செய்த நண்பர்கள் சென்னை ஓரியண்ட் லாங்மன் பதிப்பாசிரியர் **ஆர். வெங்கடேஷ்,** ஓவியர் **ஜி.சி.சேகர், இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்**

அணிந்துரை வழங்கிக் கௌரவப்படுத்திய 'நிகழ்' ஆசிரியர் **ஞானி**

**மித்ர** வெளியீடாக மகிமைப் படுத்திய டாக்டர் **பொன். அநுர**

கடைசியாக, ஆனாலும் நிறைவாக, எனதும் என் சமூகத்தினதும் கலங்கரை விளக்காக வாழும் **எஸ்.பொ.**

என் மனசு நிறைந்த நன்றிக் குரியர்

படிப்பகம்

www.padippakam.com

# பதிப்புரை

**பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே** என்பது நன்னூலின் முடிவு. புறநடையாக அமையும் இந்த விதி, தமிழ் புதிய வீறுகளை உறிஞ்சிக் கொள்ள வழி சமைத்த உபகாரி!

பழசுபடுவதற்கு நூற்றாண்டுகளல்ல, தசாப்தமே போதும் என்கிற ஓர் அவசர அறிவு யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சென்ற தசாப்தத்தின் முற்கூறில், பெருந் தொகையான ஈழத்தமிழர்கள், நிர்ப்பந்த வசத்தால், பல நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து சென்றார்கள். தஞ்சமடைந்த நாடுகளில் வாழும் உரிமையும் வசதியும் கோருதல் நியதி. அவர்களை 'புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்' என்கிற சொற்றொடராலே குறிப்பிட்டோம். அவர்கள் அனைவரும் ஒரே வகைத்தான பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகக் கற்பித்தும் பேசியும் வந்தோம். அவர்கள் பிரச்சினைகள் அனைத்தும் ஒரே வகைத்தானவையல்ல என்கிற உண்மை கோலங்காட்டத் துவங்கியுள்ளது. இந்த வேறுபாடுகளைப் புரிந்து, இந்த வேறுபாடுகளையும் இருபத்தியோராம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சிக்கு ஆதாயமாகப் பயன்படுத்தலாம் என்கிற கரிசனையின் தோற்றுவாயாகத் 'தாய்' என்னும் இத்நூல் வெளிவருகின்றது. **மித்ர**வின் புதிய அக்கறைகளை இது சுயமே விளக்கும்.

ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் ஆங்கிலம் அல்லாதன தொழில் மொழிகளாகப் பயிலப்படுகின்றன. அங்கு வாழும் தமிழ்ச் சிறார் அந்நாடுகளின் தேசிய மொழிகளிலே கல்வி கற்கிறார்கள். காலப்போக்கில், ஜேர்மன் - பிரஞ்சு - டேனிஷ் போன்ற அவர்களுடைய

படிப்பகம்

www.padippakam.com



ஜீவனோபாய மொழிகளின் கலை-இலக்கிய வல்லபங் களின் தனித்துவங்களிலே அவர்கள் மயல் கொள்ளுதல் இயல்பு. இந்த மயல் அவர்களுடைய கலை-இலக்கியப் படைப்புகளிலே இயல்பாகவே புகுந்து கொள்ளும். இந்தக் கலப்பு, அன்றேல் இணைப்பு, ஈழத் தமிழர் களுடைய படைப்புகளிலே புதிய பார்வையையும் பரிமாணத்தையும் சேர்க்கும்; சேர்க்க வேண்டும். இவற்றாலும், இருபத்தியோராம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள் புதிதுகள் புனையும் வாய்ப்புகள் பெருகும்.

புதிய உண்மைகளைப் பிரசித்தம் செய்யும் முயற்சி களுக்கும் மித்ர வெளியீடு களம் அமைத்துக் கொடுப் பதிலே முந்தி நிற்கும் என்பதின் சுவிசேஷமாகவும் 'தாய்' அமைகின்றது. இந்தப் புதிய அக்கறைகள் தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் பிரசித்தமாகுதல் சேமம். ஈற்றிலே, இந்தத் திரிவேணி சங்கமத்திலேதான், இருபத்தியோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் பிரவாகம் ஆரோக்கியம் பெறுமென்று நம்புகிறேன்.

டாக்டர் பொன். அநுர

mithra publications

1/23, Munro Street
Eastwood 2122
AUSTRALIA

(02) 868-2567

படிப்பகம்

www.padippakam.com

# என்னுரை

இனம் - மதம் - மொழி - நிறம் ஆகியனவற்றைக் கடந்து, மனித நேயத்தின் பல கோலங்களையும் படைக்கவும் பகிரவும் மனித குலம் உருவாக்கிய கலைவடிவமாக நான் இலக்கியத்தை விளங்கிக் கொள்ளுகிறேன். எனவே, டென்மார்க்கின் மனித நேயக் கோலங்களும் சமஸ்தமானவை. இவற்றை உள்வாங்கித் தமிழ் மூலம் பிரசித்தம் செய்தல் டென்மார்க் வாழ் தமிழர்களுடைய இலக்கியப் பணிகளுள் ஒன்று என்று உணர்கிறேன். நன்றிக் கடன் என மொழிதல் கொச்சை. அடுத்த நூற்றாண்டின் தமிழ் இலக்கிய மதர்ப்புக்கு இஃது உபகாரமாய் அமையும். இந்த அவதானங்களுடனேயே, அனசனின் அமர கதைகளின் முதலாவது தொகையாக 'தாய்' வெளிவருகின்றது. எதற்கும் ஓர் ஆரம்பம் தேவை. இங்கு, இதனால், இவ்வாறு, இதற்குப் பிள்ளையார் சுழி இடப்படுகின்றது.

'ஒரு தாயின் கதை'யை 1991இல் தமிழ்ப்படுத்தினேன். புலம் பெயர்ந்த தமிழர்களுடைய மாசிகையான 'அக்கினிக் குஞ்சு'வில் அது வெளிவந்தது. அத்துடன் 'அனசனுடைய கனவுலகக் கதைகள் அனைத்தும் தமிழில் வெளிவருதல் தக்கது. அந்தப் பாரிய பணியை—அனசனின் கதைகளைத் தமிழ்ப் படுத்தி அழகிய நூல்களாக வெளியிடும் பணியை—டென்மார்க்வாழ் தமிழ் மக்கள் செய்தல் புகலிடம் தந்த மண்ணுக்குச் செலுத்தும் நிறைவான அஞ்சலி' என்கிற என்னுடைய ஆசையையும் வெளியிட்டேன்.

படிப்பகம்

www.padippakam.com



சுவீகாரத் தாயின் கலாசாரத்துடன் இணைவதற்கு இஃது ஓர் அச்சாரம் என நம்பினேன்.

அனசனின் இலக்கிய வல்லபம் அச்சுருவில் நாலாயிரம் பக்கங்களுக்கு மேல் விரியும். இது நிதி வசதி உள்ள பல்கலைக் கழகம் அல்லது நம்பிக்கை நிதியம் ஒன்றினாலேதான் சாத்தியமாகும். அவற்றின் கவனத்தை ஈர்ப்பதற்காகவேனும் இப்பணி உரிய முறையிலே துவங்கப்படுதல் வேண்டும். தானம் தன் வீட்டில் துவங்குதல் நலம். எனவே, என் வசமுள்ள வளங்களைத் திரட்டி, இந்த முதலாவது கோவையை வெளியிட்டுள்ளேன். ஆண்டுதோறும், ஒரு கோவையாவது வெளிவருதல் வேண்டும் என்பது என் ஆசை.

இப்பணி வெற்றி பெறுவது, டேனிஷ் - தமிழ்ப் புரிந்துணர்வினை ஆத்மார்த்தமாக விளங்கிக் கொள்ளும் நல் நெஞ்சங்களின் நிறைவான ஆதரவிலேதான் தங்கியுள்ளது என்பதையும் அறிவேன். அடுத்து வரும் தொகைகளை இன்னும் செப்பமாக வெளியிடுவதற்கு உங்களுடைய ஆதரவு மட்டுமல்ல, உங்களுடைய ஆலோசனைகள், நேர்மையான விமர்சனங்கள் ஆகியன மிகவும் உதவும். இவற்றை நான் யாசிக்கிறேன். தமிழ் இனத்தினதும் மொழியினதும் கௌரவத்தினை நிலைநாட்டும் பணியிலே மேற்கொள்ளப்படும் யாசகம் குறித்து நான் வெட்கப்படவும் இல்லை.

வேஜன், டென்மார்க்
15.08.1996

த. தர்மகுலசிங்கம்

www.padippakam.com

# முன்னுரை

ஆங்கிலத்தின் வழியே ஆண்டர்சன் என்பவரின் அற்புதக் கதைகளை நாம் படித்து வியந்திருப்போம். டேனிஷ் மொழியில் இருந்து இத் தொகுப்பிலுள்ள கதைகள் நேரே மொழி ஆக்கம் செய்யப்பட்டுள்ளன. டேனிஷ் மொழியில் இவரது பெயர் அனசன். இனி இப்படித்தான் இவர் பெயரை நாம் சொல்ல வேண்டும். ஆங்கிலேயர் நம் ஊர்ப் பெயர்களை அவர்களின் ஒலிப்புத் தேவைக்கேற்றபடி மாற்றி வைத்தார்கள். அடிமைப் புத்தியோடு அவற்றை கடைப்பிடித்தோம். அடிமைப் புத்தி என்ற உணர்வு இப்பொழுதுதான் நமக்கு ஏற்பட்டு வருகிறது. அதைக் களைந்து கொள்வதுதான் நம் சுதந்திரத்திற்கான வழி. அனசன் என்றே இனிச் சொல்வோம்.

அனசன் கதைகள் குழந்தைகளுக்கான கனவுக் கதைகள்; தேவதைக் கதைகள். இவை அனைத்தும் அற்புதக் கதைகள். குழந்தைகளுக்காக மட்டுமே இவர் இந்தக் கதைகளை எழுதினார் என்று சொல்ல முடியவில்லை. பெரியவர்களும் நுண்ணறிவோடு கொஞ்சம் முயற்சி செய்தால்தான் பல கதைகளைப் புரிந்து கொள்ள முடியும். இந்தக் கதைகளைப் புரிந்துகொள்ள அழகுணர்வும், வியப்புணர்வும், அற உணர்வும் இருந்தால் மட்டும் போதாது. மெய்யியல் உணர்வுந்தான் தேவைப்படுகிறது. தமிழ்ச் சூழலில் இவ்வகைக் கதைகளின் தேவையை நாம் வற்புறுத்திச் சொல்ல வேண்டியதில்லை.

'நீங்கள் குழந்தைகள் ஆகாவிட்டால் தேவ அரசுக்குள் நுழைய முடியாது' என்று பெரியவர்

www.padippakam.com



களைப் பார்த்து இயேசுநாதர் கூறினார். குழந்தைகள் நெஞ்சில் கபடமில்லை; கள்ளத்தனமில்லை; வேற்றுமை உணர்வில்லை. பணத்திற்கோ அதிகாரத்திற்கோ அவர்கள் இன்னும் வசப்படவில்லை. பறவைகளோடும், விலங்குகளோடும் அவர்கள் பேசுகிறார்கள். உள்ளம் திறந்து உறவு கொள்கிறார்கள். மலர்களின் அழகில் அவர்கள் சொக்கிப் போகிறார்கள். அவர்களோடு வானம் உறவாடுகிறது; தெய்வங்கள் பேசுகின்றன. வயது ஏற ஏற நாம் வலிந்து அவர்களை நம் உலகத்தினுக்குள் திணிக்கிறோம்; அவர்கள் நெஞ்சில் ஆணிகளை அறைகிறோம்! நாமும் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்தோம் என்பதை மறந்துவிட்டு அவசரமாகவும், ஆத்திரத்தோடும் அவர்களுக்குள் நம்மை, நம் அதிகாரத்தை, நம் உலகை திணித்து அவர்களை இறுக்குகிறோம்; திணறடிக்கிறோம்.

அனசன் நமக்கும் சேர்த்துத்தான் இந்தக் கதைகளைச் சொல்லுகிறார். ரோசாப் புதர் தனக்காக வாழவில்லை. தன்னை மணமாக, அழகாக வைத்துத் தன் சூழலை மகிழ்விக்கிறது. ரோசாப் புதர் அடியில் வாழும் நத்தை என்ன செய்கிறது? உலகம் பற்றி இதற்குக் கவலை இல்லை. தன் ஓட்டுக்குள் தன்னை சுருக்கிக் கொள்கிறது. அத்துடன் பெருமை பேசுகிறது. அனசன் நமக்குள் கேள்வி எழுப்புகிறார். நீங்கள் ரோசாப் புதரா? ஓட்டுக்குள் நத்தையா? வில்லோ மரம் புயலுக்கும் மின்னலுக்கும் வளைந்து கொடுத்துத் தன்னைக் காத்துக் கொள்கிறது. இறுமாந்து நிமிர்ந்து நிற்கும் கூலக் கோதுமைச் செடி மின்னல் தாக்க கரிந்து வீழ்கிறது. இங்கும் நமக்குள் கேள்வி: நாம் வில்லோ மரமா? கூலக கோதுமைச் செடியா?

அழகான சிவப்புச் சப்பாத்துக்கள் கரேணுக்குக் கிடைத்தன. மாதா கோவிலின் முன் நின்ற ராணுவ

www.padippakam.com



வீரன் சப்பாத்துக்களை வியந்து சொன்னான். கரேன் உள்ளத்தில் என்னைவிட யாரழகு என்ற உணர்வு எழுகிறது. அவ்வளவுதான்! கோவிலில் எழுந்த இசை அவள் காதில் எழவில்லை. யார் முகமும் அவள் கண்களுக்குத் தெரியவில்லை. சப் பாத்துக்களோடு அவள் கால்கள் நடனமாடுகின்றன. கல்லிலும், முள்ளிலும் அவளை இழுத்தடிக்கின்றன. தன் முனைப்பின் தொல்லை அவளுக்கே தாங்கமுடிய வில்லை. சம்மனசைக் கேட்டுக்கொள்ள, சப்பாத்துக் களோடுகூடிய காலை சம்மனசு வெட்டிய பிறகு தான் அந்தச் சிறுமிக்கு நிம்மதி ஏற்பட்டது. இக் கதை நம்மை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. புலன்கள் நம்மை இழுத்தடிக்கின்றன. உன்னைப் போல யார் அழகு, யார் அறிவாளி என்று சொல்லி நமக்குள் நம் பெற்றோர் முதற்கொண்டு யார் யாரோ எதை எதையோ நமக்கு துருத்திவிடுகிறார் கள்; நமக்குத் தலைகால் தெரிவதில்லை. எனக்கு நிகர் யாரென்று ஆடுகிறோம்; ஆர்ப்பாட்டம் செய் கிறோம். ஏதாவது விபத்து நேர்ந்தாலொழிய தரைக்கு நாம் வருவதில்லை. தரைதான் பத்திரமான இடம் என்று தெரிந்துகொள்ள நமக்கு நாள் ஆகிறது; விபத்துகள் வேண்டியிருக்கிறது.

அரசனுக்கு நிகரான அறிவாளி ஒரு நாட்டில் இருக்க முடியுமா? அரசனின் தன் முனைப்பை துணி வணிகர்கள் தூண்டி விடுகிறார்கள். இறுதியில் பேரர சன் நிர்வாண கோலத்தில் நிற்கிறான். ஒரு குழந்தை தான் இதை அவனுக்குச் சொல்ல,வேண்டியிருக்கிறது. சக்கரவர்த்தியின் நிர்வாணம் நாம் முன்பே படித்த கதைதான். அனுபவம் கூடும் பொழுது இந்தக் கதை யின் அர்த்தப் பரிமாணங்கள் நமக்குள் கூடுகின்றன. இத் தொகுப்பிலுள்ள மேலும் சில கதைகளைப் படிக்

www.padippakam.com



கும் பொழுது அனசனுக்கு, அரசன் - இளவரசன் - இளவரசி என்றால் பிடிக்காது போல தோன்றுகிறது. பல பெரிய நாடுகளுக்கிடையில் அமுக்கப்பட்ட சிறிய நாடு டென்மார்க். அந்த நாடுகளோடு போட்டி போட்டு உலகில் தன் ஆதிக்கத்தை டென்மார்க்கால் கைப்பற்ற முடியவில்லை. அரசின் திமிர்த்தனம் அடங்கத்தான் வேண்டும். ஆதிக்க உணர்வுடன் என்றும் வெறிபிடித்தவன் எப்படி அறிவாளியாக இருக்க முடியும்? ஆதிக்க உணர்வை அவனிடமிருந்து களைந்து அவனை நிர்வாணப்படுத்துவதன் மூலம் அவனை ஆரோக்கியமுடையவனாக, மனிதனாக, மாற்ற முடியும். முட்டாள் ஜாக் செத்த காகத்தை வைத்துத்தான் இளவரசியை வெல்லுகிறான். அதிகாரியின் முகத்தில் களி மண்ணை அப்புகிறான். சாக்கடை நீரில் ஒரு துளியில் ஆயிரக்கணக்கான உயிர்கள் ஒன்றை மற்றது கொன்றுமடிகின்றன. பூதக் கண்ணாடியில் தெரியும் இந்தக் காட்சி உண்மையில் டென்மார்க் தலைநகரில் வாழும் மக்களைப் பற்றிய கேலிச் சித்திரம். நவீன நாகரிகம் இப்படித் தான் நாசத்தை விதைக்கிறது. அனசன் நமக்கும் நம் காலத்திற்கும் மிக நெருக்கமாகத்தான் இருக்கிறார்.

இதுவரை நாம் பார்த்த கதைகள் ஒரு வகையில் நீதிக் கதைகள். இவை கலை உணர்வில்—அழகியல் உணர்வில் ஊற வைக்கப்பட்டவை என்ற காரணத்தால் இவை நம் நெஞ்சில் நேரே சென்று பதிகின்றன. கலை உணர்வின் ஆற்றல் என்பது இப்படித்தான் செயல்படுகிறது. அனசன் ஒரு பெரும் கலைஞர், மேதை. பாதிரியார் மாதிரி நீதி சொல்வது ஒரு கலைஞரின் நோக்கமாக இருக்க முடியாது. வாழ்க்கையின் பரப்பு மிக விரிந்தது. மனித உள்ளத்தின் பரப்பும் ஆழமும் மிக விரிந்தவை. கடல் போல ஆழமும்

www.padippakam.com



அகலமும் கொண்டது மனித மனம். 'கடற்கன்னி' கதையின் அற்புதத்தை என்னவென்று சொல்வது? இவள் காதல் நெஞ்சில் எத்தனை கனவுகள்? காதலுக்காக இவள் தன் உறுப்புகளை இழக்கிறாள். இவளுக்கு அழிவில்லாத ஆன்மா — மனித ஆன்மா — வேண்டுமாம். இளவரசனைக் கொன்றால் இவள் முன்பு போல முழு வடிவத்தை எய்தலாம். இவளால் கொல்ல முடியுமா? முடியாது. உண்மைதான். இவள் மனித ஆன்மாவைப் பெற்றுவிட்டாள். இவள் இனி கடலில் மிதக்கும் நுரையாக மாட்டாள். இவளோடு சம்மனசுகள் கைகோர்த்துக் கொள்வார்கள். தம்பலினா எலிக்கூண்டில் எப்படி வாழ்வாள்? தவளையை இவளால் தழுவிக் கொளவது சாத்தியமா? மலருக்குள்ளிருந்து பிறந்தவள் இவள். மகரந்தம் உண்டு வளர்ந்தவள். பனிக் குளிரில் விறைத்துக் கொண்டிருந்த சிட்டுக்குருவியின் உடலிலே கதகதப்பு ஏறறிச் சிட்டுக்குருவியை உயிர்ப்பிக்கிறாள். பட்டுப்பூச்சியாய் பறக்கிறாள். இன்னிசையாய் நெஞ்சில் தவழுகிறாள். சிட்டுக் குருவிகள் நமக்குள் சிறகடிக்கின்றன. மலர்கள் நமக்குள் தேன் சிந்துகின்றன. நாம் என்னவாகிறோம்? வானமாக, அலைகளாக, ஓடையாக, இசையாக நாம் மாறுகிறோம்: நாம் புதிய உயிராய்ப் பூக்கிறோம்.

இந்தக் கதைத் தொகுப்பின், மகுடக் கதையாய்த் திகழ்வது தாய். சந்தேகமில்லை. இது மகுடக் கதை தான்! குழந்தையின் உயிரை மீட்கக் கிளம்புகிறாள் தாய். சாவித்திரியின் கதை நமக்கு நினைவுக்கு வருகிறது. எமனை தாய் துரத்துகிறாள்; எதைக் கொடுத்தும் தன் குழந்தையின் உயிரை மீட்க வேண்டும். கேட்பதைக் கொடுக்கிறாள் தாய். இறுதியில் குழந்தையை உயிரோடு பெற்றாளா? என்னவாகிறாள்?

www.padippakam.com



எமன் அவள் குரலுக்கு செவி சாய்த்தானா? நமக்குள் அதிர்ந்து போகிறோம். இந்தக் கதை நம்மைக் கொல்லுகிறது. கொல்லப்படுவதிலும் நாம் இன்புறுகிறோம். 'தீக்குள் விரலை வைத்தால் நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா' என்ற பாரதி கண்ட தீயின் சுவையை நாம் உணருகிறோம். இந்தக் கதை நமக்குள் இருக்கும் எல்லைகளையெல்லாம் சுட்டுப் பொசுக்கி விடுகிறது. பாரதியின் வாக்கில் நாம் அமரராகின்றோம். கதையின் உச்சத்தில் நாம் துள்ளுகிறோம். துடிக்கின்றோம். அனசனுக்கு நாம் எவ்வாறு நன்றி சொல்வோம்?

தமிழில் குழந்தை இலக்கியம் பெரிதாக வளர்ந்துவிடவில்லை. குழந்தைகளுக்கு நிறைய தின்பண்டங்கள், நிறைய உடைகள் கொடுத்து நாம் வளர்க்கும் அளவுக்கு குழந்தைகளின் அறிவை, நற்பண்புகளை, கலை உணர்வுகளை நாம் வளர்க்கவில்லை. அண்மைக் காலத்தில் நிலைமை மிகவும் கடுமையாகி உள்ளது. ஆங்கிலத்தை மற்றும் கனமான பலவகைப் பாடங்களை குழந்தையின் மூளைக்குள் திணிக்கிறோம். தனியார் கல்வி நிலையங்களிடம் குழந்தைகளை ஒப்படைத்துவிட்டோம். குழந்தையின் சுதந்திரத்தை, குழந்தைமையை அழிக்கிறோம். இவர்களை இயந்திரங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். குழந்தைகளைக் கவரும் முறையில் கோட்டை கொத்தளங்கள் எனத் தொடங்கும் மர்மக் கதைகளே குழந்தைகளுக்கு தரப்படுகின்றன. "சைக்கிள் பார்" "மோட்டார் பார்" என்ற மலினப்படுத்தப்பட்ட கவிதைகள் குழந்தைகளுக்கு தரப்படுகின்றன. தெய்வ பக்தி ஊட்டவேண்டும் என்ற முறையில் மூட நம்பிக்கைகளுக்கு ஆக்கம் தரும் முறையில் குழந்தைக் கதைகள் தரப்படுகின்றன. புதிய முயற்சிகளும் இல்லாமலும் இல்லை. இத்தகைய குறைபாடுகளை

www.padippakam.com



அனசனின் கதைகள் தீர்க்குமென நாம் நம்பலாம். அனசனின் கதைகளின் வழியே நம் குழந்தைகள் கலை உணர்வை உச்ச அளவில் பெறமுடியும். அனசன் கதைகள் பெரியவர்களை மனத்தில் வைத்துந்தான் எழுதப்பட்டன என்ற கவனத்துடன்தான் குழந்தைகளுக்கு இக்கதைகளைத் தர முடியும்.

இன்றைய தமிழ்ச் சூழலில் அனசனின் அற்புதக் கதைகள் புதியதாய், பெரியதாய், வரவேற்பைப் பெறும். இறுகிப் போன யதார்த்தத்தில் இருந்து நம்மை விடுவித்துக்கொள்ள இந்த அற்புதக் கதைகள் நமக்கு உதவும். நமக்குள் இருக்கிற தற்பெருமை களை, தன்முனைப்புகளை தளர்த்திக்கொள்ள இக் கதைகள் உதவும். அனசன் கத்தோலிக்க கிறித்துவர். கலை உணர்வில் நிறைந்தவர். மைக்கூடோ, பேனாவோ படைப்புகளைத் தரவில்லை. இறைவன் படைப்பாளிக்கு உள்ளிருந்து எழுதுகிறார் அனசன். நவீனத்துவ வாதிகள் எழுத்தாளனுக்கு உள்ளிருந்து, மொழியாக இருந்து சமூகம் எழுத்தாளனின் வழியே தன்னை எழுதிக் கொள்கிறது என்று சொல்லு கிறார்கள். இங்கும் அனசன் நம் காலத்திற்கும் நெருக்கமாக இருக்கிறார்.

நவீனத்துவம் என்றும் பின் நவீனத்துவம் என்றும் இன்று நாம் பேசத் தொடங்கியுள்ளோம். இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் நவீனத்துவம் - பின் நவீனத்துவம் என்ற அலை களும், பேரலைகளும் எழுந்திருப்பதாய் தெரிய வந் தாலும், எல்லாக் காலங்களிலும் மனித வாழ்வுக்குள் இவற்றின் வீச்சுக்களை நாம் பார்த்து வருகிறோம். அனசனின் நிழல் கதை பின் நவீனத்துவத்தின் முழு வீச்சை வெளிப்படுத்துகிறது. நம்மை பலமுறை புரட் டிக் கொண்டால்தான் கதையின் பன்முகப் பரிமா

www.padippakam.com



ணங்கள் நமக்குள் வசப்படும். தவிர அனசனின் கதைகள் நம் மரபோடும் ஒத்து ஓடுகின்றன. மன்மதன் (கதையில் வரும் அமோ) குறும்புக்காரன். நம் புராணக் கதைகளில் இவனை எத்தனையோ முறை பார்த்திருக்கிறோம். கடற் கன்னியும் நம் கதைகளில் வந்தவள் தீக்குச்சிப் பெண் எல்லாக் காலங்களிலும் நமக்குள்எரிந்து கொண்டிருக்கிறாள். ரோசாப் புதரையும் நத்தையையும், சப்பாத்துப் பெண்ணையும் நமக்குள் அடிக்கடி சந்திக்கிறோம். அனசனின் கதைகள் மூலம் நாமும் குழந்தைகளாகி பறவைகளோடும், மலர்களோடும் பாடியாடுவதில் நமக்கு என்ன தடையிருக்க முடியும்? அனசனுக்கும் அவர் கதைகளை நேரிடையாக மொழியாக்கம் செய்து நமக்குத் தந்த ஆசிரியர் த. தர்மகுலசிங்கத்திற்கும், தமிழின் ஆக்கங்கருதி இத்தொகுப்பை வெளியிட்டவர்க்கும் நம் நன்றிகளை எவ்வாறு தெரிவித்துக் கொள்வது சாத்தியம்? நம் குழந்தைகளுக்கு இத்தொகுப்பை வாங்கித் தரலாம். குழந்தைகளோடு அமர்ந்து இவற்றைப் படிப்போம். குழந்தைகள் மனத்தில் இக்கதைகளை பதித்து வைப்போம். இவை வித்துகள். காலத்தில் இவை தளைக்கும். ஒன்றுக்குப் பத்தாய், நூறாய், ஆயிரமாய் இவை விளைச்சல் தரும். இவை தமிழனை வாழ்விக்கும். அனசனின் கனவுக் கதைகள் நூற்றைம்பதுக்குமேல் இருக்கலாம். எல்லாக் கதைகளும், தமிழ் குழந்தைக்கு, தமிழ்மொழிக்கு என்று வந்து சேரும்? தமிழ் என்று தலைநிமிர்ந்து நிற்கும்? அதன் ஆரம்பமாக உள்ள இதனை உருவாக்கிய அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

கோவை — ஞானி

15-8-96

www.padippakam.com

# பேனாவும் மைக்கூடும்




**ஒரு கவிஞனின் அந்த அறையில்** வார்த்தைகள் பேசப்பட்டன. அவருடைய அறையில், மேசைமீதிருந்த மைக்கூட்டினைப் பார்த்த யாரோ பேசியது போல. 'இது புதினம். அந்த மைக்கூட்டிலிருந்து வரும் சங்கதிகள்தான்! அடுத்து என்ன தான் வர இருக்கிறதோ? உண்மையில், இது புதினம்' என்று அவன் சொன்னான்.

'அது சரி' என்றது மைக்கூடு. 'அது ஒரு மர்மம். அதைத்தான் நான் சொல்லுகிறேன்' (அது பேனாவுக்குத்தான் பேசியது. மேசையிலிருந்த மற்றைய பொருள்களும் கேட்கக் கூடியதாக இருந்தது.)

படிப்பகம்

www.padippakam.com



'என்னிலிருந்து புறப்படும் சங்கதிகள்—அது புதினந்தான்! அந்த ஆள் என்னிலிருந்து எடுக்கத் துவங்கும் பொழுது அடுத்து என்ன வரும் என்பது எனக்கே தெரியாது. என்னில் ஒரு துளி, அஃது அரைப் பக்கத்துக்குப் போதும். அது எதைத்தான் சொல்லாது? ஒரு வகையில் நான் மகா விசேஷம்! கவிஞனின் எல்லா எழுத்துக்களுமே என்னிலிருந்தே வருகின்றன. ஆழமான உணர்வுகள், மிகச் சிறந்த நகைச்சுவை, இயற்கையைப் பற்றிய மயலூட்டும் அந்த வர்ணனைகள் என உயிர் வாழும் மனிதர்கள் தாங்கள் தெரிந்து வைத்துள்ளதாகச் சொல்லும் அத்தனையுமே! என்னால் இதை விளங்கிக் கொள்ள வும் இயலாதிருக்கின்றது. இயற்கையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால், அஃது என் னுள்ளே இருக்கிறது. மென்மையான அழகான ஆயிரக்கணக்கான கன்னியர், கனைத்துவரும் குதிரை யிலே சவாரி செய்து, வீரச் செயலிலே விரைந்துவரும் தீரர்கள், எல்லாருமே என்னிலிருந்தே புறப்படு கிறார்கள்!'

'நீ சொல்வது எவ்வளவு சரி!' என்று இறகுப் பேனா சொல்லிற்று. 'நீ எப்பொழுதுமே சிந்திப்ப தில்லை. ஏனெனில், சிந்தித்தால் நீ திரவம் மட்டுமே என்பதை அறிந்து கொள்ளுவாய்! நான் என்னை வெளிப்படுவதற்கான ஈரத்தை அளித்து, நான் எழுத விரும்பும் விஷயங்களை தாளிலே பதிவு செய்வதற்கு உதவுகின்றாய். எழுதுவது பேனாதான்! இது பற்றி எந்த மனிதனுக்கும் சந்தேகம் இல்லை. ஒரு பழைய மைக்கூடு கவிதையைப் பற்றி எவ்வளவு அறிந்திருக் குமோ, அதே அளவுதான் அநேகமான மனிதர்களும் அறிந்திருப்பார்கள் என்பது குறித்து எந்த மனிதனுக் கும் சந்தேகம் இருக்காது. எனக்கு அது உறுதியாகத் தெரியும்.'

www.padippakam.com



'உனக்கு அதிகமான அநுபவம் கிடையாது!' என்று மைக்கூடு சொன்னது. 'நீ சேவைக்கு வந்து ஒரு வாரந்தான் ஆகின்றது. இதற்கிடையிலேயே நீ அரை வாசி தேய்ந்து போனாய். நீதான் கவிஞன் என்று நீ சொல்ல வருகிறாயா? நீ ஒரு வேலைக்காரன் மட்டுமே. உன் வகையான அநேகரை நான் வைத்திருக்கிறேன். வாத்துக் குடும்பம், சிறந்த ஆங்கிலத் தயாரிப்பு என்கிற இரண்டு குடும்பங்களையும் சேர்ந்தவைதான் அவை. எனக்கு வாத்திறகுப் பேனாக்களையும் தெரியும்; உருக்குப் பேனாக்களையும் தெரியும்! அவற்றிலே அநேகமானவை என் சேவையில் இருந்தன. எனக்காக அசைவுகள் இயற்றும் மனிதன் வந்து, என்னுள் இருந்து எடுப்பவற்றை எழுதும் பொழுது, உன்னைப் போன்ற இன்னும் அநேகம் தேவைப்படும். என்னுள்ளிருந்து அடுத்ததாக அவன் என்ன கொண்டு வருவான் என்பதைப் பற்றித்தான் நான் யோசிக்கிறேன்!'

'மைத்தொட்டி!' என்று பேனா சொன்னது.

அன்று மாலையில், நேரங்கழித்து, கவிஞன் தன் வீட்டுக்கு வந்தான். அவன் ஓர் இசைக் கச்சேரிக்குச் சென்றிருந்தான். அங்கே ஒரு வயலின் வித்துவான் தனது அற்புதமான இசையினால், கவிஞனின் உள்ளத்திலே விநோதமான இன்பக் கிளர்ச்சியை எழுப்பியிருந்தான். அந்த வாத்தியத்திலிருந்து, அதிசயத்தில் ஆழ்த்தும் அற்புத இசை வெள்ளத்தை அவன் வெளியே கொண்டு வந்திருந்தான். இப்பொழுது, முத்து மேல் முத்து விழுவதுபோல, மெல்லிய, 'கல கல' ஒலியை எழுப்பும் நீர்த் துளிகள்! இப்பொழுது பறவைக் கூட்டம் எழுப்பும் 'கீச்சி'டும் கோஷ்டி கானம்போல! பைன் மரக்காட்டின் ஊடாகப் புயல் அணைத்து செல்வதைப்போல! தன் சொந்தஉள்ளமே

www.padippakam.com



அழுவதைத் தான் கேட்பதாக அவன் கற்பனை செய்து கொண்டான். ஆனால், ஒரு பெண்ணின் அழகிய குரலிலே கேட்கும் இன்னிசை போன்ற தொனியிலே! வயலினின் தந்திகள் மட்டுமே அந்த இசையை மீட்பது போல இல்லை. அந்த இசைக் கருவின் 'குதிரை', அதன் 'புருடைகள்', அதன் அதிர்வுப்பெட்டி எல்லாமே இணைந்து செயற் பட்டன போல. அது மகா அசாதாரணமானது! அந்த இசையைப் பிறப்பிப்பது மகா கஷ்டமானதாக இருந்தாலும், தந்திகள்மீது வில்லு முன்னும் பின்னும் சென்ற லாவகத்தினைப் பார்த்து, அது ஒரு குழந்தை விளையாட்டு என்றே யாரும் நினைப்பார்கள். வயலின் தானாகப் பாடியது; வில்லு தானாகவே விளையாடியது. அவை இரண்டுமே எல்லாவற்றை யும் செய்பவையாகத் தோன்றியபடியால், அவற்றை வழிநடத்தி, அவற்றிற்கு உயிரும் ஆன்மாவும் வழங் கிய அந்த ஆசான் மறக்கப்பட்டுவிட்டான். ஆசான் மறக்கப்பட்டு விட்டான்! ஆனால் தன் சிந்தனைகளை ஒழுங்குபடுத்திய கவிஞன் அவனைப் பற்றியே சிந்தித் தான்; அவனைப் பறறியே எழுதினான்.

'இஃது எவ்வளவு முட்டாள்தனமானது, வயலி னும் வில்லும் தங்களுடைய செயற்பாடுகளைப் பற்றி ஜம்பமடிப்பது! ஆனால், மனித சுபாவம் இவ்வாறு தான் இருக்கின்றது. கவிஞன், ஓவியன், விஞ்ஞானி, தளபதி—எல்லாருமே அப்படித்தான். நமது செயல் களை நினைத்து நாம் எல்லாம் பெருமைப் படுகின் றோம்; ஆனால் நாம் எல்லோரும் கர்த்தர் விளை யாடப் பயன்படுத்திய கருவிகளே. அவனுக்கே அனைத்துப் புகழும். நாங்கள் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு எதுவுமே இல்லை...' என்று அவன் எழுதினான்.

படிப்பகம்

www.padippakam.com



ஆம், இதுதான் கவிஞன் எழுதியது. 'ஆசானும் கருவிகளும்' என அவன் எழுதிய அந்த உருவக கதைக்குப் பெயரிட்டான்.

'என் சீமாட்டியே, அஃது உனக்காகத்தான் எழுதப் பட்டது' என்று அவர்கள் மீண்டும் தனியாக இருந்த பொழுது, பேனா மைக்கூட்டினைப் பார்த்துச் சொல் லிற்று! நான் எழுதியதை அவன் வாசித்தபொழுது நீ கேட்டிருப்பாய் என நான் நம்புகிறேன்'

'ஆம், நான் உனக்கு எழுதத்தந்ததை' என்று மைக்கூடு சொன்னது. 'உன் ஐம்பத்தைத்தான் அது சற்றுச் சாடியது. நீ முட்டாள் ஆக்கப்படுவதைக்கூட நீ அறியாமல் இருக்கிறாயே! நான் என் உள்ளத்தில் இருந்து நேரடியாகவே ஒரு சூசகம் சொன்னேன். நான் அதனைக் கேட்கும்பொழுது, என் சொந்த விரோதத்தை நான் அறிந்து கொள்ளுவேன்.'

'மட்பாண்ட மை!' என்றது பேனா;

'சிதறும் கிறுக்கு எழுத்து!' என்றது மைக்கூடு.

சரியான பதில் அளித்து விட்டதான திருப்தி இரண்டுக்குமே ஏற்பட்டது. நல்ல பதில் அளிக்கப் பட்டது என்பதை அறியும் பொழுது நல்ல சுகமான உணர்வொன்று தோன்றும்; அந்தச் சுகத்தின் மீது தூங்கலாம். அவை இரண்டும் அவ்வாறு தூங் கின. ஆனால், கவிஞன் தூங்கவில்லை. முத்துக்கள் கலகலப்பதைப் போல, காட்டினை ஊடுருவிச் செல் லும் புயலைப் போல, வயலினின் இசையைப் போல, அவனுடைய எண்ணங்கள் பொங்கிப் பாய்ந்தன. தன் சொந்த இதயத் துடிப்பினை அவன் அங்கு கேட்டான். அத்துடன் நிரந்தத் தலைவனின் கடிதரி சனமும் அவனுக்குக் கிடைத்தது.

அந்த அவனுக்கே எல்லாப் பெருமையும்!

www.padippakam.com

# சக்கரவர்த்தியின் புதிய ஆடைகள்



முன்னொரு காலத்திலே ஒரு சக்கரவர்த்தி வாழ்ந்தார்; அவருக்குப் புதிய ஆடைகள்மீது அபார மோகம். இந்த பூணார அலுவலுக்குத் தன் செல்வமனைத்தையும் செலவழித்தார். தன் புதிய ஆடைகளை விளம்பரப்படுத்துவதற்கு மட்டும் அல்லாமல், தன் படை வீரர்கள் மீதோ, அல்லது நாடக அரங்குகளுக்கோ அல்லது நாட்டைச் சுற்றிப் பார்ப்பதிலோ அக்கறை காட்டவில்லை. தினமும் ஒரு மணி நேரத்துக்கு ஒரு ஆடை அணிந்து கொண்டார். 'அரசர் அவையில் இருக்கிறார்' என்று சொல்வதைப்போல, இவரை எப்போதும் 'பேரரசர் ஒப்பனையறையில் இருக்கிறார்' என்று கூறினார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



அவர் வாழ்ந்த பெரிய நகரில் எப்பொழுதும் கொண்டாட்டம்தான். தினமும் பல புதியவர்கள் வந்த வணணம் இருந்தனர். ஒருநாள் இரண்டு ஏமாற்றுக்காரர்கள் வந்தார்கள். தங்களை நெச வாளர்கள் என்று கூறிக்கொண்டு, யாரும் நினைத் துப் பார்க்க முடியாத அற்புத ஆடையை நெய்ய முடியும் என்றும் கூறினார்கள். மேலும் அதன் வண் ணங்களும் வேலைப்பாடுகளும் வித்யாசமான அழகோடு இருப்பதோடு, அந்த ஆடையை நெய்ய பயன்படும் பொருளுக்கு அற்புதமான குணமுண் டென்று கூறினார்கள். அது பதவிக்குத் தகுதியில்லாத வர்களுக்கும், திருத்த முடியாத முட்டாள்களுக்கும் கண்ணுக்குத் தெரியாது என்றார்கள்.

'ஹூம், அவை சிறந்த ஆடைகளாகத்தான் இருக்கவேண்டும். நான் அதை அணிந்துகொண்டால், என்னுடைய மக்களுள் யார் யார் தங்கள் பதவிகளுக் குத் தகுதியில்லாதவர் என்பதையும், யார் மூட்டாள் யார் அறிவாளி என்பதையும் என்னாலே கண்டு பிடித்துவிட இயலும். ஆம்: அந்த ஆடை எனக்காக உடனடியாக நெசவு செய்யப்படுதல் வேண்டும்' என்று சக்கரவர்த்தி நினைத்தார். உடனேயே தங்கள் வேலையை ஆரம்பிக்க, அந்த இரண்டு ஏமாற்றுக் காரர்களுக்கும், அவர், முற்பணமாக பெருந் தொகை பணத்தைக் கொடுத்தார்.

உண்மையில் அவர்கள் இரண்டு தறிகளை அமைத்துக் கொண்டு, அவைகளிலே நூல் எதுவும் ஏற்றாது, வேலை செய்வதுபோல் பாசாங்கு செய் தனர். அதி சிறந்த பட்டு நூல்களையும், தங்க ஜரிகை களையும் நிதானமாகக் கோரித் தங்களுடைய பைகளிலே போட்டுக் கொண்டு, காலியான தறியில் இரவு நெடுநேரம் வரையிலும் வேலை செய்தார்கள்.

www.padippakam.com



'அவர்கள் எவ்வளவு தூரம் நெய்திருக்கிறார்கள் என்று அறிந்துகொள்ள வேண்டும்' என்று சக்கரவர்த்தி நினைத்தார் ஆனால், முட்டாளோ அல்லது பதவிக்குத் தகுதியற்றவர்களோ அதனைப் பார்க்க முடியாது என்கிற நினைவு அவருக்குச் சங்கடமளித்தது. தான் பயப்படவேண்டிய அவசியமில்லையென்று அவர் நம்பினாலும், வேறு யாரையாவது முதலில் அனுப்பி எவ்வளவு தூரம் இருக்கிறது என்று அறிய விரும்பினார். அங்கு நெய்யப்படும் பொருளுக்கு இருக்கும் மந்திர சக்தியை நகரில் உள்ள அனைவரும் கேள்விப்பட்டு, தங்கள் அயலவர்கள் எவ்வளவு மோசமானவர்கள் அல்லது முட்டாள்கள் என்பதை அறிய ஆவலாயிருந்தனர்.

'நான் நெசவாளர்களிடம் என் நேர்மையான கிழ அவமச்சரை அனுப்புவேன்' என்று சக்கரவர்த்தி எண்ணினார்.

'அவருக்குப் பகுத்தறிவு இருப்பதினாலும், அவரைப் போன்று யாராலும் அவருடைய பதவியை நிர்வகிக்க முடியாது என்பதினாலும், அந்த ஆடை எப்படித் தோன்றுகிறது என்பதைப் பார்ப்பதற்கு அவரே மிகச் சிறந்த மனிதர்.'

அந்த இரண்டு ஏமாற்றுக்காரர்களும் உட்கார்ந்து காலியான தறியில் வேலை செய்துகொண்டிருந்த கூடத்துக்கு தகுதியான அந்தக் கிழ அமைச்சர் சென்றார்.

தன் கண்களை அகலத் திறந்தபடி, 'கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' எனக் கிழ அமைச்சர் நினைத்தார். 'என்னால் எதையும் பார்க்கமுடியவில்லையே!' ஆனால், இதை அவர் யாருக்கும் சொல்லவில்லை.

www.padippakam.com



இரண்டு ஏமாற்றுக்காரககளும் அவரைத் தயவு செய்து இன்னும் அருகில்வந்து பார்த்து, அந்த ஆடை வடிவான அமைப்பையும் அழகான வண்ணங்களையும் கொண்டிருப்பதாக அவர் கருதவில்லையா என்று கேட்டார்கள். பின்னர் காலியான தறியைச் சுட்டிக் காட்டினார்கள்; பாவமான கிழ அமைச்சர் தம் கண்களை என்றும் இல்லாதவாறு அகலத் திறந்தார். அவரால் எதையும் பார்க்க முடியவில்லை; ஏனெனில் அங்கு பார்ப்பதற்கு எதுவுமே இருக்கவில்லை.

'கடவுளே! நான் என்ன முட்டாளா? நான் என்றுமே என்னைப் பற்றி இவ்வாறு நினைத்ததில்லையே—இதை யாரும் தெரிந்து கொள்ளக் கூடாது! உண்மையில் என் பதவிக்கு நான் தகுதியற்றவனாக இருக்க முடியாது. இல்லை, நான் ஆடையைப் பார்க்கமுடியவில்லை என்று நான் ஒருபோதும் சொல்லக் கூடாது.'

'அதைப்பற்றி ஒன்றும் நீங்கள் சொல்ல மாட்டீர்களா?' என்று நெசவு செய்து கொண்டிருந்த ஒருவன் கேட்டான்.

'ஆ, அது அற்புதமாயிருக்கிறது! சும்மா உள்ளத்தை அள்ளுகிறது' என்று தன் கண்ணாடி வழியாக உற்றுப் பார்த்தபடி கிழ அமைச்சர் கூறினார். 'என்ன அழகான வேலைப்பாடுகள், என்ன வண்ணங்கள்! சக்கரவர்த்தியிடம் போய், நான் மிகவும் மகிழ்ந்தேன் என்று சொல்லுவேன்.'

'இதைக் கேட்க எங்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கிறது' என்று கூறிய இரு நெசவாளிகள், பின்னர் வண்ணங்களுக்குப் பெயரிட்டு, தனித்துவமான வேலைப்பாடுகளையும் விளக்கினார்கள்.

www.padippakam.com



சக்கரவர்த்தியிடம் மீளும் பொழுது அந்தப் பெயர்களை திருப்பிச் சொல்வதற்காக அவற்றை அக்கிழ அமைச்சர் வெகு கவனமாகக் கேட்டுக் கொண்டார். பின்னர் ஒப்பிக்கவும் செய்தார்.

இப்போது ஏமாற்றுக்காரர்கள், மேலும் பணமும், பட்டும், தங்க ஜரிகையும் நெசவுத் தேவைப் படுவதாகக் கேட்டார்கள். அவைகளைத் தங்களிடமே வைத்துக் கொண்டு, தறியில் ஒரு நூலைக்கூடப் போடவில்லை. ஆனால் முன்போலவே காலியான தறியில் நெசவு செய்து கொண்டே இருந்தார்கள்.

மற்றொரு நேர்மையான அதிகாரி நெசவு எப்படி போய்கொண்டிருக்கிறது, எப்போது முடியும் என்பதைப் பார்த்து வரச் சீக்கிரமே இன்னொரு நம்பிக்கையான அதிகாரியை அனுப்பி வைத்தார். அமைச்சருக்கு நடந்தது போலவே, இவருக்கும் நடந்தது. அவர் பார்த்தார், பார்த்தார்! காலியான தறியைத் தவிர அவரால் வேறு எதையும் பார்க்க முடியவில்லை.

அங்கே இல்லாத அழகான மாதிரியைச் சுட்டி, 'துணி அழகாயிருக்கிறதில்லையா?' என இரண்டு ஏமாற்றுக்காரர்களும் கேட்டார்கள்.

'நான் முட்டாளில்லை. வேண்டுமானால், நான் பதவிக்குத் தகுதியற்றவனாக இருக்கலாம்; அது வேடிக்கையானது! ஆனால், இதனை வெளிக்காட்டாதவாறு நல்ல கவனம் எடுக்க வேண்டும்' என்று நினைத்தார். அதனால் அவர் பார்க்காத அந்த வஸ்துவைப் பாராட்டியதோடு, அதன் அழகான வண்ணங்களையும் கவர்ச்சிகரமான வேலைப்பாடு

www.padippakam.com



களையும் பாராட்டினார். 'உண்மை, அது மயக்கு கிறது!' என்று சக்கரவர்த்தியிடம் சொன்னார்.

நகரில் உள்ள அனைவரும் ஆடைக்கான அற்புத துணியைப் பற்றியே பேசினார்கள்.

அது தறியில் இருக்கும்போதே, சக்கரவர்த்தி அதைப் பார்க்க விரும்பினார். தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவினரோடு—முன்னரே போய்ப் பார்த்த நேர்மை யான இரண்டு அரச அதிகாரிகளும் இருந்தனர்—சக்கரவர்த்தி நூலிழையோ, மரவரிசையோ ஏதுமற்று நெய்து கொண்டிருக்கும் அந்த இரண்டு வஞ்சக ஏமாற்றுக்காரர்களைப் பார்க்கப் போனார்.

'இது சும்மா அற்புதமாக அல்லவா இருக் கின்றது?' என்று முன்னரே வந்துபோன இரண்டு மதிப்பு வாய்ந்த அதிகாரிகளும் கேட்டார்கள். 'மாட்சிமையுள்ள பெருந்தகையே! எத்தகைய வடி வமைப்பு, எத்தகைய வண்ணங்கள் என்பதைப் பாருங்கள்!' அவர்கள், மற்றவர்களாலே அதனைப் பார்க்க இயலும் என்று நினைத்துக்கொண்டு காலி யான தறியைச் சுட்டிக் காட்டினார்கள்.

'இது என்ன இழவு! என்னால் எதையும் பார்க்க முடியவில்லையே! இது மிகவும் பயங்கரம்! நான் முட்டாளா? நான் சக்கரவர்த்தியாக இருக்கத் தகுதி யற்றவனா? என்மீது விழுந்துள்ள மிகப் பயங்கரம் இதுதான்!' எனச் சக்கரவர்த்தி நினைத்தார்,

'ஓ, அது மிக அழகானது' என்று சக்கரவர்த்தி சொன்னார்.

'அது என் உயர்ந்த பாராட்டைப் பெறுகிறது' என்று கேட்கும்படியாகச் சொன்னார். திருப்தியுற்ற முறையில் தலையாட்டியதோடு, காலியான தறியைப் பார்த்துக் கொண்டிருந்தார். எதையும் பார்க்க

www.padippakam.com



வில்லையென்பதை அவர் கூறப்போவதில்லை. கூட வந்த குழுவும் மீண்டும் மீண்டும் பார்த்தது. மற்றவர்கள் போல் அவர்களாலும் எதையும் பார்க்கமுடிய வில்லை. ஆனால், அவர்களும் சக்கரவர்த்தியைப் போல், 'மிக அழகாக இருக்கிறது' என்றனர். மேலும் கூடிய விரைவில் வரப் போகும் பெரும் ஊர்வலத்தில் அந்த அற்புத புதுத் துணியிலே செய்த சில ஆடைகளைச் சக்கரவர்த்தி அணிந்து கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறினர். வாய்க்கு வாய் அதை, 'அழகானது, பரவசரமானது, அற்புதமானது' என்று அவர்கள் எல்லோரும் பிரகடனப்படுத்தினார்கள்.

எல்லாப் பக்கமும் பெருமகிழ்ச்சி இருப்பதைக் கண்டு, சக்கரவர்த்தி, அந்த ஏமாற்றுக்காரர் ஒவ்வொருவனுக்கு அவனவன் மேலங்கியில் அணிந்து கொள்ளுவதற்காக ஒவ்வொரு பதக்கமும், 'உயர்ந்த அரச நெசவாளர்' என்கிற பட்டமும் அளித்தார்.

ஊர்வலம் நடக்க இருக்கும் காலைக்கு முந்தின இரவும், பதினாறு மெழுகுவர்த்திகளை ஏற்றி, அந்த ஏமாற்றுக்காரர்கள் கண் விழித்திருந்தார்கள். சக்கரவர்த்தியின் புதிய ஆடைகளைப் பூர்த்தியாககுவதற்கு அவர்கள் உழைத்துக் கொண்டிருந்ததை பார்க்கக்கூடியதாக இருந்தது.

அவர்கள் தறியிலிருந்து துணியை இறக்குவது போல் பாசாங்கு செய்தனர்; பெரும் கத்தரிக்கோலால் காற்றில் வெட்டினர்; நூல் கோர்க்காத ஊசியால் தைத்தனர்; 'இப்போது ஆடைகள் தயாராக இருக்கின்றன' என்று கடைசியில் சொன்னார்கள்.

www.padippakam.com



தம்முடன் இருக்கும் தலைமைச் சீமான்களுடன், சக்கரவர்த்தி நேரிலே சென்றார். ஏமாற்றுக்காரர்களும் எதையோ பிடித்திருப்பது போல், ஒரு கையை உயர்த்தி, 'இதோ கீழாடைகள்! இதோ கோர்ட்! இதோ மேலங்கி' என்று சொல்லிக் கொண்டே போனார்கள். 'இது சிலந்தியின் வலையைப் போல் மெல்லியது; மேனிலே ஒன்றும் இல்லாதது போலவே தோன்றும். இவற்றின் அழகே அதுதான்!' என்று சொன்னார்கள்.

'ஆமாம்' என்றனர் தலைமைச் சீமான்கள். அவர்களால் எதையும் பார்க்க முடியவில்லை. பார்க்க ஏதாவது இருந்தால்தானே?

'சக்கரவர்த்தி தன் ஆடைகளைக் களைய அருள் கூருவாரா? பின்னர், நாங்கள் இந்த பெரும் கண்ணாடி முன் அவனுக்குப் புது உடைகளை அணிவிக்கிறோம்' என்று ஏமாற்றுக்காரர்கள் சொன்னார்கள்.

சக்கரவர்த்தி தன் ஆடைகளைக் களைந்தார். ஏமாற்றுக்காரர்கள் ஒவ்வொரு புது உடையாக அவருக்கு அணிவிப்பதுபோல் பாசாங்கு செய்தனர். கண்ணாடி முன்னால் திரும்பியும் நெளிந்தும் பார்த்துக்கொண்டார்.

'ஓ, எவ்வளவு நன்றாயிருக்கிறது! எவ்வளவு நன்றாகப் பொருந்தியிருக்கின்றன! என்ன அலங்கார வேலைப்பாடுகள்! என்ன வண்ணங்கள்! மிக அற்புதமான ஆடை.' என்று அவர்கள் எல்லாரும் கூச்சலிட்டார்கள்.

விழாக்களின் தலைவர், 'ஊர்வலத்தில் சக்கரவர்த்திக்கு மேலாகப் பிடிக்கப்படும் வெண்கொற்றக்

www.padippakam.com



குடை வெளியே காத்திருக்கிறது' என்று அறிவித்தார்.

'நல்லது, நான் தயார்' என்றசக்கரவர்த்தி, 'எனக்கு இது சரியான அளவாக இருக்கிறதல்லவா?' என்றார். தன் அழகான ஆடையை மீண்டும் நல்ல வடிவாகப் பார்ப்பவரைப் போல நன்கு பாசாங்கு செய்து கொண்டு, கண்ணாடி முன்னால் நின்று மீண்டும் ஒரு முறை சுற்றிப் பார்த்துக் கொண்டார்.

மேலங்கியின் பின்பாகத்தைத் தூக்கிச் செல்லும் பணியாட்கள், கீழே குனிந்து, மேலங்கியை எடுப்பது போல் எடுத்தனர். பின்னர் அதை உயரத்தில் பிடித்திருப்பதுபோல் காற்றில் பாசாங்கு செய்தனர். அதைப் பார்க்கவில்லையென்பதை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு அவர்களுக்குத் துணிவில்லை.

அழகிய அரச குடையின்கீழ் சக்கரவர்த்தி ஊர்வலம் போனார். தெருவில் நின்றவர்களும், யன்னல் வழியாகப் பார்த்தவர்களும், 'சக்கரவர்த்தியின் புதிய ஆடை அற்புதமானது அல்லவா! மேலங்கி எத்தகைய அழகிலே நீளுகின்றது! அற்புதமாகவும் கனகச்சிதமாகவும் பொருந்துகின்றது!' என்று கத்தினார்கள்!

யாரும், தான் எதையும் பார்க்கவில்லை என்பதை மற்றவர் அறியக்கூடாது என்றே நினைத்தனர். ஏனெனில், அது தான் வகிக்கும் பதவிக்குத் தான் தகுதியற்றவர் என்பதையோ, அல்லதுமிக முட்டாள் என்பதையோ காட்டிவிடுமே! சக்கரவர்த்தியின் எந்தப் புதிய ஆடையும் இந்த அளவுக்கு வெற்றி பெற்றதேயில்லை.

'ஆனால், அவர்மேல் ஒன்றுமில்லையே!' என்று ஒரு சிறு குழந்தை கத்தியது!

www.padippakam.com



'ஐயகோ, ஒரு பாவமும் அறியாத இந்த அழகிய குழந்தை என்ன சொல்லுகிறது என்பதைக் கேளுங்கள்!' என்று அதன் தந்தை கத்தினான். குழந்தை சொன்னதை ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக் கொண்டனர்.

'ஏன் அவர் மேல் ஒன்றுமேயில்லையே!' என்று அனைத்து மக்களும் ஒரு சேரக் கத்தினார்கள். அவர்கள் சொல்வது சரி என்பதை உணர்ந்த சக்கரவர்த்தி பயந்தார்.

'நான் இந்த ஊர்வலத்தில் இப்பொழுது போய்த்தான் ஆகவேண்டும்' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார். அரண்மனைக் காரியஸ்தர்கள் அங்கே இல்லாத ஆடையை மேலும் தூக்கிப் பிடிப்பதாக அபிநயிக்க சக்கரவர்த்தி மேலும் கம்பீரமாக நடந்தார்!

படிப்பகம்

www.padippakam.com




# தம்பலினா

முன்னொரு காலத்தில் ஒரு சின்னக் குழந்தைவேண்டும் என்று ஒரு பெண் மிகமிக விரும்பினாள். ஆனால், அதை எங்கிருந்து பெறுவது என்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் ஒரு வயதான சூன்யகாரியிடம் போய் ''மிகச் சின்னக் குழந்தை வைத்திருக்க எனக்கு ரொம்ப ஆசை! அது எங்கு கிடைக்கும் என்று எனக்கு சொல்லு?'' என்று கேட்டாள்.

'ஓ! அதனைச் சுலபமாக ஏற்பாடு செய்யலாம்!' 'இதோ ஒரு பார்லிதானியம் இருக்கிறது பார்: விவசாயிகள் வயலிலே வளர்ப்பது, அல்லது கோழி

படிப்பகம்

www.padippakam.com



களுக்குத் தீவனமாகப் பயன்படும் வகைகளைச் சேர்ந்ததல்ல இது; இதுவேறு. இதை ஒரு பூத்தொட்டி யில் போட்டு வை; என்ன நடக்கிறது என்று பார்!'

'நன்றி' என்றாள் அந்தப் பெண். அதற்கான தொகையாக பனிரெண்டு ஷில்லிங்குகளை சூன்ய காரிக்குக் கொடுத்த பின்னர், அவள் வீடு சென்று பார்லி தானியத்தை நட்டதும், விரைவிலேயே அங்கு ஒரு பெரிய அழகிய பூ வளர்ந்தது. அது அச்சாவாக அல்லிவகைப் பூவாகத் தோன்றிய போதிலும், அது மொட்டு போன்று, தன் இதழ்களை இறுக்கி மூடி யிருந்தது.

'மிக அழகான பூ' என்ற அப்பெண், அதன் மஞ்சளும் சிவப்புமான இதழ்களை முத்தமிட்டாள். அவள் முத்தமிட்டவுடன், பட்டென்று மொட்டு மலர்ந்தது. வாஸ்தவத்தில் அது அல்லிப்பூதான். அதைப் பார்க்கக்கூடியதாக இருந்தது. ஆனால், அந்தப் பூவின் மத்தியில், பச்சை வெல்வெட் மகரந்தத் தின்மேல், ஒருசின்னப் பெண் இருந்தாள்—எத்தகைய அழகான சின்ன உருவம்! அவள் கட்டைவிரலின் உயரமளவுகூட இருக்கவில்லை; எனவே (கட்டை விரல் அளவுக்காரி என்ற அர்த்தத்திலே) தம்பலினா என்று அழைக்கப்பட்டாள்.

தம்பலினாவுக்கு மெருகேற்றப்பட்ட அக்ரோட்டு ஓடே தொட்டில்; நீல-வயலெட் இதழ்களே மெத்தைகள்; ரோஜா இதழே அவளுடைய படுக்கை உறை இரவில் அங்கே தூங்கினாள்; ஒரு தட்டிலே அதைச் சுற்றி வளைத்து மலர்களை அடுக்கி, அவற்றின் தண்டுகள் எல்லாம் தண்ணீரிலே இருக்கக் கூடியதாக அந்தப் பெண் ஒழுங்கு செய்திருந்த

த—3

www.padippakam.com



மேஜைமீது அவள் விளையாடினாள். அந்தத் தட்டிலே ஒரு பெரிய அல்லி இதழ் மிதந்தது. இதிலே அமர்ந்து, தட்டின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்கு இரண்டு வெள்ளை குதிரை முடிகளை துடுப்புகளாகக் கொண்டு தம்பலினா படகுப் பயணம் செய்வாள். அதுஉண்மையில் அழகாக இருந்தது! மேலும் என்ன வென்றால், முன்னர் யாருமே கேட்டிருக்காதஇனிமை யிலும் அழகிலும் அவளாலே பாட முடிந்தது.

ஒருமுறை இரவில் தன் அழகிய சின்னப் படுக்கை யில் அவள் படுத்திருந்தபோது, யன்னரின் உடைந்த கண்ணாடி வழி துள்ளிக் குதித்து ஒரு வயதான தவளை வந்தது. அந்தத் தவளை அவலட்சணமாகவும் பெரிதாகவும், ஈரமாகவும் இருந்தது; ரோஜாப் பூவிதழின் கீழே தம்பலினா படுத்துக் கொண்டிருந்த அந்த மேஜைமீது அது நேராகத் தாவியது.

'என் மகனுக்கு அவள் ஓர் அழகிய மனைவியாக லாம்!' என்று தவளை சொன்னது.

தம்பலினா தூங்கிக் கொண்டிருந்த அக்ரோட்டு ஓடைத் தூக்கிக்கொண்டு, யன்னல் வழியாக அது தோட்டத்துக்குத் தாவியது.

அங்கே ஒரு பெரிய அகலமான ஓடை தோட்டத் தின் ஊடாக ஓடிக்கொண்டிருந்தது. அதன் கரை, சேறாகவும் சகதியாகவும் இருந்தது; இங்கேதான் தவளை தனது மகனோடு வாழ்ந்தது. ஊஹாக், அம்மா போன்றே அவனும் அவலட்சணமாக இருந் தான். அக்ரோட்டு ஓட்டிலிருந்த அழகிய சின்னப் பெண்ணைப் பார்த்ததும் அவனாலே கூறக்கூடியது எல்லாம், 'கோ - அக்ஸ், ப்ரெக் - எக் - எக் - எக்ஸ்' என்பன மட்டுமே.

www.padippakam.com



'சுத்தமாகப் பேசாதே! அவள் விழித்துக்கொள்வாள்' என்றது கிழவித் தவளை. அன்னத்தின் சிறகு போல அவள் மெதுமையாக இருப்பதால், அவள் நம்மைவிட்டு ஓடிவிடலாம். நாம் அவளை ஓடையிலிருக்கும் பெரும் அல்லி இலையில் விட்டுவிடுவோம். அவள் சின்னவளாகவும், கனமில்லாதும் இருப்பதால், இலை தீவுபோல் இருக்கும் அவளால் அங்கிருந்து ஓடவிட ஏலாது. அதற்கிடையில், சதுப்புக்குள் இருக்கும் முன் அறையை நீ உன் வீடாகப் பயன்படுத்தும் வகையிலே தயார் செய்து கொள்ளலாம்.'

ஓடையின் மத்தியிலே அநேக அல்லி மலர்கள், அகலமான பச்சைஇலைகளுடன் தண்ணீரில் மிதப்பது போல இருந்தன. மிகப் பெரிதாகவும் மிக தூரமாகவும் இருந்த இலைக்கு, கிழவித் தவளை நீந்திச்சென்று தம்பலினாவோடு சேர்த்து அக்ரோட்டு ஓட்டையும் வைத்தது. மிகச் சின்னத் தம்பலினா விடிகாலையில் கண்விழித்தவுடன், தான் எங்கிருக்கிறோம் என்பதை அறிந்து தன் சிறிய கண்கள் கரைய அழுதாள். அந்தப் பெரும் பச்சை இலையைச் சுற்றி எங்கும் தண்ணீர்; கரையை அடைதல் என்பது இயலாத காரியம். கிழவித் தவளை, சதுப்புநிலத்தின் கீழே, தன் மருமகளுக்கு உண்மையில் கவர்ச்சியான அறையாக அமையும் விதத்தில் கோரைப் புற்களாலும், மஞ்சள் அல்லி மொட்டுகளாலும் தன் அறையை அலங்கரித்தது. பின்னர் தன் மகனோடு, தம்பலினா இருந்த இடத்துக்கு நீந்திச் சென்றது. அவள் போவதற்கு முன்னர், கல்யாண அறையில் அவளது அழகிய படுக்கையை விரிப்பதற்காக அதை எடுத்துப் போக வந்தனர்.

அவள் முன்னே, தண்ணீரிலே மரியாதையாக நின்ற கிழவித் தவளை கூறியது: 'இவன்தான் என் மகன்; இவனே உன் கணவனாகப் போகின்றான்.

www.padippakam.com



இருவரும் சதுப்பு நிலத்தின் கீழே மகிழ்ச்சியான இல்லத்தை அமைத்துக் கொள்ளுங்கள்!'

'கோ - அக்ஸ், கோ - அக்ஸ், ப்ரெக் - எக் - எக் - எக்ஸ்' என்று மட்டுமே அவள் மகனால் கூற முடிந்தது.

தம்பலினாவைத் தன் பாட்டுக்கு பச்சை இலை மீதிருந்து அழும்படி விட்டுவிட்டு, அவளுடைய அழகிய சின்னப் படுக்கையை எடுத்துக் கொண்டு நீந்திச் சென்றன. அழுக்கான தவளையோடு வாழவோ அல்லது அவளுடைய அவலட்சண மகனைக் கல்யாணஞ் செய்யவோ அவள் விரும்ப வில்லை.

தண்ணீரிலே நீந்திக்கொண்டிருந்த சிறிய மீன்கள் தவளையைப் பார்த்ததுடன், கிழவித் தவளை சொன்னதையும் கேட்டிருக்க வேண்டும். ஏனெனில், அந்தச் சின்னப் பெண்ணைப் பார்க்கத் தங்கள் தலைகளைச் சடுதியில் உயர்த்தின. அவளைப் பார்த் தவுடன் மிக அழகானவள் என்று நினைத்த அவை அழுக்கான தவளையோடு வாழவேண்டுமே என்று நினைத்து வருந்தின. இல்லை, அது நடக்கக்கூடாது! அந்தச் சின்னப் பெண் நின்ற இலையின் தண்டருகே கூட்டம் கூடிய அவை, தமது பற்களால் தண்டைக் கடிக்கவே, தவளை நெருங்க முடியாத தூரத்துக்குத் தம்பலினாவைச் சுமந்துகொண்டு, இலை ஓடையிலே தூரந் தூரமாக மிதந்து சென்றது.

பலவிதமான இடங்களையும் கடந்து தம்பலினா பயணித்தாள். அவளைப் பார்த்ததும் புதர்களில் அமர்ந்திருந்த சிறு பறவைகள் பாடின: 'என்ன அழகான சிறிய பெண்!' அவளுடைய இலை தூரம் தூரமாகப் போகவே, தம்பலினா வெளிநாட்டுப் பயணம் ஒன்றினை மேற்கொள்வது நிகழ்ந்தது.

www.padippakam.com



அவளைச் சுற்றி சிறகடித்துக் கொண்டிருந்த அழகிய சிறிய வெள்ளைப் பட்டாம்பூச்சி, இறுதியாக இலையில் இறங்கியது. அதற்குத் தம்பலினாவைப் பிடித்துப் போனது. தவளையால் தன்னை நெருங்க முடியாது என்பதால் அவளும் மகிழ்ந்தாள். அவள் மிதந்து கொண்டிருந்த இடம் மிக அழகாக இருந்தது. தண்ணீர் மேல் வெயிலடிக்க, தண்ணீர் தங்கத்தைப் போல் மிக மின்னியது. அவள் தனது இடுப்பு நாடாவை எடுத்து, ஒரு முனையில் பட்டாம்பூச்சியையும், மறுமுனையை இலையுடனும் கட்டினாள். இப்பொழுது அந்த இலை, அதன் மேலிருந்த தம்பலினாவுடன் எப்பொழுதும் இல்லாத விரைவில் மிதந்து சென்றது.

பின்னர் மேலே பெரிய கொக்ஷேபர் பறந்து வந்தது; அவளைக் கண்டவுடன், அவளது மெல்லிய இடுப்பில் தனது நகத்தால் அணைத்து, மரத்துக்குத் தூக்கிச் சென்றது. பச்சையிலை ஓடையில் நீந்திச் செல்ல, அதனோடு பட்டாம்பூச்சியும் பிணைக்கப் பட்டிருந்ததால், விடுவித்துக் கொள்ள முடியாது, அதனுடன் நீந்திப் போனது.

கடவுளே! கொக்ஷேபர் அவளைத் தூக்கிக் கொண்டு மரத்தின்மேல் பறந்துபோனது. தம்பலினா எவ்வளவு பயப்பட்டாள்! எல்லாவற்றுக்கும் மேலாக இலையோடு அவள் பிணைத்திருந்த வெண் பட்டாம் பூச்சி, தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை என்றால், பட்டினி கிடந்து இறக்க நேரிடலாம் என நினைத்து அவள் வருந்தினாள்.

கொக்ஷேபரோ இதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. அது மரத்தின் மிகப் பெரிய இலையின்மேல் அவளோடு அமர்ந்துகொண்டு, மலர்

www.padippakam.com



களின் தேனை அவளுக்கு ஊட்டிக் கொண்டே, ஒரு காக்ஷேபரை அவள் ஒத்திருக்கவில்லையென்றாலும், அவள் மிக அழகாக இருக்கிறாள் என்று சொன்னது. சிறிது நேரத்திலேயே, அந்த மரத்தில் வாழ்ந்த ஏனைய கொக்ஷேபர்கள், அவர்களைப் பார்க்க வந்தன. தம்பலினாவைப் பார்த்துவிட்டு, தங்களுடைய உணர்ச்சிக் கொடுக்குகளை உள்ளே இழுத்துக் கொண்டு, இளம் கொக்ஷேபர் பெண்கள் சொல்லின:

'ஏன், அவளுக்கு இரண்டு கால்களுக்கு மேல் இல்லை! அவள் அச்சம் ஊட்டுபவளாகத் தோன்றுகிறாளே!' அவை மேலும் கூறின:

'அவளுக்கு உணர்ச்சிக் கொடுக்குகள் எதுவும் இல்லையே! அவள் இடுப்புப் பகுதியில் மெலலிதாக இருக்கிறாளே! அஹ், அவள் மனிதப் பிறவிபோல் இருக்கிறாளே! அவள் விகாரமாக இருக்கிறாளே!'

தம்பலினா எப்பொழுதும் அழகாகவே இருந்தாள்! அவளைத் தூக்கி வந்த காக்ஷேபரும் அவள் அழகாக இருப்பதாகவே நினைத்தது. ஆனால் மற்ற அனைவரும் அவள் விகாரமானவள் என்று சொன்னதால், அதே கருத்துக்கு மாறிய அது, அவளுடன் இனி எதுவும் வைத்துக் கொள்வதில்லை என நினைத்து, அவள் விருப்பப்பட்ட இடத்துக்குப் போகலாம் எனச் சொல்லிற்று.

பின்னர், அவளைத் தூக்கிக் கொண்டு மரத்தில் இருந்து கீழிறங்கி, வெண் செவ்வந்தியில் விட்டு விட்டது. அவள் விகாரமானவள் என்று கொக்ஷேபர்கள் எல்லாம் கூறி, அவளை நிராகரித்த படியால் அவள் அழுதாள். ஆனாலும் அவள் யாரும்

www.padippakam.com



நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அழகு; மிக அழகான ரோஜா இதழைப் போன்று மிகவும் மென்மையானவள்.

கோடை காலம் முழுதும், தம்பலினா அந்தப் பெரிய காட்டில் தன்னந்தனியாக வாழ்ந்தாள். அவள் தானே புல் மெத்தை அமைத்துக கொண்டு, அதை மழையிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக, பேர்டாக் மரத்தடியிலே தொங்க விட்டாள். உணவுக் காக மலர்களிலிருந்து தேன் சேகரித்தாள். ஒவ்வொரு காலையிலும் பூவிதழ்களிலே காணப்படும் பனித் துளியைக் குடித்தாள். கோடை காலமும் இலை யுதிர் காலமும் இவ்வாறு கழிய, இப்போது நீண்ட குளிரான பனிக்காலம் வந்தது. அவள் முன் இனிமை யாகப் பாடிய பறவைகளெல்லாம் பறந்து போயின; மரங்களும் மலர்களும் உலர்ந்து போயின. அவள் எந்தப் பெரிய பேர்டாக் இலையின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்தாளோ, அது ஒடுங்கிப்போய், செத்துப் போன வெறும் மஞ்சள் தண்டு மட்டுமே மிஞ்சியது. குளிரை அவள் பயங்கரமாக உணர்ந்தாள். மென்மை யாக இருந்ததாலும், அவளது உடைகள் கிழிந்திருந்த தாலும், அவள்—பாவம் தம்பலினா—மிகச் சின்ன தாகவும் மென்மையாகவும் இருந்ததினால் உறைந்து செத்துப் போவாள் போலத் தோன்றியது. பின்னர் பனி பெய்யத் துவங்கியது. அவள் மேல் விழுந்த ஒவ் வொரு பனிக்கட்டியும், நம்மீது விழும் ஒரு குண்டாளக் கரண்டி அளவை ஒத்திருந்தது. ஏனென் றால் நாம் பெரியவர்கள்; அவள் உங்கள் கட்டை விரலிலும் பார்க்கப் பெரியவளில்லை. அவள் தன்னை ஓர் இலைச் சருகினாலே போர்த்திக் கொண்டாள். அது அவளைக் கதகதப்பாக்கவில்லை. அவள் குளிரிலே நடுங்கினாள்.

படிப்பகம்

www.padippakam.com



அவள் இருந்த பெரும் காட்டுக்குப் பக்கத்தில், பெரும் தானிய வயல் இருந்தது. தானியமெல்லாம் முன்னரே போய்விட, இப்போது உறைந்த நிலத்தின் மேல் காய்ந்த தண்டுகள் மட்டுமே நின்றன. இந்தத் தண்டுகளின் ஊடாக நடப்பது, அவளைப் பொறுத்த அளவில், காட்டின் ஊடாக நடப்பது போலவே இருந்தது. ஓ, குளிரிலே அவள் எப்படி நடுங்கினாள்! அப்போது அவள் ஒரு வயல் எலியின் வாயிலருகே வந்தாள். அது தானியக்கதிரின் அடிக் கட்டையருகே இருந்த சிறிய பொந்து. அங்கே வயல்எலி, கதகதப்பாகவும், அறை முழுவதும் தானியத்தோடும், அற்புத சமையலறையும் இறைச்சி வைக்கும் அறையும் கொண்டு வாழ்ந்தது. ஏழைப் பிச்சைக்காரப் பெண் போல், பாவம் தம்பலினா, அதன் வாயிலருகே நின்று, கடந்த இரண்டு நாள்களாக அவள் ஒரு கவளங்கூட சாப்பாடு இல்லாமல் இருந்ததினால், சிறிது பார்லி தானியம் கேட்டாள்.

வயல்எலிக்கு உண்மையில் இரக்க சுபாவம் உள்ளதால், 'நீ பாவப்பட்ட சின்னவள்! எனது கதகதப்பான அறைக்குள் வந்து, என்னுடன் உணவு சாப்பிடலாம்' என்றது.

பின்னர், தம்பலினா மீது அதற்கு விருப்பம் உண்டானதினால், அது கூறியது; 'உனக்கு இஷ்டமென்றால், பனிகாலம் முழுதும் என்னுடன் தங்கலாம். ஆனால், எனது அறை சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதோடு, எனக்குச் சிறிய கதைகளைச் சொல்ல வேண்டும். கதைகள் என்றால் எனக்கு உயிர்!'

கருணையுள்ள முதிய வயல்எலி கூறியது போன்றே தம்பலினா செய்து, நல்லபடியாக காலம்

www.padippakam.com



கடத்தினாள். 'கூடிய விரைவில் ஒரு விருந்தாளி வர இருக்கிறார்' என்றது வயல்எலி. 'எனது அண்டை வீட்டுக்காரர் என்னை வாரம் ஒரு முறை வந்து சந்திப்பார். அவர் என்னைவிட வசதியானவர்; அவர் வாழ்வதற்குப் பெரிய அறைகள் உண்டு. மிக அழகிய கறுப்பு 'கோர்ட்' அணிவார். இப்பொழுது நீ அவரை மணந்து கொண்டால், அவர் கண் பார்வையற்றவராக இருந்தாலும், அவர் உன்னை மிகவும் வசதியாகப் பார்ப்பார். உன்னுடைய மிக அருமையான கதைகளை எல்லாம் நீ அவருக்குச் சொல்ல வேண்டி இருக்கும்.'

இந்தக் கருத்தைப் பற்றித் தம்பலினா அதிகம் அக்கறைப்படவில்லை. அண்டை வீட்டுக்காரர் ஒரு மூஞ்சூறாக இருந்தபடியால், அதை மணஞ் செய்ய அவள் விரும்பவில்லை. தனது கறுப்பு கோட்டணிந்து அவர் வந்து சந்தித்தார். அவர் எவ்வளவு பணக்காரர் என்பதையும், எவ்வளவு நல்ல படிப்பாளி என்பதையும் வயல்எலி சொல்லிற்று. உண்மையில் வயல்எலியின் வீட்டைப் பார்க்கிலும் அவருடைய வீடு இருபது மடங்கு பெரிதாக இருக்கும் என்றும், அவர் ஒரு படிப்பாளி என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்றும் கூறியது. ஆனாலும், சூரியனும் அழகிய மலர்களும் அவருக்கு எந்தவித அர்த்தத்தையும் ஊட்டாத பொருள்கள்; அவற்றை அவர் என்றும் பார்க்காததினால், அவற்றின்மீது துவேஷம் பாராட்டினார். தம்பலினா பாட வேண்டியிருந்ததால், அவள் 'சீமாட்டிப் பறவையே, சீமாட்டிப் பறவையே, வீட்டுக்குப் பறந்து போ...!' மற்றும். 'மணியை அடி, மணியை அடி ஓ ரோசாக்களே!' என்று அவளுடைய அழகிய குரலிலே, மூஞ்சூறு குரலைக் காதலிக்கும் வரை பாடுவாள். ஆனால், அவர் ஆழ்ந்து சிந்திக்கும்

www.padippakam.com



மனிதனாகையினால், அவர் ஒரு வார்த்தைகூட எப்பொழுதும் சொல்வதில்லை.

அதற்குச் சிறிது காலத்திற்கு முன்தான், அவர், தனது வீட்டுக்கும் அவர்களது வீட்டுக்கும் இடையில் பூமியில் நீண்ட பாதையை தோண்டியிருந்தது. விருப்பம்போல் அங்கே நடக்கலாம் என்று தம்பலினாவும், வயல்எலியும் அனுமதிக்கப்பட்டிருந்தன. ஆனால், வழியில் இறந்து கிடக்கும் பறவையைக் கண்டு பயப்பட வேண்டாம் என்றும் கூறினார். அது இறகுகளும் மூக்கும் கொண்ட முழுப்பறவை; அது சொற்ப காலத்திற்கு முன்தான், பனிகாலத்தின் வருகையுடன்தான், இறந்து, மூஞ்சூறு தன் பாதையை எடுத்த வழியிலே அது புதைக்கப்பட்டிருக்கக் கூடும்.

ஓர் உலர்ந்த மரத்துண்டை (அது இருட்டிலே நெருப்புப்போல ஒளிர்வது), மூஞ்சூறு தனது வாயில் எடுத்துக் கொண்டு, அந்த நீண்ட இருட்டுப் பாதையில் அவர்களுக்கு வெளிச்சம் காட்டி முன்னே சென்றது. இறந்த பறவை உள்ள இடத்திற்கு வந்த போது, மூஞ்சூறு தனது அகலமாக மூக்கை மேற்கூரையில் தேய்த்து, வெளிச்சம் உள்ளே வரும்படி பெரிய ஓட்டையொன்றைப் போட்டது. தரையின் மத்தியில், தனது அழகிய இறகுகளைத் தனது பக்கங்களில் இறுக்கியபடி, கால்களையும் தலையையும் இறகுகளுக்குள் இழுத்துக் கொண்டு இறந்த குருவி இருந்தது. அந்தப் பாவப்பட்ட பறவை நிச்சயமாக குளிரினால்தான் இறந்திருக்க வேண்டும். கோடை காலம் முழுதும் தனக்கு முன்னால் அழகாய்ப் பாடியும் கூவியும் திரிந்த பறவைகளை அவளுக்குப் பிடித்திருந்ததினால், அதற்காக தம்பலினா மிகவும்

www.padippakam.com



வருந்தினாள். ஆனால், மூஞ்சூறு தனது தடித்த குட்டையான கால்களால் அதை உதைத்துவிட்டுக் கூறியது: 'இனி அது கீச்சிடாது. சிறு பறவையாகப் பிறப்பது எவ்வளவு கொடுமையானது! கடவுளுக்கு நன்றி, என் பிள்ளைகளுள் யாரும் இப்படி இருக்க மாட்டார்கள்! ஏன்? 'டுவிட், டுவிட்' என்று கீச்சிட மட்டுமே ஒரு பறவைக்குத் தெரியும். பனிகாலத்திலே பட்டினி போடுவதற்குத் தவிர வேறு எதற்கும் உதவ மாட்டாது.'

'உங்களைப் போன்ற விவரமான மனிதன் அதை நன்றாகச் சொல்ல முடியும்' என்றது வயல்எலி. 'பனிக்காலம் வந்தால், இந்த 'டுவிட் டுவிட்'டால் பறவைக்கு என்ன பயன்? அது பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான்! ஆனால், அதுவும் மிகக் கவர்ச்சி கரமானது என்றுதான் நான் நினைக்கிறேன்.'

தம்பலினா மௌனமாக இருந்தாள். ஆனால் மற்ற இருவரும் பறவைக்கு புறமுதுகு காட்டியதும், அவள் குனிந்து, தலையிலிருந்து அதன் இறகுகளை வாரிவிட்டு, மூடியிருந்த கண்களை முத்தமிட்டாள்.

'கடந்த காலத்தின்போது, எனக்காக இனிமை யாகப் பாடிய அந்தப் பறவையாகக்கூட இது இருக் கலாம்' என்று நினைத்தாள். எனக்கு அது எத்தகைய மகிழ்ச்சியைத் தந்தது - எனது அருமையான இனிய பறவையே!'

வெளிச்சம் வந்த ஓட்டையை மூஞ்சூறு அடைத்து விட்டு, பெண்கள் வீடு செல்ல உதவியது. தம்பலினா வால் அன்றிரவு தூங்கவே முடியவில்லை. தன் படுக்கையிலிருந்து எழுந்து, வைக்கோலால் அழகிய போர்வை நெய்தெடுத்து, வயல் எலியின் அறையில் இருந்து எடுத்த மென்மையான பஞ்சுக் கம்பளியை

www.padippakam.com



குளிர்ந்த நிலத்தில் அதைக் கதகதப்பாக்குவதற்கு அதன் பக்கங்களிலே வைத்து, அதனை(போர்வையை) இறந்த பறவைமேல் விரித்து விட்டான்.

'போய்வா, சிறிய அழகிய பறவையே, போய்வா! மரங்களெல்லாம் பச்சையாக இருந்தபோது, சூரியன் நம்மேல் வெப்பத்துடன் பிரகாசித்த பொழுது, கோடையில் நீ அழகாகப் பாடியதற்கு நன்றி' என்றாள் அவள். இவற்றை அவள் கூறிக்கொண்டே அந்தப் பறவையின் மார்பின்மேல் தன் தலையை வைத்தபொழுது, அதற்குள் ஏதோ துடிப்பதுபோலத் தோன்றவே, அவள் திடுக்குற்றாள். அது செத்திருக்கவில்லை: அது மூச்சை இழந்து கிடந்தது; கதகதப்பு ஏற்றப்பட்டதும் உயிர்த்தெழுந்தது.

இலையுதிர்க் காலத்தில் குருவிகளெல்லாம் வெப்ப நாடுகளை நோக்கி பறந்துவிடும். அவ்வாறு போவதில் ஒன்றுக்குத் தாமதம் ஏற்பட்டால், அது உறைவடைந்து, செத்ததுபோல விழுந்துவிடும். அது விழுந்து கிடக்கும் இடத்தை குளிரான பனிக்கட்டி மூடிக் கொள்ளும்.

சரியாகப் பயந்து போனதினால், தம்பலினா நடுங்கினாள். ஏனெனில், உங்களுடைய கட்டைவிரல் அளவுகூட உயரமில்லாத அவளுடன் ஒப்பிடும்போது, பறவை மிகப் பெரியது. ஆனால், அவள் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, பஞ்சுக் கம்பளினால் அந்தப் பறவையைச் சுற்றி வைத்து, தான் போர்வையாகப் பயன்படுத்தும் இலையைக் கொண்டு வந்து, பறவையின் தலைமீது வைத்தாள்.

மறுநாள் இரவு பதுங்கிக் கொண்டு போய் பார்த்தாள். இப்போது, அது உயிரோடிருந்தது. ஆனால் மிக வலுவற்றதாக இருந்ததினால், ஒருகணம்

www.padippakam.com



மட்டுமே கண் திறந்து லாம்புக்குப் பதிலாக உலர்ந்த மரத்துண்டு ஒன்றைத் தன் கையிலே வைத்துக் கொண்டு நின்ற தம்பலினாவைக் கண்டது.

'உனக்கு நன்றி, அழகிய சிறு குழந்தையே! நான் நல்ல முறையிலே கதகதப்பு ஊட்டப் பட்டேன், விரைவில், நான் மீண்டும் என் பலத்தைப் பெற்று, சூடான வெயிலிலே என்னால் மீண்டும் பறக்க முடியும்' நோயாளியான குருவி அவளுக்குக் கூறியது.

'ஓ! வெளியே ரொம்பக் குளிராக இருக்கிறது. பனிபெய்து உறைந்து கொண்டிருக்கிறது. உன்னுடைய சூடான படுக்கையிலேயே தங்கியிரு. நான் உன்னை பார்த்துக் கொள்கிறேன்' என்றாள் அவள்.

பின்னர் அவள் ஒரு மலரின் இதழில், குருவிக்குத் தண்ணீர் கொண்டு வந்தாள். அதைக் குடித்த குருவி, முள் செடியில் பட்டு தன் ஒரு இறகு எப்படி கிழிந்தது என்பதையும், அதனால் வெப்ப நாடுகளுக்குப் பறந்து போன பறவைகளோடு அவ்வளவு வேகமாய்ப் பறக்க முடியாமல் போனது பற்றியும் கூறியது. இறுதியில் அது தரையில் விழுந்துவிட, இந்த இடத்துக்கு எப்படி வந்தது என்பது பற்றி எதுவுமே ஞாபகம் இல்லை என்றும் கூறியது.

பனிக்காலம் முழுதும் குருவி கீழேயே தங்கியது. தம்பலினா அதன்மீது மிகமிக அன்பு பாராட்டி அதற்குக் கருணை செய்தாள். வயல் எலிக்கோ மூஞ்சூறுக்கோ குருவியைப் பிடிக்காதாகையால், அவற்றுக்கு இது விஷயம் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை.

வசந்த காலம் வந்தவுடன், சூரியன் பூமியைச் சூடாக்க, குருவி தம்பலினாவிடம் விடைபெற்றுக்

www.padippakam.com



கொள்ள, மூஞ்சூறு செய்ததுபோலவே, கூரையின் ஓட்டையைத் திறந்தாள். அவர்கள்மேல் நன்றாக வெயிலடிக்க, குருவி, தம்பலினாவைத் தன்னோடு வருகிறாயா என்று கேட்டது; தன் முதுகில் அமர்ந்து கொண்டு, பச்சை மரக்காட்டில் வெகுதூரம் போய் விடலாம் என்றதும், தான் இப்படி அதனை விட்டுப் போனால், முதிய வயல் எலி வருந்தும் என்பதைத் தம்பலினா அறிவாள்.

'இல்லை, என்னால் வர முடியாது' என்றாள் தம்பலினா.

'போய் வருகிறேன், போய் வருகிறேன், அழகிய சின்னப் பெண்ணே!' என்ற குருவி, வெயிலில் பறக்கத் துவங்கியது. போவதைப் பார்த்த தம்பலினாவுக்குக் கண்களில் கண்ணீர் வந்தது; அவள் குருவியை மன சார மிகவும் விரும்பினாள்.

'டுவிட் - டுவிட்! டுவிட் - டுவிட்!' என்று பாடிய பறவை பச்சைக் காட்டுக்குள் பறந்து போனது...

தம்பலினாவுக்கு வலு துக்கம். வெதுவெதுப்பான வெயிலிற் செல்வதற்கு அவள் என்றுமே அனுமதிக்கப் பட்டதில்லை. வயல் எலியின் வீட்டுக்கு மேலிருந்த நிலத்தில் விதைக்கப்பட்ட தானியங்கள் காற்றில் உயரமாக வளர்ந்திருந்தது; உங்கள் கட்டைவிரலைப் பார்க்கிலும் உயரமில்லாத அவளுக்கு அது அடர்ந்த காடாகத் தோன்றியது.

அவளுடைய அயல் வீட்டுக்காரரான கறுப்பு வெல்வெற் 'கோர்டு' அணியும் அலுப்பாரான அந்த மூஞ்சூறு அவளை மணஞ்செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதால், 'இப்பொழுது கோடைகாலத்தின்போது,

www.padippakam.com



உன் திருமண ஆடைகளைத் தயாரிக்க நீ துவங்க வேண்டும்!' என்று வயல் எலி அவளுக்குச் சொல்லிற்று. 'உனக்கு உல்லன் மற்றும் லினென் ஆடைகள் தேவைப்படும். நீ மூஞ்சூறைக் கல்யாணம் செய்ததும், இருப்பதற்கும் படுப்பதற்கும் உனக்குத் தளவாடங்கள் தேவைப்படும்.

தம்பலினா நூல் நூற்க, இரவும் பகலும் நெய்வதற்காக வயல் எலி, நான்கு சிலந்திகளை வேலைக்கு அமர்த்தியது. ஒவ்வொரு மாலையும் மூஞ்சூறு வந்து பார்த்து, பூமியைச் செங்கல்லைப் போன்று வெயில் வாட்டியெடுத்ததினால், கோடை முடியும்போது பாதியளவு உஷ்ணம்கூட இருக்காது என்று கூறியது.

ஆம், கோடை காலம் முடிந்ததும், தம்பலினாவுடனான அதன் திருமணம் நடைபெறும். ஆனால், அலுப்படிக்கும் அந்தக் கிழ மூஞ்சூறை அவளுக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்காததினால், அவளுக்குச் சிறிதளவுகூடச் சந்தோஷம் இருக்கவில்லை. சூரியன் உதித்ததும் ஒவ்வொரு காலையும், அது மறையும் ஒவ்வொரு மாலையும் யாருக்கும் தெரியாமல் அவள் வெளியே வந்தாள். காற்று, தானியக் கதிர்களை ஒதுக்கும் போது, அவள் நிலவானத்தைப் பார்த்தாள். அங்கே அது எவ்வளவு வெளிச்சமாகவும் அழகாகவும் இருக்கிறது என்று நினைத்தவள், தனதன்பு குருவியை மீண்டும் பார்க்க மனதார விரும்பினாள். ஆனால், குருவி திரும்பி வரவில்லை. அது பச்சைக் காட்டின் இடையே வெகுதூரம் போயிருக்கக்கூடும்.

இலையுதிர் காலம் வந்தபோது, தம்பலினாவின் திருமண ஆடைகள் எல்லாம் தயாராக இருந்தன.

www.padippakam.com



'இன்னும் நான்கு வாரங்களில் உன் திருமண நாள்!' என்று அவளிடம் வயல் எலி கூறியது. ஆனால் அலுப்புத் தரும் மூஞ்சூறு தனக்கு வேண்டாம் என்று கூறி, தம்பலினா அழுதாள்.

'உளறாதே! அடம் பிடிக்காதே. இல்லையென்றால், எனது வெண்பற்களால் உன்னைக் கடித்து விடுவேன். உனக்கு ஒரு அருமையான கணவன் கிடைக்கிறான். அவருடைய கறுத்த வெல்வெற் கோர்டினைப் பொறுத்த வரையில் ஏன் அரசியாரிடங்கூட அப்படி ஒன்று கிடையாது. அவர் வெல்வெற் அணிந்தவர். அது குறித்துப் பிழை விடாதே நீ. உன்னை ஓர் அதிர்ஷ்டக்காரி என்று நினைத்துக்கொள்ள வேண்டும்.'

திருமண நாளும் வந்து சேர்ந்தது. தம்பலினாவை அழைத்துப் போக மூஞ்சூறு வந்து விட்டது. பூமிக்கு அடியில், அவரோடு அவள் வாழ வேண்டும். அவருக்குப் பிடிக்காததினால், அவள் வெதுவெதுப்பான சூரிய வெளிச்சத்துக்கு எப்பொழுதுமே வர முடியாது.

வயல் எலியினால் தனது வீட்டு வாசல்படியில் இருந்தாவது பார்க்க அனுமதிக்கப்பட்டிருந்த அழகிய சூரிய வெளிச்சத்துக்குப் பிரியாவிடை சொல்ல நேருகின்றதே என்பதை நினைத்து அந்தப் பாவப்பட்ட குழந்தை வருந்தியது.

'போய் வருகிறேன், அழகிய சூரியப் பிரகாசமே!' என்று தன் இரண்டு கைகளையும் ஆகாயத்திலே விரித்தபடி, வயல் எலியின் வாயிலையும் சற்றுத் தாண்டினாள். இப்போது தானியங்கள் அறுவடை செய்யப் பட்டிருந்ததால், வயலில் வெறும் அடித்

www.padippakam.com



தண்டுகள் மட்டுமே நின்றன. அங்கே பூத்திருந்த ஒரு சிறு சிவப்பு மலரை அணைத்தபடி, அவள் மீண்டும் கூறினாள்:

'போய் வருகிறேன்! போய் வருகிறேன்! அருமையான குருவியே நீ மீண்டும் பாாக்க நேர்ந்தால், என்னுடைய அன்பை அதற்குச் சொல்லு.'

இவ்வாறு அவள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அவளுடைய தலைக்கு மேலாக, 'டுவிட்-டுவிட்! டுவிட் - டுவிட்!' என்ற குரல் கேட்டது. அவள் மேலே பார்க்க, அங்கே அந்தக் குருவி பறந்து வந்து கொண்டிருந்தது. தம்பலினாவைக் கண்டதும் அது மிக மகிழ்ச்சி கொண்டது. தன் இஷ்டத்துக்கு மாறாக அசிங்கமான மூஞ்சூறைத் திருமணம் செய்து கொள்ள இருப்பதையும், சூரியன் புகாத இடத்தில, பூமிக்கடியல் தான் வாழ இருப்பதையும் தம்பலினா அதற்குக் கூறினாள். இந்த நினைவே அவளை அழச் செய்தது.

'குளிர் பனிக்காலம் இப்பொழுது வர இருக்கிறது. தூரத்திலுள்ள வெப்பமான நாடுகளுக்குப் பறந்து போக இருக்கிறேன். என்னோடு நீ வருகிறாயா? நீ என் முதுகில் உட்கார்ந்து கொள்ளலாம்! உன் இடுப்பு நாடாவினால் பிணைத்துக் கொண்டால் நாம் இந்த அசிங்கமான மூஞ்சூறிடமிருந்தும், அதன் இருட்டு அறைகளிலிருந்தும், தூரம், வெகுதூரம், மலைகளுக்கு மேல்; இங்கு இருப்பதைவிட அதிக வெயிலோடு, எப்போதும் கோடையாகவே இருக்கும், அழகிய மலர்கள் இருக்கும் வெப்ப நாடுகளுக்குப் போய் விடலாம். இருட்டான பூமிப் பாதையில் உறைந்து கிடந்தபோது என்னைக் காப்பாற்றிய

www.padippakam.com



அன்பான சின்னத் தம்பலினாவே, என்னோடு பறந்து வந்து விடு!' என்றது குருவி.

'சரி, நான் உன்னோடு வருகிறேன்' என்றாள் தம்பலினா.

பறவையின் முதுகில் அவள் அமர்ந்து, விரிந்த இறகுகளிலே தன் கால்களை வைத்துக் கொண்டு, தன்னை உறுதியான இறகில் இடுப்பு நாடாவால் பிணைத்துக் கொண்டாள். பின்னர் குருவி காற்றிலே காட்டின் மேலும், கடலின் மேலும் பறந்தது; பனி உறைந்து கிடக்கும் மலைகள்மேல் பறந்தது! குளிர் காற்றில் தம்பலினா நடுங்கினாள். ஆனால், தன்னை பறவையின் சூடான இறகுகளில் மறைத்துக் கொண்டு, கீழே தென்படும் அழகுகளைக் காணத் தன் சிறு தலையை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டாள்.

கடைசியாக அவர்கள் வெப்பமான நாடுகளுக்கு வந்து சேர்ந்தார்கள். இங்கே வெயில் நன்றாக எறித்தது; வானம் இரண்டு மடங்கு உயரமாயிருந்தது; மச்சுகளிலும், கொளுத் தட்டிகளிலும் அழகான பச்சை மற்றும் கறுப்புத் திராட்சைகள் காய்த்தன; பழத் தோட்டங்களிலே எலுமிச்சையும் ஆரஞ்சுகளும் தொங்கின; இனிய நறுமணமூட்டும் மலர்களும் செடிகளும் அங்கே வளர்ந்தன; அழகிய நிறங்கள் சிந்திய பட்டாம்பூச்சிகளோடு இனிமையான குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன. குருவி மேலும பறக்க, மேன்மேலும் அழகு பெருகியது. நீல ஏரியினருகே அழகிய பச்சை மரங்களின்கீழே, பழங்காலத்தில் இருந்தே பிரகாசிக்கும் பளிங்கு மாளிகை ஒன்று நின்றது. அதன் உயர்ந்த தூண்களைச் சுற்றி திராட்சைக் கொடிகள் சுற்றி நின்றன. அங்கே. அதன் உயரத்

www.padippakam.com



திலே, பல குருவிகளின் கூடுகள் இருந்தன. அவற்றுள் ஒன்றிலேதான் தம்பலினாவைத் தூக்கி வந்த குருவியும் வசித்தது.

'இங்குதான் என் வீடு' என்றது குருவி. ஆனால், இங்கே, கீழே வளரும் பூக்களிலே மிக அழகிய ஒன்றினை நீ உனக்காகத் தேர்ந்தெடுப்பாயானால், அதன்மீது உன்னை வைத்து விடுகிறேன். நீ எப்பொழுதும் இருந்ததைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்துடன் அங்கே வாழலாம்.'

'ஆகா, எவ்வளவு அழகானது!'' என்று கத்தியபடி தன் குஞ்சுக் கைகளைத் தட்டினாள்.

அங்கே, ஒரு வெள்ளைப் பளிங்குத் தூண் கீழே விழுந்து, மூன்றாக உடைந்திருந்தது. அவற்றிற்கிடையில் மிக அழகான பெரும் வெள்ளைப் பூக்கள் வளர்ந்திருந்தன. தம்பலினாவோடு பறந்த குருவி, அகலமான பூவிதழ் ஒன்றிலே அவளை இறக்கி விட்டது. அப்பொழுது அவள் எத்தகைய வியப்புக் கொண்டாள்! கண்ணாடியால் செய்யப்பட்டவள் போல், வெண்மையாகவும், ஒளி புகக்கூடிய மென்மையாகவும் உள்ள ஒரு சின்ன மனிதன் மலரின் மத்தியில் அமர்ந்திருந்தான். அவன் தலையில் மிக அழகான தங்கக் கிரீடம் இருந்தது. அவனுடைய தோள்களிலே மிக அழகான பிரகாசமான இறக்கைகள். அவன்கூட தம்பலினாவைப் பார்க்கிலும் அதிகமான உயரமும் இல்லை. அவன் அந்தப் பூவின் சம்மனசு. ஒவ்வொரு மலரிலும் இது போன்ற ஆணோ பெண்ணோ வசித்தார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் இவனே அரசன்.

'கேட்டியா, இவன் மிக அழகு!' என்று தம்பலினா குருவியிடம் இரகசியக் குரலிலே சொன்னாள்.

www.padippakam.com



குருவியைப் பார்த்ததும் குஞ்சு இளவரசன் பயந்து போனான். மிகச் சின்னவனாக இருந்த அவனுடன் ஒப்பிடும் பொழுது, உண்மையில் அந்தக் குருவி ஒரு இராட்சதப் பறவை போன்று தோன்றியது. ஆனாலும் அவன் தம்பலினாவைப் பார்த்தவுடன் சந்தோஷப்பட்டான்; அவன் இதுவரை அவளைப் போன்ற ஓர் அழகிய பெண்ணைப் பார்த்ததே இல்லை. அதனால், அவன் தன் கிரீடத்தைக் கழற்றி, அவள் தலையில் வைத்து, அவளது பெயர் என்ன என்று கேட்டு, அவள் தனக்கு மனைவியாவாளா எனவும், அதன்மூலம் மலர்களுக்கெல்லாம் ராணியாவாளா என்றும் கேட்டான். இவன் தவளையின் மகனைப் போன்றோ, கறுப்பு வெல்வெற் கோர்டு அணிந்த மூஞ்சூறு போன்றோ இல்லாமல் வித்தியாசமாக இருந்தான். எனவே, அவள் அழகான இளவரசனிடம், ஆம் என்று சொன்னாள்.

ஒவ்வொரு மலரிலிருந்தும் ஒரு சீமானோ அல்லது சீமாட்டியோ வெளிவர, அந்த அழகு பார்ப்பதற்கு சந்தோஷம் தருவதாக இருந்தது. ஒவ்வொருவரும் தம்பலினாவுக்கு ஒரு பெரிய பரிசு கொண்டு வந்தனர். அவற்றுள், ஒரு வெள்ளை ஈயின் ஒரு ஜோடி சிறகுகளே சிறந்த பரிசு. தம்பலினாவின் முதுகில் அவை கட்டப்பட்டன. இப்போது அவளாலே ஒரு மலரிலிருந்து மற்றொரு மலருக்குப் பறக்கக்கூடியதாக இருந்தது.

அது தம்பலினாவை மிகவும் விரும்பி, அவளிடம் இருந்து என்றும் பிரிந்திருக்க விருப்பாதபடியால், அதனுடைய மனசிலே துக்கம் கனத்த போதிலும், அங்கே அவ்வளவு ஆனந்தம் வழிந்ததால், குருவி அவர்களுக்கு மேலே தனது கூட்டில் அமர்ந்தபடி,

www.padippakam.com



தன்னால் முடிந்தவரை அவர்கள் எல்லோருக்குமாகப் பாடியது.

'இனிமேல் நீ தம்பலினா என்ற பெயரினால் அழைக்கப்படலாகாது! அது ஒரு அசிங்கமான பெயர். நீ அழகானவள். நாங்கள் உன்னை மையா என்றே அழைப்போம்!' என்று அவளிடம் கூறினான் மலர்த்தேவன்.

'போய் வருகிறேன்! போய் வருகிறேன்!' என்று சோகமாகக் கூறிய குருவி, வெப்பமான நாடுகளில் இருந்து மீண்டும் மிகத் தூரமான டென்மார்க்குக்குத் திரும்பியது. அங்கே தேவதைகள்பற்றிய கதைகளைச் சொல்லக்கூடிய ஒரு மனிதனுடைய யன்னலின்மீது, அதற்கு ஒரு கூடு இருந்தது. அவன் முன்னால், அது 'டுவிட் - டுவிட்!' என்று அவனுக்காகப் பாடும். அங்கிருந்துதான் நாம் இந்த முழுக் கதையையும் பெற்றுக் கொண்டோம்.

www.padippakam.com



# தாய்

ஒரு தாய் தன் குழந்தையின் அருகில் அமர்ந்திருந்தாள். அவளுக்கு மிகுந்த துக்கம். அஃது இறந்து விடுமோ எனப் பயந்தாள். அதன் குஞ்சு முகம் வெளிறியிருந்தது. அதன் கண்களும் மூடியிருந்தன. குழந்தை சுவாசிப்பதற்குச் சிரமப் பட்டது. அக்குஞ்சு உசிர் பிராணியைப் பார்த்து அத்தாய் மிகவும் துக்கப்பட்டாள்.

அப்பொழுது கதவு தட்டப்பட்டது. தன்னை வெப்பமாக வைத்துக் கொள்வதற்காகப் பெரிய போர்வை போன்று தோற்றமளித்த ஏதோ ஒன்றி னாற் போர்த்தபடி, ஓர் ஏழைக் கிழவன் உள்ளே வந்தான். குளிரான பனிக்காலமானதினால்,

www.padippakam.com



அவனுக்கு அதுதேவைப்பட்டது. வெளியே எல்லாமே பனிக்கட்டிகளினால் மூடப்பட்டிருந்தன. முகத்தைக் குளிரினாலே வெட்டிப் பிளப்பதைப் போல, படு சீதளக் காற்று வீசியது.

கிழவன் குளிரில் நடுங்கியதினாலும், குழந்தை ஒரு கணம் அமைதியாகக் காணப்பட்டதினாலும், ஒரு சிறிய பானையிலே பானம் ஊற்றி, அவனுக்குச் சூடாக்கிக் கொடுப்பதற்காக, அதனை அடுப்பிலே வைத்தாள். கிழவன் அமர்ந்தபடி தொட்டிலை ஆட்டினான். அவனுக்குப் பக்கத்திலிருந்த பழைய கதிரை ஒன்றிலே அமர்ந்த தாய், மிகுந்த வேதனையுடன் மூச்சிழுத்துக் கொண்டிருக்கும் தன் நோயுற்ற குழந்தையைப் பார்த்து, அதன் சிறிய கையைப் பற்றினாள்.

'இஃது எனக்குத் தங்கும் என்று நினைக்கின்கின்றாயா?' என்று கேட்டாள். 'கருணையுள்ள இறைவன் என்னிடமிருந்து இதைப் பறிக்க மாட்டான்.'

அக்கிழவன் — அவனே இழவு — விநோதமாகத் தலையை அசைத்தான். ஆம் என்பது போலவும், இல்லை என்பது போலவும் அதன் அர்த்தம் அமையலாம். தாயின் கண்கள் கவிழ்ந்தன. அவள் கன்னங்களிலே கண்ணீர்த் துளிகள் உருண்டன. மூன்று பகல்களும் மூன்று இரவுகளும் அவள் கண்கள் மூடாதபடியால், அவளுடைய தலை கனத்தது. ஒரே ஒரு நிமிடம் மட்டுமே அவள் தூங்கினாள். பின்னர் விழித்தெழுந்து குளிரினால் நடுங்கினாள்.

'என்ன இது?' என்று கேட்டு எல்லா பக்கமும் சுற்றிப் பார்த்தாள். கிழவன் போய் விட்டான். குழந்தையும் போய் விட்டது. அவன் அதை எடுத்துச்

www.padippakam.com



சென்று விட்டான். அதன் மூலையிலே ஓசை எழுப்பி ஓடிக் கொண்டிருந்த பழைய மணிக் கூண்டின் 'பெண்டுலம்' குண்டு நிலத்திலே விழுந்து கிடந்தது. மணிக்கூடு நின்று விட்டது.

தன் குழந்தைக்காக அழுது கொண்டே அந்த ஏழைத்தாய் வீட்டுக்கு வெளியே விரைந்தாள்.

வெளியே, நீண்ட கறுப்பு அங்கியணிந்த பெண் ஒருத்தி, உறை பனியிலே அமர்ந்திருந்தாள். அவள் சொன்னாள்: 'இழவு உன் அறையில் உன்னுடன் இருந்தான். உன் குழந்தையுடன் அவன் விரைந்து செல்வதைக் கண்டேன். அவனுடைய கவடுகள் காற்றைப் பார்க்கிலும் விரைவானவை. அவன் எடுத்துச் செல்வதை என்றுமே திருப்பிக் கொண்டு வருவது இல்லை!'

'அவன் எந்த வழியாகச் சென்றுள்ளான் என்பதை மட்டும் எனக்குச் சொல்' என்றாள் தாய். 'வழியைச் சொல்; நான் அவனை கண்டுபிடிக்கின்றேன்.'

'எனக்கு அவனைத் தெரியும்' என்றாள் கறுப்பு அங்கிக்காரி. 'ஆனால், உனக்கு நான் அதைச் சொல்வதற்கு முன்னர், உன் குழந்தைக்காக நீ பாடிய பாடல்களை எல்லாம், எனக்காக நீ பாடுதல் வேண்டும். அந்தப் பாடல்கள் எனக்கு மிகவும் விருப்பமானவை. முன்னரும் அவற்றைக் கேட்டிருக்கின்றேன். நானே இரவு. அவற்றை நீ பாடியபொழுது, நான் உன் கண்ணீர்த் துளிகளைப் பார்த்திருக்கின்றேன்.'

'அவற்றை எல்லாம்—எல்லாவற்றையுமே—நான் பாடுகிலேன்!' என்றாள் தாய். 'ஆனால், என்னைச்

www.padippakam.com



சுணக்க வேண்டாம். நான் அவனை முந்திச் சென்று, என் குழந்தையைக் கண்டுபிடிக்க வேண்டும்.'

இரவு அசையாமல் மௌனமாக இருந்தது. தாய் கைகளைப் பிசைந்தாள்; பாடினாள்; அழுதாள். எத்தனையோ அநேகம் பாட்டுகள். மேலும் கண்ணீர்த் துளிகள். பின்னர் இரவு சொன்னது: 'இருண்ட ஊசியிலைக் காட்டுக்குள் வலப் பக்கமாகப் போ. இழவு உன் குஞ்சுக் குழந்தையுடன் அந்த வழியாகச் செல்வதை நான் பார்த்தேன்.'

காட்டின் வெகு உள்ளே வீதி கிளை பிரிந்தது. எந்த வழியாற செல்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. கறுப்பு முட்புதர் ஒன்று அங்கே நின்றது. ஓர் இலையோ, ஒரு பூவோ அதில் இல்லை. அது குளிரான பனிக் காலமானதினால், அதன் கிளைகளில் இருந்து பனிக்கட்டிகள் தொங்கின.

'என் குஞ்சுக் குழந்தையுடன் இழவுபோவதை நீ பார்க்கவில்லையா?'

'பார்த்தேன்!' எனப் புதர் பதிலளித்தது. 'ஆனால் நீ என் இதயத்திற்கு வெப்ப மூட்டாத வரையிலும் அவன் எந்த வழியாற் சென்றான் என்பதைச் சொல்லமாட்டேன் சாகும் அளவுக்கு நான் குளிர்ந்து கொண்டிருக்கிறேன். நான் பனிக் கட்டியாக மாறிக் கொண்டிருக்கிறேன்.'

கறுப்பு முட்புதரை அவள் தன் மார்பிலே அழுத்தினாள். அதற்கு வெப்பமூட்டும் வகையில் மிக நெருக்கமாக அழுத்தினாள். முட்கள் அவள் சதையைத் துளைத்தன. அவள் இரத்தம் பெருந்துளிகளாக வழிந்தது. அந்த இருண்ட பனிக்கால இரவில், அந்தக் கறுப்பு முட்புதரிலே புதிய பசிய இலைகள் முளைத்

www.padippakam.com



தன; பூக்கள் மலர்ந்தன. சோகப்படும் தாயின் இதயத் திலே அத்தகைய வெப்பம் உண்டு! கறுப்பு முட்புதர் அவள் செல்ல வேண்டிய பாதையைக் கூறியது.

பின்னர் அவள் ஒரு பெரிய பொய்கையை வந்து அடைந்தாள். அதிலே கப்பல்களோ படகுகளோ இல்லை. அவள் கடக்கக் கூடியதாக அந்தப் பொய்கை உறைந்திருக்கவில்லை. நடந்து செல்லத்தக்க வழி களும் இல்லை. ஆனாலும், தன் குழந்தையைக் கண்டு பிடிப்பதற்காக அவள் அதனைக் கடந்துதான் ஆக வேண்டும். அதனைக் குடித்து முடிக்கப் பார்த்தாள். அது யாராலும் சாத்தியமான ஒன்றல்ல. ஆனாலும் அந்தச் சோகத்தாய் ஏதாவது அற்புதம் நிகழலாம் என்றே நினைத்தாள்.

'இல்லை; இந்த முயற்சி வெற்றி தராது' என்றது பொய்கை. 'எப்படி நாங்கள் ஒரு பொருத்தத்திற்கு வரலாம் என்பதைப் பார்ப்போம். முத்துக்கள் சேர்ப் பதில் நான் விருப்பம் உள்ளவன். இதுவரை நான் பார்த்தவற்றுள் உன் கண்கள் மிகவும் பிரகாசமான இரண்டு. உன் அழுகையின் மூலம் அவற்றை என்னுள் வீழ்த்துவாயானால், அந்தப் பெரிய பண்ணைக்கு நான் உன்னைத் தூக்கிச் செல்வேன். அங்குதான் இழவு வாழ்கின்றான் மரங்களையும் பூக்களையும் பயிரிடுகின்றான். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனித உயிராகும்.'

'ஓ, என் குழந்தையைப் பெற்றுக் கொள்வதற் காக நான் எதைத்தான் கொடுக்கமாட்டேன்?' எனத் துயருறும் அத்தாய் சொன்னாள். அவள் மேலும் மேலும் அழுதாள். அவளுடைய கண்கள் பொய்கை யின் ஆழத்துக்குள் விழுந்து, மிக விலையுயர்ந்த முத்துக்கள் இரண்டாக மாறின. ஊஞ்சலிலே வைத்து

படிப்பகம்

www.padippakam.com



அவளை ஆட்டுவதுபோல, அவளை உயர்த்திய பொய்கை எதிர்க்கரையிற் சேர்த்தது. மைல்கணக்கான நீளமுள்ள ஓர் அற்புத வீடு அங்கு இருந்தது. காடுகளும் குகைகளும் அமைந்த ஒரு மலையா, அன்றேல் கட்டப்பட்ட ஒரு மாளிகையா அது என்பதை யாராலும் நிதானிக்க இயலாது. ஆனாலும், அவள் தன் அழுகையின் மூலம் கண்களைத் தொலைத்து விட்டதினால், அதனை அவளாலே பார்க்க முடியவில்லை.

'என் குஞ்சு குழந்தையுடன் சென்ற இழவை நான் எங்கே பார்க்கலாம்?' என அவள் கேட்டாள்.

'இங்கே அவன் இன்னமும் வந்து சேரவில்லை' என்று அங்கும் இங்குமாகச் சென்று, அந்த வெப்ப வீட்டினைக் கண்காணிக்கும் நரைமயிர்க் கிழவி சொன்னாள். 'இங்கு வரும் வழியை எப்படிக் கண்டு பிடித்தாய்? யார் உனக்கு உதவியது?'

'நற்குண இறைவன் எனக்கு உதவினான்' என்றாள். 'அவன் இரக்கமுள்ளவன். நீகூட இரக்கம் உள்ளவளாக இருப்பாயாக. என் குஞ்சுக் குழந்தையை எங்கே காணுவேன்?'

'அது உனக்குத் தெரியாது' என்று கிழவி சொன்னாள். 'உன்னால் பார்க்கவும் முடியாது. இன்றிரவு அநேக மலர்களும் மரங்களும் வாடிவிட்டன. இழவு விரைவிலே திரும்பிவந்து அவற்றைப் புதுப்பிப்பான். ஒவ்வொரு மனித உயிருக்கும் ஒவ்வொரு வாழ்க்கை மரம் அல்லது வாழ்க்கை மலர் ஒழுங்கு படுத்தப்பட்டு உள்ளது என்பதை நீ நன்கு அறிந்திருத்தல் கூடும். அவை ஏனைய செடிகளைப் போன்றே தோன்றினாலும், அவற்றிற்குச் சொந்தமான இதயத் துடிப்புகள்

www.padippakam.com



உண்டு. குழந்தைகளின் இதயங்கள்கூடத் துடிக்கும். இதனை யோசித்துப் பார். உன் குழந்தையின் இதயத் துடிப்பினை உன்னால் இனங்காணுதல் சாத்தியம். ஆனால், மேற்கொண்டும் நீ என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உனக்குச் சொன்னால், நீ எனக்கு என்ன தருவாய்?'

'தருவதற்கு என்னிடம் எதுவும் இல்லை' எனத் துயருறும் அத்தாய் சொன்னாள். 'ஆனாலும், உனக்காக நான் லோகத்தின் அந்தம்வரை செல்லத் தயாராக இருக்கிறேன்.'

'அங்கு நீ எனககாகச் செய்யக்கூடிய காரியம் எதுவும் இல்லை' என்றாள் கிழவி. 'ஆனால், நீ உன் நீண்ட கருங் கூந்தலை எனக்குத் தரலாம் அது மிகவும் அழகானது என்பதை நீ அறிதல் வேண்டும். அது என்னை மகிழ்விக்கும். அதற்குப் பதிலாக நீ என் வெள்ளைக் கூந்தலை எடுத்துக் கொள்ளலாம்.'

'இதற்கு மேல் நீ எதுவும் கேட்கவில்லையே?' அவள் கேட்டாள். 'அதனை உனக்கு மகிழ்ச்சியுடன் தருவேன்.' தன் அழகிய கூந்தலை அவளுக்குக் கொடுத்துவிட்டு, கிழவியின் வெண்கூந்தலை மாற்றாக பெற்றுக் கொண்டாள்.

பின்னர், இழவின் பெரிய வெப்ப வீட்டுக்கு அவர்கள் சென்றார்கள். அங்கு மலர்களும் மரங்களும் அற்புதமாகப் பின்னிப்பிணைந்து வளர்ந்தன. கண்ணாடி மணிகளின் கீழே, ஊதா நிறத்தில், ஊதுகுழல் வடிவில் மலர்கள் இருந்தன. சில புதியன. ஏனையன சற்றே நோய் கண்டன போலவும். அவற்றைச் சுற்றிலும் நீர்ப் பாம்புகள். அவற்றின் மூட்டுகளிலே கறுப்பு தண்டுகள் இறுக்கமாகக் கவ்விக் கொண்டு

www.padippakam.com



தொங்கின. கிளை விடாத உயரமான மரங்கள், கிளைகள் சடைத்த பாரிய மரங்கள், வாழைகள், மணி வாழைகள், பல்வகைத்தான மரங்களும் அங்கே வளர்ந்தன. ஒவ்வொரு மரத்துக்கும் மலருக்கும் தனிப் பெயர்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனித உயிர். அந்த மனிதர்கள் உயிர் வாழ்ந்தார்கள். ஒருவன் சீனாவிலும், ஒருவன் கிறீன்லாந்திலும் என்று உலகமெங்கும் சிதறி வாழ்ந்தார்கள். பெரிய மரங்கள் சின்னச் சாடிகளிலே திணிக்கப்பட்டிருந்தன. அவை நெருக்கமாக வளர்ந்ததினால் சாடிகள் உடைந்து விடும்போலத் தோன்றின. அநேக சிறிய நோஞ்சான் மலர்கள் வளமான நிலத்தில் நின்றன. அவை கவன மாகப் பராமரிக்கப்பட்டன. அச் சோகத்தாய் மிகச் சிறிய செடிகள் மேலெல்லாம் குனிந்து, ஒவ்வொன் றினதும் மானிட இதயத் துடிப்பினைக் கேட்டாள். கோடிக்கணக்கானவற்றுள் அவள் தன்னுடைய குழந்தையின் இதயத் துடிப்பினை இனங் கண்டாள்.

'இதுவேதான்!' அவள் கத்தினாள். இளவேனிற் கறாளைப் பூமரம் ஒன்று நோயினாற் துவண்டு நிறம் வாடி இருந்தது. அதன்மீது கைகளை விரித்தாள்.

'அந்த மலரைத் தொடாதே' என்றாள் கிழவி. 'ஆனாலும் இங்கேயே இரு. இழவு வந்ததும்— அவனை ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்க்கிறேன்— இந்தச் செடியைப் பிடுங்கி விடாதே. நீ மற்றைய செடிகளைப் பிடிங்கி எறியப் போவதாக பயமுறுத்து. அப்பொழுதுதான் அவன் பயப்படுவான். இவை எல்லாவற்றுக்கும் அவன் கணக்குக் காட்டவேண்டும். சொர்க்கத்திலிருந்து ஆணை கிடைக்கும் வரையிலும் ஒன்று தானும் பிடுங்கப்படலாகாது.'

சடுதியாக அந்த மண்டபத்தின் ஊடாகப் பயங் கரக் குளிர் விரைந்தது. அக் குருட்டுத் தாய், இழவு வந்து கொண்டிருப்பதை உணர்ந்தாள்.

www.padippakam.com



'இங்கு வரும் வழியை எப்படிக் கண்டு பிடித்தாய்?' என்று கேட்டான். 'என்னிலும் பார்க்க விரைவாக உன்னால் எப்படி வர முடிந்தது?'

'நான் ஒரு தாய்' என அவள் பதிலளித்தாள்.

அந்தச் சிறிய மென்மலரை நோக்கி, இழவு தன்னுடைய நீண்ட கைகளை நீட்டினான். ஆனால், அவள் தன் கைகளினால் அதனை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். இருந்தாலும், அவன் அதன் ஓர் இலையாவது தொடலாகாது என்பதிலே பற்றார்வம் மிக்கவளாகக் காணப்பட்டாள். அவள் கைகள்மீது இழவு மூச்சு விட்டான். குளிர் காற்றிலும் பார்க்க அவனுடைய மூச்சு குளிராக இருந்ததை அவள் உணர்ந்தாள். அவளுடைய கைகள் சக்தியிழந்து சோர்ந்தன.

'எனக்கு எதிராக உன்னால் எதையும் செய்ய முடியாது' என்றான் இழவு.

'ஆனால் கருணாகரனான இறைவனாலே முடியும்' —அவள் பதிலளித்தாள்.

'அவனுடைய கட்டளைகளை மட்டுமே நான் செயற்படுத்துகின்றேன். நான் அவனுடைய தோட்டக்காரன். காணான் தேசத்திலுள்ள பெரிய சொர்க்கத் தோட்டங்களிலே, அவனுடைய மரங்களையும் மலர்களையும் நான் மறுபடியும் நாட்டுகின்றேன். ஆனால், அவை அங்கே எவ்வாறு இருக்கும் என்பதையும், எவ்வாறு வளமுறும் என்பதையும், உனக்கு என்னாலே சொல்லுதல் ஆகாது.'

'என் குழந்தையை என்னிடம் திருப்பித் தா' என்றாள் தாய். அவள் கெஞ்சினாள். கசிந்துருகினாள். சடுதியாக இரண்டு அழகிய மலர்களை இரண்டு கைகளினாலும் பற்றிக்கொண்டு, 'நான் நம்பிக்கைகளை இழந்து விட்டேன்; உன் மலர்களை

www.padippakam.com



எல்லாம் பிய்த்தெறிவேன்' என்று இழவைப் பார்த்து அவள் கத்தினாள்.

'அவற்றைத் தொடாதே. நீ துக்கப்படுவதாக நீ சொல்லுகின்றாய். இப்பொழுது இன்னொரு தாயையும் உன்னைப் போலவே துக்கப்பட வைக்க முயலுகிறாய்!'

'இன்னொரு தாயா?' அவ்வேழை கேட்டாள். அந்த மலர்களைக் கைவிட்டாள்.

'இதோ, உன் கண்களைப் பெற்றுக் கொள். இவற்றை நான் பொய்கையிலிருந்து எடுத்தேன். மிகவும் பிரகாசமாக இவை மின்னின. உன்னுடையவை என்பது தெரியாது. எடுத்துக்கொள். முன்னரிலும் பார்க்க இவை இப்பொழுது மிகவுந் தெளிவாக உள்ளன. பக்கத்திலுள்ள கிணற்றின் ஆழத்தினூடாக இப்பொழுது பார். நீ பிடுங்க முயன்ற இரண்டு மலர்களுடைய பெயர்களையும் உனக்கு நான் சொல்லுவேன். நீ அணாப்பவும் அழிக்கவும் முயன்றவை எவை என்பதைப் பார்ப்பாய்.'

அவள் கிணற்றுக்குள் குனிந்து பார்த்தாள், அவற்றுள் ஒன்று உலகிற்கு ஆசிர்வதிக்கப்பட்ட ஒன்றாகத் தோன்றியது. அதனைச் சுற்றிலும் இன்பமும் களிப்பும் பரம்புவதை பார்ப்பது மிக ஆனந்தமாக இருந்தது. மற்றையதைப் பார்த்தாள். அது வறுமை, துயரம், துன்பம் ஆகியனவற்றால் உருவானதாகத் தோன்றியது.

'இரண்டுமே இறைவனின் சித்தங்கள்' என்றான் இழவு.

'இவற்றுள் எந்த மலர் துரதிர்ஷ்டமானது? எது ஆசீர்வதிக்கப்பட்டது' என்று அவள் கேட்டாள்.

www.padippakam.com



'அதனை நான் உனக்குச் சொல்லாமல் விடலாம்' என இழவு பதிலளித்தான். இந்த மலர்களுள் ஒன்று உன் குழந்தையினுடையது என்பதை மட்டும் நீ அறிந்து கொள்ளலாம். உன் குழந்தையின் விதியை—சொந்தக் குழந்தையின் எதிர்காலத்தையே—நீ பார்த்தாய்.' பயத்தினால் கூச்சலிட்டாள்.

'இவற்றுள் எது என் குழந்தையினுடையது? அதை எனக்குச் சொல்! அப்பாவியான அக்குழந்தையை விடுதலை செய்! அதைத் தூக்கிக் கொண்டு போய் விடு! இறைவனின் சாம்ராஜ்யத்துக்குள் அதனைக் கொண்டுபோ! என் கண்ணீரை மறந்து விடு. என் கெஞ்சுதல்களை மறந்துவிடு. நான் செய்தவை எல்லாவற்றையும் மறந்துவிடு!'

'உன்னை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை உன் குழந்தை உனக்குத் திரும்பவும் வேண்டுமா? அல்லது நீ அறியாத காணான் தேசத்துக்கு அதனைத் தூக்கிச் செல்லட்டுமா?'

அப்பொழுது அத்தாய் தன் கைகளைக் கசக்கியவாறே, முழங்கால்களிலே வீழ்ந்து, உத்தம இறைவனைப் பிரார்த்தித்தாள்.

'எக்காலமும் மிகச் சிறந்ததேயான உன் சித்தத்திற்கு எதிராக நான் செய்யும் பிரார்த்தனைகளை உன் செவிகளிலே வாங்கிக் கொள்ளாதே! என்னைக் கேட்காதே! என்னைக் கேட்காதே!' அவள் தலை அவளுடைய மார்பிலே சாய்ந்து அமிழ்ந்தது.

இழவு, அவளுடைய குழந்தையுடன் காணான் தேசத்துக்குச் சென்றான்.

www.padippakam.com




# தேநீர் பாண்டம்

பெருமை பிடித்த தேநீர் பாண்டம் ஒன்று இருந்தது. அது தன் பீங்கானைப் பற்றிப் பெருமைப்பட்டது; தன் நீண்ட மூக்கைப் பற்றிப் பெருமைப்பட்டது; தன் அகண்ட பிடியைப் பற்றிப் பெருமைப்பட்டது. அதற்கு முன்னால் ஒன்றும், பின்னால் ஒன்றும்—மூக்கு முன்னால், பின்னால் பிடி—இருந்தது. அது இதைப் பற்றிப் பேசுவதே வழக்கம். ஆனால், உடைந்து கடாவப்பட்ட தன் மூடியைப் பற்றி அது எப்பொழுதுமே கதைப்பதில்லை. அது ஒரு குறைதான். தன் குறைகளைப் பற்றி யாரும் கதைக்க விரும்புவதில்லை. பிற சனங்கள் அதை நிச்சயம் செய்வார்கள். கோப்பைகள், பீரிஸுகள,



படிப்பகம்

www.padippakam.com



பால் ஜாடி, சீனிக் கிண்ணம், தேநீர்ச் சேவையிலிருந்த முழுவதும் தேநீர் பாண்டம் அறிந்து வைத்திருந்த நல்ல பிடியையும் மிக நல்ல மூக்கையும் பற்றி அல்லாமல், அந்த மூடியின் குறைபாட்டினை நிச்சய மாக நினைவில் வைத்து, அது பற்றியே பேசின.

'அவறறை நான் அறிவேன்' என்று தன் மூச்சு வாக்கிலே சொல்லிக் கொண்டது. 'என் சொந்தக் குறைகளையும் நான் அறிவேன். அதை ஒப்புக் கொள்ளுகிறேன். இங்கேதான் நான் பணிவும் மன அடக்கமும் கொள்ளுகின்றேன். எங்களுடைய குறைகள் எங்கள் எல்லோருக்கும் உண்டு. ஆனால், எங்கள் எல்லோருக்கும் சிறப்புக் குறிப்புகளும் உண்டு. கோப்பைகளுக்கு பிடிகள் தரப்பட்டுள்ளன. சீனிக் கிண்ணத்துக்கு ஒரு மூடி உண்டு. எனக்கு இவை இரண்டும் தரப்பட்டுள்ளன. எனக்கு முன்னால் உள்ள அந்த மூக்கை அவர்கள் எப்பொழுதும் பெறப் போவதில்லை. இதுவே என்னைத் தேநீர் மேசையின் இராணி ஆக்குகின்றது. சீனிக் கிண்ணமும், பால் ஜாடியும் சிறந்த சுவையின் பணியாட்களாகப் பட்டிருக்கின்றன. ஆனால், நானே அதைக் கொடுப் பவன்; ஆட்சியாளன். தாகப்படும் மனித குலத்துக்கு நான் நல்ல உற்சாகம் வழங்குகிறேன். என்னுள் சுவையற்ற கொதிக்கும் நீரிலே சீனா இலைகள் (தேயிலை) காய்ச்சப்படுகின்றது.'

இவற்றை எல்லாம் இளமையின் தன்னம்பிக்கை யுடன் தேநீர் பாண்டம் சொல்லிற்று. ஒழுங்கு படுத்தப்பட்ட மேஜையிலே நின்ற அது மிக மென்மை யான கை ஒன்றினால் தூக்கப்பட்டது. ஆனால் அந்த மிக மென்மையான கை விகாரமானதும். தேநீர் பாண்டம் கீழே விழுந்தது. மூக்கு உடைந்து வேறாகியது; கைப்பிடி உடைந்து வேறாகியது.

www.padippakam.com



ஏற்கனவே இது பற்றிப் போதுமான அளவு சொல்லப்பட்டதினால், மூடியைப் பற்றி மேற் கொண்டு எதுவும் சொல்லப் போவதில்லை. தேநீர்ப் பாண்டம் மூர்ச்சையடைந்து நிலத்தில் கிடந்தது; கொதிநீர் வெளியே ஓடியது. தேநீர்ப் பாண்டத்தைப் பார்த்து அவர்கள் சிரித்ததுதான் எல்லாவற்றிலும் மிகக் கடினமான விஷயமாக இருந்தது.

'இந்த ஓர் அநுபவத்தை நான் என்றுமே மறக்க மாட்டேன்' என்று தன் சொந்த வாழ்க்கையைப் பற்றிய கதையைப் பின்னர் சொல்லும்பொழுது, தேநீர்பாண்டம் சொல்லலாயிற்று. 'நான் முடவன் என்றழைக்கப்பட்டு, ஒரு மூலையிலே போடப் பட்டேன். மறுநாள் சில சொட்டுகளுக்குப் பிச்சை கேட்ட ஒரு பெண்ணிடம் கொடுக்கப்பட்டேன். நான் ஏழ்மையில் அழுந்தினேன். உள்ளும் புறமும் ஊமை யானேன். நான் இவ்வாறு இருந்த பொழுதுதான், ஒரு நல்ல வாழ்க்கை துவங்கியது. முதலிலே நீ ஒன்றாக இருந்து, பிறகு வேறு ஒன்றாக மாறுவது. என்னை மண்ணால் நிரப்பினார்கள். தேநீர் பாண் டத்துக்கு இது புதைக்கப்படுவதை ஒத்தது. ஆனால் அந்த மண்ணிலே மொட்டினை நாட்டினார்கள். யார் அதனை எனக்குத் தந்தார்கள், யார் அதனை நாட்டினார்கள் என்பனவற்றை என்னாலே சொல்ல ஏலாது. ஆனால், தேயிலைக்கும் கொதிநீருக்கும் பதிலாக, என் உடைந்த கைப்பிடிக்கும் மூக்குக்கும் பதிலாக அது கிடைத்தது. மண்ணுள், என்னுள் அந்த மொட்டுக் கிடந்தது. அது என் இதயமாக, உயிர்ப் புள்ள இதயமாக மாறியது. இதைப் போன்ற ஒன்றை நான் முன்னர் வைத்திருந்ததில்லை. என்னுள், உயிர் இருந்தது. சக்தியும் பலமும் இருந்தது. என் நாடி துடித்தது. மொட்டு தளிர்க்கத் துவங்கியது. எண்ணங்களும் உணர்ச்சிகளும் வெடிப்பது போல,

www.padippakam.com



பின்னர் பூவாய் விரிந்தது. நான் அதைப் பார்த்தேன். நான் அதைத் தாங்கினேன். அதன் அழகிலே நான் என்னை மறந்தேன். மற்றவர்களுள் தன்னை மறந்து போதல் என்பது எத்தகைய ஆசீர்வாதம்! அது புகழப்பட்ட பொழுதும், பாராட்டப்பட்ட பொழுதும், 'உனக்கு நன்றி' என்று எனக்கு எப்பொழுதும் சொன்னதும் இல்லை. என்னை எப்பொழுதாவது நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இதனால் நான் மகிழ்ந்தேன். அப்படியாயின், அது இன்னும் எவ்வளவு அதிகமாக மகிழ்ச்சி அடைந்திருக்கும்? பின்னர், அதற்கு இன்னொரு நல்ல பாண்டம் தேவைப்படும் என்று அவர்கள பேசிக் கொண்டதை ஒருநாள் கேட்டேன். நான் இரண்டாக உடைக்கப்பட்டேன். அது எனக்குப் பயங்கர வலியை ஏற்படுத்தியது. பூ இன்னொரு நல்ல பாண்டத்திலே வைக்கப்பட்டது. நான் புறக்கடையிலே வீசப் பட்டேன். நான் இங்கே ஒரு பழைய உடைந்த பாண்டமாகக் கிடக்கிறேன். ஆனால், எனக்கு ஞாபக சக்தி உண்டு. அதனை என்னால் என்றுமே இழக்க ஏலாது!?

www.padippakam.com




# சிவப்புச் சப்பாத்துக்கள்

முன்னொரு காலத்திலே ஒரு சிறிய பெண் இருந்தாள் — அவள் இனிமையும் அழகும் நிறைந்தவள். அவள் ஏழையானதால், கோடைகாலத்தில் மட்டும் எப்பொழுதும் வெறும் காலோடு நடந்தாள்; மழைக்காலத்தில் தடிமனான மரக் காலணிகளை அணிந்து கொண்டாள். அதனால் அவளது சிறிய கால்கள் மொத்தமும் சிவப்பாயின; பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கும்.

கிராமத்திற்கு நடுவே, வயசுபோன சப்பாத்துத் தைப்பவள் வாழ்ந்தாள். அவள் பழைய சிவப்பு துணியால் தன்னால் முடிந்தவரை, ஒரு ஜோடி சிறிய சப்பாத்துகளை உட்கார்ந்து கொண்டு தைத்தாள்.

படிப்பகம்

www.padippakam.com



அவை சற்று அவலட்சணமாக இருந்தாலும், நன்றாக தைக்கப்பட்டிருந்தது அந்தச் சிறிய பெண்ணின் பெயர் கரென்.

அவளது அம்மா அடக்கஞ் செய்யப்பட்ட அன்று அவளுக்கு சிவப்பு சப்பாத்துகள் கொடுக்கப்பட்டு, அதை முதல் முறையாக அணிந்து கொண்டாள். அது துக்கத்திற்குப் பொருத்தமானது. இல்லையென்றாலும், வேறு இல்லாததால், அதனை அணிந்து, ஏழ்மையான வைக்கோல் சவப்பெட்டிக்குப் பின்னால் நடத்தாள்.

அவள் அப்படிச் செல்கையில், ஒரு பெரிய வயசான சீமாட்டி அமர்ந்திருந்த பெரிய பழைய வண்டி ஒன்று வந்தது. அவள் அச்சிறிய பெண்ணைப் பார்த்துப் பரிதாபப்பட்டு, பாதிரியாரிடம் கூறினாள். 'அந்தச் சிறிய சிறுமியை எனக்குத் தாருங்கள். நான் அவளைப் பார்த்துக் கொள்கிறேன்!'

இது நடந்ததற்குத் தனது சிவப்புச் சப்பாத்துகள் தான் காரணம் என கரேன் நினைத்தாள்; ஆனால் அந்தக் கிழவி அவை பயங்கரமானவை என்று கூறி, எரித்துவிட்டாள்.

கரேன் அணிவதற்கு தூய்மையான, கவர்ச்சியான ஆடைகள் கொடுக்கப்பட்டன. அவள் வாசிக்கவும் தைக்கவும் கற்க வைக்கப்பட்டாள். மக்கள் அவளை வடிவானவள் என்றார்கள்; ஆனால், அவளது கண்ணாடி சொன்னது: 'நீ வடிவுக்கும் மேலானவள், உண்மையில் நீ மா அழகானவள்!'

ஒருமுறை ராணி இளவரசியான தன் சிறிய மகளையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு, நாட்டைச் சுற்றிப் பயணம் செய்தாள். மக்கள் அரண்

www.padippakam.com



மனையை நோக்கி குழுமினார்கள்; வாஸ்தவத்தில் கரேனும் அவர்களுள் ஒருத்தி. மக்கள் பார்ப்பதற்காக சிறிய இளவரசி யன்னலருகே மிக அழகான உடை உடுத்தி நின்றாள். அவள் நீண்ட அங்கியோ, தங்கக் கிரீடமோ அணியவில்லை. ஆனால், அற்புத மான சிவப்பு மொரோக்கோ சப்பாத்துகள் அணிந் திருந்தாள். குட்டி கரேனுக்காக சப்பாத்துத் தைப்பவள் தைத்து கொடுத்ததைவிட, உண்மையில் இது மிக உயர்வாய் இருந்தது. உலகில் உள்ள எதுவும் அந்த சிவப்புச் சப்பாத்துகளுக்கு இணை யாகாது!

இப்போது கரேன் உறுதிப் பூசுதல் பெறுவதற் கான வயதுக்கு வந்தாள். அவளுக்கு புது உடைகள் தயாரானதோடு, புதுச் சப்பாத்துகளையும் பெற இருந்தாள் அவளது சிறிய காலின் அளவை, நகரின் பணக்கார சப்பாத்துத் தைப்பவன் எடுத்தான். இது அவனது வீட்டின் சின்ன அறையில் நடைபெற்றது. அங்கேயிருந்த பெரும் கண்ணாடி அலமாரிகளில் தூய்மையான காலணிகளும், பளபளக்கும் பூட்ஸு களும் இருந்தன. அவை பார்வைக்கு மிகக் குறைவாக இருந்ததினால், அவளுக்கு அவை பயனற்றதாக இருந் தன. அந்தச் சப்பாத்துகளிடையே, இளவரசி அணிந் திருந்தது போன்றே, சிவப்பு ஜோடி ஒன்றிருந்தது. அவை எவ்வளவு அழகு! அவை ஒரு கோமகளின் மகளுக்காகத் தயாரிக்கப்பட்டது என்றும், ஆனால் அவை அவளுக்குப் பொருந்தவில்லை என்றும் சப்பாத் துக்காரன் கூறினான்.

'எத்தகைய நேர்த்தியான தோல்! அவை பள பளக்கின்றனவே!' என்று கிழச் சீமாட்டி சொன்னாள்.

www.padippakam.com



'ஆமாம், பளபளக்கின்றன!' என்றாள் கரேனும். அவளுக்கு அளவாக இருக்க, அவை வாங்கப்பட்டன. ஆனால் அவை சிவப்பு நிறத்தன என்பதைக் கிழச் சீமாட்டி உணரவில்லை. தெரிந்திருந்தால் கரேனை சிவப்புச் சப்பாத்து அணிந்து உறுதிப் பூசுதலுக்குப் போக அனுமதித்திருக்க மாட்டாள்; ஆனால் இப்பொழுது அவள் அதையேதான் செய்தாள்.

எல்லாரும் அவளுடைய பாதங்களையே பார்த்தார்கள். தேவாலய மண்டபத்தின் குறுக்கே, சங்கீதக்காரர்களின் அறையை நோக்கி நடக்கும்போது, நடுகல் மேலிருந்த பழைய படங்களும், கெட்டியான காலர்களும் நீண்ட கறுப்பு அங்கிகளும் அணிந்திருந்த பாதிரியார்களும், அவர்களும் மனைவிமார்களது அவளுடைய சிவப்புச் சப்பாத்துகள் மீதே கண்களைப் பொருத்தி வைத்தார்கள். அவளது தலையில் கைவைத்து, புனித உறுதிப் பூசுதல் பற்றியும், கர்த்தாவின் சகாயம்பற்றியும், அவள் இப்பொழுது எவ்வாறு பெரிய கிறிஸ்தவளாகி விட்டாள் என்பது பற்றியும் பாதிரியார் பேசிய பொழுதும், அவளுடைய நினைவுகள் முழுவதும் சப்பாத்துகள் பற்றியே இருந்தன.

பின்னர் வாத்தியம் இசைக்க, குழந்தைகள் உற்சாகமான இனிய குரலில் பாட, முதிய இசைக் குழுத் தலைவரும் சேர்ந்து பாட, கரேன் மட்டும் தனது சிவப்புச் சப்பாத்துகள் பற்றியே நினைத்துக்கொண்டு இருந்தாள்.

அவள் சிவப்புச் சப்பாத்து அணிந்தாள் என்பதைப் பிற்பகல் அளவில், எல்லோரும் சொல்லக் கிழச் சீமாட்டி கேள்விப்பட்டாள். இது வெறுப்பூட்டுவதாக உள்ளதென்றும், அது ஒழுங்கற்றது என்றும்,

www.padippakam.com



இனி எதிர்காலத்தில் கரேன் தேவாலயம் போகும் போது, பழையதாயிருந்தாலும் எப்போதும் கறுப்புச் சப்பாத்துகளையே அணிய வேண்டும் என்று கூறினாள்.

அடுத்த ஞாயிறு, தேவநற் கருணையாகும். கரேன் கறுப்புச் சப்பாத்துகளைப் பார்த்தாள்; சிவப்புச் சப்பாத்துகளைப் பார்த்தாள்; பிறகு மீண்டும் சிவப்புச் சப்பாத்துகளைப் பார்த்தாள்; அவற்றையே அணிந்து கொண்டாள்.

அன்று அழகாக வெயில் எறித்தது கரேனும் கிழச் சீமாட்டியும் சற்றே புழுதி மண்டிக் கிடந்த, தானிய வயலை ஊடறுத்துச் செல்லும் பாதையாலே சென்றார்கள்.

தேவாலய வாசலில், ஊன்றுகோலோடும், வேடிக்கையான நீண்ட தாடியோடும், முதிய ராணுவ வீரன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய தாடி வெண்மையும் கூடச் சிவப்பும்; உண்மையில் சிவப்பாகவே தோன்றியது. அவன் தரையிலே நன்றாகக் குனிந்து, அவளது சப்பாத்துகளைத் துடைக்கட்டுமா என்று கிழச் சீமாட்டியைக் கேட்டான். கரேனும் தனது சிறிய காலை நீட்டினாள்.

'சோக்கல்லோ, என்ன அழகான நடனச் சப்பாத்துகள்! நடனம் ஆடும்போது பொருத்தமாய் இருக்கும்' என்று ராணுவ வீரன் கூறினான். அந்தச் சப்பாத்துகளின் அடிப்பாகத்தைத் தன் கையாலே தட்டினான்.

அந்த ராணுவ வீரனுக்கு ஒரு செப்பு நாணயம் கொடுத்த கிழச் சீமாட்டி கரேனுடன் தேவாலயத்துக்குச் சென்றாள்.

www.padippakam.com



தேவாலயத்தில் அனைவரும் கரேனின் சிவப்புச் சப்பாத்துகளையே பார்த்தனர்; எல்லா படங்களும் அவற்றையே பார்த்தன. தேவாலயத்தில் கரேன் மண்டியிட்டபோதும், தன் இதழ்களுக்கு கிண்ணத்தை உயர்த்திய பொழுதும், அவள் தனது சிவப்புச் சப்பாத்துகளையே நினைத்தாள். அவள் தோத்திரப் பாடல்களைப் பாட மறந்ததோடு ஜெபம் செய்யவும் மறந்து போனாள்.

எல்லோரும் தேவாலயத்தைவிட்டு வெளியேற, கிழச் சீமாட்டி தனது வண்டியில் ஏறினாள். அவளைத் தொடர்ந்து ஏறுவதற்காக கரேன் தன் காலை உயர்த்தியபொழுது, கிழ ராணுவ வீரன் கூறினான்:

'எவ்வளவு அழகான நடனச் சப்பாத்துகள், பாருங்கள்!'

கரேனால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாது. சில தம்படிகள் நடனம் ஆடத் தூண்டப் பட்டாள்; ஆட ஆரம்பித்த பின், அவளது கால்கள் நடனம் ஆடிக் கொண்டேயிருந்தன. அவளுடைய சப்பாத்துகள் அவளை ஆட்கொண்டது போலானது. அவள் தேவாலயத்தின் மூலைகளைச் சுற்றி நடனம் ஆடிக் கொண்டே போனாள். அவளாலே தன்னைக் கட்டுப் படுத்த முடியவில்லை. வண்டிக்காரன் அவள் பின்னர் ஓடிப் போய், அவளைப் பிடித்து, வண்டிக்குள் ஏற்றினான். ஆனால் அவளது கால்கள் நடனமாடிக் கொண்டேயிருந்தன. அதனால் கிழச் சீமாட்டிக்குச் சில பயங்கர உதைகளும் கொடுத்தாள். இறுதியில் அவளது சப்பாத்துகளை அவர்கள் கழற்றிய பிறகே அவளது கால்கள் ஓய்ந்தன.

www.padippakam.com



வீட்டில் அந்த சப்பாத்துகள் அலமாரியில் வைக்கப்பட்டன; ஆனாலும் கரேனால் அவற்றைப் பார்க்காதிருக்க முடியவில்லை.

ஒருநாள் கிழச் சீமாட்டி நோய்வாய்ப்பட்டாள். அவள் தேறமாட்டாள் என்று கூறினாாகள். அவள் கவனிக்கப்படவும், உதவி செய்யப்பட வேண்டியவளுமானாள். கரேனைத் தவிர இதற்குத் தகுதியானவர் வேறு யாரும் இலர். ஆனால், நகரில் பெரிய நடன நிகழ்ச்சி நடக்க இருந்தது; அதற்கு கரேன் அழைக்கப் பட்டிருந்தாள். குணமடைய முடியாத கிழச் சீமாட்டியைப் பார்த்தாள். சிவப்புச் சப்பாத்துகளையும் பார்த்தாள். அதில் எவ்வித பாவமும் இல்லை என்று எண்ணினாள். மிக நன்றாக அவள் அந்தச் சப்பாத்துகளை அணிந்து கொண்டாள். ஆனால் அவள் நடன அரங்குக்குச் சென்றாள். அங்கு நடனமாடத் துவங்கினாள்.

ஆனால், அவள் வலப்புறம் போக நினைத்த போது, சப்பாத்துகள் இடப்புறம் நடனமாடின. அவள் மேலே போக நினைத்தபோது, சப்பாத்துகள் கீழே, தெருவிலே, நகர் எல்லைக்கு வெளியே நடனமாடியது. அவள் நடமாடினாளா? அவள் நடனமாட வேண்டி இருந்தது— ஆனாலும் இருண்ட காட்டினிலே!

உச்சிகளுக்கு மேலாலே என்னவோ ஒளிர்ந்தது; அது சந்திரன் என்று நினைத்தாள். ஆனால், அது ஒரு முகம்; சிவப்பு தாடியுடன் கூடிய கிழ ராணுவ வீரன். அவன் உட்கார்ந்தபடி தலையாட்டிக் கொண்டு கூறினான். 'என்ன அழகான நடனச் சப்பாத்துகள்' என்று பாருங்கள்.'

www.padippakam.com



இது அவளுக்கு அச்சம் ஊட்டியது. சிவப்புச் சப்பாத்துக்களைக் காலிலிருந்து கழட்ட முயன்றாள். ஆனால், அவை இறுக ஒட்டிக் கொண்டன. சப்பாத்துகள் பாதங்களுடன் இறுக ஒட்டிக் கொள்ளவும், அவள் காலுறைகளைக் கிழித்துவிட்டாள். அவள் நடனமாடினாள். அவள் நடனமாட வேண்டி இருந்தது. வயலிலும், புல்தரையிலும், மழையிலும் வெயிலிலும், இரவும் பகலும்! ஆனால் இரவுதான் மிக மோசம்.

நடனமாடிக் கொண்டே தேவாலய வளவிலிருந்த சுடலைப்பக்கம் சென்றாள். இறந்தவர்கள் அங்கே நடனமாடவில்லை. அவர்களுக்கு வேறு நல்ல வேலையிருந்தது. ஓர் ஏழையின் கல்லறையில் அவள் உட்கார விரும்பினாள். அங்கே கசப்பான சூரல் வகைச் செடிகள் வளர்ந்தன. ஆனால் அவளுக்கு அமைதியோ ஓய்வோ இருக்கவில்லை. தேவாலயக் கதவை நோக்கி நடனமாடியபோது, அங்கே வெண்ணுடை தரித்த, தோளிலிருந்து கால்வரை நீண்ட இறகுகள் உடைய, ஒரு சம்மனசைப் பார்த்தாள். அவனது முகம் இறுகியும் கண்டிப்பானதாகவும் இருக்க, அவனது கையிலிருந்த வாள் அகலமாகவும் பளபளப்பாகவும் இருந்தது.

'நீ ஆடவேண்டும். உனது சிவப்புச் சப்பாத்துகளோடு, நீ சோர்ந்து குளிரும்வரை, உன் தோல் எலும்புக்கூடாகச் சுருங்கும்வரை நீ ஆடவேண்டும்! வாசலுக்கு வாசல் சென்று நீ நடனமாட வேண்டும். கர்வமான செருக்கு வாய்ந்த குழந்தைகள் வாழும் வீடுகளைத் தட்டி, அவர்களுக்குக் கேட்கும்படி, உன்னைக் கண்டு பயப்படும்படி நடனமாட வேண்டும்! நீ ஆடிக் கொண்டேயிருக்க வேண்டும்!' என்றான் அவன்.

www.padippakam.com



'கருணை வேண்டும்!' என்று கரேன் கத்தினாள்.

ஆனால், சம்மனசு சொன்ன பதிலை அவளாலே கேட்கமுடியவில்லை. அவளது சப்பாத்துகள் அவளை கதவு வழியாக, வயல் காட்டிலும், தெருக்கள் மீதும், பாதைகள்மீதும் அழைத்துச் செல்லவும், அவள் எப்பொழுதும் ஆடிக்கொண்டே இருக்க வேண்டியிருந்தது.

ஒரு காலையில், அவளுக்கு நன்கு தெரிந்த வாசலருகே அவள் நடனமாடிக்கொண்டு போனாள். உள்ளேயிருந்து தோத்திரப் பாடல்களின் ஒலி வந்தது. மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு சவப்பெட்டியை அவர்கள் வெளியே சுமந்தார்கள். கிழச் சீமாட்டி இறந்து போனாள் என்பதை அவள் அப்பொழுது தான் அறிந்தாள். இப்பொழுது அவள் அனைவராலும் கைவிடப்பட்டு, ஆண்டவனின் சம்மனசினாலே சபிக்கப்பட்டுவிட்டதாக அவள் நினைத்தாள்.

அவள் நடனமாடினாள். அவள் நடனமாட வேண்டியே இருந்தது. இருண்ட இரவிலும் நடனமாட வேண்டி இருந்தது. அந்தச் சப்பாத்துகள் அவளைப் புல் பூண்டு, முட்கள் மேல் அழைத்துச் சென்றது. ரத்தம் வரும்வரை அவள் கீறிக்கொண்டாள். பின்னர் நடனமாடியபடி புல்லடர்ந்த காட்டைத் தாண்டி தனியான சிறு வீட்டுக்குப் போனாள். அங்கே நாட்டாமைக்காரன் வாழ்வது அவளுக்குத் தெரியும். யன்னலில் தன் விரல்களால் தட்டியபடிக் கூறினாள்: 'வெளியே வாருங்கள், நான் நடனம் ஆட வேண்டியிருப்பதால் உள்ளே வர முடியாது.'

நாட்டாமைக்காரன் சொன்னான்: 'நான் யார் என்று உனக்கு தெரியாமலிருக்கலாம். எனது

www.padippakam.com



கோடாலியால், நான் தீயவர்களின் தலைகளை வெட்டிவிடுவேன். எனது கோடாலி உதறுவதைப் பார்!'

'என் தலையை வெட்டிவிடாதே!' என்று கரேன் சொன்னாள்.

'என் பாவத்துக்கு என்னால் வருந்த முடியாது. ஆனால், சிவப்புச் சப்பாத்துகள் அணிந்த எனது கால்களை வெட்டி விடு!'

பின்னர் அவள் தனது பாவங்களை ஒப்புக் கொள்ள, அந்த நாட்டாமைக்காரன் அவளது கால் களை சிவப்புச் சப்பாத்துகளோடு வெட்டினான். அந்தச் சப்பாத்துகள் சிறிய கால்களோடு நடன மாடிக் கொண்டே வயல்மேல் போய், காட்டுக்குள் போயின.

பின்னர் அவன், அவளுக்கு மரக்கால்களும், ஊன்றுகோலும் செதுக்கிக் கொடுத்து, பாவிகள் எப்போதும் பாடும் தோத்திரப் பாடலையும் கற்றுக் கொடுத்தான். அவள், கோடாலி பிடித்த கையை முத்தமிட்டுவிட்டு, புல்லடர்ந்த காட்டைத் தாண்டிப் போனாள்.

'சிவப்புச் சப்பாத்துகளுக்காக நான் போதுமான அளவுக்கு உத்தரித்து விட்டேன். அவர்கள் என்னைப் பார்க்கக்கூடியதாக இப்போது தேவாலயத்துக்குப் போவேன்' என்றாள் அவள்.

தேவாலய வாசலை நோக்கி அவள் தைரியமாகப் போனாள். ஆனால் அவள் அங்கே போனபோது, அவளுக்கு முன்னால், சிவப்புச் சப்பாத்துகள் நடன மாடின. அவள் பயப்பட்டு, திரும்பி விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com



வாரம் முழுவதும் அவள் துக்கப்பட்டு, கண்ணீர் வடித்தாள். ஞாயிற்றுக்கிழமை வந்தபோது, அவள் கூறினாள்: 'நான் இப்போது போதுமான அளவுக் குப் போராடி உத்தரித்து விட்டேன்!'

'தேவாலயத்தில் அகம்பாவத்துடன் அமர்ந் திருக்கும் அநேகரைப் போல நானும் நல்லவள் என்று துணிந்து கூறமுடியும்!' அவள் எப்பொழுதும்போலத் தைரியமாகக் கிளம்பினாள். கல்லறைத் தோட்டக் கதவருகே போவதற்குள், சிவப்புச் சப்பாத்துகள் அவளுக்கு முன் நடனமாடுவதைப் பார்த்தாள். அவள் பயந்துபோய்த் திரும்பித் தனது பாவத்திற்காக மனசார வருந்தினாள்.

அவள் பாதிரியாரின் வீட்டுக்குப் போய், தான் கடுமையாக உழைப்பதாகவும், முடிந்தவையெல்லாம் செய்வதாயும் கூறி, தன்னைப் பணியாளாய் சேர்த் துக்கொள்ள வேண்டினாள். ஒரு கூரையின்கீழ் நல்லவர்களோடு வாழவே விரும்பியதால், அவள் கூலி பற்றி கவலைப்படவில்லை. அவளைப் பார்த்து இரக்கப்பட்ட பாதிரியின் மனைவி, அவளை வேலைக்கு அமர்த்தினாள். அவள் கடுமையாக உழைத்ததோடு - சமயோசிதத்தோடும் இருந்தாள். பாதிரியார் மாலைவேளையில் பைபிளை சத்தமாய்ப் படித்தபோது அவள் அமைதியாக அமர்ந்து கேட் டாள். சிறு பிள்ளைகள் எல்லாரும் அவளிடம் அன்பாக இருந்தார்கள். ஆனால், அவர்கள் ஆடை கள் பற்றியோ, காட்சி பற்றியோ, ராணியைப் போன்று அழகாக இருப்பது பற்றியோ பேசினால், அவள் தன் தலையை ஆட்டிக்கொள்ளுவாள்.

அடுத்த ஞாயிறன்று, அவர்களனைவரும் தேவாலயம் போனபோது, அவளும் தங்களுடன்

www.padippakam.com



வருகிறாளா என்று கேட்டார்கள். அவள் கண்களில் கண்ணீரோடு, ஊன்றுகோல்களை சோகமாகப் பார்த்தாள். அவள் தனது சிறிய அறையில் தனியாக இருக்கவும், எல்லோரும் தேவ வாசகங்களைக் கேட்பதற்குச் சென்று விட்டார்கள். அந்த அறை அவளது படுக்கையும், நாற்காலி மட்டுமே கொள்ளப் போதுமானது. அங்கே அவள் தனது தோத்திரப் புத்தகத்துடன் உட்கார்ந்துகொண்டாள். பக்தியான பாட்டுடன் அதைப் படித்தபோது, தேவாலயத்திலிருந்து வாத்திய இசையினைக் காற்று அவளிடம் கொண்டு வந்து சேர்த்தது. கண்ணீரிலே தோய்ந்த முகத்தை உயர்த்தி, 'ஓ கர்த்தரே, என்னைக் காப்பாற்றும்' என்றாள்.

அப்பொழுது, மிகத் தெளிவாகச் சூரியன் பிரகாசிக்கவும், முன்பொரு இரவு தேவாலய வாசலில் பார்த்த அதே வெண்ணுடை தரித்த சம்மனசு அவள்முன் தோன்றினான். ஆனால் இப்போது அவன் கையில் வாள இல்லை. அதற்குப் பதிலாக ரோஜா மலர்கள் நிரம்பிய பச்சைக்கிளை இருந்தது. இதனால் அவன் மேற்கூரையைத் தொட அது மிக மிக உயரவும், அவன் எந்த இடத்தில் தொட்டானோ அங்கு ஒரு வெள்ளை நட்சத்திரம் மின்னிக் கொண்டிருந்தது. அவன் சுவர்களைத் தொடவும், அவை வெளியே திறந்தன. அங்கே வாத்தியக் கருவி இசை எழுப்புவதையும், பாதிரிகள் மற்றும் அவர்களின் மனைவியரின் பழைய படங்களையும் கண்டாள். பிரார்த்தனைக் கூட்டம் அலங்கரிக்கப்பட்ட இருக்கைகளிலிருந்து, வேதாகமப் புத்தகத்திலிருந்து பாடிக் கொண்டிருந்தார்கள். அந்த ஏழைச் சிறுமியின் சிறிய அறைக்குள் தேவாலயம் வந்துவிட்டதா? அது, அல்லது அவள்

www.padippakam.com



தேவலாயத்திற்குப் போனாளா? பாதிரியாரின் ஏனைய குடும்பத்தினர் அமர்ந்திருந்த அதே பீடத்தில் அவளும் அமர்ந்திருந்தாள். அவர்கள் தோத்திரப் பாடலை முடித்ததும், தலை நிமிர்ந்து தலையாட்டிக் கொண்டு, 'இங்கே வந்தது மிகச் சரியான செயல் கரேன்!' என்று சொன்னார்கள்.

'கருணையினாலேதான் நடந்தது?' என்றாள் அவள்.

இசைக் கருவி அற்புத இசையைப் பொழிய, குழந்தைகள் சேர்ந்து பாடும் குரல்கள் இனிமையாக வும் இன்பமாகவும் இருந்தன. கரேன் உட்கார்ந்த இருக்கைக்கு யன்னல் வழியாக பிரகாசமான வெயில் வெப்பளித்தது. அவளது மனம் சூரிய பிரகாசத்தில், அமைதியாலும், மகிழ்ச்சியாலும் நிரம்பியதால், அது உடைந்தது போல, அவளது ஆன்மா சூரிய பிரகாசத்திலே மிதந்து கடவுளை அடையவும், அவளிடம் சிவப்புச் சப்பாத்துகள் பற்றி யாரும் எந்தக் கேள்வியும் கேட்கவில்லை.



படிப்பகம்

www.padippakam.com




# சிறிய தீக்குச்சிப் பெண்

பயங்கரக் குளிர். பனியும் பெய்ய, மாலை இருள படத் துவங்கிவிட்டது. அதுவே ஆண்டின் கடைசி மாலை—புது வருடப்பிறப்புக்கு முந்திய மாலை. குளிரிலும் இருட்டிலும், ஒரு சிறிய பெண், வெறுந் தலையுடனும், வெறுங் காலுடனும், தெருக்களில் நடந்து கொண்டிருந்தாள். அவள் வீட்டைவிட்டுக் கிளம்பும் வாஸ்தவத்தில் அவள் கால்களிலே செருப்பு அணிந்திருந்தாள். ஆனால், என்ன பயன்? அவை பெரிய செருப்புகள்; அவளது அம்மா அதுவரை பயன்படுத்தியவை; அவ்வளவு பெரியவை. தெருவில் இரண்டு வண்டிகள் வேகமாக ஓடிய சந்தர்ப்பத்தில், தெருவைக் கடந்த பொழுது,

படிப்பகம்

www.padippakam.com



அவற்றைத் தொலைத்து விட்டாள். ஒரு செருப்பை எங்கும் காணமுடியவில்லை; மற்றொன்றை ஒரு பையன் தூக்கிக்கொண்டு ஓடிவிட்டான். தனக்குக் குழந்தை பிறக்கும்போது, அதைத் தொட்டிலாய்ப் பயன்படுத்தலாம் என்று அவன் சொன்னான்.

அதனால் இப்போது, குளிரினால் சிவப்பாகவும் நீலமாகவும் ஆகிப்போன சிறிய வெறுங்காலுடன் அந்தச் சின்னப் பெண் நடந்தாள். அவளது மேலாடையில் நிறைய தீக்குச்சிகளையும், கையில் ஒரு கட்டையும் வைத்திருந்தாள். நாள் முழுக்க ஒருவரும் வாங்கவில்லை. ஒரு செப்புச் சல்லிகூட ஒருவரும் கொடுக்கவில்லை. குளிரிலே உறைந்து, பசியுடன், மிக மிகச் சோகத்துடன், பாவப்பட்ட அந்தச் சின்னவள் நடந்து கொண்டிருந்தாள்! அவளது கழுத்தில் சுருண்டு விழுந்த நீண்ட தங்கக் கூந்தலை, பனிக்கட்டிகள் மூடிக்கொண்ட போதிலும் அவள் அதைப் பற்றி இப்போது யோசிக்கவில்லை. அது புத்தாண்டு சமயமாயிருந்ததால், எல்லா யன்னல்களும் பிரகாசிக்க, வாத்து வதக்கப்படும் அற்புத வாசனை தெருவிலே தவழ்ந்தது. அது புத்தாண்டுக்கான மாலை; அவள் அதைப் பற்றித் தான் யோசித்தாள்!

ஒன்று மற்றொன்றைவிட தெருவிலே சிறிது நீண்டிருக்கும் இரண்டு வீடுகளுக்கு இடைப்பட்ட மூலையிலே, அவள் பயந்து நடுங்கியபடி அமர்ந்திருந்தாள். தனது சிறிய கால்களை தன்னுக்குள் இறுக்கிக் கொண்டாலும், குளிர் அவளை அதிக மாகவே இறுக்கியது. அவளுக்கு வீட்டுக்குப் போகத் துணிவில்லை. அவள் தீக்குச்சி எதுவும் விற்கவில்லை. அவளிடம் ஒரு செப்புக்காசு கூட இருக்கவில்லை. அவளது அப்பாவிடமிருந்து உதை கிடைப்பதோடு,

www.padippakam.com



வீடும் குளிரா்யிருக்கும். ஏனெனில் அவர்களின் தலைமேல் ஒரு கூரைமட்டுமே இருந்தது. அதிலிருந்த பெரும் கிழிசல் வைக்கோலாலும் துணியாலும் அடைக்கப்பட்டிருந்தாலும், அதன் வழியாகக் காற்று விசிலடித்து வீசும்.

குளிரினால் அவளுடைய சின்னக் கைகள் செத்தன போலவே இருந்தன. ஓ, சின்னத் தீக்குச்சி அவளுக்கு சிறிது நன்மை செய்யலாம்! கட்டிலிருந்து ஒன்றையெடுத்து, சுவரிலே தேய்த்து, அதில் தன் கைகளை சூடாக்கிக் கொள்ளலாம். அவள் ஒன்றை உருவி எடுத்தாள். ஸ்ஸ்ஸ்! எவ்வாறு வெடித்துப் பற்றிக் கொண்டது! அது தெளிவான சூடான சுடர். அவள் தன் கைகளுக்குள் அதனை வளைத்த பொழுது, சிறிய மெழுகுவர்த்தி போலத் தோன்றி யது. அது அற்புதமான மெழுகுவர்த்தி. 'பித்தளை கால்களும், மூடியும் உடைய பெரும் பளபளப்பான கணப்பின் அருகே உட்கார்ந்திருப்பது போன்றி ருந்தது அச்சிறு பெண்ணுக்கு. அவள் தன் கால் களையும் சூடாககிக் கொள்ள நீட்டிய பொழுது, சிறிய நெருப்பு அவிந்தது. கணப்பு மறைந்தது. அவளது கையில் எரிந்த தீக்குச்சியின் மிச்சம் மட்டுமே இருந்தது.

இன்னொரு புதிய குச்சியையும் தேய்த்தாள். அது பற்றிக் கொள்ள, அதன் ஒளி சுவரில் பட்டபோது மெல்லிய துணி போன்று செயற்பட உள்ளிருந்த அறையை அவளால் பார்க்க முடிந்தது. மேஜை மேலே வெண்ணிற துணி படர்ந்திருக்க, அதன்மேல் இரவு உணவு மின்னியது; ஆப்பிள்களும், உலர்ந்த பிளம்பழங்களும் உள்ளே வைத்து வதக்கியெடுக்கப் பட்ட வாத்து ஆவி கத்தியது.

அதைவிட அற்புதம் என்னவென்றால், தட்டில் இருந்த வாத்து, மார்பில் கத்தியதையும் முள்ளுக்

www.padippakam.com



கரண்டியையும் தாங்கிக் கொண்டு, ஆடிப் பாடியபடி சின்னப் பெண்ணருகே வந்தது. அப்பொழுது தீக்குச்சி அவிந்துபோக, அவள் முன் உறுதியான, ஈரமான, ஜில்லென்ற சுவர் மட்டுமே இருந்தது.

அவள் மற்றொரு தீக்குச்சியைப் பற்ற வைத்தாள். இப்போது அவள் அழகான கிறிஸ்மஸ் மரத்தின்கீழ் அமர்ந்திருந்தாள். அவள் கண்ணாடிக் கதவு வழியாக பணக்கார வணிகரின் வீட்டுக்குள் பார்த்த மரத்தைவிட, அஃது அதிகமாய் அலங்காரிக்கப்பட்டிருந்தது. பச்சைக் கிளைகளில் பல்லாயிரக் கணக்கான மெழுகுவர்த்திகள் எரிய, பிரகாசமான வண்ணப் படங்கள் பல தொங்கின. அச்சிறிய பெண், அதனை நோக்கி கைநீட்ட, தீக்குச்சி அவிந்தது. கிறிஸ்மஸ் விளக்குகள் உயரம் உயரமாகச் செல்ல, அவை பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் என்பதைக் கண்டாள். அவற்றுள் ஒன்று, ஆகாயத்திலே ஒரு நீண்ட நெருப்புக் கோட்டினை இழுத்துக்கொண்டே கீழே விழுந்தது.

'யாரோ இறந்து கொண்டிருக்கிறார்கள்' என்று சின்னப் பெண் நினைத்தாள். ஏனெனில், இப்போது இறந்துவிட்ட, அவளிடம் அன்பு செலுத்திய ஒரே ஜீவனான பாட்டி, ஒரு நட்சத்திரம் விழுந்தால், ஒரு ஜீவன் இறைவனிடம் போய் சேருகிறது என்று சொல்லியிருக்கிறாள்.

அவள் மற்றொரு தீக்குச்சியை சுவரில் தீற்றினாள். மீண்டும் வெளிச்சமாக, வெளிச்சத்தில் அவளது பாட்டி, மென்மையாகவும் அன்பாகவும், தெளிவாகவும் பளபளப்பாகவும் நின்றிருந்தாள்.

'பாட்டி!' என்று கத்திய குழந்தை, 'என்னைக் கூட்டிக்கொண்டு போங்கள்! தீக்குச்சி அணைந்து விட்டால், நீங்கள் மறைந்து விடுவீர்கள்! வெப்ப

படிப்பகம்

www.padippakam.com



மான வதக்கிய வாத்து, மற்றும் பெரிய அற்புத கிறிஸ்மஸ் மரம்போல, நீங்களும் மறைந்து விடு வீர்கள்!'

அவசரமாக, தன் பாட்டியைப் பிடித்துக் கொள்ள, அவள் தீக்குச்சி கட்டு பூமுழுவதையும் பற்ற வைத்தாள். எல்லா தீக்குச்சிகளும் பிரகாசமாக எரிய, மத்தியானத்தைவிட மிக வெளிச்சமானது; பாட்டி இவ்வளவு பெரியவளாகவோ, இவ்வளவு அழ காகவோ தெரிந்ததில்லை. பாட்டி, சின்னப் பெண்ணை கைகளில் ஏந்திக் கொள்ள, இருவரும் பிரகாசத்திலும், சந்தோஷத்திலும் உலகைவிட்டு, வெகு உயரமாகப் போனார்கள். அங்கே குளிரோ, பசியோ, கவலையோ இல்லை. அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள்.

ஆனால் மூலையில், பழைய வருடத்தின் கடைசி மாலையில், சிவந்த கன்னங்களோடு, சிரிக்கும் வாயோடு, சுவரில் சாய்ந்து உட்கார்ந்தபடி, அப் பெண் குளிரில் விறைத்துப் போய் இறந்திருந்தாள். புது வருட சூரியன் சிறிய பிணத்தின்மேல் உதித்தது! அக்குழந்தை எரித்த ஒரு கட்டு தீக்குச்சி போக மிச்சத்துடன், இறுகி உறைந்திருந்தாள். தன்னைச் சூடுபடுத்திக் கொள்ள முனைந்திருக்கிறாள் என்று அவர்கள் சொன்னார்கள். என்ன அழகான விஷ யத்தை அவள் பார்த்தாள் என்றோ, அல்லது என்ன பெருமையுடன் தன் பாட்டியுடன் அவள் சந்தோஷ மாக புத்தாண்டு தினத்துக்குப் போனாள் என்றோ, அவர்களுள் யாருமே அறிந்திருக்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# முட்டாள் ஜாக்

(பழைய கதை புதிதாகச் சொல்லப்படுவது)

நாட்டின் உள்ளே வெகு தூரத்தில் இருந்த ஒரு சீமானின் மாளிகையில், ஒரு கிழ முதலாளி தன் இரண்டு மகன்களுடன் வாழ்ந்து வந்தான். அந்த இரு இளைஞர்களும் தங்களை அதி புத்திசாலிகள் என்று நினைத்துக் கொண்டார்கள். அவர்கள் வெளியே போய், அரசனின் மகளை மணஞ் செய்யும் கோரிக்கையை வைக்க விரும்பினார்கள். ஏனெனில், அந்தக் கன்னியானவள், சொற்களை மிகச சிறப்பாக அமைக்கத் தெரிந்தவனையே, தன் கணவனாக ஏற்கப் போவதாகப் பகிரங்கமாகவே அறிவித்திருந்தாள்.

www.padippakam.com



அவளை அடைய இந்த இரு மேதைகளும் ஒரு வாரம் முழுவதும் தங்களைத் தயார்படுத்திக் கொண்டனர். அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகபட்ச கால அவகாசம் அதுதான். ஆனால், அது போதுமாய் இருந்தது. ஏனெனில், தயாரிப்புகளுக்கு தேவையான தகவல்கள் நிறையவே அவர்களுக்குக் கிடைத்திருந்தன. அது எவ்வளவு பயன்படும் என்பது அனைவருக்கும் தெரியும். ஒருவனுக்கு இலத்தீன் அகராதி முழுவதும் மனப்பாடம். மேலும் அந்த சிறிய நகரத்தின் தினசரியின் மூன்றாண்டு இதழ்களும் மனப்பாடம். அதை அவன் விருப்பம் போல், முன்னிருந்து பின்பாகவோ அல்லது மாறுதலையாகவோ ஒப்புவிக்க முடியும். அடுத்தவன் மாநகராட்சியின் சட்டங்களை ஆழ்ந்து படிந்திருந்தான். மாநகராட்சிக்கு என்ன வேண்டும் என்பது அவனுக்கு மனப்பாடம். அதன் மூலம் நாட்டின் விஷயங்களைப் பற்றிப் பேசி, அரசவையில் தன் நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம் என நினைத்தான். அவனுக்கு மேலும் ஒரு விஷயம் தெரியும். ரோஜாக்களையும் பிற மலர்களையும் கொண்டு விசித்திரமான பூ வேலை செய்வான். அவன் ரசனையுள்ள மெல்லிய விரல்களையுடையவன்.

'நானே இளவரசியை அடைவேன்!' என இருவரும் கூறினார்கள். அதனால், அவர்களின் கிழத் தந்தை ஒவ்வொருவருக்கும் அழகான குதிரையைத் தந்தார். அகராதியும் தினசரிகளும் மனப்பாடமாய்த் தெரிந்தவனுக்கு கறுப்புக் குதிரையும், மாநகராட்சி சட்டமனைத்தும் தெரிந்தவனுக்கு பால் போல் வெண்ணிற குதிரையும் கிடைத்தன. சுலபமாகவும், சரளமாகவும் இருக்க, அவர்கள் தங்கள் வாயின் ஓரங்களை மீன் எண்ணையால் தடவிக் கொண்டனர். அவர்கள் தங்கள் குதிரைகளில் ஏறும்போது, வேலைக்காரர்கள் எல்லாரும் கீழே

www.padippakam.com



இருந்த தோட்டத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந் தார்கள். அப்பொழுது சந்தர்ப்ப வசமாய் மூன்றா வது மகன் வந்து சேர்ந்தான். உண்மையில் முதலாளிக்கு மூன்று மகன்களிருந்த போதிலும், அவனை மற்ற இருவரோடு யாரும் சேர்த்து எண்ணு வதில்லை. ஏனெனில், அவர்களைப் போல் இவன் படித்தவனல்ல. பொதுவாக அவன் 'முட்டாள் ஜாக்' என்றே அறியப்பட்டான்.

'ஹலோ! நீங்கள் எங்கே போய்க் கொண்டிருக் கிறீர்கள்? உங்களுடைய மிகச் சிறந்த ஆடைகளை அணிந்திருக்கிறீர்கள் என்பதை நான் பிரகடனப் படுத்துகிறேன்!' என்று முட்டாள் ஜாக் சொன்னான்.

'அரசனின் மகளைப் பெண் கேட்க நாங்கள் அரசவை போய்க் கொண்டிருக்கிறோம். நாடெங்கும் பிரசித்தம் செய்யப்பட்ட அறிவித்தலை நீ அறி யாயோ?' அவர்கள் அதுபற்றிய எல்லாவற்றையும் அவனுக்குச் சொன்னார்கள்.

'நல்ல செய்தி! நானும் அதில் கலந்து கொள் கிறேன்' என்று கத்திய முட்டாள் ஜாக்கைப் பார்த்து இரு சகோதரர்களும் சிரித்துவிட்டு, கிளம்பிச் சென் றார்கள்.

'அன்புத் தந்தையே! எனக்கும் ஒரு குதிரை வேண்டும். திருமணம் செய்து கொள்ள எனக்கும் ஆசையாயிருக்கிறது! அவள் என்னை ஏற்றுக் கொள்ளுவாள் என்றால், ஏற்றுக் கொள்ளுவாள்; ஏற்றுக்கொள்ளவில்லையென்றாலும், நான் அவளை அடைவேன். அவள் என்னுடையவளாக இருப்பாள்' என்றான் ஜாக்.

'பேய்க் கதை பேசாதே!' என்றார் கிழக் கனவான்.

www.padippakam.com



'உனக்கு குதிரை தரமாட்டேன். உனக்குப் பேசத் தெரியாது. உன் சொற்களை உன்னால் சரியாக வரிசைப்படுத்த முடியாது. உன் சகோதரர்கள் மிக வும் வித்தியாசமானவர்கள்.'

'சரி, எனக்குக் குதிரையில்லை என்றால் எனக்குச் சொந்தமான தாடிக் கடாவை ஓட்டிச் செல்கிறேன். அது என்னை நன்றாகச் சுமந்து செல் லும்!' என்றான் முட்டாள் ஜாக்.

எப்படிச் சொன்னானோ, அப்படியே செய்தான். தாடிக் கடாவின் மேல் அமர்ந்து, அதன் பக்கங்களில் தன் குதிக்கால்களாலே அழுத்தி, நடுத்தெருவில் புயல் போல் பறந்து சென்றான்.

'ஹே, ஹூப்! சவாரி என்றால் இதுதான்! இதோ நான் வருகிறேன்!' என்று கத்திய முட்டாள் ஜாக், எல்லாத் திசைகளிலும் எதிரொலிக்கும் வரை யிலும் பாடினான்.

ஆனால் அவன் சகோதரர்கள் அவனுக்கு முன் மெதுவாக சவாரி செய்து கொண்டிருந்தனர். அவர் கள் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆயத்தமின்றி நிகழ்த்தவேண்டிய அற்புத சொற்பொழிவுகள் பற்றியே அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தனர். அவை முன்னரே புத்திசாலித்தனமாய்த் திட்டமிடப் பட வேண்டியவை.

'ஹலோ!' என்று கத்தினான் முட்டாள் ஜாக். 'இதோ நான் வருகிறேன்! சாலையில் நான் என்ன கண்டுபிடித்தேன் என்பதைப் பாருங்கள்.' அது என்ன என்பதை அவர்களுக்குக் காட்டினான். அது ஒரு இறந்த காகம்.

www.padippakam.com



'முட்டாள்!' என்று விளித்த சகோதரர்கள், 'அதை வைத்துக்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய்?'

'இந்தக் காகத்தையா? ஏன்? நான் அதை இளவர சிக்குக் கொடுக்கப் போகிறேன்!'

'ஆம்! அப்படியே செய்' என்று அவர்கள் சிரித்து விட்டு, தொடர்ந்து சவாரி செய்தனர்.

'ஹலோ, மீண்டும் இதோ வருகிறேன்! இப் போது என்ன கண்டுபிடித்திருக்கிறேன் என்று பாருங்கள். தினமும் இதை நீங்கள் சாலையில் காண முடியாது!'

இப்போது என்ன கண்டுபிடித்து இருப்பான் என் பதைப் பார்க்க, சகோதரர்கள் திரும்பினார்கள்.

'முட்டாள்!' என்று கத்தியவர்கள், 'அது ஒரு பழைய மரச் சப்பாத்தல்லவா? இந்த லட்சணத்தில் அதன்மேல் பாகத்தையும் காணவில்லை. இதையும் இளவரசியிடம் கொடுக்கப் போகிறாயா?'

'மிக நிச்சயமாக நான் கொடுப்பேன்' என்றான் முட்டாள் ஜாக். மீண்டும் சகோதரர்கள் சிரித்து விட்டு, சவாரியைத் தொடர்ந்தனர். அவனைவிட வெகு முன்னால் போய்விட்டனர். ஆனால்—

'ஹலோ... ஹெப் றா றா!' முட்டாள் ஜாக் மீண்டும் வந்தான். 'மேலும் மேலும் சிறப்பாகிக் கொண்டேயிருக்கிறது. 'ஹறா!' இது மிகவும் புகழ் பெற்றது' என்றான்.

'ஏன், இப்போது என்ன கண்டுபிடித்தாய்?' சகோதரர்கள் விசாரித்தார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



'ஓ, என்னால் சொல்லவே முடியவில்லை; இளவரசி எவ்வளவு மகிழ்ச்சியடைவார்!' என்றான் முட்டாள் ஜாக்.

'ப்சூ! குழியிலிருந்து எடுக்கப்பட்ட களிமண் தானே அது?' என்றனர் சகோதரர்கள்.

'ஆமாம். நிச்சயமாக அதுதான் ஆனால் மிக அற்புதமான களிமண். பாருங்கள், எவ்வளவு ஈரமா யிருக்கிறது, விரலிடுக்கில் வழிகிறது' என்றான் முட்டாள் ஜாக். தன் பாக்கெட்டை களிமண்ணால் நிரப்பிக் கொண்டான்.

ஆனால் அவனுடைய சகோதரர்கள் தீப்பொறி பறக்கும்படி சவாரி செய்து, ஜாக்கைவிட ஒரு மணி நேரம் முன்பே நகரின் எல்லைக் கதவுக்கு வந்துவிட்ட னர் கதவருகே, ஒவ்வொரு போட்டியாளனுக்கும் ஒரு எண் வழங்கப்பட்டு, வந்தவுடனே ஆறு பேர் கொண்ட வரிசையில் உட்கார வைக்கப்பட்டனர். தங்கள் கைகளை நகர்த்த முடியாத அளவுக்கு நெருக்கமாக உட்கார வைக்கப்பட்டனர். அது ஒரு புத்திசாலித்தனமான ஏற்பாடு. இல்லையெனில், ஒருவன் முன்னால் இருக்கிறான் என்ற காரணத்திற் காகவே, கண்டிப்பாக அடித்துக் கொண்டிருப் பார்கள்.

இள்வரசி போட்டியாளர்களைச் சந்திப்பதைப் பார்க்க, நகரில் உள்ள அனைவரும் பெரும் கூட்டங் களாக, கோட்டையைச் சுற்றி நின்றதோடு, ஒவ் வொரு யன்னலிலும் நிறைந்திருந்தனர். ஒவ்வொருவ ரும் கூட்டத்திற்குள் நுழைந்தவுடன், மெழுகுவர்த்திச் சுடர் அவிவதுபோல, அவனது பேச்சுத் திறமை அவனைக் கைவிட்டது. பின்னர் இளவரசி, 'அவ

www.padippakam.com



னாலே பயனில்லை. கூடத்திலிருந்து வெளியேறட்டும்' என்பாள்.

இறுதியாக, அகராதியை மனப்பாடமாய்த் தெரிந்த சகோதரனின் முறை வந்தது. இப்போது அது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. அவை அனைத்தையும் மறந்துவிட்டிருந்தான். மேடைப் பலகைகள் அவனுடைய காலடி ஓசையை எதிரொலிப்பதுபோல இருந்தன. கூடத்தின் மேற்கூரை, நிலைக் கண்ணாடிகளினால் ஆனது; எனவே, அவன் தலை கீழாக நிற்பதுபோலத் தோன்றினான். யன்னலருகே மூன்று எழுத்தர்களும், ஒரு தலைமை எழுத்தரும் நின்றார்கள். தெரு முனைகளில் ஒரு பென்னிக்கு விற்கப்படும் செய்தித் தாள்களிலே அச்சிடுவதற்காக, அங்கு சொல்லப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் எழுதிக் கொள்ளுவதற்காக அவர்கள் ஒவ்வொருவரும் தயாராக இருந்தார்கள்.

'மிக மோசமான வெப்பமாயிருக்கிறது!' என்றான் முதல் சகோதரன்.

'ஆமாம். என்னுடைய அப்பா இன்று இளம் பெட்டைக்கோழிகளை வறுக்கப் போகிறார்' என்று பதிலளித்தாள் இளவரசி.

'ப்சூ!' 'பாபர்' ஆட்டுக்குட் டியைப்போல அவன் அங்கே நின்றான். இது போன்ற பேச்சுக்கு அவன் தயாராக இல்லை. புத்திசாதுர்யமாக எதையாவது சொல்லவேண்டும் என்று விரும்பின அவனுக்கு சொல்வதற்கு வார்த்தைகள் வரவில்லை. 'ப்சூ!'

'இவன் பயனில்லை!' என்று சொன்னாள் இளவரசி. 'இவன் வெளியேறட்டும்!'

படிப்பகம்

www.padippakam.com



அவ்வாறே அவன் வெளியே போக நேர்ந்தது. இப்பொழுது இரண்டாவது சகோதரன் உள்ளே வந்தான்.

'இங்கே பயங்கர வெப்பமாக இருக்கிறது!' என்றான்.

'ஆமாம். இன்று நாங்கள் பெட்டைக் கோழி களை வறுக்க இருக்கிறோம்' என்றாள் இளவரசி.

'என்ன... என்ன நீங்கள்... நீங்கள் தயவு பணி' அவன் கொன்னை தட்டினான் - எல்லா உதவியாளர் களும் எழுதிக் கொண்டனர். 'தயவு பணி...'

'இவன் பயனில்லை!' என்று சொன்னாள் இள வரசி. 'இவன் வெளியேறட்டும்!'

இப்போது முட்டாள் ஜாக்கின் முறை வந்தது. அவன் கூடத்துக்கு ஆட்டின்மேல் வந்தான்.

'நல்லது, இங்கே தாங்கமுடியாத சூடாயிருக் கிறதே.'

'ஆமாம்! நான் இளம் பெட்டைக் கோழிகளை வறுத்துக் கொண்டிருக்கிறேன்' என்றாள் இளவரசி.

'ஆ, அது அதிர்ஷ்டமாச்சே! அதே சமயம் நான் என் காகத்தை வறுத்துக்கொள்ள அனுமதிப்பீர்கள் என்று நம்புகிறேன்' என்றான் முட்டாள் ஜாக்.

'மிகுந்த சந்தோஷத்துடன்' என்ற இளவரசி, 'அதை வறுக்க உம்மிடம் ஏதாவது இருக்கிறதா? ஏனெனில், என்னிடம் சட்டியோ பானையோ இல்லை...'

'என்னிடம் இருக்கிறது' என்றான் ஜாக். 'இதோ வெள்ளீயக் கைப்பிடியுடன் கூடிய சமைக்கும் பாத் திரம்.'

www.padippakam.com



பழைய மரக் காலணியை எடுத்து, அதன்மேல் காகத்தை வைத்தான்.

'நல்லது, அது புகழ்பெற்ற உணவாயிற்றே!' என்ற இளவரசி, 'ஆனால் தொட்டுக்கொள்ள என்ன இருக்கிறது?'

'அது என் பாக்கெட்டில் இருக்கிறது' என்ற ஜாக், 'என்னிடம் அது தாராளமாக இருப்பதினால், கொஞ்சத்தை வெளியே எறிந்தாலும் பாதகமில்லை' தன் பாக்கெட்டிலிருந்து கொஞ்சம் களிமண்ணை வெளியே கொட்டினான்.

'நான் அதை விரும்புகிறேன்!' என்றாள் இளவரசி. 'உங்களாலே பதில் தர முடிகிறது. உங்களைப் பற்றி ஏதோ சொல்வதற்கும் இருக்கிறது. எனவே, நீங்களே என் கணவனாக இருப்பீர்கள். ஆனால் நீங்கள் பேசிய ஒவ்வொரு சொல்லும் குறிப்பெடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதும், நாளைய செய்தித் தாளில் அவை வெளியாகும் என்பதும் உங்களுக்குத் தெரியுமல்லவா? அங்கே பாருங்கள். ஒவ்வொரு யன்னலிலும் மூன்று எழுத்தர்களும், ஒரு தலைமை எழுத்தரும் இருக்கிறார்கள். அந்தக் கிழ எழுத்தர்தான் எல்லோரிலும் மோசமானவர், ஏனெனில் அவருக்கு எதுவுமே விளங்கமாட்டாது.'

முட்டாள் ஜாக்கை பயமுறுத்தவே இளவரசி இதைச் சொன்னாள், எழுத்தர்கள் மகிழ்ச்சியில் பார்த்தார்கள். ஒவ்வொருவரும் தன் பேனாவில் இருந்து ஒவ்வொரு சொட்டு மையை தரையில் விட்டார்கள்.

'ஓ! அவர்கள்தான் கனவான்களா?' என்ற ஜாக், 'என்னிடம் உள்ளதில் சிறந்ததை தலைமை எழுத்த

www.padippakam.com



ருக்குத் தருவேன்' என்றான். பின் தன் பாக்கெட்டில் இருந்து எடுத்து, தலைமை உதவியாளர் முகத்தில் ஈரக் களிமண்ணை வீசினான்.

'ரொம்ப புத்திசாலித்தனமாய் செய்தாய்! என்னால்கூட அதைச் செய்திருக்கமுடியாது. ஆனால் கால ஓட்டத்தில் நான் கற்றுக் கொள்கிறேன்' என்றாள் இளவரசி.

இவற்றின் பிரகாரம் முட்டாள் ஜாக் அரசன் ஆனான். அவனுக்கு கிரீடமும் மனைவியும் கிடைக்க, சிம்மாசனத்தில் அமர்ந்தான். தலைமை எழுத்தரின் அச்சுக் கூடத்திலிருந்தும் அச்சிடுபவர்களின் சங்கத் திலிருந்தும் இந்த செய்தி ஈரமாய் நமக்குக் கிடைத் துள்ளது—ஆனால் அவை கொஞ்சமும் நம்பும் தகைமை அற்றன!

படிப்பகம்

www.padippakam.com




# கடற் கன்னி

மிக அழகிய நவதானியத்தின் நீலப் பூ இதழ்களின் நீல நிறமும் தூய்மையான கண்ணாடியின் தெளிவும் கொண்ட நீரும், எந்த நங்கூரமும் செல்ல முடியாத மிக ஆழமானதுமான வெகு தூரக் கடல். அடியிலிருந்து மேல் மட்டத்தினை அடைவதற்கு, எத்தனையோ தேவாலயக் கோபுரங்களை ஒன்றின்மீது ஒன்றாக அடுக்க வேண்டி இருக்கும். அங்கே, கீழேதான், கடல்மனிதர்கள் வாழ்ந்தார்கள்.

இப்பொழுது, கடலின் அடித்தளத்தில், வெறும் வெண்மணற்பரப்பு மட்டுமே இருககிறது என்று நாம் நினைத்து விடக்கூடாது. இல்லை, அவை உயி

த—7

படிப்பகம்

www.padippakam.com



ருள்ளனவே போன்று, நீரின் சிறிய அசைவிலேயே வளைந்துவிடும் தண்டுகளும் இலைகளும் உள்ள மிக அற்புதமான மரங்களும் செடிகளும் அங்கே வளரு கின்றன. மேலே, இங்கே, காற்றுள்ள பறவைகளைப் போல பெரிதும் சிறிதுமான எல்லா மீன்களும் அந்தக் கிளைகளின் மத்தியிலே துள்ளிப் பாய்ந்து திரியும். மிக ஆழமான பகுதியிலேதான் கடல் ராஜனின் அரண்மனை இருந்தது. அதன் நீண்ட சுவர் கள் பவளப் பாறையினாலும், கூரிய முனையுள்ள யன்னல்கள் மிகத் துலக்கமான நிமிளையினாலும் ஆனவை. ஆனால், அதன் கூரை நீரின் ஓட்டத்துக்கு ஏற்ப திறந்து மூடும் கிளிஞ்சற் சிப்பிகளினால் ஆனது. அது மிக அழகாகத் தோன்றும், ஏனெனில், ராணியின் கிரீடத்திலே காட்சியளிக்கத் தக்க பிரகாசிக்கும் முத்துக்கள் அவை ஒவ்வொன்றிலும் இருந்தன.

கடல் மனிதர்களின் ராஜன் அநேக ஆண்டுகளாக தாரமிழந்தவனாக வாழ்ந்ததினால், அவனுடைய கிழத் தாயே வீட்டைப் பார்த்தாள். புத்திசாலி மனுஷியான அவள், தன் உயர்குலப் பிறப்பில் கர்வங் கொண்டவளாக, அந்தஸ்திலுள்ள ஏனையோர் ஆறு கடற்சிப்பிகளை மட்டுமே அணியலாமாயினும், அவள் பன்னிரண்டினை வாலிலே அணிந்திருந்தாள். அது மட்டுமின்றி, குறிப்பாக, தன் பேரப்பிள்ளை களான சின்னக் கடற்கன்னி இளவரசிகள்மீது அவள் கொண்ட அன்பு காரணமாகவும் அவள் அதிக புகழுக்கு உரித்தாளியாவள். அவர்கள் ஆறு பேரும் அழகானவர்கள்; கடைசிப் பெண்ணே அவர்கள் எல்லோரிலும் அழகானவள். அவளுடைய சருமம் ஒரு ரோஜா இதழைப் போல தூய்மையாகவும் தெளிவாக வும் இருந்தது. அதி ஆழமான ஏரியின் நீலத்தைப்

www.padippakam.com



போல அவள் கண்கள். ஆனால், ஏனைய கடல்கன்னி யருக்குப் போலவே அவளுக்குக் கால்கள் இருக்க வில்லை; அவளுடைய உடல் மீனின் வாலிலே முடிவுற்றது.

அங்கே, கீழேயுள்ள அரண்மனையின், உண்மை யான பூக்கள் முளைத்த சுவர்களையுடைய பெரிய மண்டபங்களிலே, அவர்கள் நாள் முழுவதும் விளை யாடினார்கள். நாங்கள் யன்னல்களைத் திறந்தால் குருவிகள் எங்களிடம் பறந்து வருவது போலவே, பெரிய நிமிளை யன்னல்கள் திறக்கப்பட்டதும் மீன்கள் நீந்தி—மீன்கள் நேராகச் சின்ன இளவரசி களிடம் நீந்தி—வந்து, அவர்களுடைய கைகளிலிருந்து உணவருந்தி, தங்களை வருடிக் கொடுக்க அனுமதிக் கும்.

பிரகாசமான சிவப்பு மற்றும் கருநீல நிறங்கள் கொண்ட மரங்களுள்ள பெரிய தோட்டம் ஒன்று அரண்மனைக்கு வெளியே இருந்தது. மரங்கள் தண்டு களையும் இலைகளையும் சதா அசைத்துக் கொண் டிருந்தபடியால், பழங்கள் தங்கத்தைப் போலவும், பூக்கள் எரியும் நெருப்பைப் போலவும் பளிச்சிட்டன. நிலம் நேர்த்தியான மணலாலானதாயினும், கந்தகச் சுடர்களின் நீலத்தில் தோன்றின. அங்கு, கீழே, எல்லாமே ஒரு விநோத நீல நிறத்திலே பிரகாசித் தன. கடலின் அடித்தளத்தில் நிற்கின்றோம் என்ப தற்குப் பதிலாக, காற்றிலே உயரமாக நின்று, உங்க ளுக்கு மேலும் கீழும் ஆகாயம் மட்டுமே தெரிவது போன்று தோன்றும். ஊதாநிறப் பூப்போலவும்,அந்த மலர்க் கிண்ணத்திலிருந்து எல்லா வெளிச்சமும் ஊற்றப்படுவது போலவும். முழுமையான அமைதி யிலே சூரியனை நீங்கள் பார்க்கலாம்.

www.padippakam.com



தங்கள் மனம் விரும்பிய மட்டும் கிண்டுவதற்கும் மரங்கள் நாட்டுவதற்குமாக அமைக்கப்பட்ட தோட்டத்திலே அந்தச் சிறிய இளவரசிகள் ஒவ்வொருத்திக்கும் சொந்தமான சிறிய நிலத் துண்டுகள் இருந்தன. ஒருத்தி திமிங்கிலத்தின் வடிவத்தில் தன் மலர்ப் படுக்கையை அமைப்பாள்; இன்னொருத்தி தன்னுடையது சிறிய கடற்கன்னியின் தோற்றத்தில் அமைவதை விரும்புவாள்; ஆனால், கடைக்குட்டியோ தன்னுடைய மலர்ப்படுக்கையை சூரியனைப்போன்ற முழுமையான வட்டவடிவில் அமைத்து, சிவப்பு ஒளிர்வது போன்ற மலர்களை மட்டுமே வளர்த்தாள். அவள் அமைதியும் சிந்தனையும் உள்ள விநோதமான குழந்தை. அவளுடைய ஏனைய சகோதரிகள் உடைந்து மூழ்கிய கப்பல்களிலே அவர்களாற் பெறக்கூடிய மிக அதிசயப் பொருள்களாலே தங்களுடைய தோட்டங்களை அழகுபடுத்திய போதிலும், மிக மேலேயுள்ள சூரியனைப் போன்று தோற்றமளிக்கும் ரோஜா சிவப்புப் பூக்களுக்குப் பக்கத்திலே, கடலின் அடியில் விழுந்துகிடந்த ஓர் அழகிய பளிங்குச் சிலையை—தெளிவான வெள்ளை கல்லிலே செதுக்கப்பட்ட ஓர் அழகிய பையனின் சிலையை—மட்டுமே அவள் வைத்திருந்தாள். சிலைக்குப் பக்கத்தில் அவள் இளஞ்சிவப்பு நிறத்தில் தூங்கும் வில்லோ செடியை நட்டாள். அம்மரம் பெருமளவில் வளர்ந்து, நீல மணற் பரப்பை நோக்கிச் சிலைக்குமேல் புதுக் கிளைகளைத் தொங்கவிட்டது. வயலெட் நிற நிழல், கிளைகளைப் போன்றே அசைந்தது; அது கிளைகள் மற்றும் வேர்களின் நுனிகளுடன் இணைந்து விளையாடி, ஒருவரோடொருவர் முத்தமிட முயல்வது போலிருந்தது.

அவர்களுக்கு மேலிருந்த மனிதர்களின் உலகைப் பற்றிக் கேட்பது அவளுக்கு பெருமகிழ்ச்சி தந்தது.

www.padippakam.com



பாட்டியோ கப்பல்கள், நகராங்கள், மனிதர்கள், மிரு கங்கள் பற்றியெல்லாம் தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் சொல்லியாக வேண்டும். பூமியின்மேலுள்ள பூக்கள் வாசனையைப் பரப்பும்.

ஆனால், கடலுக்கடியில் உள்ள பூக்கள் அவ்வா றில்லையாயினும், மரங்கள் பச்சையாக இருந்தன என்பதோடு, மரங்களுக்கிடையில் காணப்படும் மீன்கள் சத்தமாகவும் தெளிவாகவும் பாடுவது கேட்கச் சந்தோஷம் தருவதாக இருந்ததினால், அவை தனித்துவ அழகு சொரிபவையாகவே தோன்றின. மீன்கள் சிறு பறவைகளைப்போல என்று பாட்டி சொன்னபொழுது, இளவரசிகள் எக்காலமும் ஒரு பறவை பார்த்திராதபடியால், அவர்களாலே அதனை விளங்கிக் கொள்ள முடியவில்லை.

''உங்களுக்குப் பதினைந்து ஆண்டுகள் பூர்த்தி யாகும்போது, கடலிலிருந்து நீங்கள் மேலெழும்ப வேண்டும் நிலவொளியில் பாறைகளில் அமர்ந்து, பெரும் கப்பல்கள் பயணப்படுவதைப் பார்க்கலாம். அப்போது நீங்கள் காடுகளையும், நகரங்களையும் பார்ப்பீர்கள்!'' என்றாள் பாட்டி.

அடுத்த ஆண்டு ஒரு சகோதரிக்குப் பதினைந்து வயதானது; மற்றவர்கள் எல்லாம் ஒவ்வொருவருடம் இளையவராக இருந்தனர். ஆனால் மிகவும் இளைய வளுக்கு, கடலுக்கடியிலிருந்து மேலே வந்து, உலகம் எப்படி இருக்கிறது என்று பார்க்க, இன்னும் ஐந்து வருடங்கள் இருந்தன. பயணத்தின் முதல் நாளன்று, தான் என்ன பார்த்தேன் என்பதையும், மிக அழ கானது என்று தான் நினைத்ததையும் மற்றவர் களுககுச் சொல்வதாக ஒருத்தி உறுதி சொன்னாள்.

www.padippakam.com



ஏனெனில், பாட்டியால் போதுமான அளவு சொல்ல முடியவில்லை—பல விஷயங்களுக்கு அவர்களுக்கு இன்னும் தகவல் தேவையாயிருந்தது.

நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய, எப்போதும் அமைதியாக யோசனையுடன் இருக்கும் கடைக்குட்டியே இத்தகவல்களைத் தெரிந்து கொள்ள பெரிதும் விரும்பினாள். பல இரவுகள், தன் திறந்த யன்னல்கள் வழியாக, கருநீலநிற தண்ணீரில்மீன்கள், மீன் சிறகுகளாலும் வாலாலும் அடித்து விளையாடுவதைப் பார்த்தாள். சந்திரனையும் நட்சத்திரங்களையும் பார்க்க முடிந்தது. அவற்றின் மினுக்கம் மங்கலாகத் தெரிந்தாலும், நமது கண்களுக்குத் தெரிவதை விட தண்ணீரின் ஊடே அவை மிகப் பெரியதாகத் தெரிந்தன. கருமேகம் போன்று ஏதாவது அவள் தலைக்குமேல் போகும்போது, அது நீந்திச் செல்லும் திமிங்கலம் என்றோ, பலரை ஏற்றிச் செல்லும் கப்பல் என்றோ நினைத்துக் கொண்டாள். கப்பலின் அடித்தட்டையை நோக்கித் தனது வெண்கரங்களைச் சிறிய கடற்கண்ணி நீட்டிக கொண்டிருக்கிறாள் என்பது அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியாது.

இப்போது மூத்த இளவரசி பதினைந்து வயதை அடைந்ததால், கடலின் மேல்புறத்திற்குப் போக அனுமதி கிடைத்தது.

அவள் திரும்பி வந்தபோது, சொல்வதற்கு அவளிடம் நூறு விஷயங்கள் இருந்தன. அமைந்யான கடலின் மணற்பரப்பில், நிலவொளியில் படுத்து, ஒரு நூறு நட்சத்திரங்கள் மின்னுவது போன்ற விளக்குகளுடைய பக்கத்து கரையிலிருக்கும் பெரும்நகரைப் பார்த்து, அதன் இசையையும், வண்டிகள் மற்றும் மனிதர்களின் சப்தத்தையும் கேட்டு, பல தேவாலய

www.padippakam.com



கோபுரங்களைப் பார்த்து, அதன் மணியோசையைக் கேட்டு அனுபவிப்பதே, அவள் கூறியவற்றுள் மிகச் சிறந்ததாகும். அவளால் இவற்றைக் கிட்ட நெருங்க முடியாததினால், வேறெதையும்விட இவற்றுக்காகவே அவள் ஏங்கினாள்.

ஓ! கடைக்குட்டித் தங்கச்சி எப்படிக் கேட்டாள்! பின்னர் அவள், திறந்த யன்னலில் நின்று, கருநீல நீர் வழியாக மேலே பார்த்தபோது, சுறுசுறுப்பும் சப்தமும் நிறைந்த பெரும் நகரை நினைத்துக் கொண்டாள்; அவள் இருந்த அடியாழம் வரை தேவாலய மணியோசை அவளுக்குக் கேட்பது போலிருந்தது.

அடுத்த ஆண்டு, நீர்மேல் எழும்பி, எங்கு வேண்டுமானாலும் நீந்தும் அனுமதியை இரண்டாவது அக்காள் பெற்றாள். சூரியன் மறையும்போது அவள் மேலெழும்பினாள்; இந்தக் காட்சியே அதி அழகானது என அவள் கூறினாள். வானம் முழுவதும் தங்கமெனத் தோன்றியதாகவும், மேகங்களின் அழகை அவளால் வர்ணிக்க முடியவில்லையென்றும் சொன்னாள். ஊதா மற்றும் செங்கரு நீல நிறமுடைய அவை மேலே மிதந்தபோது, அதைவிட வேகமாக, நீண்ட வெண்திரை போன்ற கட்டற்ற ஒரு கூட்டம் நாரைகள் நீருக்கு மேலாக சூரியன் நின்ற இடத்தை நோக்கிப் பறந்தன. அவற்றை நோக்கி அவள் நீந்த, சூரியன் அமிழ்ந்து, கடலிலும் மேகங்களிலும் இருந்த ரோசா வண்ணம் மறைந்தது.

அடுத்த ஆண்டு அடுத்த சகோதரி மேலே போனாள். சகோதரிகளிலேயே அவள் மிகவும் தைரியசாலி. எனவே, கடலிலே சங்கமமாகிய அகலமான நீரோடை வரை அவள் நீந்தினாள். அவள், திராட்சைக் கொடிகளை உடுத்திய பச்சை மலைகளைப்

www.padippakam.com



பார்த்தாள்; அற்புதச் காட்டிடையே அரண்மனை கஸையும் கோட்டைகளையும் பார்த்தாள்; பறவை கள் பாடுவதைக் கேட்டாள்; சூரியன் வெப்பமாயிருந் ததால், தனது எரியும் முகத்தை குளிர்ச்சியாக்குவதற் காக, அவள் தண்ணீருக்குள் அடிக்கடி சுழியோடவும் நேர்ந்தது. சிறிய விரிகுடாவில், சிறிய மனிதர்கள் கூட்டத்தைக் கண்டாள். அவர்கள் நிர்வாணமாய் இருந்ததோடு, தண்ணீரை வாரியடித்துக் கொண்டி ருந்தார்கள். அவர்களோடு விளையாட அவள் எண்ணியபோது, அவர்கள் பயத்தில் ஓடிப் போனார் கள். பின்னர், ஒரு சிறிய கறுப்பு மிருகம் வந்தது-அது ஒரு நாய்; அவள் நாயைப் பார்த்ததில்லை. அவளைப் பார்த்து கடுமையாகக் குரைக்க, அவள் பயந்து போய், விரிந்த கடல்நோக்கி ஓடினாள். ஆனால். அவளால், அற்புதமான மரங்களையும் பச்சை மலைகளையும், மீன் வால்கள் இல்லாமலேயே நீரில் நீந்த முடிந்த அழகான சிறார்களையும் மறக்க முடிய வில்லை.

நான்காவது சகோதரி அவ்வளவு தைரியசாலி யல்ல. மூர்க்கமான, கடல் நடுவே இருந்து கொண்டு, அதுவே மிக அழகாய் இருப்பதாய் கூறினாள். அங்கே சுற்றி பல மைல்கள் பார்க்க முடிந்ததோடு, மேலே வானம் கண்ணாடியினாலே செய்யப்பட்ட மணி போன்று தோன்றியது. கப்பல்களைத் தூரத்திலி ருந்து பார்த்ததினால் அவை கடல் நுரைகள் போன்று தோன்றின. டால்பின்கள் குத்துக்கரணம் போட்டன; பெரும் திமிங்கிலங்கள் தமது நாசியிலி ருந்து நீரை பீய்ச்சியடித்தது; அவை சுற்றிலும் பலநூறு நீர் ஊற்றுக்கள் போன்று தோன்றின.

இப்போது ஐந்தாவது சகோதரியின் முறை வந் தது. குளிர் காலத்தில் அவளது பிறந்த நாள் வந்த

www.padippakam.com



தால், மற்றவர்கள் பார்க்காதவற்றை அவள் முதல் முறை பார்த்தாள். கடல், பச்சையாகக் காட்சி யளிக்க, பெரும் பனிக்கட்டிகள் மிதந்தன; ஒவ்வொன் றும் முத்துப் போல் தோன்றினாலும், அவை மனிதர் கட்டிய தேவாலயக் கோபுரங்களை விட உயரமாக இருந்ததாகவும் அவள் கூறினாள். அவை மிக விநோத மான வடிவங்களில் காட்சி தந்ததோடு, வைரங்கள் போல் ஜொலித்தன. அவற்றில் மிகப் பெரிய ஒன்றின் மேல் அவள் உட்கார்ந்து கொண்டு, தனது நீண்ட கூந்தலை காற்றோடு விளையாட விட்டாள். அவள் அமர்ந்திருந்ததற்குப் பின்னால், பயணப்படும் கப்பல் கள் மிக வேகமாக திசை திரும்பின. ஆனால் மாலைக் குள் மேகங்களால் வானம் மூடிக் கொள்ள, இடி இடித்து மின்னல் வெட்டி, கரும் அலைகள், பனிக் கட்டிகளை மேலே உயர்த்த, சிவப்பு வண்ணத்தில் அவை ஒளிர்ந்தன. எல்லா கப்பல்களிலும் பாய்கள் கட்டப்பட்டு, பயமும் வேதனையும் நிலைத்தன. ஆனால் அவள் அமைதியாகத் தனது மிதக்கும் பனிக் கட்டி மேல் அமர்ந்தபடி, கவைபட்ட நீல ஒளிக் கற்றை கடலிலே பாய்வதைப் பார்த்திருந்தாள்.

ஒவ்வொரு சகோதரியும் நீருக்குமேல் முதல் முறை யாக வந்தபோது, புதிய மற்றும் அழகிய காட்சி களைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்; ஆனால், இப்போது அவர்கள் வளர்ந்த பெண்கள் என்பதால், எங்கும் போவதற்கான அனுமதி இருந்தது. அதனால் அவை அது பற்றி சிரத்தையற்றவர்களாக இருந்தன. ஒரு மாதம் கழித்து, அடியாழத்தில் இருப்பது, வீட்டில் இருக்கும் வசதிகள் தருவதாக உணர்ந்து, மீண்டும் வீடு திரும்பவே விரும்பின.

பல மாலை நேரங்கள், ஐந்து சகோதரிகளும் ஒருவர் கையை மற்றவர் பிடித்துக் கொண்டு, வரிசை

படிப்பகம்

www.padippakam.com



யாக நீருக்குமேல் எழும்பினார்கள். எந்த மனிதர் களுக்கும் இல்லாத இனிமையான குரல் அவர்களுக்கு இருந்தது. புயல் வரும் வேளையில், கப்பல்கள் மூழ்கும் என்று தெரிவிப்பதற்காக, அவர்கள், கப்ப லுககு முன் நீந்திச் சென்று, கடலின் அடியாழம் எவ்வளவு அழகானது என்றும், கப்பலோட்டிகள் அங்கே வர பயப்பட வேண்டாம் என்றும், உற்சாகப் படுத்தும் பாடல்களைப் பாடினார்கள். ஆனால் அவர்களால் இவ்வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை, அதை புயலின் பெருமூச்சு என்று எண்ணினார்கள்; அவர்கள் கீழிருக்கும் அற்புதங் களைப் பார்ககுவில்லை; ஏனெனில் கப்பல்கள் கவிழ்ந் தால் அவர்கள் மூழ்குவார்கள்; கடல்ராசனின் அரண் மனைக்கு பிணங்களாய் போய் சேருவார்கள்.

சகோதரிகள் கைகோர்த்துக் கொண்டு மாலை வேலைகளில் தண்ணீருக்கு மேல் எழும்பியபோது, இளைய சகோதரி அவர்களைத் தனியாக நின்று பார்த்திருந்தாள்; அவளுக்கு அழுகையாக வந்தது. கடற்கன்னிக்குக் கண்ணீர் கிடையாதென்பது அவளை மேலும் வருத்தியது.

‘ஓ, எனக்குப் பதினைந்து வயதானால்! மேலே இருக்கும் உலகையும், அங்கே வாழ்ந்து உறையும் மக்களையும் நான் நேசிப்பேன் என்பது எனக்குத் தெரியும்’ என்றாள் அவள்.

இறுதியாக அவளும் பதினைந்து வயதை அடைந் தாள்.

‘இப்போது நீ வளர்ந்து விட்டாய்’ என்றாள் விதவையான கிழப் பாட்டி. ‘உனது சகோதரி களைப் போன்றே உனக்கும் அலங்காரம்செய்கிறேன், வா.’

www.padippakam.com



பெண்ணின் தலையில் வெண் லில்லிச் சரத்தைச் செருகினாள். ஒவ்வொரு மலரும் பாதி முத்தினா லானது. அவளது உயர்ந்த தகுதியைக் குறிக்கும்படி யாக, இளவரசியின் வாலிலே எட்டு சிப்பிகளை பாட்டி கோர்த்திருந்தாள்.

'அது வலிக்கிறது' என்றாள் சிறிய கடற் கன்னி.

'ஆமாம், பெருமை என்பது வலியைத் தாங்கக் கூடியதாக இருக்க வேண்டும்!' என்றாள் கிழச் சீமாட்டி.

ஓ, தனது தகுதிக்கான சின்னங்களையும் கன மான பூச்சரத்தையும் தூக்கி எறிவதில் அவள் எவ்வளவு மகிழ்ந்திருப்பாள்! தோட்டத்தில் இருந்த அவளது சிவப்பு மலர்கள அவளுக்குப் பொருத்த மானவை; ஆனாலும் அவளாலே எதுவுமே செய்ய முடியாது. 'போய் வருகிறேன்!' என்ற அவள், நீர்க் குமிழி போன்று மென்மையாகவும் சுத்தமாகவும், நீருக்குமேல் எழும்பினாள்.

அவள் கடலுக்கு மேல் தலை உயர்த்தியபோது தான் சூரியன் மறைந்திருந்தான்; ஆனால் மேகங்கள் எல்லாம் ரோசாவும் தங்கமும் போன்று பிரகாசித் தன. சாம்பல் சிவப்பு வானில், மாலை நட்சத் திரங்கள் பிரகாசமாகவும் அழகாகவும் ஒளிர்ந்தன. காற்று மிதமாகவும் புத்துணர்ச்சி கொண்டதாகவும் இருந்தது. கடல் மோனத்தில் இருந்தது.

அங்கு நின்றிருந்த மூன்று பாய்மரங்களை உடைய பெரும் கப்பலுக்கு, காற்று அதிகமில்லாத தால், ஒரு பாய் மட்டுமே விரிக்கப்பட்டிருந்தது. கப்பலோட்டிகள் கப்பற் பாய்மாக் கயிறுகளின் மேலும், தளத்தின் மேலும் அமர்ந்திருந்தனர். அங்கே

www.padippakam.com



இசையும் பாடலும் ஒலித்தன. மாலை மறையும் வேளையில், நூற்றுக் கணக்கான வண்ணத் தீபக் கூடுகள் ஏற்றப்பட, அவை காற்றில் எல்லா நாட்டு கொடிகளும் பறப்பதுபோலத் தோன்றின.

சிறிய கடற்கன்னி நேராக கப்பலறையின் யன்னலருகே நீந்திச் சென்றாள்; ஒவ்வொரு முறையும் கடல் அவளை உயர்த்திய போதெல்லாம், பளிங்கு போன்று சுத்தமான கண்ணாடி வழியே, மிக அழகாய் உடை உடுத்திய அநேக மக்களைப் பார்த்தாள். அவர்களிலேயே மிக அழகானவன், கறுப்பு கண்களையுடைய இளம் இளவரசன்; அவனுக்கு நிச்சயமாகப் பதினாறு வயசுக்கு மேலாகவில்லை. இந்த விருந்துகளுக்கெல்லாம் காரணம் அன்று அவனுக்குப் பிறந்த தினம் என்பதுதான்.

தளத்தில் கப்பலோட்டிகள் நடனமாட, இளம் இளவரசன் வெளியே வந்தபோது, நூற்றுக்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் வானில் எழும்பின. அவை பகல் போல் வெளிச்சம் தர, திகைப்படைந்த சிறிய கடற்கன்னி, நீருக்குள் மூழ்கினாள்; மீண்டும் அவள் தன் தலையை வெளியே நீட்ட, அவளது தலைமேல் சொர்க்கத்தின் அத்தனை நட்சத்திரங்களும் விழுவது போன்றிருந்தன. இவ்வளவு பெரிய வான வேடிக்கையை, முன்னர் எப்பொழுதும் அவள் பார்த்தது இல்லை. பெரிய சூரியனகள் எங்கும் நெருப்பை உமிழ்ந்தன; நீலக் காற்றில் அழகான மீன்கள் பறந்தன; தெளிவான நீலக் கடலில் எல்லாமே பிரதிபலிக்கப்படலாயின. கப்பலிலே பிரகாசமாக விளக்கேற்றப் பட்டிருந்ததால், ஒவ்வொரு கயிறும் தெரிந்தது; மக்களும் மிகத் தெளிவாகத் தெரிந்தனர். ஓ! இளவரசன் எவ்வளவு அழகு! இனிய இரவின் அற்புத

www.padippakam.com



இசை ஒலித்துக் கொண்டிருக்க, அவன் மக்களின் கைகளைக் குலுக்கிப் புன்னகைத்தான்.

நேரம் சென்று கொண்டே இருந்தது. சிறிய கடற்கன்னியால், கப்பலிலிருந்தும், அழகிய இளவரசனிடமிருந்தும் தன் கண்களை அகற்ற முடியவில்லை. வண்ண தீபக் கூடுகள் அவிந்து போயின; காற்றில் ராக்கெட்டுகள் பறக்கவில்லை; பீரங்கிகள் வெடிக்கவில்லை; ஆனால் கடலின் அடியாழத்தில் ஏழுறு முணுப்பும் ரீங்காரமும் கேட்டன. அவள் நீரில் அமர்ந்தபடி மேலும் கீழும் ஆடிக்கொண்டு, கப்பல் அறையைப் பார்த்திருந்தாள்.

அடுத்தடுத்து ஒவ்வொரு பாய்களாக விரிக்கப்பட்டன. பின்னர் அலைகள் மேலெழும்ப, பெரும் மேகங்கள் கூடி தூரத்தில் மின்னல் வெடித்தது. அச்சம் ஊட்டும் கால நிலையாக இருந்ததால், கப்பல் ஓட்டிகள் பாய்களை மடித்தார்கள். கட்டற்ற கடலில் பெரும் கப்பல் வேகமாக மிதந்தது: நீர், கருமலைகள் போன்று உயர்ந்து, கொடிக் கம்பங்களைச் சுருட்ட நினைத்தன; ஆனால் அன்னம் போல் கப்பல், உயர்ந்த அலைகளுக்கிடையே மூழ்கி, மீண்டும் எழுந்தது. சிறிய கடற்கன்னிக்கு இது சந்தோஷமான விளையாட்டாகத் தோன்றினாலும், கப்பலோட்டிகளுக்கு வேறுவிதமாயிருந்தது. கப்பல் வேதனையில் முனகுவதுபோல் இருந்தது.

வேகமான காற்றில் கனமான அடித் தட்டுகள் வளைந்தன. கப்பலுக்குள் தண்ணீர் புகுந்தது. முக்கிய கொடிக் கம்பம் இரண்டு சிறு துண்டுகளானது. தண்ணீர் வேகமாக உள்ளே வர, கப்பல் சாய்ந்தது. மக்கள் துன்பப்படுவதை சிறிய கடற்கன்னி பார்த்தாள். அவளே தண்ணீரின் மேல் மிதந்து வரும் கப்பலின் தூண்கள் மற்றும் துண்டுகளிடமிருந்து

www.padippakam.com



தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருந்தது. ஒருகணம், ஒரு பொருளும் தெரியாத அளவுக்கு இருட்டாக இருந்தது; ஆனால் மின்னல் வெட்டிய போது, மேலே இருந்த ஒவ்வொருவரையும் அவளால் அடையாளம் காண முடிந்தது. அவள் இளம் இளவர சனைக் குறிப்பாகப் பார்த்தபோது, கப்பல் உடையும் தருணத்தில் அவன் கடலுள் மூழ்குவதைப் பார்த் தாள். அவன் இப்போது தன்னிடம் வருவான் என்ப தால் அவள் அகமகிழ்ந்தாள். தண்ணீரில் மக்களால் வாழ முடியாது என்பதும், தனது தகப்பனாரின் அரண்மனைக்கு வரும்போது, அவன் இறந்திருப்பான் என்பதும் பின்னரே அவளுக்கு ஞாபகம் வந்தன. இல்லை, அவன் இறக்கக் கூடாது. தண்ணீரின் மேல் ஓடிவந்த தூண்கள் மற்றும் கட்டைகளுக்கு இடையே அவள், அவற்றுள் ஒன்று தன்னை சிதைத்துவிடும் என்பதையும் மறந்து, நீந்தினாள். தண்ணீரின் அடி ஆழத்துக்குள் குதித்து, மீண்டும் அலைகளின் மேல் எழும்பி, இப்படியாக அவள், புயலான கடலில் மேலும் நீந்தமுடியாத இளவரசனிடம் இறுதியாக வந்து சேர்ந்தாள். அவனது கைகால்கள் செயலிழந் தன; அழகிய கண்கள் செருகிக் கொண்டன; சிறிய கடற்கன்னி வராமலிருந்தால், அவன் இறந்திருப் பான். அவள் அவனது தலையை நீருக்குமேல் தாங்கிக் கொண்டு, அலை விரும்பும் இடத்துக்கு இருவரையும் இழுத்துச் செல்ல அனுமதித்தாள்.

காலையில் புயல் ஓய்ந்திருந்தது. கப்பலின் ஒரு துண்டும் காணக் கிடைக்கவில்லை. தண்ணீரிலிருந்து சூரியன் சிவப்பாகப் பிரகாசித்தான்; அதன் ஒளிக் கற்றை இளவரசனின் கன்னங்களிலே உயிர்ப்பின் வண்ணத்தைக் கொண்டு வந்தாலும், அவனது கண்கள் மூடியேயிருந்தன. அவனது உயர்ந்த அழகிய

www.padippakam.com



நெற்றியை முத்தமிட்டு, ஈரத் தலைமுடியைப் பின்னுக்குக் கோதி விட்டாள். அவளது சிறிய தோட்டத்தில் இருக்கும் சலவைக்கல் சிலைபோல அவளுக்கு அவன் தோன்றினான். அவள் அவனை மீண்டும் முத்தமிட்டாள் அவன் வாழ்வான் என்று நம்பினாள்.

இப்போது அவள் முன்னே உலர்ந்த நிலத்தை, உயர்ந்த நீல மலைகளும் - அதன் மேலே அன்னங்கள் வந்திருப்பது போன்று வெண் பனிகளும் இருப்பதைப் பார்த்தாள். கரையோரம் அற்புதப் பச்சைக் காடுகளும், ஒரு கட்டிடமும்—அதுதேவாலயமா, மடாலயமா என்று அவளால் சொல்ல முடியவில்லை—நின்றிருந்தன. அதன் தோட்டத்தில் ஆரஞ்சும், நாரத்தையும் வளர்ந்திருக்க, கதவுக்கு முன்னால் கிளைகள் அற்ற உயர்ந்த மரங்கள் அசைந்தன. கடல் அங்கே சிறிய விரிகுடாவை ஏற்படுத்தியிருந்தது. அது அமைதியாக தோன்றினாலும் ஆழமானதாக இருந்தது பாறைக்கு நேர் எதிரே, வெண் மணல் பரப்பிய இடத்திற்கு அவள் அழகிய இளவரசனோடு நீத்திச் சென்று, அவனை மணலல் படுக்க வைத்து, வெப்பமான சூரிய ஒளி அவன் முகத்தில் படுமாறு தலையை உயர்த்தி வைத்தாள்.

அப்பொழுது வெண் கட்டிடத்தின் அனைத்து மணிகளும் ஒலிக்க, பல இளம் பெண்கள் தோட்டத்து வழியாக நடந்து வந்தார்கள். உடனே சிறிய கடற் கன்னி தண்ணீரில் நீந்தி, நீருக்குமேல் நீண்டிருந்த இரண்டு உயர்ந்த கற்களுக்கிடையே போய், தனது முடி மற்றும் கழுத்தில் கடல் நுரையைப் பூசிக் கொண்டு, தனது சிறிய உருவத்தை யாரும் காணாதவாறு செய்துகொண்டாள். பின்னர் இளவரசனைப்

www.padippakam.com



பார்க்க யார் வருகிறார்கள் என்று கவனித்திருந்தாள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஓர் இளம்பெண் அப்பக்கமாய்ப் போனாள். அவள் ஒருகணம் ஆச்சரியப்பட்டாலும், பின்னர் பலரை அவள் அழைத்து வந்தாள். இளவரசன் உயிர் பெற்று, சுற்றி இருந்தவர்களைப் பார்த்துப் புன்னகைத்ததை கடற்கன்னி பார்த்தாள். ஆனால் அவன், அவளைப் பார்த்து புன்னகைக்கவில்லை; அவள்தான் காப்பாற்றியது என்று அவனுக்குத் தெரியாது. அவளுக்கு மிகவும் துக்கமாயிருந்தது; பின்னர், அவனை பெரும் கட்டிடத்துக்குள் அழைத்துப் போன பின், அவள் துக்கத்துடன் கடலுக்குள் குதித்து, தனது தகப்பனாரின் அரண்மனைக்குப் போனாள்.

அவள் எப்போதும் மென்மையானவளாகவும் விசனந்தோய்ந்தவளாகவும் இருப்பாள் இப்போது மேலும் அவ்வாறானாள். மேலே முதல் முறையாகப் போன போது பார்த்ததைக் கூறுமாறு அவளது சகோதரிகள் கேட்டாலும், அவள் ஏதும் சொல்லவில்லை.

பல மாலைகளிலும் காலைகளிலும், அவள், இளவரசனை விட்டுவிட்டு வந்த இடத்திற்குப் போனாள். தோட்டத்தின் பழங்கள் பழுத்து சேகரிக்கப்பட்டதை அவள் பார்த்தாள்; உயர்ந்த மலையில் பனி உருகியதைப் பார்த்தாள; ஆனால் அவள் இளவரசனைப் பார்க்கவேயில்லை. இதனால் அவள் வீடு திரும்பும்போது மேலும் துக்கமுற்றிருந்தாள். அவள் தனது சிறிய தோட்டத்தில் உட்கார்ந்து கொண்டு, இளவரசனை ஒத்திருந்த அழகிய சலவைக்கல் சிலையை தனது கைகளால் அணைப்பதே அவளுக்

www.padippakam.com



கிருந்த ஒரே ஆறுதல். அவள் தன் மலர்களைக் கவனிக்கவில்லை; அவை வழியெங்கும் புதரென வளர்ந்து தனது நீண்ட இலைகளையும் தண்டுகளையும், மரங்களின் கிளைகளோடு பிணைத்துக்கொள்ள, அவ்விடம் மிக இருட்டானது.

கடைசியில், தாங்க முடியாமல், அவள் அனைத்தையும் தனது ஒரு சகோதரியிடம் கூறினாள்; மற்றவர்களும் அதைப் பின்னர் கேட்டனர்; ஒரு சில கடற் கன்னிகளைத் தவிர வேறெவருக்கும் தெரியாத இந்த ரகசியத்தை அவர்கள் மிக நெருங்கிய தோழியரிடம் மட்டுமே கூறினார்கள். இவர்களில் ஒருத்திக்கு, இளவரசன் யார் என்று தெரியும்; அவளும் கப்பலின்மேல் நடைபெற்ற விழாவைப் பார்த்திருந்தாள்; அவன் எங்கிருந்து வந்தவன் என்றும், எங்கு அவனது நாடு உள்ளது என்றும் அவள் கூறினாள்.

'வா, சின்னத் தங்கச்சியே!' என்று கூறிய மற்றைய இளவரசிகள் அனைவரும் கைகோர்த்துக் கொண்டு, இளவரசனின் அரண்மனை இருந்த இடத்தில், வரிசையாக கடலை விட்டு மேலெழும்பினார்கள்.

அந்த அரண்மனை, ஒருவித பிரகாசமான மஞ்சள் கற்களால் கட்டப்பட்டது. அதற்கு சலவைக் கற்களான பெரும் படிகள் இருந்தன. அவற்றுள் ஒன்று நேரே, கீழே, கடலுக்குள் சென்றது. மேற் கூரைக்கு மேலே பளபளக்கும் குவிகோபுரம்இருந்தது. வாழ்விடம் முழுவதும் இருந்த தூண்களுக்கிடையில், உயிரோடிருப்பது போன்ற சலவைக்கல் சிற்பங்கள் நின்றிருந்தன. உயர்ந்த யன்னல்களிலிருந்த சுத்தமான கண்ணாடி வழியாக அற்புதமான கூடங்களைப் பார்த்தபோது, அங்கே விலையுயர்ந்த பட்டு மற்றும்



படிப்பகம்

www.padippakam.com



அலங்காரச் சிலைகள் தொங்கின. சுவர்கள் எல்லாம் அழகிய படங்கள் அலங்கரித்தன. அவற்றைப் பார்ப்பது முழுமையான மகிழ்ச்சியைத் தரும். கூடங்களின் மிகப் பெரியதின் மத்தியில், பெரும் நீரூற்று; மேற்கூரையின் கண்ணாடி குழிவு வரை உயர்ந்தது. இதன் வழியாகவே கீழேயிருந்த தண்ணீர்மீதும் அப்பெரும் பகுதியில் வளர்ந்திருந்த அழகிய செடிகளின்மேலும் சூரிய வெளிச்சம் பிரகாசித்தது.

இப்போது, அவன் எங்கே வசிக்கிறான் என்பது அவளுக்குத் தெரிந்ததால், பல மாலைகளையும் இரவுகளையும், அவள் அந்தத் தண்ணீரிலேயே கழித்தாள். யாரும் நெருங்க பயப்படும் நிலப்பரப்பு வரை அவள் நீந்திச் சென்றாள். அவள் அற்புத சலவைக்கல் உப்பரிகைக்குக் கீழேயிருந்த குறுகிய கால்வாய் வரை போனாள். அந்த உப்பரிகை நீரின் மேல் அகலமான நிழலை ஏற்படுத்தியது. இங்கே அவள் அமர்ந்து கொண்டு, பிரகாசமான நிலவொளியில் தான் மட்டுமே தனிமையிலிருப்பதாக நினைத்திருக்கும் இளம் இளவரசனைப் பார்த்தாள்.

பல மாலைகளில் அவன், இசைக்கு மத்தியில், கொடிகள் பறந்த தன் விலையுயர்ந்த படகில், பயணிப்பதைப் பார்த்தாள். பச்சை புதர்களுக்கு இடையிலிருந்து அவள் எட்டிப் பார்த்தாள்; அவளது வெள்ளிநிற திரை காற்றில் வீசியபோது, பார்ப்பவர் எவரும், வெண்ணிற அன்னம் தன் இறகுகளை விரிப்பதாகவே எண்ணுவார்கள்.

பல இரவுகளில், கடலில், விளக்குகளோடு வந்த மீன் பிடிப்பவர்கள், இளம் இளவரசனைப் பற்றி நல்லன பேசுவதை அவள் கேட்டாள். கட்டற்ற பேரலைகளால் தள்ளப்பட்டு, பாதி இறந்தநிலையில்,

www.padippakam.com



அவனது உயிரைக் காப்பாற்றியது பற்றி அவள் பெரிதும் மகிழ்ந்தாள். தனது மார்பில் அவன் எவ்வாறு அமைதியாகத் தலை சாய்த்திருந்தான் என்று நினைத்தாள். அவள் அன்போடு அவனை முத்தமிட்டாள்! ஆனால் அவனுக்கு எதுவும் தெரியவில்லை; அவளைப் பற்றிக் கனவுகூடக் காண மாட்டான்.

மனித இனத்தை அவள் பெரிதும் நேசிக்கத் தொடங்கி, தன்னுடையதைவிட மிகப் பெரியதாக இருந்த அவர்களது உலகில் அவள் மேலும் சுற்ற வேண்டும் என்று விரும்பினாள். கடலின்மேல் கப்பல்களில் அவர்களாலே பறக்க முடியும்; மேகங்களுக்கு மேல்இருந்த உயர்ந்தமலைகளில் அவர்களால் ஏறமுடியும்; அவளது கண்களுக்கு எட்ட முடியாத அளவுக்கு, நிலப்பரப்பு - காடுகள் - வயல்களெங்கும் பரவியிருந்தது. மேலும் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள அவள் விரும்பினாலும், அவளது சகோதரிகளால் எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்க முடியவில்லை; அதனால் அவள் வயதான பாட்டியைக் கேட்டாள். கிழப்பாட்டிக்கு மேலுலகம் பற்றித் தெரிந்திருந்தது. அவள் 'கடலுக்கு மேலிருக்கும் நாடுகள்' என்று சரியாகவே அழைத்தாள்.

'மனிதர்கள் மூழ்கவில்லையென்றால், அவர்கள் நிரந்தரமாக வாழ முடியுமா? இங்கே நாம் கடலில் இறப்பது போன்று அவர்களும் இறப்பார்களா?' என்று சிறிய கடற் கன்னி கேட்டாள்.

'ஆமாம்' என்று கூறிய கிழவி, அவர்களும் இறக்க வேண்டும். அவர்களது வாழ்வு நம்முடையதைவிட மிகச் சிறியது. நாம் முன்னூறு ஆண்டுகள் வரைகூட வாழலாம். ஆனால் நமது வாழ்வு முடிந்ததும் நீரின் மேற்பரப்பில் நாம் நுரையாகி விடுவோம்.

www.padippakam.com



விரும்புபவர்களின் அருகே நமக்கு ஒரு சமாதிகூட கிடையாது. நமக்கு அழிவற்ற ஆன்மா இல்லை; நமக்கு மறுபிறவி கிடையாது; நாம் கடற்பாசி போன்றவர்கள். ஒருமுறை வெட்டினால், மீண்டும் பூக்காதவர்கள். இதற்கு மாறாக, மனிதர்களுக்கு என்றும் வாழும் ஆன்மா உண்டு. அது உடல் மண்ணான பின்னும் வாழும்; அது துல்லியமான காற்றின் மேலேறி, ஒளிரும் நட்சத்திரங்களைச் சென்றடையும்! நாம் நீர் மேலெழும்பி பூமியின் நிலங்களைப் பார்ப்பது போல, நாம் பார்க்கவே முடியாத, யாருக்கும் தெரியாத அற்புத உயரங்களுக்குப் போவார்கள்' என்று விவரித்தாள்.

'நம்மிடம் ஏன் அழிவற்ற ஆன்மா இல்லை?' என்று கடற்கன்னி துக்கத்துடன் கேட்டாள். 'ஒரு நாள் மனிதராக வாழ்ந்து, சொர்க்க வாழ்வில் கலந்துகொள்ள முடியுமானால், நான் எனது நூற்றாண்டுகளான வாழ்வைச் சந்தோஷமாகக் கொடுத்துவிடுவேன்.'

'நீ அதைப் பற்றி யோசிக்கக் கூடாது' என்றாள் கிழவி. 'எங்கோ இருக்கும் மனித இனத்தைவிட நாம் மிகவும் சந்தோஷமாகவும் எவ்வளவோ சிறப்பாகவும் வாழ்கிறோம்.'

'அப்படியானால், நான் அலைகளின் இசையைக் கேட்காமல், அழகிய மலர்களையும் சிவந்த சூரியனையும் பார்க்காமல், இறந்துபோய், கடலின்மேல் நுரையாகிவிட வேண்டுமா? அழிவற்ற ஆன்மாவைப் பெற நான் ஏதும் செய்ய முடியாதா?'

'இல்லை!' என்று பாட்டி பதிலளித்தாள். 'உன்னை ஒரு மனிதன் நேசித்தானானால், நீ உன் பெற்றோரைவிட அவனுக்குச் சொந்தமாவாய்.

www.padippakam.com



அவன் உன்னையே நினைத்து அன்புசெய்து, பின்னர், பாதிரியார் முன் தனது வலது கையை உன்னுடைய கையின் மேல் வைத்து, இப்போதும் எப்போதும் பணி வன்புடன் வாழும் உறுதியை அளிப்பாரானால், பின்னர் அம்மனிதனது ஆன்மா உனது உடலுக்குள்வந்து, மனித இனத்தின் சந்தோஷத்தினைப் பெற்றவளாவாய். அவன் தனது ஆன்மாவை வைத்துக் கொண்டு, உனக்கும் ஒன்று கொடுப்பான். ஆனால், அது எப்போதுமே நடக்காது. இங்கே, கடலில், அழகானதாகக் கருதப்படும் மீன்வால் அங்கே அசிங்கமானதாகக் கருதப்படும். அவர்களாலே இதை விளங்கிக் கொள்ளவும் முடியாது. கால்கள் என்றழைக்கப்படும் இரண்டு அசிங்கமான சுமைதாங்கிகள் உடையவர்களே அழகானவர்களாக அழைக்கப்படுகிறார்கள்.'

சிறிய கடற் கன்னி பெருமூச்சு விட்டுவிட்டு, தனது மீன்வாலை விசனத்துடன் பார்த்தாள்.

'சந்தோஷமாக இருப்போம்!' என்றாள் கிழவி.

'நாம் வாழ வேண்டிய முன்னூறு ஆண்டுகளை ஆடிக் குதித்துக் கழிப்போம். அது நிச்சயம் நீண்டது தான். அப்புறம் நல்லபடியாக அமைதியாகி விடுவோம். இன்று மாலை நாம் ஓர் அவை நடனத்தை ஏற்பாடு செய்வோம்.'

பூமியிலேயே காணக் கிடைக்காத அளவுக்கு மிக அழகான தோற்றம். பெரும் நடன அரங்கின் சுவர்களும் மேற்கூரையும் கெட்டியாக, துல்லியமான கண்ணாடியாலானவை. கூடம் முழுவதும் மற்றும் சுவர்களின் ஊடாகப் பிரகாசித்த நீல நெருப்பு நிரம்பிய, இளஞ்சிவப்பு மற்றும் பச்சை வண்ணமாகப் பல நூறு சங்குகள், ஒவ்வொரு பக்கமும் வரிசையாக

www.padippakam.com



நின்றிருந்தன. கண்ணாடி சுவர்களை நோக்கி, எண்ணற்ற பெரிய மற்றும் சிறிய மீன்கள் நீந்தி வந்தன. அதில் சிலவற்றின் செதில்கள், ஊதா வண்ணத்தைப் பிரகாசிக்க, மற்றவைகளில் வெள்ளி மற்றும் பொன் நிறம் பிரகாசித்தன. கூடத்தின் மத்தியில் ஓடிவந்த அகலமான ஓடையில்தான் கடல் ஆண்களும் கடற் பெண்களும், தமக்கு விருப்பமான பாடல்களுக்கேற்ப நடனமாடினார்கள். உலகில் உள்ளவர்களுக்கு இவ்வளவு இனிமையான குரல் இல்லை. எல்லோரையும் விட சிறிய கடற் கன்னி மிக இனிமையாகப் பாட, சபையிலுள்ள அனைவரும் தமது கைகளாலும், வால்களாலும் ஒலியெழுப்பிப் பாராட்ட, கடலிலோ பூமியிலோ உள்ள எவரையும்விடத் தனக்கு இனிமையான குரலுண்டு என்பதால், அவள் ஒருகணம் மகிழ்ந்தாள். உடனே மேலேயிருந்த உலகை நினைத்த அவளால், அழகிய இளவரசனை மறக்கமுடியாமலும் அவனைப் போன்ற அழிவில்லா ஆன்மாவைப் பெற முடியாத துக்கத்தாலும் வருந்தினாள். அதனால் அவள் தனது தகப்பனாரின் அரண்மனையிலிருந்து வெளியே வந்தாள். உள்ளே மகிழ்ச்சியுடன் இன்பமும் தழைக்க, அவள் தனது சிறிய தோட்டத்தில் சோகமாக அமர்ந்திருந்தாள். தண்ணீர் வழியாக வந்த ஊதுகுழலின் ஒலியைக் கேட்ட அவள் நினைத்தாள்: ‘எனது ஆசைகள் மையமிட்டிருக்கும், யாருடைய கைகளில் எனது வாழ்வின் மகிழ்ச்சியை ஒப்படைக்க விரும்புகிறேனோ, அவர் மேலே மிதந்து கொண்டிருக்கிறார். அவரையும், அழிவற்ற ஆன்மாவையும் பெற நான் எதையும் சந்திக்கத் தயார். எனது சகோதரிகள் தகப்பனாரின் அரண்மனையில் நடனமாடும்போது, நான் இதுவரை எப்போதும் பயப்பட்டு வந்த கடல் சூன்யக்காரியிடம் செல்வேன். ஒருவேளை அவளால் எனக்கு அறிவுரை கூறி உதவ முடியுமாக இருக்கலாம்.’

படிப்பகம்

www.padippakam.com



பின்னர், சிறிய கடற் கன்னி தனது தோட்டத்தில் இருந்து கிளம்பி, சூன்யக்காரி வாழ்ந்த நுரைக்கும் நீர்ச் சுழல்களுக்குச் சென்றாள். அவ்வழியில் முன்னர் அவள் பயணப்பட்டதில்லை. அங்கே பூக்கள் வளர வில்லை; கடல் புல்லும் வளரவில்லை; வெறும் மணல்தான் நீர்ச் சுழல்வரை நீண்டிருந்தது. அங்கே தண்ணீர் சுழன்றடித்து ஓடிவந்து, அனைத்தையும் கிழித்து, அடியாழத்துக்கு எடுத்துச் சென்றது. சூன்யக்காரியின் பகுதிக்குப் போக, அவள் இந்த நீர்ச் சுழலுக்கு நடுவே போய்த்தான் ஆகவேண்டும். நீண்ட தூரத்துக்கு, சூடான மோதும் சகதியை கொண்டு வரும் அந்தப் பாதையைத் தவிர, சூன்யக் காரியை அடைவதற்கு வேறு பாதை எதுவுமே இல்லை. இதனை அவள் தரிசு நிலம் என்றாள். அதன் பின்னிருந்த விநோதமான காட்டிற்கு இடையே அவளது வீடு இருந்தது. அங்கே எல்லா மரங்களும் புதர்களும்பாதி பிராணிகளாகவும், பாதி செடிகளாக வும் இருந்தன. பூமியிலிருந்து நூறு தலைப் பாம்புகள் வளர்வனபோல அவை தோன்றின. எல்லா கிளை களும் மெல்லிய கரங்கள் போன்றும், விரல்கள் வளைந்த புழுக்கள் போன்றும் இருந்த அங்கே, வேரில் இருந்து நுனிவரை, அங்கம் அங்கமாக அடியெடுத்து அவை அசைந்தன. தண்ணீரிலே பிடிக்க முடிந்த அனைத்தையும் சிக்கெனப்பிடித்து, பின்னர் விடுவதே இல்லை.

சிறிய கடற் கன்னி, அவற்றின்முன் பயந்துபோய் நின்றாள். அவளது இதயம் பயத்தால் அடித்துக் கொள்ளத் திரும்பிவிட எண்ணினாள். ஆனால் இள வரசனும், மனித ஆன்மாவும் ஞாபகம் வர, மீண்டும் தைரியம் பெற்றாள். பறந்து கொண்டிருந்த நீண்ட தலைமுடியைத் தலையைச் சுற்றிக் கட்டினாள். அந்த

www.padippakam.com



விநோதப் பிராணிகள் பிடிக்காமலிருக்க தனது கைகளை மார்போடு அணைத்தபடி, அவள் அந்த விநோத பிராணிகளின் வளைந்த கரங்கள் மற்றும் விரல்களிடையே மீன் பாய்வது போலப் பாய்ந்தாள். அவை பல நூறு கரங்களால், இரும்புப் பிடியோடு, வைத்திருந்தவைகளைப் பார்த்தாள். அவற்றின் கரங்களில் வெண் எலும்புகளென கடலில் மரித்தவை களும், அடியாழத்தில் மூழ்கியவைகளும் இருந்தன; கப்பல்களின் துடுப்புகளையும் பெட்டிககளையும் இறுகப் பற்றியிருந்தன. நிலப் பிராணிகளின் எலும்பு கள் இருந்ததோடு, சிறிய கடற் கன்னி ஒருவன் பிடிக் கப்பட்டு, கழுத்துநெரித்துக் கொல்லப்பட்டிருந்தாள். நமது சிறிய இளவரசிக்கு இதுவே அதிபயங்காமான தாகத் தோன்றியது.

இப்போது அவள் காட்டு நடுவேயிருந்த, தம் அரு வருப்பான வெளிர் மஞ்சள் நிற உடலைக் காட்டிய படி சுருண்டிருக்கும் குண்டான நீர்ப் பாம்புகளிருந்த பெரும் சதுப்பு நிலத்திற்கு வந்தாள். இந்தச் சதுப்பு நிலத்தின் நடுவே, கப்பல் உடைந்து இறந்தவர்களின் வெண் எலும்புகளாலான ஒரு வீடு கட்டப்பட்டிருந் தது. ஒரு சிறிய கானரி பறவைக்கு சர்க்கரை கொடுப்பது போன்று, சூன்யக்காரி உட்கார்ந்தபடி தனது வாயிலிருந்து ஒரு தவளைக்கு உணவூட்டி னாள். அசிங்கமான குண்டுத் தண்ணீர் பாம்புகளை அவள் தனது கோழிக் குஞ்சுகளென அழைத்துத் தனது மேலெல்லாம் தவழ அனுமதித்தாள்.

'உனக்கு என்ன வேண்டும் என்று எனக்குத் தெரி யும்' என்றாள் கடல் சூன்யக்காரி. 'நீ ஒரு பைத்தியக் காரி! ஆனாலும் என் அழகிய இளவரசியே! அது உனக்குத் துன்பமே கொண்டுவந்துசேர்க்குமாயினும், நீ நினைப்பதை நீ சாதிப்பாய். நீ மீன் வாலை நீக்கி

படிப்பகம்

www.padippakam.com



விட்டு, பூமியில் இருக்கும் மனிதர் போன்று இரண்டு சுமைதாங்கிகள் வேண்டும் என்கிறாய். அதன் மூலம் இளம் இளவரசன் உன்மேல் காதல் வயப்படுவான் என்றும், அழிவில்லா ஆன்மா பெறலாம் என்றும் நினைக்கிறாய்.' இதைச் சொல்லிவிட்டு, சூன்யக்காரி சத்தமாகவும் ஒப்புக் கொள்ளாத தொனியிலும் சிரித்தாள். அதனால் தவளையும் நீர்ப் பாம்புகளும் கீழே விழுந்து மீண்டும் ஊர்ந்துபோகத் தொடங்கின. 'நீ சரியான நேரத்தில்தான் வந்தாய்' என்றாள் சூன்யக்காரி. 'இல்லையென்றால், நாளை காலை சூரிய உதயத்திற்குப் பின் ஓர் ஆண்டுக்கு என்னால் உதவ முடியாது. உனக்காக நான் ஒரு விழுங்கு நீரைத் தயாரிப்பேன். அதனுடன் நாளை சூரியோதயத்திற்கு முன் நிலத்திற்கு நீந்திச் செல்வாய். பின்னர் அங்கு உட்கார்ந்து அதைக குடித்துவிடு. உனது வால் சுருங்கி, பூமியின் மக்கள் கால்கள் என்று சொல்வது போலாகி விடும். ஆனால் அது உனக்கு வலியைத் தரும்—கூரிய கத்தியால் வெட்டிக் கொண்டது போன்றிருக்கும். உன்னைப் பார்ப்பவர் அனைவரும், அவர்கள் அறிந்ததிலேயே நீதான் மிக அழகான மனிதப் பிறவி என்பார்கள். உனது மென்மையான நடையைக் காப்பாற்றிக்கொள்ளுவாய். எந்த நாட்டியக்காரரும் உன்னைப் போன்று லாவகமாக அசைய முடியாது. ஆனால் நீ எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் கூரிய கத்திமேல் வைப்பது போன்றும், ரத்தம் வழிவது போன்றும் இருக்கும். இதையெல்லாம் நீ பொறுத்துக் கொண்டால், நான் உனக்கு உதவுவேன்.'

'சரி!' என்று சிறிய கடற்கன்னி தடுமாறும் குரலிலே கூறினாள். அவள் இளவரசனையும், அழியாத ஆன்மாவையும் நினைத்துக் கொண்டாள்.

www.padippakam.com



'ஆனால், ஞாபகம் வைத்துக் கொள்' என்றாள் சூன்யக்காரி: 'நீ மனித வடிவம் எடுத்துவிட்டால், மீண்டும் எப்பொழுதும் கடற் கன்னியாக முடியாது. உனது சகோதரிகளிடமோ, தகப்பனாரின் அரண் மனைக்கோ உன்னால் தண்ணீர் வழியாகத் திரும்ப முடியாது. மேலும் நீ இளவரசனின் அன்பைப் பெற வில்லையெனில், அதன்மூலம் அவன் உனக்காக தனது பெற்றோரை மறந்துவிட்டு, பாதிரியிடம் கூறி உனது கையைப் பற்றவில்லையெனில், நீ அழிவற்ற ஆன்மாவைப் பெற முடியாது. வேறொருவளை அவன் திருமணம் செய்து கொண்டதற்கு மறுநாள் காலை நீ இதயம் வெடித்து, கடலின்மேலுள்ள நுரை போன்று மாறுவாய்.'

'அதை நான் செய்வேன்' என்றாள் சிறிய கடற் கன்னி. ஆனால் அவள் மரணத்தைப் போன்று வெளிறினாள்,

'அதற்கான கட்டணத்தை நீ எனக்குத் தர வேண்டும்' என்றாள் சூன்யக்காரி. 'நான் அற்பமாயும் கேட்கமாட்டேன். தண்ணீருக்கடியில் இருப்பவர்கள் அனைவரிலும் உனக்கே இனிய குரலுண்டு; இதைக் கொண்டே நீ அவனைக் கவர எண்ணியிருக்கிறாய். ஆனால் இதையே நீ எனக்குத் தரவேண்டும். எனது விலையுயர்ந்த விழுங்கு நீருக்கு, உனது மிகச்சிறந்த தையே நான் பெறவேண்டும். அதற்குள் என் சொந்த இரத்தத்தையே பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் விழுங்குநீர் இரண்டுமுனைக் கத்தி போன்று கூர்மை யானதாயிருக்கும்.'

'நீங்கள் என் குரலை எடுத்துக் கொண்டால், என்னிடம் என்ன மீதமிருக்கும்?' என்று சிறிய கடற் கன்னி கேட்டாள்.

www.padippakam.com



'உனது அழகிய வடிவம், வசீகரமான நடை, உனது பேசும் விழிகள்! இவைகளைக் கொண்டு ஒரு மனித மனத்தைக் கவர முடியும். சரி, தைரியம் இழந்துவிட்டாயா? சிறிய நாக்கை வெளியே நீட்டு; எனது கட்டணத்திற்கு அதை வெட்டிக் கொள்கிறேன், உனக்கு கெட்டியான விழுங்குநீர் கிடைக்கும்' என்றாள் சூன்யக்காரி.

''அப்படியே ஆகட்டும்'' என்றாள் சிறிய கடற் கன்னி.

விழுங்குநீரைத் தயாரிக்க, சூன்யக்காரி தனது உலையை வைத்தாள்.

'சுத்தம் மிக நல்ல காரியம்' என்று கூறிய அவள், பானையை, பெரிய முடிச்சாகக் கட்டப்பட்ட பாம்புகளால் சுத்தப்படுத்தினாள். தன்னைச் சொறிந்து, அதிலிருந்து கறுப்பு ரத்தம் பானைக்குள் விழுமாறு செய்தாள். விநோதமான வடிவங்களில் எழும்பிய நீர்த்தாரை, பார்ப்பவரை பயமுறுத்தப் போதுமானதாயிருந்தது. ஒவ்வொரு கணமும் சூன்யக்காரி, பானைக்குள் எதையாவது போட்டுக் கொண்டிருந்தாள்; பின்னர் அது முழுமையாகக் கொதித்தபின், முதலில் அழுவது போன்ற ஒலி கேட்டது. இறுதியில் விழுங்கு நீர் தயாரானது. அது மிகத் தூய நீரைப் போலத் தோன்றியது.

'இதை எடுத்துக் கொள்' என்றாள் சூன்யக்காரி. அவள் சிறிய கடற் கன்னியின் நாக்கை வெட்டிக் கொள்ள, இப்போது இளவரசி ஊமையானாள்; அவளால் பாடவும் பேசவும் முடியாது.

தந்தையின் அரண்மனையை அவளால் பார்க்க முடிந்தது. பெரும் கூடத்தில் விளக்குகள் அவிக்கப்

www.padippakam.com



பட்டிருந்தன. அவர்கள் அதற்குள் நிச்சயமாக உறங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்களிடம் போக அவளுக்குத் துணிவில்லை. இப்போது அவள் ஊமை. எப்போதைக்குமாக அவர்களைவிட்டு போகப் போகிறாள். துக்கத்தால் இதயமே வெடித்து விடும் போலிருந்தது. அவள் தோட்டத்திற்குள் நுழைந்து, தனது சகோதரிகளின் படுக்கைகளிலிருந்து ஒவ்வொரு மலரை எடுத்துக் கொண்டு, அரண்மனையைப் பார்த்து ஆயிரம் முத்தங்கள் கொடுத்துவிட்டு, கருநீல கடலின் மேலெழும்பத் தொடங்கினாள்.

இளவரசனின் கோட்டையை அடைந்தபோது, சூரியன் உதிக்கவில்லை; அவள் சலவைக்கல் படிகளில் ஏறினாள். நிலவொளி அழகிய தெளிவோடு இருந்தது. கொதிக்கும் விழுங்கு நீரை சிறிய கடற்கன்னி குடித்தவுடன், அவளது மெல்லிய உடலில் இரண்டுமுனைக் கத்தி இறங்கியது போன்றிருந்தது. அவள் மூர்ச்சித்து விழுந்து, இறந்தவள் போல் கிடந்தாள். கடலிலிருந்து வெளிவந்து, வெயிலடிக்கையில் எழுந்த அவள், கடுமையான வலியை உணர்ந்தாள்; ஆனால் அவள் முன்னால் அழகிய இளம் இளவரசன் நின்றிருந்தான். அவன் தனது கரிக்கருவிழிகளை அவள்மேல் பதிக்க, அவள் தனதை கீழ்நோக்கிப் பதிக்கும்போது, தனது மீன்வால் மறைந்து, சிறிய பெண்ணுக்குரிய அழகிய வெண்பாத ஜோடியைப் பெற்றிருப்பதைப் பார்த்தாள். அவள் ஏதும் உடையணிந்திருக்கவில்லையாகையால், தனது நீண்ட முடியால் தன்னைப் போர்த்திக் கொண்டாள். அவள் அங்கே எப்படி வந்தாள் என்று இளவரசன் கேட்க, அவளால் பேசமுடியாததால், அவள் தனது கருநீலவிழிகளால் துக்கத்துடன், மென்மையாகப் பார்த்தாள். பின்னர் அவன், அவளை கைப்

www.padippakam.com



பிடித்துத் தூக்கி, கோட்டைக்கு அழைத்துப் போனான். அவள் வைத்த ஒவ்வொரு அடியும், சூன்யக்காரி கூறியது போன்று, கூரிய ஊசிகள் மற்றும் கத்திகள் மேல் நடப்பது போன்றிருந்தாலும் அதை மகிழ்ச்சியுடன் தாங்கிக் கொண்டாள். அவள் இளவரசனின் வலதுபுறம், சோப்புக் குமிழி போன்று மென்மையாக நடக்க, எல்லாரையும் போல் அவனும், அவளது வசீகரமான நடையைக் கண்டு அதிசயித்தான்.

இப்போது அவளுக்கு பட்டும் மஸ்லினும் கொண்ட உடைகள் கிடைத்தன. கோட்டையிலேயே அவள்தான் மிக அழகி; ஆனால் ஊமை. பாடவோ பேசவோ முடியாது. இளவரசன் மற்றும் அவனது ராஜ பெற்றோர் முன், பட்டு மற்றும் பொன்னால் அலங்கரிக்கப்பட்ட அழகிய அடிமைகள் பாட்டுப் பாடினார்கள். ஒருத்தி எல்லோரையும் விட மிக இனிமையாகப் பாட, இளவரசன் அவளைப் பார்த்து புன்னகைத்துக் கைதட்டினான். அதைவிடத் தான் மிக இனிமையாகப் பாடியிருக்கிறோம் என்று நினைத்த சிறிய கடற் கன்னி சோகமாகி, யோசித்தாள்: 'ஓ, அவனோடு எப்போதும் இருக்கவேண்டும் என்பதற்காகவே, நான் எனது குரலைக் கொடுத்திருக்கிறேன் என்று அவனுக்குத் தெரிய வேண்டுமே!'

இனிமையான இசைக்கேறப அடிமைகள் வசீகரமான நடனம் ஆடினார்கள். பின்னர் சிறிய கடற் கன்னி தனது அழகிய வெண்கரங்களை உயர்த்தி, கால்விரல் முனையில் நின்று, யாருமே ஆடாத அளவுக்கு அரங்கெங்கும் சுற்றி சுற்றி நடனமாடினாள். ஒவ்வொரு அசைவிலும் அவளது அழகு மேலும் துலங்க, அவளது கண்கள், அடிமைகளின் பாடல்களைவிட, இதயத்தில் நேரடியாகப் பேசின.

www.padippakam.com



எல்லோரும் மகிழ்ந்திருக்க, தனது சிறிய அனாதை என்றழைத்த இளவரசனும் குறிப்பாக சந்தோஷப்பட்டான். ஒவ்வொரு முறையும் பூமியில் கால்பட்டால், கூரிய கத்தியின் மேல் இருப்பது போன்று இருந்தாலும், அவள் மீண்டும் மீண்டும் ஆடினாள். அவள் எப்போதும் தன்னுடன் இருக்க வேண்டும் என்று இளவரசன் கூறினான். அவனது கதவுக்கு முன்பிருந்த வெல்வெற் திண்டில் அவள் படுத்துக்கொள்ள அனுமதியும் கிடைத்தது.

தன்னோடு குதிரை பின்னால் வர, அவளுக்கு அவன் வேலைக்காரர் உடையைத் தைத்துக் கொடுத்தான். அவர்கள் செழிப்பான காடுகள் ஊடாகச் சவாரி செய்தபோது, மரக் கிளைகள் அவர்களது தோளகளை வாரவும், புதிய இலைகளிலிருந்து சின்னப்பறவைகள் இசைத்தன. மற்றவர்கள் பார்க்கும் அளவுக்கு தனது மெல்லிய பாதத்தில் ரத்தம் வழிந்தாலும் புன்னகைத்தபடி, அவள் இளவரசனோடு உயர்ந்த மலையேறி, தொலைதூர தூரங்களுக்குப் பயணமாகும் பறவைக் கூட்டம் போன்றிருந்த மேகங்கள் தங்களுக்குக் கீழே மிதப்பதைப் பார்க்கும்வரை பின்தொடர்ந்தாள்.

இளவரசனின் கோட்டையில் தங்கியபொழுது, அனைவரும் இரவில் உறங்கிய பின்னர், அவள் அகலமான சலவைக்கல் படிகளுக்குப் போனாள். குளிர்ந்த கடல்நீரில் நிற்பது அவளது எரியும் பாதங்களுக்கு இதமளிக்கும்போது, அடியாழத்தில் இருக்கும் அன்பானவர்களை நினைத்துக் கொண்டாள்.

ஒருநாள் இரவு, அவளது சகோதரிகள் கை கோர்த்தபடி வந்தார்கள். அவர்கள் தண்ணீர்மேல் மிதந்தபடி சோகமாய்ப் பாட, அவள் அவர்களை

படிப்பகம்

www.padippakam.com



அழைத்தாள். அவர்களும் அவளை அடையாளம் கண்டுகொண்டு, தம்மைத் தவிக்கவிட்டு வந்ததைக் கூறினார்கள். பின்னர் அவள் அவர்களை ஒவ்வொரு இரவும் சந்தித்தாள்; பின்னொரு முறை அவள் மேற்பரப்பில் பல்லாண்டுகள் தென்படாத வயதான பாட்டியையும், தலையில் கிரீடம் உள்ள கடல் ராஜனையும் பார்த்தாள். அவர்கள் அவளை நோக்கி கையை நீட்டினாலும், சகோதரிகளைப் போன்று நிலத்தருகே வரவில்லை.

நாளுக்கு நாள் இளவரசன் அவளை அதிகம்அதிக மாக விரும்பத் தொடங்கினான். அவன் அவளை அன் பான நல்ல குழந்தையை நேசிப்பதைப் போன்று நேசித்தான். அவளை மனைவியாக்கிக் கொள்ள வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. ஆனால் அவளைப் பொறுத்தமட்டில், அவனுடைய மனைவியாக வேண்டும்; இல்லையேல், அவளுக்கு அழிவற்ற ஆன்மா கிடைக்காது; மேலும் அவனது திருமணக் காலையில் அவள் கடல் நுரையாகிவிட வேண்டும்!

'அவர்களையெல்லாம் விட என்னை நீங்கள் நேசிக்கிறீர்களா?' என்று, அவன் அவளது கைகளை எடுத்துக்கொண்டு, வெண்மையான முன்நெற்றியில் முத்தமிட்டபோது, சிறிய கடற்கன்னியின் கண்கள் கேட்பன போலிருந்தன.

'ஆமாம், நீதான் எனக்கு மிகவும் இனியவள்!' என்றான் இளவரசன். 'ஏனெனில், உன்னிடம்தான் எல்லோரையும்விட நல்ல மனசு இருக்கிறது. நீ என்னிடம் மிக அர்ப்பணிப்போடு இருக்கிறாய். மேலும், நான் ஒருமுறை பார்த்த, மீண்டும் பார்க்கும் வாய்ப்பேயில்லாத இளம்பெண் போலவும் இருக் கிறாய். நான் கப்பலிலிருந்தேன். அஃது உடைந்து

www.padippakam.com



போனது. அலைகள் என்னை கரையோரம் இருந்த புனித கோவிலருகே தள்ளியது. அங்கே பல இளம் பெண்கள் சேவை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிலேயே இளமையானவள் என்னைக் கரை யருகே கண்டு, என்னுடைய உயிரைக் காப்பாற்றி னாள். நான் அவளை இருமுறைதான் பார்த்திருக் கிறேன். அவள் ஒருத்தியைத்தான் இவ்வுலகில் நான் நேசிக்க முடியும். ஆனால் நீ என் மனதிலிருந்து அவளது ஓவியத்தைத் துரத்தி விட்டாய். நீ அவளைப் போன்றே இருக்கின்றாய். அவள் புனிதக் கோவிலைச் சேர்ந்தவள்; அதனால் எனது நல்லதிர்ஷ்டமே உன்னை என்னிடம் அனுப்பியுள்ளது. நாம் பிரியவே மாட்டோம்!'

'ஓ நான்தான் அவனது உயிரைக் காப்பாற்றி னேன் என்பது அவனுக்குத் தெரியவில்லை!' என்று நினைத்த சிறிய கடற்கன்னி, 'கோயிலிருந்த இடத் துக்கு நான்தான் கடலிலிருந்து தூக்கிப் போனேன். யாராவது வருகிறார்களாவென நான்தான் கடல் நுரைக்குக் கீழமர்ந்து பார்த்திருந்தேன். என்னைவிட அதிகமாய் அவன் விரும்பும் அழகிய பெண்ணை அப் போது பார்த்தேன்.' பின்னர் கடற்கன்னி ஆழமாய் பெருமூச்சு விட்டாள். அவளால் அழ முடியாது. 'அப்பெண் கோயிலைச் சேர்ந்தவள். அவள் இவ்வுல கிற்கு வரமாட்டாள். அவர்களால் இனி சந்திக்க முடி யாது. நான் அவரோடு இருக்கிறேன். தினமும் பார்த் துக் கொண்டிருக்கிறேன். நான் அவரைப் பாதுகாப் பேன், காதலிப்பேன், அவருக்காக எனது உயிரையும் தருவேன்' எனத் தன்னுள் சொல்லிக் கொண்டாள்.

இப்போது இளவரசன் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், அயல்நாட்டு அரசனின் அழகிய மகள் அவனது மனைவியாவாள் என்றும், அதனால்தான் அழகிய கப்பல் தயாரிக்கப்படுகிறது

www.padippakam.com



என்றும் கூறினார்கள். அயல் நாட்டு அரசனுடைய நாட்டு வளத்தைப் பார்க்க இளவரசன் பயணப்படுகிறான் என்று கூறப்பட்டாலும், அரசனின் மகளைச் சந்திக்க வைப்பதற்காகவே இந்தப் பயணம் ஒழுங்கு செய்யப்பட்டது. அவனோடு பெரும் குழுவும் போக இருந்தது. சிறிய கடற் கன்னி தலையாட்டிக் கொண்டு சிரித்தாள். மற்ற எவரையும்விட இளவரசனின் எண்ண ஓட்டத்தை அவள் அறிவாள்.

'நான் பயணப்பட வேண்டும்' என்று அவளிடம் கூறினான்: 'அந்த அழகிய இளவரசியைப் பார்க்க வேண்டும்' என்று என் பெற்றோர்கள் விரும்புகிறார்கள். ஆனால் அவளை மணப் பெண்ணாக்கிக் கூட்டி வர அவர்கள் என்னைக் கட்டாயப் படுத்த மாட்டார்கள். என்னால் அவளை விரும்ப முடியாது. அவள் உன்னை ஒத்திருக்கும் கோயிலில் பார்த்த பெண் போன்ற அழகில்லை. நான் மணப்பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தால், பேசும் கண்களையுடைய ஊமை அனாதையான என் அன்பே, உன்னைத் தேர்ந்தெடுப்பதை விரும்பலாம்.'

அவன் அவளது சிவப்பு இதழ்களை முத்தமிட்டு, நீண்ட கூந்தலோடு விளையாடினான். அதனால், அவள் சந்தோஷத்தைப் பற்றியும் அழியாத ஆன்மா பற்றியும் கனவு கண்டாள்.

அவர்கள் அண்டை அரசனின் நாட்டுக்குப்போவதற்காக அற்புதக் கப்பலில் நின்றிருந்தபோது, 'கடலைக் கண்டு உனக்கு பயமில்லையே, என் ஊமைச் செல்லமே?' என்று கேட்டான். பின்னர் அவன் புயல் மற்றும் அமைதி, விநோதமான கடலடி மீன்கள் மற்றும் நீரில் மூழ்குபவர்கள் பார்த்ததையெல்லாம் கூறினான். கடலுக்கடியில் என்ன நடக்



படிப்பகம்

www.padippakam.com



கிறது என்பது யாரையும்விட அவளுக்கு நன்கு தெரியுமாதலால், அவள் இக்கதைகளைக் கேட்டுப் புன்னகைத்தாள்.

நிலவொளி காய்ந்த ஓர் இரவில், சுக்கானைப் பிடித்திருக்கும் மாலுமிகளைத் தவிர்த்து மற்றவர்கள் உறங்கிக் கொண்டிருக்க, அவள் கப்பலின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டு தெளிவான தண்ணீரைப் பார்த்திருந்தாள். தனது தந்தையின் அரண்மனையைப் பார்ப்பதாக அவள் கற்பித்துக் கொண்டாள். கொத்தளத்திற்கு மேல் நின்றிருந்த பாட்டி, தலையில் வெள்ளிக் கிரீடம் அணிந்து, கப்பலின் அடிக்கட்டையில் வந்து மோதும் அலைகளைப் பார்த்திருந்தாள். சகோதரிகள் தண்ணீருக்கு மேல் வந்து, அவளைச் சோகத்துடன் பார்த்து, தமது வெண்கரங்களை அசைத்தார்கள். அவளும் கையசைத்து, சிரித்து, தான் மகிழ்ச்சியுடன் இருப்பதைச் சொல்ல நினைத்தாள். ஆனால் பணியாள் வர, சகோதரிகள் தண்ணீருக்குள் குதித்தார்கள். எனவே, அவன் தான் பார்த்த வெள்ளைப் பொருள்கள் தண்ணீர்ப் பரப்பிலே மிதக்கும் நுரைகளென நினைத்துக் கொண்டான்.

அடுத்த நாள் காலை, அண்டை அரசனின் அற்புத நகரத்திலுள்ள துறைமுகத்திற்கு அவர்களது கப்பல் போனது. எல்லா தேவாலய மணிகளும் ஒலிக்க, உயர்ந்த கோபுரங்களிலிருந்து ஊதுகுழல்கள் முழங்கின. வீரர்கள் அற்புத வண்ணங்களில், ஒளிரும் சரிகையோடு நின்றிருந்தார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விழா. நடனங்களும் கேளிக்கைகளும் தொடர்ந்தன. ஆனால், இளவரசியை மட்டும் காணவில்லை. அவள் தொலைவிலுள்ள புனிதக் கோயிலில், அனைத்து அரச பண்புகளையும் படிக்கிறாள் என்று மக்கள் கூறினார்கள். கடைசியில் அவள் வந்து சேர்ந்தாள்.

www.padippakam.com



இளவரசியின் அழகைக் காண சிறிய கடற் கன்னி ஆவலுடன் இருந்தாள். அதனை அவள் அங்கீகரிக்க வேண்டியும் இருந்தது. அவள் பார்த்தேயிராத அழகிய தோற்றம் இளவரசிக்கு. இளவரசியின் தோல் தூய்மையாகவும், சுத்தமாகவும் இருந்ததோடு, அவளது நீண்ட கரும் புருவங்களுக்குப் பின்னால் பணிவான ஒரு ஜோடி கருநீலக் கண்களிருந்தன.

'நான் கடற்கரையில் பிணமெனக் கிடந்தபோது என்னைக் காப்பாற்றியவள் நீதான்' என்ற இளவரசன், முகம் சிவந்த மணப்பெண்ணை மார்போடு அணைத்துக் கொண்டான். 'நான் மகிழ்ச்சியாக இருககிறேன்' என்று அவன் சிறிய கடற் கன்னியிடம் கூறினான். 'எனது மிகச் சிறந்த எதிர்பார்ப்பு நிறைவேறிவிட்டது. எல்லோரையும் விட நீ என்னிடம் அர்ப்பணிப்புடன் இருப்பதால், நீயும் இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவாய்.'

சிறிய கடற் கன்னி அவனது கையை முத்தமிட்டாள். அவளது இதயம் வெடித்து விட்டது போல் இருந்தது. ஏனெனில், அவனது திருமண நாளின் உதயம் அவளுக்கு மரணத்தைக் கொண்டு வந்து, அவளைக் கடலிலே மிதக்கும் நுரையாக மாறச் செய்யும்.

தேவாலய மணிகள் ஒலித்தன. நிச்சயதார்த்தத்தை தெருக்களில் பறைசாற்றினார்கள். ஒவ்வொரு பலி பீடத்திலும் மிகப் பெரும் வெள்ளி விளக்குகளில் நறுமண எண்ணெய் எரிந்து கொண்டிருந்தது பாதிரிகள் தமது தூபக் காலை ஆட்ட, மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவர் கையை மற்றவர் மேல் வைத்து, பிஷப்பாண்டவரின் ஆசியைப் பெற்றார்கள். சிறிய கடற் கன்னி பொன்னிற ஆடை அணிந்திருந்ததோடு, மணப்பெண்ணின் அங்கியையும்

www.padippakam.com



தாங்கியிருந்தாள். ஆனால் அவளது காதுகள் விழா இசையைக் கேட்கவில்லை. அவளது கண்கள் புனிதச் சடங்குகளைப் பார்க்கவில்லை. அவள் தனது இறப்புக்கான இரவையும், இந்த உலகத்திலே தான் இழந்துவிட்ட அனைத்தைப் பற்றியும் நினைத்தாள்.

அதே மாலையே மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் கப்பலுக்குப் போனார்கள். பீரங்குகள் முழங்கின. கொடிகள் பறந்தன. கப்பலின் மத்தியில் பொன் மற்றும் ஊதா வண்ண நிறத்தில் அதிக செலவுள்ள கொட்டகை அமைக்கப்பட்டு, அழகிய திண்டுகள் போடப்பட்டிருந்தன. குளிர்ந்த அமைதியான இரவில் திருமணத் தம்பதிகள் அங்கேதான் தூங்குவார்கள்.

கப்பற் பாய்கள் காற்றில் வீங்க, தூய்மையான கடலின் மேல் கப்பல் இதமாக ஆடியது. மிதந்தது. இரவானவுடன் வண்ண விளக்கு ஏற்றப்பட்டு, கப்பலோட்டிகள் நடனமாடத் துவங்கினார்கள். தான் முதன்முதலில் தண்ணீருக்கு மேல் வந்தபோது, இது போன்ற அற்புத சந்தோஷக் காட்சியைப் பார்த்ததை சிறிய கடற் கன்னி நினைத்துப் பார்த்தாள். அவள் சுழன்றாடும் நடனத்தில், குருவி இடம் மாறுவது போல் மாறி மாறி நடனம் ஆட, அவளது அழகிய நடனத்தைக் கண்டு அனைவரும் கத்தி ஆரவாரித்தனர். அவளது இதயம் வலியால் அதிகமாக துடித்ததால், அவளது மெல்லிய பாதங்கள் கத்தியால் குத்துவதுபோன்று வலித்தாலும், அதைப் பொருட்படுத்தவில்லை. யாருக்காகத் தன் நண்பர்களையும், வீட்டையும் விட்டுவிட்டு, தனது இனிய குரலையும் துறந்து, ஒவ்வொரு நாளும் சொல்லொண்ணா துன்பங்களை அநுபவித்து வந்தாளோ, அவனைப் பார்க்கும் கடைசி மாலைப் பொழுது இதுதான் என்பது அவ

www.padippakam.com



ளுக்குத் தெரியும். அதே சமயம் இவற்றைப் பற்றிய பிரக்கினைகூட அவனுக்கு இருந்ததில்லை. அவள் சுவாசிக்கும் அதே காற்றை சுவாசித்து நட்சத்திரங் களுடைய வானையும், ஆழமான கடலையும் பார்க் குப் கடைசி மாலை இது. ஆன்மா இல்லாததாலும், அதைப் பெற முடியாததாலும், எவ்வித எண்ணமோ கனவோ இன்றிக் கழிக்கும் நீண்ட இரவும் இதுதான். நடுநிசிக்குப் பின்பும் கப்பலில் எல்லாமே கேளிக்கை யும் சந்தோஷமுமாய் இருந்தது. அவள் தன் மனதில் மரணத்தோடு சிரித்தபடி நடனமாடினாள். இளவர சன் தனது அழகிய மணப்பெண்ணை முத்தமிட, அவள் அவனது கருங்கேசத்தில் விளையாடினாள். பின்னர் அற்புத கொட்டகையில் ஓய்வெடுப்பதற்காக கையோடு கைகோர்த்தபடி சென்றார்கள்.

கப்பலில் ஒரே அமைதி. சுக்கானுக்குப் பக்கத்தில் வழிகாட்டி மட்டுமே நின்றான். சிறிய கடற் கன்னி மேல் தள ஓரத்தில் கிழக்கு நோக்கிக் காலைக் கதிர வனைத் தேடினாள். முதல் கதிர் தன்னைக் கொன்று விடும் என்று அவளுக்குத் தெரியும். அப்பொழுது அவளது சகோதரிகள், கடல் வெள்ளத்திலிருந்து எழு வதைப் பார்த்தாள். அவளைப் போல், அவர்களும் வெளிறிப் போயிருந்தார்கள். அவர்களது நீண்ட கூந்தல்கள் காற்றில் அலைமோதவில்லை, அவை வெட்டப்பட்டிருந்தன.

"நீ இன்றிரவு இறக்காதிருக்க சூன்யக்காரியிடம் உதவி கேட்டு, நாங்கள் அதை அவளிடம் கொடுத்து விட்டோம். அவள் ஒரு கத்தி கொடுத்திருக்கிறாள். இதோ பார்! என்ன கூர்மை! இதைச் சூரியோதயத் துக்கு முன் இளவரசனின் நெஞ்சில் குத்தி, பொங்கி வரும் வெப்பமான அவன் ரத்தம் உனது காலில் பட் டால்,அவை மீண்டும் மீன்வாலைப்போன்று வளர்ந்து

www.padippakam.com



விடும். மீண்டும் நீ கடற்கன்னியாகி எம்மிடம் வந்து, செத்து உப்புக் கடல் நுரையாவதற்கு முன் முன்னூறு ஆண்டுகள் வாழ்வாய். சீக்கிரம்! அவன் அல்லது நீ சூரியோதயத்திற்கு முன் இறக்க வேண்டும்! எங்களுடைய கிழப் பாட்டியும் துக்கமாக இருக்கிறாள். எங்களுடையதைப் போலவே அவளுடைய வெண் தலைமுடியும் சூன்யக்காரியின் கத்திரிக்கோலினால் வெட்டப்பட்டுள்ளது. இளவரசனைக் கொன்று, திரும்பி வா! சீக்கிரம்! வானில் சிவப்புத் திட்டுத் தெரிவதை நீ பார்க்கிறாயா? சில நிமிடங்களில் சூரியன் உதித்து விடுவான், நீ இறந்து விடுவாய்!'

அவர்கள் துக்கப் பெருமூச்சு விட்டுவிட்டு, கடலுக்கடியில் மறைந்தார்கள்

கொட்டகையிலிருந்த ஊதா வண்ணத் திரையை சிறிய கடற்கன்னி நீக்கிப் பார்க்க, அழகிய மணப் பெண் இளவரசனின் மார்பில் தலை வைத்துப் படுத்திருந்தாள். கடற்கன்னி குனிந்து அவனது புருவத்தில் முத்தமிட்டாள். பின்னர் காலை வானின் சிவப்பு கூடி வருவதை வெறித்துப் பார்த்தாள். தனது கூரிய கத்தியைப் பார்த்தாள். மணப்பெண்ணின் பெயரை தூக்கத்தில் முணுமுணுக்கும் இளவரசன்மீது மீண்டும் தனது கண்களை நிலைகுத்தினாள். அவள் அவனது நினைப்பில் இருக்க, கடற் கன்னியின் கையிலிருந்த கத்தி நடுங்கியது. அவள் அதை அலைகளிலே தூர வீசினாள். விழுந்த இடத்தில் சிவப்பாய் பிரகாசிக்க, தண்ணீரிலிருந்து ரத்தத் துளிகள் பீறிட்டெழுவது போல தோன்றியது. மீண்டும் ஒரு தடவை அவள் தனது பாதி மூடிய கண்களால் இளவரசனைப் பார்த்துவிட்டு, கப்பலிலிருந்து கடலுக்குள் குதித்தாள். தனது உருவம் நுரையாகக் கரைவதை உணரலானாள்.

www.padippakam.com



இப்போது சூரியன் கடலிலிருந்து எழுந்தான். குளிர்ச்சியான கடல் நுரையின்மேல் கதிர்கள் இதமாகவும் மிதமாகவும் பட, சிறிய கடற் கன்னி மரணத்தை உணரவில்லை. அவள் பிரகாசமான சூரியனைப் பார்த்தாள். அவளது தலைக்குமேல் நூற்றுக்கணக்கான மகிமை பெற்ற பரிசுத்த ஆவிகள் மிதந்தன. சப்பலின் வெண்ணிற பாய்கள், மற்றும் வானின் சிவப்பு வண்ண மேகங்கள் ஊடாக அவர்களை அவள் பார்த்தாள். அவர்களது பேச்சு சங்கீதம். ஆனால் அது ஆன்மீக வகையைச் சேர்ந்ததாக இருந்ததால் மானிடச் செவிகளாலே கேட்க முடியாது. மானிடக் கண்களாலே அவர்களைப் பார்க்கவும் முடியாது. இறக்கைகளில்லாமல் அவர்கள் காற்றில் மிதந்தார்கள். அவர்களைப்போல் தனக்கும் உடல் வருவதையும், நுரையிலிருந்து மேலே மேலே எழுவதையும் சிறிய கடற் கன்னி கண்டாள்.

'இங்கிருந்து நான் எங்கே போகிறேன்?' என்று அவள் கேட்டபோது, அவளது குரல் மற்ற ஆவிகளினது போன்று தெய்வீகமாக ஒலித்தது. அதற்கு எந்த லௌகிக இசையையும் ஒப்பிட முடியாததாக இருந்தது.

'காற்றின் மகள்களிடம்!' என ஏனையோர் பதிலளித்தார்கள் 'கடற்கன்னிக்கு அழியாத ஆன்மா இல்லை; ஒரு மனிதனின் அன்பைப் பெற்றாலொழிய அவள் ஒன்றைப் பெறப் போவதும் இல்லை. வேறு ஒருவரின் சக்தியிலேயே, அவளது சிரஞ்சீவித்துவம் தங்கியிருக்கிறது. காற்றின் மகள்களுக்கும் அழியாத ஆன்மா இல்லை. ஆனால் நற்செயல்கள் மூலம் அவர்கள் அதைப் பெற முடியும். வெப்ப நாடுகளுக்கு நாங்கள் பறந்து சென்று, அபாயகரமான காநுறு மனிதர்களைக் கொல்லும்போது, நாங்கள்

www.padippakam.com



குளிர்ச்சியைத் தருவோம். நாங்கள் காற்றின் மூலம் மலர்களின் வாசனையைப் பரப்பி, புத்துணர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் பரப்புகிறோம். முன்னூறு ஆண்டுகள் நாங்கள் செய்ய முடிந்த நன்மைகளையெல்லாம் செய்த பின்னர், ஆன்மாவைப் பெற்று, மனிதர்களின் சாசுவதமான சந்தோஷத்தை அடைவோம். பாவப்பட்ட சிறிய கடற் கன்னியான நீ, நாங்கள் செய்யும் பணியில் முழு மனதோடு முயன்று இருக்கிறாய். நீ துன்பத்தை அனுபவித்து, பொறுமையைக் கடைப்பிடித்திருக்கிறாய். உனது நற்செயல்கள் மூலம் ஆவியுலகிற்கு உயர்ந்திருக்கிறாய். முன்னூறு ஆண்டுகளுககுப் பின் அழியாத ஆன்மாவை அடைவாய்.'

சிறிய கடற் கன்னி தனது கண்களை கடவுளின் சூரியனை நோக்கி உயர்த்தினாள். முதல்முறையாக அவை கண்ணீரால் நிரம்பியிருந்தன. கப்பலில் மீண்டும் உயிர்ப்பும் ஒலியும் எழுந்தன. இளவரசனும் அவனது மணப் பெண்ணும் அவளைத் தேடினார்கள். பின்னர் அவர்கள், அவள் அலைகளில் குதித்தது தெரிந்தது போன்று, முத்துப் போன்ற நுரையைத் துக்கத்துடன் பார்த்தார்கள். கண்ணுக்குத் தெரியாமல், அவள் மணப்பெண்ணின் நெற்றியில் முத்தமிட்டாள். இளவரசனுக்கு சாமரம் வீசினாள். பின்னர் காற்றின் பிற குழந்தைகளோடு, அவளும் ஆகாயத்தில் மிதக்கும் ரோஜா நிற மேகத்தில் ஏறிக் கொண்டாள்.

முன்னூறு ஆண்டுகள் கழித்து, நாம் சொர்க்கத்தில் மிதப்போம்!

'அதிலும் சீக்கிரமாகக்கூட நாம் அங்கே போகலாம்' என்று காற்றின் மகளொருத்தி இரகசியக்

www.padippakam.com



குரலிலே சொன்னாள். 'குழந்தைகளிருக்கும் மனிதர்களின் வீடுகள் மேல், நாம் கண்ணுக்குத் தெரியாமல் மிதப்போம். தனது பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி தந்து, அவர்களது அன்பைப் பெறத் தகுதியான நல்ல குழந்தையைப் பார்க்கும் ஒவ்வொரு நாளும், நமது காத்திருப்புக் காலம் குறையும். நாம் அறைக்குள் பறப்பது குழந்தைக்குத் தெரியாது; குழந்தையின் நடத்தை கண்டு நாம் புன்னகைக்கும்போது, நமது முன்னூறு ஆண்டில் ஓர் ஆண்டு கழித்துக் கொள்ளப் படும். ஆனால் ஒரு துடுக்கான, குறும்பான குழந்தையைப் பார்த்து, நாம் துக்கத்தோடு கண்ணீர் விட்டால், ஒவ்வொரு கண்ணீர்த் துளிக்கும் நமது சோதனைக் காலத்தில், ஒவ்வொரு நாள் கூட்டப் படும்.'

www.padippakam.com




# நத்தையும் ரோசாப்புதரும்

அந்தத் தோட்டத்தைச் சுற்றி காட்டுச் செடிகளிலான ஒரு வேலி இருந்தது, அதற்கு வெளியே மாடுகளுடனும் ஆடுகளுடலும் வயல்களும் புல்வெளிகளும் இருந்தன. தோட்டத்தின் நடுவில் பூத்துக் குலுங்கிய ரோசாப் புதர் ஒன்று இருந்தது அதனடியில் நத்தை ஒன்று குந்தியிருந்தது. அதற்குள் நிறைய இருந்தது: அது தன்னையே நிறைத்து வைத்திருந்தது.

'என்னுடைய நேரம் வரும் வரையிலும் காத்திரு!' என்று அது சொன்னது. 'ரோசாப் பூக்கள் புஷ்பித்தல், விதைகள் தருதல், அல்லது ஆடு மாடுகளைப் போல பால் தருதல் ஆகியவற்றிலும் பார்க்க நான் சற்றே அதிகமாகச் செய்து காட்டுவேன்.'

படிப்பகம்

www.padippakam.com



'உன்னிடமிருந்து நான் மிக அதிகமாக எதிர் பார்க்கின்றேன்' என்றது ரோசாப் புதர். 'அது எப்பொழுது நடக்கும் என்று கேட்கலாமா?'

'என் நேரத்தை நான் எடுத்துக் கொள்ளுவேன்' என்றது நத்தை. நீ இப்பொழுது அவசரப்படுகிறாய்! அது நம்பிக்கைகளை வளர்க்க மாட்டாது!'

அடுத்த ஆண்டு, ரோசாச் செடியின் கீழ், அதே இடத்தில், சூரிய வெளிச்சத்தில் நத்தை குந்தியிருந்தது. ரோசாச் செடி எப்பொழுதும் புதிது புதிதான மொட்டுகளுடன் பூக்களுடன் குலுங்கியது. பாதித் தூரம் நகர்ந்து, தன் கொம்புகளை வெளியே காட்டி, மீண்டும் அவற்றை இழுத்துக் கொண்டது.

'எல்லாமே சென்ற ஆண்டைப் போன்றே தோன்றுகின்றது. எந்த முன்னேற்றமும் இல்லை. ரோசாச் செடி தன் ரோசாப் பூக்களை வைத்திருக்கிறது. அதற்கு அப்பால் எப்பொழுதும் போவது இல்லை!'

கோடை கழிந்தது, இலையுதிர் காலமும் கடந்தது. பனி பெய்யும் வரை ரோசாச் செடியில் மொட்டுகளும் பூக்களும் பொலிந்தன பருவகாலம் ஈரமயமாக மாறியது. அப்பொழுதும் ரோசாச் செடி நிலத்தை நோக்கிக் கவிழ்ந்தது; நத்தை நிலத்துக்குள் நகர்ந்தது.

விரைவில் புதிய ஆண்டு துவங்கியது. ரோசா மலர்கள் வந்தன, நத்தையும் வெளியே வந்தது.

'இப்பொழுது நீ கிழ ரோசா' என்று அது சொன்னது. 'சாவதற்கான காலம் வந்து விட்டது. உன்னிடமிருந்த எல்லாவற்றையுமே நீ உலகிற்குக் கொடுத்து விட்டாய். இது அவசியந்தானா என்கிற கேள்வியைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு எனக்கு எப்

படிப்பகம்

www.padippakam.com



பொழுதுமே நேரம் கிடைத்ததில்லை. ஆனால் நீ உன் அகத்தின் அபிவிருத்திக்காக நீ இதுவரையில் ஒரு சிட்கைதானும் செய்யவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இல்லாவிட்டால், உன்னில் இருந்து வேறு ஏதாவது வெளிவந்திருக்கும் அல்லவா? இதனை உன்னாலே நியாயப்படுத்த முடியுமா? நீ விரைவிலேயே காய்ந்த விறகாகி விடுவாய்! நான் என்ன சொல்கிறேன் என்பது புரிகிறதா?'

'நீ என்னைப் பயமுறுத்துகிறாய்!' என்றது ரோசாப் புதர். 'இதுபற்றி நான் என்றுமே நினைத்துப் பார்த்ததில்லை!'

'இல்லை. நீ எப்பொழுதுமே அதிகம் சிந்தித்துப் பார்ப்பதில் ஈடுபட்டதில்லை. உன்னைப் பற்றி நீ எப்பொழுதாவது கணக்கிட்டிருக்கிறாயா? நீ எவ்வாறு பூக்கிறாய்? பூப்பது எவ்வாறு நிகழ்கிறது? எந்த வழியில், ஏன் வேறு எந்த வழியும் அல்லாமல்?'

'இல்லை!' என்றது ரோசாப்புதர்! 'நான் சந்தோஷத்துக்காகவே பூத்தேன் என்னாலே வேறு எதுவுமே செய்ய ஏலாது. சூரியன் கதகதப்பாக இருந்தது. பலத்த மழையையும் தெளிவான பனித் துளிகளையும் நான் குடித்தேன். நான் சுவாசித்தேன்; நான் வாழ்ந்தேன்! நான்மேலே இருந்து என் பலத்தினை உறிஞ்சினேன். எப்பொழுதும் புதிதாக, எப்பொழுதும் உயர்ந்ததாக ஆசீர்வதிக்கப்படுவதாக நான் உணரலானேன். நான் எப்பொழுதும் பூத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதுதான் வாழ்க்கை: என்னால் வேறு எதுவுமே செய்ய ஏலாது!'

'நீ மிகச் சொகுஸான வாழ்க்கை வாழ்ந்து விட்டாய்' என்றது நத்தை.

'நிச்சயமாக! எல்லாமே எனக்கு வழங்கப் பட்டன!' என்றது ரோசாப் புதர். 'ஆனால், அதற்

www.padippakam.com



கும் மேலாக உனக்கு வழங்கப்பட்டது. சிந்திக்கும், ஆழ்ந்து சிந்திக்கும் இயல்புகளிலே நீயும் ஒன்று; உலகத்தை அதிசயத்தில ஆழ்த்தும் உயர் திறமை உனக்கு இருக்கிறது!'

'நிச்சயமாக எனக்கு அத்தகைய நோக்கம் கிடையாது' என்றது நத்தை. 'எனக்கு உலகத்தைப் பற்றிய அக்கறை கிடையாது. உலகத்தோடு எனக்கு என்ன சம்பந்தம்? என்மட்டில் எனக்குப் போது மானது, என் மட்டில் போதுமானது.'

'இந்த உலகத்திலுள்ள நாங்கள் எல்லோரும் பிறருக்கு எங்களுடைய மிகச் சிறந்ததைக் கொடுக்க வேண்டாமா? எங்களாலே முடிந்ததைக் கொண்டுவர வேண்டாமா? சரி. இப்பொழுது நான் ரோசாக்களை மட்டுமே கொடுத்திருக்கிறேன்! ஆனால் நீ உனக்கு எவ்வளவோ தரப்பட்டது, நீ உலகத்துக்கு என்ன கொடுத்தாய்? நீ அதற்கு என்ன கொடுத்தாய்?'

'நான் என்ன கொடுத்தேன்? நான் என்ன கொடுத்துக் கொண்டிருக்கிறேன? நான் அதன்மீது துப்புகிறேன்! அதனால் எந்தப் பயனும் இல்லை. அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. நீ உன் ரோசாக்களைத் தருவாய். அதுவும் உன்னாலே பெறமுடிந்த அளவுக்கு. காட்டுப்புதர் கொட்டைகள் தரும். மாடுகளும் ஆடுகளும் பால் தரட்டும். அவை ஒவ்வொன்றுக்கும் அவர்களுடைய வெளியுலகம் உண்டு. என்னுடையது என்னுள்ளேயே இருக்கிறது. நான் என்னுக்குள்ளேயே புகுந்து கொள்ளுகிறேன். அங்கேதான் நான் இருப்பேன். உலகத்தைப் பற்றிய அக்கறை எனக்குக் கிடையாது.'

நத்தை தன் ஓட்டுக்குள் புகுந்து தன்னை மூடிக் கொண்டது.

'இது மிகப் பரிதாபத்திறகுரியது!' என்று ரோசா மரம் சொன்னது. 'என் வாழ்நாளில் என்னால்

www.padippakam.com



உள்ளுக்குள் ஊர்ந்து கொள்ள முடியாது. நான் வெளியே குதிக்க வேண்டும், ரோசாக்களாக குதிக்க வேண்டும். இதழ்கள் உதிர்ந்து காற்றிலே பறந்து போகும்! இருப்பினும், என்னுடைய ரோசாக்களுள் ஒன்று, ஓர் அழகிய இளம் பெண்ணின் மார்பிலே வைக்கப்பட்டதைப் பார்த்தேன்; மிகப் பெரிய குதூகலத்துடன், ஒரு பூவை ஒரு குழந்தை தன் உதடுகளினாலே முத்தமிட்டது. அது என்னை மிகவும் மகிழ்வித்தது; அதுதான் உண்மையான ஆனந்தம்! அதுதான் என் நினைவுகள்; என் வாழ்க்கை!'

ரோசா மரம் களங்கமில்லாது பூத்துக்கொண்டே இருந்தது. நத்தை தன் ஓட்டுக்குள் சுருங்கிக் கிடந்தது. உலகத்தைப் பற்றிய அககறை அதற்கு இல்லை.

இவ்வாறு ஆண்டுகள் உருண்டோடின.

நத்தை புழுதியின் புழுதியாகியது. ரோசா மரம் புழுதியின் புழுதியாகியது. தோத்திரப்பாடலிலே வைக்கப்பட்ட நினைவு ரோசா வாடிப் போய் விட்டது. ஆனால், அந்தத் தோட்டத்தில் புதிய ரோசாப்புதர்கள் பூத்தன; தோட்டத்தில் புதிய நத்தைகளும் வளர்ந்தன. அவை தங்களுடைய ஓடுகளுக்குள் ஊர்ந்து கொண்டு துப்பின. உலகத்தைப் பற்றிய அக்கறை அவற்றுக்கு இருக்கவில்லை.

துவக்கத்திலிருந்து நாங்கள் கதையை மீண்டும் வாசிப்போமா? அதில் எத்தகைய மாற்றமும் தெரியாது.

www.padippakam.com

# குறும்புச் சிறுவன்




முன்னொரு காலத்தில் ஒரு கிழக் கவிஞர் இருந்தார்; உயர்ந்த ரஸனையும் அன்பும் உடைய கிழக்கவிஞர் ஒரு மாலைவேளை அவர் தன் வீட்டிலே அமர்ந்திருந்த பொழுது, பயங்கரப் புயல் வீசியது; மழை பொழிந்தது. ஆனால், கிழக் கவிஞர் தன் கணப்புக்கு முன்னால் வெதுவெதுப் புடனும் நேர்த்தியுடனும் அமர்ந்திருந்தார். கணப் பிலே தீ ஜுவாலை மேலே எழுந்தது; சுடப்படும் ஆப்பில்கள் வெந்து சத்தம் போட்டன.

'இவை ஒரு தையலைக்கூட உலர்ந்ததாக விட்டு வைக்கமாட்டா, இந்தப் பருவநிலையில் வெளியே

படிப்பகம்

www.padippakam.com



உள்ளவர்கள் மிகவும் பாவப்பட்டதுகள்' என்று கூறிக் கொண்டார். ஏனெனில், அவர் அத்தகைய கருணையுள்ள கவிஞர்.

'தயவுசெய்து என்னை உள்ளே விடு! நான் அவ்வளவு ஈரமாகவும் குளிராகவும் இருக்கிறேன்' என்று ஒரு சின்ன பையன் வெளியே நின்று கத்தினான். மழை பொழிந்து கொண்டும், காற்று ஒவ்வொரு யன்னலையும் உலுப்பிக் கொண்டும் இருந்தபொழுது, அவன் கதவை தட்டிக் கொண்டு அழுது கொண்டே நின்றான்.

'பரிதாபத்திற்குரிய சிறிய பயல்!' என்று கிழக் கவிஞர் கூறிக்கொண்டே, கதவை திறக்கப்போனார். வெளியே ஒரு சிறிய பையன் நின்றுகொண்டிருந் தான். அவன் நிர்வாணமாக நின்றான். அவனுடைய நீண்ட பொன்முடிகளிலிருந்து தண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவன் குளிரினால் நடுங்கினான். அவன் மட்டும் வெளியே நிற்க விடப்பட்டிருந்தால், அந்தப் பயங்கரப் புயலிலே அவன் நிச்சயமாகச் செத் திருப்பான்.

'பரிதாபத்திற்குரிய சிறிய பயல்!' என்று கூறிக் கொண்டே, அவனைக் கையிலே தூக்கினார். 'என்னு டன் வா, சீக்கிரமே உனக்கு வெப்பம் தருவேன். நீ கொஞ்சம் திராட்சை ரசமும், ஓர் ஆப்பிலும் சாப் பிடலாம். நீ ஒரு அழகான பையனாக இருக்கிறாய்!'

உண்மையில் அவன் அழகன்தான். அவனுடைய கண்கள் பிரகாசமான இரண்டு நட்சத்திரங்களைப் போல இருந்தன; அவனுடைய பொன்முடியிலிருந்து தண்ணீர் வழிந்துகொண்டிருந்த போதிலும், அதிலே அழகான சுருள்கள் தெரிந்தன. அவன் ஒரு குட்டிச் சம்மனசு போலத் தோன்றினான். ஆனாலும்,

www.padippakam.com



குளிரிலே வெளிறி, ஒவ்வொரு அவயவமும் நடுங்கிக் கொண்டிருந்தது. அவன் தன் கைகளிலே அழகான வில்லு வைத்திருந்தான். ஆனால், மழையிலே அது பெரிதும் கெட்டிருந்தது. ஈரத்தினால் அதன் அழகான அம்புகளின் எல்லா வர்ணங்களும் மங்கி யிருந்தன.

கணப்புக்கு அருகில் இருந்து கொண்டு, கிழக் கவிஞன் அந்தச் சிறு பையனைத் தனது முழக்கால் களிலே தூக்கி வைத்து, அவனுடைய கைகளைத் தன் சொந்தக் கைகளினாலே சூடாக்கி, அவனுக் காகச் சிறிது இனிப்பு உவையினைச் சூடாக் கினார். விரைவிலேயே அவன் தேறினான். கன்னங் களிலே ரோஜா நிறம் மீண்டது. நிலத்திலே பாய்ந்து, கிழக் கவிஞரை சுற்றித் துள்ளிக் கொண்டே நடன மாடினான்.

'நீ ஒரு சந்தோஷமான பையன்!' என்று கிழக் கவிஞர் சொன்னார். 'உன்னை எப்படி அழைப் பார்கள்?'

'என்னை அமோ (AMOR—இதனைத் தமிழில் மன்மதன் என்று விளங்கிக் கொள்ளலாம்) என்று அழைப்பார்கள்' என்று அவன் பதிலளித்தான். 'என்னை உங்களுக்குத் தெரியாதா? அங்கே, என் வில்லைப் பாருங்கள்! அதை வைத்து என்னால் குறி வைத்து எய்யமுடியும் என்பது உங்களுக்குத் தெரியும். பாருங்கள், காலநிலை இப்பொழுது வெளுத்துக் கொண்டு வருகிறது. நிலவு வெளியே வருகின்றது!'

'ஆனால் உன்னுடைய வில்லுக் கெட்டுப்போய் இருக்கிறதே!' என்று கிழக் கவிஞர் சொன்னார்.

'ஐயோ, பரிதாபம்!' அதனை எடுத்துப் பார்த்துக் கொண்டே சிறிய பையன் சொன்னான். 'ஏன் இப்பொழுதே உலர்ந்து விட்டது; எதுவும் கெட்டு



படிப்பகம்

www.padippakam.com



# கூலக் கோதுமை

பெரும்பாலும் இடி மழைக்குப்பின் யாராவது கூல கோதுமை வளரும் நிலத்தின் வழியாகப் போனால், அது கறுப்பாகவும், தீப்பட்டுக் கருகினாற் போலும் தோன்றுவதை நீங்கள் அநேக சந்தர்ப்பங்களிலே அவதானிக்கலாம். அதன்மேல் ஒரு நெருப்புஜ்வாலை போனது போலிருக்கும். பின்னர் கமக்காரன் சொல்லக்கூடும்: 'மின்னலினால் இப்படி ஆயிற்று.' ஆனால், அது ஏன் அவ்வாறு செய்தது?

அதைப் பற்றிச் சிட்டுக்குருவி சொன்னதை, நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதைச் சிட்டுக்குருவி, கூல கோதுமை வயலிலிருந்த வில்லோ மரத்திடமிருந்து கேட்டது. அது இப்பொழுதும் அங்கேதான் வளருகிறது. மதிப்பிற்குரிய கிழப் பருவம் அடைந்துள்ள

படிப்பகம்

www.padippakam.com



வில்லோ மரம் முதிர்ந்தும் உடைந்தும் இருக்கிறது. அதன் மத்தியில் வெடிப்பு இருந்ததோடு பிளவுகளில் இருந்து புல்லும், முட்செடிகளும் முளைத்திருக் கின்றன. மரம் முன்னால் குனிந்து, அதன் கிளைகள் தரை வரை நீண்ட பச்சைச் சிகைபோன்று தொங்கிக் கொண்டிருக்கிறது.

சுற்றியிருந்த நிலங்களிலெல்லாம் தானியங்கள் விளைந்து கொண்டிருந்தன. கம்பு, பார்லி, நல்ல ஓட்ஸும் விளைந்தன. அழகிய ஓட்ஸ் முதிர்ந்தபோது பூங்கொம்பின் மேலிருக்கும் சிறிய மஞ்சள் கானரி பறவைகள் போன்றிருந்தன. தானியங்கள் எப்பொழு துமே அழகாக வளர்ந்தன; அவற்றின் கதிர்கள் எவ்வளவு வளமாய் இருந்தனவோ, அந்தளவுக்கு அடக்கமாகத் தலைகுனிந்திருந்தன.

அங்கே கூல கோதுமையின் வயலும் கிழ வில்லோ மரத்தை எதிரே பார்த்தபடி இருந்தது. மற்ற தானி யங்களைப்போல் கூலகோதுமை வளையவில்லை; கர்வத்தோடு நிமிர்ந்தபடி நின்றிருந்தது.

'மற்றைய கோதுமை போன்றே நானும் வள மானவன் என்று நான் கருதுகிறேன்' என்றது. 'மேலும் நான் எத்தனையோ மடங்கு அழகு; ஆப்பிள் மரங்களின் மலர்கள் போல் எனது பூக்கள் அழகானவை; நானும் என் குடும்பமும் கண்களுக்குப் பெரு விருந்து. எங்களைப் பார்க்கிலும் அதிகம் பிரமான வேறு ஏதாவது உனக்குத் தெரியுமா, வில்லோ மரமே?'

'ஏன், ஆமாம்! உண்மையில் நான் பார்த்திருக் கிறேன்!' என்று சொல்வதுபோல வில்லோ மரம் தன் தலையை ஆட்டியது.

ஆனால் கூல கோதுமை, வீண் தற்பெருமையினால் மேலும் கூறியது: 'பைத்தியக்கார மரம்! மிகவும்

www.padippakam.com



வயதானதால், அதன் வயிற்றிலேகூடப் புல் முளைக்கின்றது.'

சடுதியாகப் புயல் தோன்றியது. புயல் அவர்கள் மேல் வீசியபொழுது, மலர்கள் தங்கள் இதழ்களை மூடிக்கொண்டோ, அல்லது தமது மென்மையான தலைகளைக் குனிந்துகொண்டோ இருந்தன. ஆனால் கூலக் கோதுமை பெருமை கலந்த அகம்பாவத்துடன் நின்றது.

'எங்களைப் போல் உன் தலையைக் குனிந்து கொள்' என்றன மலர்கள்.

'அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை!' என்றது கூலக் கோதுமை.

'எங்களைப்போல் தலை குனிந்து கொள்' என்று தானியம் கத்தியது 'இதோ புயலின் மூச்சு வருகிறது! புயலுக்கு மேகங்களிலிருந்து பூமியைத் தொடும் இறகுகள் உண்டென்பதால், நீ கருணை கோருவதற்குள் அது உன்னை இரண்டாகப் பிளந்துவிடும்.'

'அப்படியா? நான் என் தலையைக் குனியேன்' என்றது கூலக் கோதுமை.

'உனது மலர்களை மூடிக்கொண்டு, தண்டுகளைச் சாய்த்துக்கொள்' என்றது வயதான வில்லோ மரம். 'மேகம் வெடிக்கும்போது மின்னலை நிமிர்ந்து பாராதே! மனிதர்களே அதைச் செய்யமாட்டார்கள். மின்னலில் ஒருவர் சொர்க்கத்தையும் பார்க்கலாம். அத்தகைய காட்சி மனிதர்களுடைய கண்களைக் கூடக் குருடாக்கிவிடும். நிலத்திலே ஊன்றி நிற்கும் எங்களாலே என்ன செய்ய முடியும்? நாங்கள் எவ்வளவோ எளியவர்கள்.'

'அவ்வளவு எளியவர்களா?' என்று கத்தியது கூலக் கோதுமை.

www.padippakam.com



'நான் இப்போது நேராக சொர்க்கத்தைப் பார்க்கப் போகிறேன்!' கர்வத்தாலும் தற்பெருமையாலும், அது அதையே செய்தது. உலகமே தீப்பற்றியது போன்று, மின்னலிலிருந்து பெரும் ஒளி எழும்பியது.

புயல் ஓய்ந்தது. மழையினாலே புத்துயிர் அளிக்கப்பட்ட மென்மையான சுத்தமான காற்றில் மலர்களும் பயிர்களும் நிமிர்ந்தன. ஆனால் கூலக் கோதுமை, மின்னலால் கரியாக எரிக்கப்பட்டு, செத்து, பயனற்று, வயலிலே களையைப்போல காட்சி தந்தது.

முதிர்ந்த வில்லோ மரம் காற்றில் தன் கிளைகளை அசைக்க, மரம் அழுவது போன்று, அதன் இலைகளிலிருந்து பெரும் தண்ணீர் துளிகள் விழுந்தன.

சிட்டுக் குருவிகள் கேட்டன. 'நீங்கள் ஏன் அழுகிறீர்கள்? இங்கே எல்லாமே சந்தோஷமாயிருக்கின்றன. சூரிய ஒளியைப் பாருங்கள். மேகங்கள் எப்படி மிதக்கின்றன பாருங்கள். மலர்கள், செடிகளின் வாசனையை நீங்கள் நுகரவில்லையா? ஏன் அழுகிறீர்கள் வில்லோ மரமே?'

கூலக் கோதுமையின் கர்வத்தையும், தற்பெருமையையும் பற்றி வில்லோ மரம் அவர்களுக்குக் கூறியதோடு, அந்தப் பாவத்துக்குக் கிடைக்கும் தண்டனையையும் கூறியது.

ஒரு சாயங்கால வேளையிலே, தேவதைகள் செயல்படும் ஒரு கட்டுக் கதையைச் சொல்லும்படி சிட்டுக் குருவிகளை நான் கேட்டபொழுது, அவர்கள் சொல்லக் கேட்ட கதையையே இப்பொழுது நான் சொல்லுகின்றேன்.

www.padippakam.com




# நிழல்

வெப்ப நாடுகளில் வெயில் கொளுத்தும்; அங்கே மக்கள் செந்தவிட்டு நிறமாயிருக்க, மிக வெப்பமான நாடுகளில் அவர்கள் நீக்ரோக்களாகவும் சுட்டெடுக்கப்பட்டனர். இம்முறை குளிர்ந்த பிரதேசங்களிலிருந்து ஒருவன் வெப்ப நாடுகளுக்கு வந்தான். தனது தேசத்தில் சுற்றிக் கொண்டிருப்பதைப் போன்று இங்கு செய்யலாம் என்று நினைத்தவன், தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டான். அவனும் மற்ற புத்தியுள்ளவர்களும் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டியதுதான். அங்கே யன்னல் கதவுகளும், வாசல் கதவுகளும் நாள்முழுதும் சாத்தப்பட்டு, வீட்டிலுள்ள அனைவரும் தூங்குவது போன்றோ, வெளியே போய்விட்டது போன்றோ

படிப்பகம்

www.padippakam.com



தோற்றமளித்தன. அவன் வசித்த உயரமான வீடுகள் கொண்ட குறுகிய தெருவில், காலையிலிருந்து மாலை வரை வெயில் அடிப்பது போன்று வீடு கட்டப் பட்டிருந்தது. அது தாங்கவே முடியாததாகவும் இருந் தது! அவன் குளிர்ந்த பிரதேசத்திலிருந்து வந்தவன் இளைஞன், புத்திசாலி, படித்தவன். அவனுக்குக் கொதிக்கும் போறணையின் மேல் உட்கார்ந்திருப்பது போன்று தோன்றியதோடு, பெருமளவு மெலிந்தும் போனான். அவனது தேசத்தில் இருந்ததைவிட இங்கே அவனது நிழலகூட சுருங்கிச் சிறிதாக இருந்தது. சூரியன் அவனது நிழலை எடுத்துக் கொண்டு, மாலையில் சூரியன் மறையும்வரை அதைத் தரவில்லை. நிழலைக் கண்ணால் பார்ப்பது மகிழ்ச்சிகரமானதாக இருந்தது.

அறைக்குள் விளக்கைக் கொண்டு வந்தவுடன், நிழல், சுவருக்குமேல், உத்தரத்திற்கு மேல்வரை நீண் டிருந்தது. இப்படித்த மனிதன் இளைப்பாறுவதற்கு உப்பரிகையில் போய் நின்றால், வெளியே தெளிந்த வானில் நட்சத்திரங்கள் தோன்றியதும் அவன் புத்துணர்ச்சி தோன்றுவதாக உணர்ந்தான். தெரு விலிருந்த உப்பரிகைகளிலெல்லாம்—வெப்ப நாடு களில் ஒவ்வொரு யன்னலும் உப்பரிகைகள் உண்டு— மலைவேம்பு மர நிறமானாலும், சுத்தமான காற்றை சுவாசிப்பதற்காக, இளைஞர்கள் இப்போது தோன்றினார்கள். பின்னர் மேலும் கீழும் சுறுசுறுப் பானது. தக்கை ஓட்டுபவர்களும் தையல்காரரும்— எல்லாவிதமான மனிதர்களும் என்கிற அர்த்தத் திலே— தெருவில் உட்கார்ந்து கொண்டார்கள்.

மேஜைகளும் நாற்காலிகளும் வெளியே வந்தன. ஆயிரம் மெழுகுவர்த்திகளுக்கு மேல் கொளுத்தப் பட்டன. ஒருவன் பேசினான்; பிறகு பாடினான்.

www.padippakam.com



மக்கள் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்கள். வண்டிகள் ஓடின, கோவேறு கழுதைகள் குதித்தன. அவற்றின் கழுத்தில் தொங்கிய மணிகள் 'கிளிங்—ளிங்—ளிங்' என்று சப்தமிட்டன. சுவிஷேசப் பாடல்களோடு இறந்தவர்கள் புதைக்கப்பட்டார்கள். தேவாலய மணிகள் ஒலிக்க, தெருவே வெகுவாக உயிர் பெற்றிருந்தது. படித்தவன் வாழ்ந்த வீட்டுக்கு எதிரேயிருந்த வீட்டில் மட்டும்தான் அமைதியாயிருந்தது. ஆனாலும் அங்கு யாரோ வாழ்ந்தனர். ஏனெனில் வெப்பமான சூரியனில், அங்கே உப்பரிகையில், அழகிய மலர்கள் பூத்துக் கொண்டிருந்தன. தண்ணீர் விடாமல், அது வளர்ந்திருக்காதாகையால், அந்த வீட்டில் யாரோ குடியிருக்க வேண்டும். மாலையில் கதவு திறந்திருந்தது. குறைந்த பட்சம் முன்னறையிலாவது இருட்டாயிருந்தது. பின்னுக்கு, இருந்த உள்ளேயிருந்து இசை கேட்டது. அந்தப் புதிய படித்தவனுக்கு, அந்த இசை இனிமையாகத் தோன்றியது. ஆனால் இது அவன் கற்பனையாகவும் இருக்கலாம். ஏனெனில், சூரியனைத் தவிர, வெப்ப நாடுகளில் அவனுக்கு எல்லாமே தேவையானவையாகவே தெரிந்தன. எதிர்வீட்டில் யாரிருக்கிறார்கள் என்பது புதியவனின் வீட்டுச் சொந்தக்காரனுக்குத் தெரியவில்லை. அங்கே யாரையும் அவன் பார்த்ததில்லை. இசையைப் பொறுத்தவரை, அது அவனுக்கு சலிப்பூட்டுவதாகவே இருந்தது.

'தன்னால் இசைக்க முடியாத ஒரு பகுதியை, அங்கே யாரோ உட்கார்ந்துகொண்டு, 'என்னால் இசைக்க முடியும் பார்' என்றபடி, எப்படி முயன்றும் இசைக்க முடியாதிருக்கிறான்' என்றான் அவன்.

அந்தப் புதியவன் இரவில் விழித்திருப்பானா? உப்பரிகையின் கதவை திறந்து வைத்துவிட்டுத்

www.padippakam.com



தூங்கினான். அதன் முன்பிருந்த திரையை காற்று விலக்கியது. எதிர் வீட்டு உப்பரிகையிலிருந்து அழகான ஒளி வருவதைக் கண்டு வியந்தான். மலர் களெல்லாம் மிக அழகான வண்ண ஜ்வாலையாகத் தோன்றின; அந்த மலர்களின் மத்தியில், அழகிய பெண் நின்றிருந்தாள். அவளிடமிருந்தும் ஒளிவந்தது போல் தோன்றியது. அவன் கண்கள் கூசின. அவன் விழித்தவுடன், தன் கண்களை மிக அகலமாகத் திறந்தான். படுக்கையிலிருந்து ஒரே தாவாகத் தாவிச் சென்று, சத்தமில்லாமல் திரைக்குப் பின்னால்போக, அப்பெண் மறைந்துவிட்டாள். அற்புதம் பறந்து விட்டது. மலர்கள் ஒளி வீசவில்லை. ஆனால், அவை எப்போதும் போல் அழகாயிருந்தன. கதவு திறந்து கிடக்க, மிக இனிமையான, மனசைக் கவரவல்ல இசை ஒலித்தது. அவ்விசையின் இனிமையான நினைவுகளில் ஒருவன் முழுகிவிட வேண்டியதுதான். அது தந்திரக் காட்சி போன்றிருந்தது. ஆனால் யாரங்கே வாழ்ந்தார்கள்? எங்கே உண்மையான வாசலிருந்தது! ஏனெனில் தெருவை ஒட்டியும், பக்கத்து ஒழுங்கையை ஒட்டியும் கீழ்த்தளம் முழுதும் கடை கடையாக இருந்தன. அவற்றின் ஊடாக மக்களாலே ஓடித் திரிய ஏலாது.

ஒரு மாலை வேளை. புதியவன் தனது உப்பரிகை யில் உட்கார்த்திருந்தான். அவனுக்குப் பின்னிருந்த அறையில் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்ததால், எதிர் வீட்டின் சுவரில் அவனது நிழல் விழுதல் மிகவும் இயல்பு. அது உப்பரிகையிலிருந்த மலர்களுக் கிடையே அமர்ந்திருந்தது. அவன் நகர்ந்தபோது நிழலும் நகர்ந்தது.

'அங்கே வாழ்வது என் நிழல் மட்டும்தான் என்று நினைக்கிறேன்' என்றான் படித்தவன். 'மலர்களின் நடுவே அது எவ்வளவு அழகாக உட்கார்ந்திருக்கிறது

www.padippakam.com



என்பதைப் பாருங்கள். கதவு திறந்தேயிருக்கிறது. நிழல் புத்திசாலித்தனமாய் உள்ளே போய் சுற்றிப் பார்த்துவிட்டு, என்னிடம் திரும்பி வந்து, தான் பார்த்ததைச் சொல்ல வேண்டும்.'

'ஆமாம். நீ உபயோகமாய்ச் செயல்பட வேண்டும்' என்று விளையாட்டுக்குச் சொல்பவனைப் போல சொல்லிக் கொண்டான்.

'நல்லாக இருந்து களவாக நுழைய வேண்டும். இப்பொழுது உன்னாலே போக முடியுமா?' அவன் நிழலைப் பார்த்துத் தலையாட்டினான். நிழலும் பதிலுக்கு அவனைப் பார்த்துத் தலையாட்டியது.

'இப்போது போகலாம். ஆனால் அங்கேயே தங்கி விடாதே!

புதியவன் எழுந்திருக்க, எதிர் உப்பரிகையிலிருந்த நிழலும் எழுந்தது. பின் புதியவன் நடந்தான். யாராவது பார்த்திருந்தால், புதியவன் தனது அறைக்குள் போய் திரையை மூடியதைப் போன்றே, அதே கணத்தில், எதிர் வீட்டின் பாதி திறந்திருந்த கதவு வழியாக நிழலும் போனதைப் பற்றிச் சொல்லியிருப்பார்கள்.

மறுநாள் காலையில் படித்தவன், காபி குடிக்க வெளியே போனவன் பத்திரிகைகளையும் படித்தான்.

'என்ன இது?' வெயிலிலே வந்தபொழுது அவன் சொன்னான். 'எனக்கு நிழல் இல்லை! உண்மையிலேயே, அது நேற்று சாயங்காலம் போய்த் திரும்பவேயில்லை. இது ரொம்ப சோர்வளிக்கும் விஷயம்!'

அது கோபமூட்டினாலும், பெரியளவில் அல்ல. ஏனெனில், நிழலே இல்லாத மனிதனின் கதையில்

www.padippakam.com



வருவது போன்று நிழல் போயிற்று. வீட்டிலிருந்தவர்களுக்கும் அக்கதை தெரியுமாதலால். படித்தவன் வீட்டுக்கு வந்து தன் கதையைச் சொன்னால், அவர்கள் கதையைப் பழைய கதையின் ஒரு தழுவல் எனக் கருதுவார்கள். இதனால் அவன் அவர்களிடம் தன் கதையைச் சொல்லவில்லை. இஃது ஒரு புத்திசாலித்தனமான முடிவாகும்.

மாலையில் அவன் மீண்டும் உப்பரிகைக்குச் சென்றான். ஒரு விளக்கைத் தனக்குப் பின்னால் வைத்தான். தலைவனின்றி நிழல் வரமாட்டாது என்பது அவனுக்குத் தெரியும். அவன் பலவந்தப்படுத்தியும் நிழலைக் காணவில்லை. அவன் தன்னைக் குறுக்கிக் கொண்டான், நீளமாக்கிக் கொண்டான். ஆனால் நிழல் மட்டும் தோன்றவில்லை. 'இந்தா, இந்தா' என்று அவன் கூறியதுகூட நற்பயன் அளிக்கவில்லை.

வெப்ப நாடுகளிலே எல்லாமே வேகமாக வளரும். ஒரு வாரம் கழித்து, சூரிய வெளிச்சத்திலே சென்றபோது, தனது காலிலிருந்து ஒரு புதிய நிழல் வளருவதைக் கண்டு, நிழலின் வேர்கள் உயிருடன் இருந்திருக்கின்றன என்று கூறிக் கொண்டான். மூன்று வாரங்களுக்குள் கணிக்கத் தக்க அளவுக்கு நிழல் வளர்ந்திருந்தது. அவன் வடக்கு நோக்கித் திரும்ப ஆரம்பித்த பொழுது, நிழல் மேலும் வளர்ந்து, மிக உயரமாகவும் பெரியதாகவும் தோன்றியதினால், அதிலே பாதியை இழந்தாலும் பரவாயில்லை போலத் தோன்றியது.

படித்தவன் வீடு திரும்பியபின், உலகில் எது உண்மை, எது நல்லது, எது அழகானது என்பது பற்றியெல்லாம் புத்தகங்கள் எழுதினான். நாள்கள்

படிப்பகம்

www.padippakam.com



கழிந்தன; ஆண்டுகள் கழிந்தன; பற்பல ஆண்டுகள் கழிந்தன.

அவன் தனது அறையில் உட்கார்ந்திருந்தபோது, ஒரு மாலை நேரம் அவனது கதவு தட்டப்பட்டது. 'உள்ளே வரவும்' என்றான். ஆனால் யாரும் வர வில்லை. அவன் கதவைத் திறந்தபோது, அவரே பரி தாபப்படும் அளவுக்கு மெலிவான மனிதன் ஒருவன் நின்றான். ஆனால், இம்மனிதன் மிக மரியாதை யாய் உடை அணிந்து, வசதியுள்ளவனைப்போல தோன்றினான்.

'மதிப்பிற்குரிய தாங்கள் யாரோ?' என்று பேராசிரியன் கேட்டான்.

'ஆ' என்ற கனவான், 'என்னை உங்களுக்குத் தெரியாது என்றே நினைத்தேன். உண்மையான தசை களும் உடைகளும் கொண்ட ஓர் உடலமைப்பைப் பெற்றிருக்கிறேன். இத்தகைய ஒரு நிலையில் என்னைப் பார்க்கலாம் என்று நீங்கள் ஒருபோதும் நினைத்திருக்க மாட்டீர்கள். உங்களுடைய பழைய நிழலை ஞாபகமிருக்கிறதா? நான் மீண்டும் வருவேன் என்று நீங்கள் கண்டிப்பாக நினைத்திருக்க மாட் டீர்கள். உங்களிடமிருந்து விடை பெற்ற பின், பல நல்ல விஷயங்கள் நடந்திருக்கின்றன. நான் எல்லா வகையிலும் வளமுடையவனாக இருக்கிறேன் அடி மைத்துவத்திலிருந்து என் சுயாதீனத்தினை வாங்க வேண்டுமென்றாலும் என்னாலே முடியும்!'

தன்னுடைய கடிகாரத்திலே தொங்கிய தாயத்துப் போன்றவற்றைக் குலுக்கிக் காட்டினான். கழுத்தைச் சுற்றிப் போட்டிருந்த தடிப்பான தங்கச் சங்கிலியில் கையை வைத்தான். அவனுடைய விரல்களில் வைர மோதிரங்கள் மின்னின! எல்லாம் அசலானவை.

'இல்லை. என் சுய ஆதிபத்தியத்தை என்னால்

www.padippakam.com



திருப்பிப் பெற முடியாது' என்றான் படித்தவன். 'இதெல்லாவற்றுக்கும் என்ன அர்த்தம்?'

'பொதுவாய் ஒன்றுமில்லை' என்றான் நிழல். 'ஆனால் நீங்கள் சாதாரண மக்களுள் ஒருவரல்லர். நானோ உங்களது காலடித் தடத்தில் எனது குழந்தைப் பருவத்திலிருந்து உருவானவன். உலகில் தனியாக என் வழியைப் பார்த்துக் கொள்ளும் அநுபவம் பெற்றபின், நான் கிளம்பினேன். நான் அற்புதச் சூழ்நிலைகளில் வாழ்கிறேன். ஆனால் நீங்கள் இறப்பதற்குமுன் ஒருமுறை பார்த்து விட வேண்டும் என்ற ஆவலிருந்தது; மேலும் இந்தப் பகுதிகளைப் பார்க்க வேண்டும் போலிருந்தது; ஒருவனுக்குத் தனது தந்தை நாடு பிடிக்குமல்லவா! உங்களுக்கு வேறொரு நிழல் கிடைத்து விட்டது என்று தெரியும். அதற்கோ அல்லது உங்களுக்கோ நான் ஏதும் செலுத்த வேண்டுமா? நீங்கள் என்னிடம் சும்மா சொல்ல வேண்டியது மட்டுமே!'

'உண்மையிலேயே நீதானா?' என்றான் படித்தவன். 'என்ன அற்புதம்! எனது பழைய நிழலை மனிதனாகக் கண்பேன் என்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை.

'நான் எவ்வளவு தரவேண்டும் என்று மட்டும் சொல்லுங்கள். நான் யாருக்கும் கடனாளியாக இருக்க விரும்பவில்லை' என்றான் நிழல்.

'ஏனிப்படி பேசுகிறாய்? என்ன கடன் இருக்க முடியும்? மற்றவரைப் போன்று நீயும் சுதந்திரமானவன்தான்! உனது அதிர்ஷ்டம் கண்டு நான் பூரிப்பு அடைகிறேன். உட்காரு பழைய நண்பனே. இதெல்லாம் எப்படி நடந்தது. வெப்ப நாடுகளிலும், நமது

www.padippakam.com



எதிர்வீட்டிலும் என்ன பார்த்தாய் என்பதைச் சொல்.'

'ஆம்; அதைச் சொல்கிறேன்' என்ற நிழல், அமர்ந்து கொண்டான். 'ஆனால் என்னைச் சந்திக்கும் பொழுது நான் உன் நிழல் என்பதை இந்த நகரத்தில் வாழும் யாருக்கும் எப்பொழுதும் சொல்ல மாட்டேன் என்று நீ சத்தியஞ் செய்து தர வேண்டும். நான் திருமணம் செய்து கொள்ளலாமென்று இருக்கிறேன். ஒரு குடும்பத்தை என்னால் காப்பாற்ற முடியும்.'

'நீ கவலைப்படாமல் இரு' என்ற படித்தவன், 'உண்மையில் நீ யாரென்று நான் யாருக்கும் சொல்ல மாட்டேன். இது எனது கை. நான் சத்தியம் செய்கிறேன். எனது வார்த்தை எனது சத்தியக் கடுதாசிக்கு சமானமானது.'

'பதிலுக்கு நிழலின் ஒரு வாசகம்!' என்றான் நிழல். அவ்வாறு பேசவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. கதை நடுவில் அவன் முழு மனிதனானது மிக அற்புதமாயிருந்தது. அவன் முழுவதுமான கறுப்பு உடையே அணிந்திருந்தான். மிக அற்புதமான கறுப்பு துணியும், கருப்பு காலணிகளும், கசக்கினால் முடியும் வளையமும் மட்டுமே தெரியும் தொப்பியும் அணிந்திருந்தான். இவை, நாங்கள் அவனிடம் ஏற்கனவே பார்த்த தாயத்துகள், தங்கச் சங்கிலி மற்றும் வைர மோதிரங்களும் சேராமல் மேலதிகமானவை. நிழல் மிக அற்புதமாய் உடை உடுத்தியிருந்ததே, அவனை முழு மனிதனாக்கியது.

'இப்போது நான் உனக்குச் சொல்கிறேன்' என்றான் நிழல். படித்தவனின் காலடியில் குட்டி நாய் போலக் கிடந்த புதிய நிழலின் கையிலே தன்

www.padippakam.com



னுடைய மினுக்கப்பட்ட சப்பாத்தினை மிக அழுத்த மாக நிழல் பதித்தான். இஃது அகங்காரத்தினாலே செய்யப்பட்டிருக்கலாம். அல்லது, புதிய நிழலை தன் கால்களிலே ஒட்டி யெடுப்பதற்காகச் செய்யப்பட்டி ருக்கலாம். ஆனால் படுத்துக் கிடந்த நிழல் அமைதி யாக இருந்தது. எப்படி ஒருவன் விடுதலையடைந்து, தனக்குத்தானே எஜமானனாவதற்கு எவ்வாறு உழைக்கலாம என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அவர்கள் பேசுவதை நன்றாகக் கேட்க விரும்பியது.

'நமது வீட்டிற்கு எதிரே யார் வாழ்ந்தார்கள் தெரியுமா?' என்றான் நிழல். 'அது எல்லோரிலும் புகழ் வாய்ந்தது: அது கவிதை! நான் அங்கு மூன்று வாரங்கள்தான் இருந்தேன். ஆனால், அதுவே ஓராயி ரம் வருடங்கள் வாழ்ந்தது போன்ற அநுபவம். இது வரை எழுதப்பட்டதையும் புனையப்பட்டதையும் படித்தேன். இஃது உண்மை. நான் எல்லாவற்றையும் பார்த்து விட்டேன். எல்லா விஷயங்களும் எனக்குத் தெரியும்!'

'கவிதை!' என்று படித்தவன் கத்தினான். 'உண்மைதான். அவள் பெரும் நகரங்களில் பெரும் பாலும் துறவியாகத்தான் வாழ்கிறாள் கவிதை. ஆமாம். நான் அவளை ஒரேயொரு கணந்தான் பார்த்தேன். ஆனால் எனது கண்களில் தூக்கமிருந் தது. வடக்கின் வெளிச்சம் மினுங்குவது போன்ற பிரகாசத்துடன், உயிர்ப்பானது ஜுவாலை உள்ள மலர்கள்போல உப்பரிகையிலே நின்றிருந்தாள். எனக்குச் சொல்! எனக்குச் சொல்! நீ உப்பரிகையிலே நின்றாய். கதவு வழியாக நுழைந்து... அப்புறம்...'

'நான் முன்னறையில் இருந்தேன்' என்றான் நிழல். 'நீங்கள் எதிரே உட்கார்ந்து, எப்போதும்



படிப்பகம்

www.padippakam.com



முன்னறையையே பார்த்திருந்தீர்கள். அங்கு விளக்கில்லை. ஒருவகைப் பாதித் தெளிவின்மையே அங்கே கோலோச்சியது. வரிசையாகஇருந்த கூடங்களினதும் அறைகளினதும் கதவுகள் திறந்திருந்தன; அங்கே வெளிச்சமிருந்தது. அந்தப் பெண் உட்கார்ந்திருந்த இடத்துச்குப் போயிருந்தால், அப்பெரும் ஒளியின் உக்கிரம் என்னைக் கொன்றிருக்கும். நான் வேண்டுமென்றே காலத்தைக் கடத்தினேன். அதைத்தான ஒருவன் செய்ய வேண்டும்.'

'பின்னர் தாங்கள் என்ன பார்த்தீர்கள்?' என்றான் படித்தவன்.

'நான் எல்லாவற்றையும் பார்த்தேன், அது என்ன வென்றும் கூறுவேன். ஆனால் உண்மையில், நான் பெருமை பாராட்டாதவன். சுதந்தர மனிதனாகநான் சம்பாதித்துள்ள என் நல்ல அந்தஸ்து, குறிப்பிடும்படியான என் செல்வநிலை என்கிற பெருமைகளைப் பாராட்டாது, எனனை நீ என்றே அழைப்பதை நான் விரும்புகிறேன்.'

'மன்னிக்க வேண்டும்' என்றான் படித்தவன். 'இந்த, தாங்கள் என்பது பழைய பழக்கம். பழைய பழக்கங்களை மாற்றுவது கடினமானது. நீ சரியாகச் சொன்னாய். நான் நினைவில் வைத்திருப்பேன். இப்போது நீ என்ன பார்த்தாய் என்பதைச் சொல்.'

'எல்லாவற்றையும்' என்றான் நிழல். 'நான் எல்லாவற்றையும் பார்த்தேன். நான் எல்லாவற்றையும் அறிந்து கொண்டேன்.'

'உள்ளறையில் எப்படி இருந்தது!' எனக் கேட்டான் படித்தவன். 'குளிர்ந்த கல்லறை போல இருந்ததா? அங்கே புனிதக கோயில்போன்றிருந்ததா?

www.padippakam.com



'உயர்ந்த மலைமேல் நிற்கும் போது விண்மீன் நிறைந்த வானம் போன்று அறைகள் இருந்தனவா?'

'எல்லாமே அங்கு இருந்தன' என்றான் நிழல். 'நான் நிச்சயமாக முழு உள்ளுக்குள் போகவில்லை. முன் அறையில், அரை இருளிலேயே தங்கினேன். ஆனால். அங்கு குறிப்பிடத்தக்க முறையிலேதான் நின்றேன். நான் எல்லாவற்றையும் பார்த்தேன். எல்லாவற்றையும் அறிந்துகொண்டேன். முன்னறையிலுள்ள கவிதா மன்றத்திலும் நின்றிருந்தேன்.'

'ஆனால் என்ன பார்த்தாய்? கூடங்களில் தொல் பொருள் கடவுளர்கள் அணி வகுத்தனரா? பழம் பெரும் வீரர்கள் சண்டையிட்டனரா? இனிய குழந்தைகள் விளையாடியதோடு, கனவுகளைக் கூறினார்களா?'

'அங்கு நான் இருந்தேன் என்று சொல்லுகிறேன். நான் பார்க்க வேண்டியதெல்லாம் பார்த்து விட்டேன் என்பதை இலகுவாக நீ விளங்கிக் கொள்ள வேண்டும். நீ அங்கே இருந்திருந்தால், தொடர்ந்து மனிதனாக இருந்திருக்க மாட்டாய். ஆனால், நான் மனிதனானதோடு, எனது உள்முக வாழ்வை தெரிந்து கொண்டதோடு, கவிதையோடு எனக்கிருந்த உறவையும் தெரிந்து கொண்டேன் நான் உன்னோடு இருந்தபோது, இவை பற்றி எல்லாம் நினைத்ததில்லை. ஆனால் சூரியன் உதித்தபோதோ, மறைந்தபோதோ, நான் அற்புத பெருமை அடைந்தேன். நிலவொளியில் உன்னைவிட நான் அதிகம் அவதானிக்கக் கூடியவனாக இருந்தேன். ஆனால் அப்போது எனது உள்முக வாழ்வு பற்றித் தெரியாது; முன்னறையில்தான் அந்த ஞானம் எனக்குப் புகட்டப்பட்டது. நான் மனிதனானேன்! நான் தெளிவுற்று வெளியே வந்தேன். ஆனால், நீ வெப்ப நாடுகளில்

www.padippakam.com



இல்லை. அப்போது நான் இருந்த நிலையில் மனிதனாக வெளியே போக வெட்கமாயிருந்தது. எனக்கு காலணிகள், உடைகள், மனிதனாக அறியப் படத் தேவையான இந்த மனித மினுக்கங்கள் எல்லாமே தேவையாக இருந்தன.

'நான் என்னை மறைத்துக்கொண்டேன். ஆமாம் நான் உனக்கு ஒரு ரகசியத்தைக் கூறுகிறேன்—அதை உனது புத்தகத்தில் எழுதாதே. நான் கேக் விற்கும் பெண்ணின் உடைக்குள் மறைந்து கொண்டேன். அவள் எவ்வளவு தூரம் என்னை மறைத்தாள என்பது அவளுக்கே தெரியாது. மாலைகளில்தான் நான் வெளியேவந்தேன். நிலவொளியில் நான் தெருக்களில் ஓடினேன். சுவரில் மிக உயரமாக வளர்ந்தேன்; அது என் பின்னால் விருப்பம்போல் சந்தோஷப்படுத்தியது. நான் மேலும் கீழும் ஓடி, யாரும் பார்க்க முடியாத உயர்ந்த யன்னல்களின் வழியாகவும், கூரையின் வழியாகவும் யாரும் பார்த்திராத, பார்க்க முடியாதவைகளையும் பார்த்தேன். மொத்தத்தில் இது மோசமான உலகம்: பின்விளைவுகள் ஏதுமில்லையெனில், நான் மனிதனாக விரும்பவில்லை; ஆண்களிடமும், பெண்களிடமும், பெற்றோர்களிடமும், 'இணையற்ற அவர் குழந்தைகளிடமும்' நான் சொல்லக் கூடாதவைகளைக் கண்டேன். யாருக்கும் தெரியாதவைகளை, ஆனால் தெரிந்து கொள்ள விரும்பும், அடுத்த வீடுகளில் நடக்கும் கெட்ட விஷயங்களையெல்லாம் நான் பார்த்தேன். நான் ஒரு பத்திரிகை நடத்தியிருந்தால், அது எப்படி படிக்கப் பட்டிருக்கும் தெரியுமா! ஆனால் நான் அக்கறை செலுத்திய பேர்வழிகளுக்கு மட்டும் நேரிலே எழுதினேன். அதனால் நான் வந்த ஒவ்வொரு நகலும் பெரும் பரபரப்பு. அவர்கள் என்னைக் கண்டு பயப்பட்டாலும், அவர்கள் என்மீது ஆர்வலர்களாக

www.padippakam.com



வும் இருந்தார்கள். பேராசிரியர் என்னை பேராசிரிய ராக்கினார்; தையல்காரன் எனக்கு உடைகள் கொடுத்தான் (நான் உடைகள் நன்கு உடுத்தினேன்); நாணய அதிகாரி, எனக்கு நாணயங்கள செய்து கொடுத்தார்; பெண்கள் என்னை அழகன் என்றனர். இப்படியாக நான் மனிதனானேன். சரி போய் வருகிறேன்! இதோ எனதுவிலாசம்; நான் வெயிலி லான பக்கத்தில் வாழ்கிறேன். மழைக் காலத்தில் நான் வீட்டில்தான் இருப்பேன்.'

நிழல் சென்று விட்டது.

'மிக அற்புதம்' என்றான் படித்தவன்.

வருடங்களும் நாள்களும் போக, மீண்டும் நிழல் வந்தான்.

'எப்படி பாடுகள்?' என்று அவன் கேட்டான்.

'ஆ!...உண்மை, நல்லது, அழகானது பற்றி நான் எழுதுகிறேன் இந்த விதமான விஷயங்களைக் கேட்ப தற்கு யாருக்கும் அக்கறையில்லை. இவற்றை நான் நெஞ்சில் எடுத்துக் கொள்வதால், நான் நம்பிக்கை யிழந்தவனாகிவிட்டேன்' என்றான் படித்தவன்.

'அதை நான் செய்ய மாட்டேன்' என்றான் நிழல். 'நான் குண்டாகவும் நம்பிக்கையுடனும் இருக் கிறேன். அப்படி வரத்தான் ஒருவன் முயலவேண்டும். நீ உலகைப் புரிந்து கொள்ளவில்லை. அதனால்தான் நோய் வாய்ப்படுகிறாய். நீபயணம் செய்யவேண்டும். இந்தக் கோடையில் நான் சுற்றுப் பயணம் போக இருக்கிறேன். நீயும் கூட வருகிறாயா? எனக்கு ஒரு பயணக் கூட்டாளி தேவை. எனது நிழலாக வருவாயா? உன்னை அழைத்துப் போவதில் எனக்கு

www.padippakam.com



மகிழ்ச்சியே. உனது செலவுகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.'

'நீ ரொம்ப தூரம் பயணம் போவாய் என்று நான் கருதலாமா?' என்று கேட்டான் படித்தவன்.

'அது உன்னைப் பொறுத்தது' என்றான் நிழல். 'ஒரு பயணம் உனக்கு மிக நல்லது செய்யும். நீ என் நிழலாய் இருப்பாயா? அப்படியானால், உனக்கு செலவில்லாமலேயே பயணத்தில் சகலமும் கிடைக் கும்.'

'இது மிகக் கடுமையானது!' என்றான் படித் தவன்.

'ஆனால் இதுதான் உலக நியதி' என்றான் நிழல். 'அது அப்படியேதான் இருக்கும்!' என்று அவன் போய்விட்டான்.

படித்தவனுக்கு அதிர்ஷ்டமேயில்லை. சோகமும் கவலையும் அவனைப் பின் தொடர்ந்தன. அவன் உண்மை, நல்லது, அழகானது என்று கூறியவை களை பெரும்பாலான மக்கள், பசு ஜாதிக்காயை மதிப்பதுபோல, மிக அற்பமாகவே மதித்தார்கள். இறுதியில் அவன் நோய் வாய்ப்பட்டான்.

'நிழல் போன்றே இருக்கிறாய்!' என்று மக்கள் சொன்னார்கள். இதைக் கேட்டவனுக்கு உடலெல் லாம் உதறல் எடுத்தது. ஏனெனில், இந்த வார்த்தை தைகளுக்கு அவன் பிரத்தியேக அர்த்தம் இணைத் திருந்தான்.

'ஆரோக்கிய நீரூற்றுள்ள ஓர் இடத்துக்கு நீ போகவேண்டும்!' என்று அவனைப் பார்க்க வந்த நிழல் கூறியது. 'வேறு உதவியே உனக்கு இல்லை: பழைய பரிச்சயத்திற்காக நான் உன்னை அழைத்துப்

www.padippakam.com



போகிறேன். அதைப் பற்றி வர்ணனை நீ செய்து, வழியிலே என் நேரத்தைச் சுருக்க நீ உதவ வேண்டும். ஆரோக்கிய நீரூற்றுள்ள ஓர் இடத்திற்கு நான் போக வேண்டி இருக்கிறது. எனது தாடி வளரவேண்டிய அளவு வளர மாட்டேன் என்கிறது. இது ஒரு வகை நோயே. எனக்கு தாடி தேவை. இப்போது நியாய மாக இருந்து, என் பிரேரிப்பை ஏற்றுக் கொள்! நாம் தோழர்களாகப் பயணிப்போம்.'

அவர்கள் பயணமானார்கள். இப்போது நிழலே எஜமானர்; எஜமானன் நிழலானார். அவர்கள் வண்டியோட்டியும், சவாரி செய்தும், சூரியன் எங்கே நிற்கின்றது என்பதைப் பொறுத்து, அருகருகேயும், ஒருவருக்கு முன்னாலும் அல்லது ஒருவருக்குப் பின்னாலும் நடந்தும் பயணித்தார்கள். எங்கே மரியாதைக்குரிய இடத்தைப் பெறவேண்டும் என்பது நிழலுக்குத் தெரியும்.

படித்தவன் நல்ல மனிதனாகவும், மேலும் மென்மையானவனாகவும், நட்புறவுடன் பழகுபவ னாகவும் இருந்ததினால், இதனை விகற்பாகக் கவனித்துக் கொள்ளவில்லை.

பின்னொரு நாள், எஜமானன் நிழலிடம் கூறினான்: 'இங்கே நாம் பயண கூட்டாளிகளான தோடு, சிறு வயதிலிருந்தே சேர்ந்து வளர்ந்திருப்ப தால், நாம் குடிக்கலாமா? அது ரகசியமாகத் தோன்றுகிறதா?'

'நீர் இப்போ ஒரு விஷயத்தைச் சொல்லுகிறீர்' என்றான் இப்போது உண்மை எஜமானனாய் இருக் கும் நிழல். 'இது இனிமையாகவும் நேரடியாகவும் சொல்லப்பட்டுள்ளது. அதேபோல நானும் நேரடி

www.padippakam.com



யாகவும் ஆதரவாகவும் சொல்லுவேன். படித்த கனவானான நீங்கள் இயற்கை எவ்வளவு அற்புதமானது என்பதை அறிவீர்கள். சிலருக்கு ப்ரௌன் காகிதத்தை நுகர்வது பிடிக்காது; அதை வெறுப்பார்கள். யாராவது கண்ணாடி யன்னலை நகத்தால் கீறினால் எலும்பின் சூழலட்டை வரை சுருங்கி விடுபவர்களும் இருக்கிறார்கள். என்னை யாராவது 'தாங்கள்' என்றால் எனக்கும் அத்தகைய உணர்வே ஏற்படுகின்றது. உங்களுடன் முதலாவது பிரேரிப்பின் போதே, இதனால் ஏற்படும் ஒடுக்கப்படும் உணர்வைச் சொல்லி விட்டேன். இது பெருமையல்ல, ஓர் உணர்வு என்பதை நீங்கள் உணரவேண்டும். என்னைத் 'தாங்கள்' என்று கூறுவதை என்னால் அனுமதிக்க முடியாது. ஆனால் நான் சந்தோஷமாக உங்களைத் 'தாங்கள்' என்று அழைப்பேன். இதன்மூலம் உங்கள் விருப்பம் பாதியளவாவது நிறைவேற்றப்படுகின்றது.'

இப்போது நிழல், தனது முன்னாள் எஜமானனை 'தாங்கள்' என்றே விளித்தது.

'இது ரொம்ப கொடுமை; நீங்கள், என்னை 'தாங்கள்' என்று விளிக்கும்போது, 'நான் மட்டும் 'நீ' என்று எப்படி அழைப்பது' என்றான் எஜமானன். ஆனாலும் இந்த ஏற்பாட்டுக்கு அவன் அடிபணியும் நிர்ப்பந்த வசமானான்.

அவர்கள் குளிக்கும் இடத்திற்கு வந்தபோது, பல புதியவர்களோடு, அழகான இளம் இளவரசியும் இருந்தாள். அவளுக்கு அதிகூர்மையான பார்வை இருந்ததினால், அமைதி யிழந்திருந்தாள். புதிதாக வந்தவன் மற்றைய எல்லாரைப் பார்க்கிலும் மிகவும் வித்தியாசமானவன் என்பதைச் சட்டென்று பார்த்து விட்டாள்.

www.padippakam.com



'அவன் இங்கே வந்தது தன் தாடியை வளர்த்துக் கொள்ளுவதற்காக என்று சொல்கிறார்கள். நான் உண்மைக் காரணத்தைக் காண்கிறேன்—அவனால் ஒரு நிழலை ஏற்படுத்த முடியவில்லை.'

இப்போது அவளுக்கு விடுப்பு அறியும் ஆர்வம் பிறந்ததால், உல்லாச நடைபயின்று கொண்டிருந்த புதிய கனவானிடம் உடனே பேச்சுக் கொடுத்தாள். இளவரசியானதால், அதிக முகமன்கள் கூறாது, நேராக விஷயத்திற்கு வந்தாள்.

'உனது நோய்க்கு காரணம். ஒரு நிழலை உன்னால் ஏற்படுத்த முடியவில்லை என்பதுதான்.'

'மேதகு இளவரசியாருக்கு மேலும் சிறப்பான ஆற்றல் இருக்க வேண்டும்' என்றான் நிழல். 'அதி கூர்மையாக உங்களாலே பார்க்க முடியும். இதிலே தான் உங்களுடைய வியாதியே அடங்கியிருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனாலும் அதனால் நல்ல விஷயத்தை கண்டிருக்கிறீர்கள். என்னிடம் வித்தியாசமான நிழல் உண்டு. என்னோடு எப்பொழுதும் கூட இருக்கும் ஓர் ஆளை நீங்கள் பார்த்ததில்லையா? மற்றவர்களுக்கு சாதாரண நிழல்தான் உண்டு. ஆனால் சாதாரணமாய் இருப்பது எனக்கு விருப்பம் இல்லை. ஒருவன் தான் போட்டுக் கொள்வதைவிட, தனது பணியாட்கள் போட்டுக் கொள்ள உயர்ந்த ஆடைகள் கொடுப்பதில்லையா? அதுபோல் எனது நிழல் தனியொரு நபராக அலங்கரித்துக் கொள்ள அனுமதித்திருக்கிறேன். பாருங்கள் அவனுக்கென்று தனியொரு நிழல்கூடக் கொடுத்திருக்கிறேன். அதற்கு அதிக செலவானாலும், எனக்கு மிக வித்தியாசமான அளவுகளே பிடிக்கும்.'

'எப்படி!' என்று இளவரசி சொன்னாள். 'நான் உண்மையிலேயே குணமடைய முடியுமா? இருப்ப

www.padippakam.com



வற்றுள் இதுவே மிகச் சிறந்த குளியல் இடம். தண்ணீருக்கு இந்நாள்களிலே அதியற்புத சக்தி இருக்கிறது. இங்கே சந்தோஷமாய் இருப்பதால், நான் இதை விட்டுப் போகப் போவதில்லை. அந்த வெளி நாட்டு இளவரசன்—அவன் இளவரசனாகத்தான் இருக்கவேண்டும்—எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. அவனது தாடி வளரக் கூடாது. வளர்ந்துவிட்டால், அவள் போய் விடுவாள்.'

அன்று மாலை இளவரசியும், நிழலும் பெரிய நடன அரங்கில் நடனமாடினார்கள். அவள் எடை குறைந்தவளாக இருந்தாள்; அவன் அதைப் பார்க்கிலும் எடை குறைந்தவனாக இருந்தான். அத்தகைய ஒரு நடனக்காரனை அவள் எப்பொழுதும் பார்த்ததே இல்லை. தான் எந்த நாட்டிலிருந்து வந்தாள் என்பதை அவள் கூற, அவனுக்கு அந்த நாடு தெரிந்திருந்தது—அவள் அங்கில்லாதபோது அவன் அங்கு போயிருக்கிறான். அவன் அவளது அரண்மனையின் சாளரங்கள் வழியாக மேலும் கீழும் பார்த்திருந்ததால், பல நிலைமைகளை அறிந்திருந்தான். அதனால் இப்போது இளவரசியிடம் சங்கேதக் குறிப்புகளாகப் பதில்கள் சொல்ல, அவள் பெரிதும் மகிழ்ந்தாள். அவன் உலகிலேயே மிக புத்திசாலியாக இருக்க வேண்டும் என்று நினைத்தவள், அவனது ஞானத்தை வெகுவாக மதித்தாள். பின்னர் மீண்டும் அவள் அவனோடு நடனமாடியபோது, அவள் காதலுற்றாள். அவள் தன் கண்களால் பார்த்துக் கொண்டேயிருப்பதைப் பார்த்ததன் மூலம். நிழல் இதைப் புரிந்து கொண்டான். மீண்டும் அவர்கள் நடனமாட, அவள் அதைச் சொல்ல எத்தனித்த போதிலும், அவள் தன் நாடு பற்றியும், அரசு பற்றியும், தான் ஆள வேண்டிய மக்கள் பற்றியும் நினைத்து, சாதுர்யமாக நடந்து

www.padippakam.com



கொண்டாள். 'அவர் ஒரு புத்திசாலி' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். 'அது நல்லதுதான்; அவர் நன்றாக நடனமாடுகிறார்; அதுவும் நல்லது தான். ஆனால் அவரிடம் நன்கு பயிலப்பட்ட அறிவுண்டா? அதுவும் முக்கியமானதே. அவர் பரீட்சித்துப் பார்க்கப்படுதல் வேண்டும்.'

உடனே அவள் தன்னாலேயே பதில் அளிக்க முடியாத அளவுக்கு ஒரு கடினமான கேள்வியைக் கேட்டாள். நிழலின் முகம் கோணலாகியது.

'அதற்கு உன்னால் பதிலளிக்க முடியாது' என்றாள் இளவரசி.

'அதை நான் சிறுவயதில் படித்தேன்' என்றான் நிழல். 'கதவருகே நிற்கும் என் நிழல்கூட இதற்கான பதிலைச் சொல்லிவிடும் என நான் நம்புகிறேன்.'

'உங்களது நிழல்!' என்று ஆச்சரியப்பட்ட இளவரசி, 'அது மிகவும் அற்புதமாயிருக்குமே' எனச் சத்தம் போட்டாள்.

'அது அவனுக்குத் தெரியும் என்று என்னால் நிச்சயமாக உறுதிப்படுத்த ஏலாது' என்றான் நிழல். 'என்றாலும் அவனாற் சொல்ல முடியும் என்று நம்புவதின் சார்பாகவே மனங்கொள்ளுகிறேன். ஆனால் மேதகு இளவரசியார் ஒன்றினை நினைவுபடுத்த அனுமதிப்பார் என நம்புகின்றேன். தன்னை ஒரு மனிதனென மதித்தல் வேண்டும் என்கிற பெருமை அதற்கு இருப்பதினால், அவன் நல்லபடியாக, சரியாக விடை சொல்ல வேண்டுமென்றால், அவனும் மனிதன் போன்றே நடத்தப்படுதல் வேண்டும்.'

'அதை நான் விரும்புவேன்' என்றாள் இளவரசி.

கதவருகே நின்ற படித்தவனிடம் அவள் போய், சந்திரன், சூரியன், பச்சைக் காடுகள் மற்றும் அருகே

www.padippakam.com



யும் தூரமாகவும் உள்ள மக்கள் பற்றியெல்லாம் பேசினாள். படித்தவன் புத்திசாலித்தனமாகவும், நன்றாகவும் பதிலளித்தான்.

'இவ்வளவு புத்திசாலியான நிழலுடைய அவன் எப்பேர்ப்பட்ட மனிதன்!' என்று நினைத்தாள். 'அவனைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் என் நாடும் என் மக்களும் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஆவார்கள்—நான் அதனைச் செய்வேன்!'

அவள் தனது நாட்டுக்குத் திரும்பும்வரை இந்த விஷயம் யாருக்குமே தெரியவரக் கூடாது என்று அவர்கள்—இளவரசியும் நிழலும்—விரைவிலேயே ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள்.

"ஒருவருக்குக்கூட—எனது நிழலுக்குக்கூட—தெரியக் கூடாது' என்றான் நிழல். இதற்கு விசேஷமான காரணங்கள் இருந்தன.

அவர்கள் இருவரும் இளவரசி அரசாண்ட நாட்டிற்கும், அவளுடைய வீடு இருந்த இடத்துக்கும் வந்தார்கள்.

'என் சிநேகிதனே, நான் சொல்வதைக் கேள்' என்று படித்தவனிடம் நிழல் சொன்னான்: 'இப்போது நான் மிகவும் அதிர்ஷ்டத்தையும் அதிகாரத்தையும் பெற்றுள்ளேன். உனக்கு தனிப்பட்ட வகையில் ஏதாவது செய்கிறேன். நீ என்னுடன் அரண்மனையில் வாழலாம்; அரச வண்டியில் என்னுடன் வரலாம்; வருடத்திற்கு நூறாயிரம் டாலர்களும் பெறலாம். ஆனால் மற்றவர்கள் உன்னை நிழல் என்று அழைக்க ஒப்புக்கொள்ள வேண்டும்; முன்னர் மனிதனாக இருந்ததைச் சொல்லவும் கூடாது. மேலும் வருடத்திற்கொருமுறை, நான் உப்பரிகையில் அமர்ந்து மக்களுக்குக் காட்சியளிக்கும்போது, எனது

www.padippakam.com



நிழல் செய்வது போன்று, எனது பாதத்தடியில் நீ கிடக்க வேண்டும். ஏனெனில், நான் இளவரசியை மணக்கப் போகிறேன். இன்று மாலை திருமணம் நடக்க இருக்கிறது.'

'இது மிக மோசம்!' என்றான் படித்தவன். 'நான் இதைச் செய்ய மாட்டேன். இப்படி நடக்கவும் விட மாட்டேன் அது நாட்டையுப் இளவரசியையும் ஏமாற்றுவதாகும். நான் எல்லாவற்றையும் சொல்லி விடுவேன்—நான் மனிதன்; நீ ஒரு நிழல். நீ மனிதர்கள் உடையை மட்டுமே அணிந்திருக்கிறாய் என்பதைச் சொல்லிவிடுவேன்!'

'யாரும் அதை நம்ப மாட்டார்கள்' என்றான் நிழல். 'புத்திசாலியாக இரு. அல்லது காவலர்களை அழைப்பேன்.'

'நான் நேரடியாக இளவரசியிடம் போவேன்' என்றான் படித்தவன்.

'ஆனால் நான் முதலில் போவேன்' என்றான் நிழல். 'நீ சிறைக்குச் செல்வாய்.'

அப்படியே நடந்தது; அவன் இளவரசியை மணக்கப்போவது தெரியுமாதலால், காவலர் நிழல் சொல்வதைச் செய்தனர்.

நிழல் இளவரசியிடம் வந்தபோது, 'நீங்கள் நடுங்குகிறீர்கள்' என்றாள். 'என்ன நடந்தது? நமது திருமணம் நடக்க இருக்கும் இன்னாளில், நீங்கள் நோய்வாய்ப்படக் கூடாது.'

'நடக்கக் கூடாதது ஒன்றை அநுபவித்துவிட்டு வந்திருக்கிறேன்' என்றான் நிழல். 'நினைத்துப் பார்! எவ்வளவு புத்தியற்றது—நினைத்துப் பார்! எனது நிழலுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. அவன் மனித

www.padippakam.com



னாகி விட்டானாம்—அப்புறம்—நினைத்துப் பார்!—நான் அவனுடைய நிழலாம்.'

'இது மகா பயங்கரம்!' என்றாள் இளவரசி; 'அவன் சிறையிடப்பட்டுவிட்டான் என்று நான் எதிர் பார்க்கிறேன்.'

'நிச்சயமாக. அவன் எப்பொழுதும் சுகம் பெற மாட்டான் என்றே பயப்படுகிறேன்.'

'அற்ப நிழல்! மிகவும் துரதிர்ஷ்டசாலி. அவனது சிறு வாழ்விலிருந்து விடுதலை யளித்ததே பெரும் செயல். இப்போதெல்லாம் எப்படி மக்கள், உயர்ந்த வர்களுக் கெதிராக தாழ்ந்தவர்கள் கொடி பிடிக் கிறார்கள் என்று பார்க்கும்போது, அவனை பேசா மல் ஒழித்துவிடுவது அவசியம் என்று எனக்குத் தோன்றுகின்றது' என்றாள் இளவரசி.

'அது மிகக் கடுமையானது. அவன் எனது உண்மையான சேவகன்' என்ற நிழல், பெருமூச்சு விடுவதுபோல நடித்தான்.

'உங்களுக்கு மகா மேன்மையான குணங்கள்' என்ற இளவரசி, அவனுக்கு முன்னால் சிரம் தாழ்த் தினாள்.

மாலையில் முழு நகரமே பிரகாசிக்க, பீரங்கி முழங்கியது. வீரர்கள் அணிவகுத்தனர். அது திருமணம்! தங்களை பிரசன்னமாக்கி, மீண்டும் உற் சாகக் கூச்சலை ஏற்றுக் கொள்வதாக, இளவரசியும் நிழலும் உப்பரிகைக்கு வந்தார்கள்.

இந்த விழாக்களைப் பற்றியெல்லாம் படித்தவன் எதுவுமே கேள்விப்படவில்லை. ஏனெனில் அவனுக்கு ஏற்கனவே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது.




# உயரப் பாய்ச்சல்காரர்

ஒரு தெள்ளுப்பூச்சி, ஒரு வெட்டுக்கிளி, ஒரு துள்ளு நுணல் ஆகியன தங்களுள் எது அதிக உயரமாகப் பாயக்கூடியது என்பதைப் பரீட்சித்துப் பார்க்கத் தீர்மானித்தன. இந்தப் போட்டியைப் பார்க்க விரும்பும் எல்லாரையும், முழு உலகத்தையும், அவை அழைத்தன. தோற்கடிக்கக் கூடிய இந்த மூன்று உயரப் பாய்ச்சல்காரரும் ஒன்றாகக் கூடினார்கள்.

'யார் அதிக உயரம் பாய வல்லாரோ அவருக்கு மகளைக் கொடுப்பேன்; ஏனெனில் இவர்கள் சன்மானம் பெறாது பாய்வது கெளரவமான செயலல்ல' என்று அரசன் சொன்னான்.

www.padippakam.com



தெள்ளுப்பூச்சி முதலில் முன் வந்தது. அதற்கு அருமையான பண்பு இருந்ததினாலும், அது மனிதர் களைத் தவிர வேறு யாருடனும் கூட்டாளித்தனம் வைத்துக் கொள்ளாதினாலும், இதன் இரத்தக் குழாய்களிலே மென்மையான இரத்தம் ஓடுவதினா லும்—இவையே சேறுபாட்டினை ஏற்படுத்துவன— வந்திருந்த எல்லோரையும் தலைதாழ்த்தி வணங் கியது.

அடுத்து வெட்டுக்கிளி வந்தது. அது வாஸ்தவத் தில் மிகுந்த தைரியசாலியானாலும், நல்ல வளர்ப் பிலே உருவானது. பிறவியிலேயே அது சீருடை பெற் றிருந்தது. எகிப்து நாட்டுடன் தனக்கு மிகப் பழைய தொடர்புகள் உண்டு என்று அது சொன்னபோதிலும் உள்ளூரிலும் அது வெகுவாக மதிக்கப்பட்டது. அது நேரடியாக ஒரு வயலிலிருந்து எடுக்கப்பட்டு, மூன்று மாடிகளைக் கொண்ட கடுதாசிக் கூட்டத்தினாற் செய்யப்பட்ட வீடு ஒன்றிலே போடப்பட்டது. அதில் கடுதாசிக் கூட்டத்தின் அரண்மனைப் பாத்திரங்கள் உள்நோக்கி அமைந்திருந்தன. இதனால் அதன் கதவுக ளும் யன்னல்களும் ஆடுதன் ராணிகளின் உயிர்ப்பிலே அமைந்தன போன்று தோன்றின. 'நான் ஒரு பெரிய பாடகன். கடுதாசி வீடு பெறாமல் குழவிப் பருவத் திலிருந்து பாடத் துவங்கிய பதினாறு சிள் வண்டுகள் என் பாடலைக் கேட்டு ஆரம்பத்தில் இருந்ததைப் பார்க்கிலும் மெலிவடைந்து விட்டன!' என்றது.

அவை இரண்டும்—தெள்ளுப் பூச்சியும் வெட்டுக் கிளியும்—இளவரசியை மணந்து கொள்ளத் தங்களுக் குத் தகைமை உண்டு என்ற கட்சிக்கு வலுவான நியாயங்களை முன் வைத்தன.

ஆனால் துள்ளு நுளை ஒரு வார்த்தைக்கூடப் பேசவில்லை. அது தன்னைப் பற்றிக் கடுமையாக

www.padippakam.com



யோசித்தது என்று சொல்லப்பட்டது. அரண்மனை நாய் துள்ளு நுணலை முகர்ந்து பார்த்து, அது நல்ல குடும்பத்திலிருந்து வந்தது என்பதை உறுதிப்படுத்தியது. நாவடக்கத்திற்காக இருமுறை பதக்கம்பெற்றவரும் கிழவருமான அரண்மனை ஆலோசகர், துள்ளு நுணலுக்கு மந்திர சக்தி உண்டு என்று சாதித்தார். அதனுடைய முதுகினைப் பார்த்து குளிர் பனிக்காலம் கடுமையானதாக இருக்குமா அல்லது மிதமானதாக இருக்குமா என்பதைச் சொல்லிவிடலாம் என்றார். காலநிலையை முன்னறிவிப்புச் செய்பவனின் முதுகினைப் பார்த்து இதனைச் சொல்ல முடியாது என்றுஞ் சொன்னார்.

'சரி நான் எதுவும் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் நான் எப்பொழுதும் என் சொந்த ஆலோசனைகளை வைத்துக் கொள்வதில் நம்பிக்கையுள்ளவன்' என்று கிழ அரசன் சொன்னான்.

இதற்கிடையில் பாய்ச்சலுக்கான நேரம் வந்துவிட்டது. தெள்ளுப் பூச்சி மிக உயரப் பாய்ந்ததினால், அதனை ஒருவராலும் பார்க்கமுடியவில்லை. எனவே, அது பாயவே இல்லை என்றும், அதனைச் சேர்த்துக் கொள்வது சரியில்லை என்றும் சொன்னார்கள்.

வெட்டுக்கிளி பாதி உயரமே பாய்ந்தது. அது நேராக அரசனின் முகத்திலே பாய்ந்ததினால், அஃது ஒழுங்கற்ற பாய்ச்சல் என்று அரசன் சொன்னான்.

துள்ளு நுணல் மிக அதிக நேரமாக யோசித்துக் கொண்டிருந்ததினால், அதனால் பாய முடியாதோ என்று ஒவ்வொருவரும் யோசிக்க ஆரம்பித்தார்கள்.

'அது சுகமில்லாமலிருக்கிறது என்று நான் நினைக்கவில்லை' என்று அதனை மீண்டும் முகர்ந்து



படிப்பகம்

www.padippakam.com



பார்த்த அரண்மனை நாய் கூறியது. ஸ்வீஸ்ஸ்! சிறிய பககப் பாய்ச்சலிலே தங்க முக்காலி ஒன்றிலே குந்தியிருந்த இளவரசியின் மடியிலே பாய்ந்தது.

இதனைப் பார்த்து அரசன் சொன்னான்: 'எல்லா வற்றிலும் புள்ளி அவளாகவே இருப்பதினால், மகளைத் தொடும் பாய்ச்சலே மிக உயர்ந்த பாய்ச்ச லாகும். அப்படிச் செய்வதற்கு உங்களுக்கு மூளையும் வேணும். துள்ளுநுணல் தனக்கு ஒரு தலையுண்டு என்பதைக் காட்டி விட்டது. அதனுடைய தலை யிலேயே அதனுடைய கால்கள் இருக்கின்றன!'

இதனால், துள்ளுநுணலே இளவரசியை வென்றது.

'நானே அதிக உயரம் பாய்ந்தேன்!' என்று தெள்ளுப்பூச்சி சொன்னது. 'ஆனாலும் எனக்கு எல்லாம் ஒன்றுதான்! கிழட்டு முருங்கைக்காய்த் தோலும், நிணமும் எல்லாமிம் உள்ள அதை அவள் வைத்திருக்கட்டும்! நானே மிக உயரமாகப் பாய்ந் தேன். ஆனால், இந்த உலகத்திலே ஓர் அங்கீகாரம் பெறவேண்டும் என்றால், உங்களுக்கு ஒரு உடம்பும் தேவை!'

சுறுசுறுப்புள்ள சேவையிலே தெள்ளுப்பூச்சி வெளிநாடு சென்றது. அங்கே அது கொல்லப்பட்ட தாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

வெட்டுக்கிளியும் சாக்கடை ஒன்றிலே அமர்ந் திருந்து வாழ்க்கையின் மேடு பள்ளங்கள் பற்றிச் சிந்தித்தது. அதுவும் சொன்னது: 'உனக்குத் தேவை யானது உடம்புதான்!' தனது சோகம் நிறைந்த பாட்டை அது இவ்வாறு பாடியது. இங்கிருந்துதான் இந்தக் கதை எடுக்கப்பட்டது. இதனை அச்சிலே போட்டாற்கூட இது சுலபமாகவே உண்மையற்ற தாகவே கருதப்படும்.

www.padippakam.com




# பூரண மெய்

'இது ஒரு பயங்கரமான விவகாரம்!' என்று, இந்த விவகாரமே இடம்பெறாத நகரத்தின் ஒரு பகுதியிலே வாழ்ந்த ஒரு கோழி சொல்லிற்று. 'இது ஒரு பயங்கர விவகாரம்; இது ஒரு கோழிப் பண்ணையில் நடந்திருக்கிறது. இன்றிரவு நான் தனியே படுப்பதற்குத் துணிய மாட்டேன்! படுக்கும் இடத்தில் நாங்கள் பலர் ஒன்றாக இருப்பது ஒரு நல்ல விஷயம். ஏனைய கோழிகளின் இறகுகள் சிலிர்க்கவும், சேவல்களின் கொண்டைகள் தட்டையாக விழவும் செய்யத்தக்கதான ஒரு கதையை அது சொன்னது. அதுவே பூரண மெய்!

www.padippakam.com



நகரத்தின் இன்னொரு பகுதியிலுள்ள கோழிப் பண்ணையிலே நடந்த விஷயத்தின் துவக்கத்தி லிருந்தே நாங்கள் துவங்குவோம். சூரியன் அஸ்த மிக்கவும், கோழிகள் தங்களுடைய தங்குமிடத்துக்குப் பறந்தன. அவற்றுள் ஒன்று—கட்டைக் கால்களும் வெள்ளை சிறகுகளும் கொண்டது—நிபந்தனை முட்டைகளை இடும் பழக்கம் உடையது. கோழி களைப் பொறுத்தமட்டில், இது ஒவ்வொரு வகை யிலும் கௌரவமானது. அது படுக்கும் இடத்தில் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டு, தன் அலகினால் இறகுகளை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தபொழுது, ஒரு சிறிய இறகு கீழே விழுந்தது.

'இந்தா, இப்பொழுது! நான் என் இறகுகளை எவ்வளவுக்கு ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறேனோ, அவ்வளவுக்கு நான் அழகாகத் தோன்றுவேன்' என்று அது சொன்னது. இதை அது ஒரு முஸ்பாத்திக்காகத் தான் சொன்னது என்பது உங்களுக்குத் தெரிய வேண்டும். ஏனெனில், அந்தக் கோழிக் கூட்டத் திலேயே அதுதான் மிகப் பிரகாசமான பறவை. மற்றும் படியும், நான் ஏற்கனவே சொன்னதுபோல, மிகக் கௌரவமானதுங்கூட. பின்னர் அது தூக்கத் தில் ஆழ்ந்தது.

இருள் எங்கும் சூழ்ந்தது. கோழிக்குப் பக்கத்தில் கோழிகள் இருந்தன. அதற்குப் பக்கத்தில் இருந்த கோழிக்குத் தூக்கம் வரவில்லை. அதுக்குக் கேட்டது போலவும், கேட்காதது போலவும். இந்த உலகத்திலே சமாதானமாக வாழவேண்டும் என்றால், அப்படித் தான் இருக்க வேண்டும். இருந்தாலும், தனக்கு மற்றப் பக்கத்திலுள்ள கோழிக்கு அதனைச் சொல்

www.padippakam.com



வேண்டும் என்பதை அது உணர்ந்தது. 'அது சொன்னதைக் கேட்டாயா?' என்று அது குசுகுசுத்தது. 'நான் எந்தப் பெயர்களும் சொல்லவில்லை. ஆனால், ஒரு கோழி இருக்கிறது. அது தன்னை அழகுபடுத்துவதற்காக, தன் இறகுகளைப் பிடுங்கத் தயாராக இருக்கிறது நான் மட்டும் சேவலாக இருந்தால், அத்தகைய ஒரு பேட்டினை ஏறெடுத்தும் பார்க்க மாட்டேன்!'

கோழிகளுக்கு மேலே ஓர் ஆந்தை, தன் கணவன் ஆந்தையுடனும், ஆந்தைக் குஞ்சுகளுடனும் வசித்து வந்தது. அந்தக் குடும்பத்துக்கே மிக நுட்பமான செவிகள். அயலிலே வாழ்ந்த பேடு சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் அவை செவியுற்றன. அவை தங்களுடைய விழிகளை உருட்டிக் கொண்டிருக்கவும், தாய் ஆந்தை தன் இறக்கைகளினால் தனக்குக் காற்றினை விசுக்கியவாறு சொன்னது: 'உற்றுக் கேட்க வேண்டாம். ஆனால், அது என்ன சொன்னது என்பதை நீங்கள் எல்லாரும் கேட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நான் என் சொந்த செவிகளினால் அதனைக் கேட்டேன். அவை விழுவதாக இருந்தால், பெரிய காரியங்கள் நடக்க வேணும்! அந்தப் பேடுகளுள் ஒன்று ஒரு பேட்டுக் குரிய ஒழுங்கு முறை என்ன என்பதை மறந்துவிட்டது. தன்னுடைய இறகுகளைப் பிடுங்கிக் கொண்டு, அப்பொழுது சேவல் தன்னைப் பார்க்கவும் அது அனுமதித்தும் இருக்கிறது.'

'இந்தக கதைக்குப் பிள்ளைகள் செவிமடுக்கக் கூடாது!' என்றது தந்தை ஆந்தை.

'என்ன இருந்தாலும் நான் அயல் வீட்டு ஆந்தைக்குச் சொல்லப் போகின்றேன். அது மிகவும் கௌரவ

www.padippakam.com



மான ஆந்தை, உண்மையாகத்தான்!' இவ்வாறு சொல்லி தாய் ஆந்தை பறந்தது.

'ஹூ-ஹூ! ரூ-ஹூஊ!' அவை இரண்டும் அயலில் இருந்த புறாக்கூட்டுக்குக் கேட்கும்படி சத்தம் போட்டன. 'நீங்கள் கேள்விப்பட்டீர்களா? ஹூ-ஹூ! ஒரு சேவலுக்காக ஒரு பேடு தன் இறகு கள் எல்லாவற்றையும் பிடுங்கி எறிந்துவிட்டது! அவள் இதுவரையில் சாகாதிருந்தால்—அவள் குளிரிலே விறைத்துச் செத்துப் போவாள். ஹூ-ஹூ!'

'எங்கே? எங்கே?' புறாக்கள் முக்கின.

'அயலிலுள்ள கோழிப் பண்ணையிலே! நானே பார்த்தது போன்ற உண்மை! இது சொல்லுவதற்கு பொருத்தமான கதையில்லைதான். ஆனாலும் இது பூரணமான மெய்!'

'பக்! பக்! எவ்வளவு பெரிய மெய்!' என்று சொல்லி முக்கிக் கொண்டே புறாக்கள் தங்கள் சொந்தக் கோழிப் பண்ணையை அடைந்தன. 'அங்கே ஒரு பேடு— சிலர் இரண்டு பேடுகள் என்று சொல்லுகிறார்கள்— ஏனையவற்றிலிருந்து மாறு பட்டுத் தோன்றிச் சேவலின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்பதற்காக சிறகுகளைப் பிடுங்கி எறிந்து விட்டது. இது ஒரு ஆபத்தான விளையாட்டு. குளிரினால் செத்துப் போகலாம். அவை செத்துப் போயின; இரண்டு பேடுகள்!'

'எழும்புங்கள்! எழும்புங்கள்!' என்று கூவிக் கொண்டே வேலியை நோக்கிப் பறந்தது. அதனு

www.padippakam.com



டைய கண்களில் சிறிது தூக்கம் வளையமிட்டிருந்தது. இருந்தாலும், அது கூவியது: 'ஒரு சேவலின் மீதான காதலுக்காக மூன்று பேடுகள் செத்துப் போயின. அவை தங்கள் இறகுகளைப் பிடுங்கி எறிந்து விட்டன. இது ஒரு பொல்லாத காரியம். இதை நான் இரகசியமாக வைத்துக்கொள்ளவில்லை; —மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்!'

'செய்தியை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்!' என்று வௌவால்கள் கீச்சிட்டன. பேடுகள் 'க்ளக்' கிட்டன; சேவல்கள் கூவின: 'செய்தியை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்!? செய்தியை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்! இவ்வாறே இந்தக் கதை ஒரு கோழி வீட்டிலிருந்து இன்னொரு கோழி வீட்டுக்கு விரைந்து சென்று, இறுதியில் எங்கிருந்து இது ஆரம்பமானதோ அங்கேயே திரும்பியும் வந்தது.

'சேவல்மீது கொண்ட காதலினால் எது அதிகம் கசிந்துருகி மெலிந்தது என்பதைக் காட்டுவதற்காக ஐந்து பேடுகள் தங்கள் இறகுகளை எல்லாம் பிடுங்கி எறிந்து விட்டன; பின்னர் இரத்தம் பெருகி ஓடும் வரையிலும் ஒன்றை ஒன்று கொத்திக் கொண்டு விழுந்து செத்தன. இதனால் அவற்றின் குடும்பங்களுக்கு அவமானமும் அவப் பெயரும் ஏற்பட்டுள்ளதுடன், அவற்றின் உரிமைக்காரனுக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது.'

தளர்ந்திருந்த சிறிய இறகை இழந்துவிட்ட பேடுக்குத் தன் சொந்தக் கதையே தெரியவில்லை. அது கௌரவமான பேடு ஆதலால், அது சொன்னது: 'அந்தப் பேடுகளை நான் வெறுக்கிறேன். இந்த வகை இன்னும் இருக்கின்றன. இந்த விஷயங்களை

www.padippakam.com



மூடிமறைக்கப்படக் கூடாது. இந்தக் கதை பத்திரிகையிலே பிரசுரமாவதற்காக என்னுடைய சிறிய பங்கு அளிப்பைச் செய்வேன். அப்பொழுதுதான் இது நாடு பூராவும் பரவும். இந்தப் பேடுகளுக்கு இது வேணும்; இவற்றின் குடும்பங்களுக்கும் இது வேணும்!'

இது பத்திரிகைக்குச் சென்று, அது அதில் அச்சிடப் பட்டது. இதிலே பூரண மெய்யாதெனில்: ஒரு சிறிய இறகு ஐந்து பேடுகளாகவும் வளரும்!

www.padippakam.com




# நீர்த் துளி

பூதக்கண்ணாடி என்ன என்பது உங்களுக்குத் தெரியும். அது மூக்குக் கண்ணாடியைப் போன்று வட்ட வடிவில் இருக்கும்; அதனூடாகப் பார்க்கும் பொழுது எல்லாமே நூறு மடங்கு பெரிதாகத் தெரியும். அதை உங்கள் கண்களுக்கு முன்னால் பிடித்துக் கொண்டு, அதனூடாகக் குளத்து நீரில் ஒரு துளியைப் பார்ப்பீர்களானால், ஆயிரக்கணக்கான விநோதமான சிறிய ஜீவராசிகளைப் பார்ப்பீர்கள். அவை அங்கு வாஸ்தவத்தில் இருக்கின்ற போதிலும், சாதாரணமாக அவற்றை நீங்கள் பார்ப்பதில்லை. ஒரு கோப்பை நிறையவுள்ள 'கூனி' இறால்களைப் போலத் தோன்றும் அவை, எல்லாமாகச் சேர்தது துள்ளிக் குதித்துக் கொண்டே இருக்கும். அவை அவ்



படிப்பகம்

www.padippakam.com



வளவு குரூரமானவையாதலால், ஒன்று இன்னொன்றினை அவயம் அவயமாக துண்டுகளும் துணுக்குகளுமாகக் கிழித்துவிடும். இருந்தபோதிலும், தங்கள் வழிகளிலே அவை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வாழ்ந்தன.

முன்னொரு காலத்திலே, எல்லோராலும் படர்வர் ஊர்வர் என்றழைக்கப்பட்ட ஒரு கிழவர் வாழ்ந்தார். அவ்வாறு அழைக்கப்பட்டதற்குக் காரணம் அதுவே அவர் பெயர். எதிலிருந்தும் மிகச் சிறந்ததைப் பெற்றுக் கொள்ளுவதையே அவர் எப்பொழுதும் விரும்பினார். வேறு எதுவுமே சரிவராவிட்டால், அதனை மந்திர வித்தையினால் பெற்றுக் கொள்ளுவது அவரது வழக்கம்.

ஒருநாள் அவர் தன்னுடைய பூதக் கண்ணாடியை தமது கண்ணிலே வைத்துக் கொண்டு, சாக்கடையின் சகதியிலே எடுக்கப்பட்ட ஒரு துளி நீரைப் பார்த்துக் கொண்டிருந்தார். எத்தகைய படர்தலும் ஊர்தலும் அங்கே நடந்தது! ஆயிரக்கணக்கான நுண்ணிய ஜீவராசிகள் துள்ளிக் கொண்டும் குதித்துக் கொண்டும், ஒன்றுடன் ஒன்று சண்டைபோட்டுக் கொண்டும், ஒன்றை ஒன்று சாப்பிட்டுக் கொண்டும் திரிந்தன.

'ஏன், ஆனாலும் மகா கோரமானது!' என்று கிழ படர்வர் ஊர்வர் சொன்னார். 'அவற்றைத் தமது சொந்த அலுவல்களைக் கவனித்துக்கொண்டு, சமாதானமாகவும் அமைதியாகவும் வாழ்வனவாகச் செய்யமுடியாதா?' அவர் ஆழ்ந்து யோசித்தார்: அவர் ஆழ்ந்து யோசித்தார். ஆனால் எல்லாம் பயனற்றுப் போயின. எனவே, அவர் மந்திர வித்தையை பரிசோதித்தார். 'அவற்றைச் சுலபமாகப் பார்ப்பதற்காக நான் அவற்றிற்கு ஏதாவது நிறத்தைக் கொடுக்க வேண்டும்' என்று அவர்சொன்னார். சிவப்பு உவைன்

www.padippakam.com



துளியைப் போன்று தோன்றிய ஒன்றை அவர் நீர்த் துளிக்குள் ஊற்றினார். ஆனால், அது இரண்டு பென்னி காசுக்கு வாங்கப்படக்கூடிய மிகச்சிறந்தது— ஒரு சூன்யக்காரியின் இரத்தம். அந்த விநோதமான நுண்ணிய ஜீவராசிகளின் உடல் எல்லாம் ரோசாச் சிவப்பு நிறத்தில் மாறின. நிர்வாணமான காட்டு மிராண்டிகள் நிரம்பிய ஒரு நகரத்தைப் போல அது தோன்றியது.

'அங்கே என்ன வைத்திருக்கிறாய்?' என்று இன்னொரு கிழ மந்திரவாதி கேட்டான். அவனுக்குப் பெயரே கிடையாது; அதுதான் அவனைப் பற்றிய மிகச் சிறப்பான அம்சம்.

'நீ அதைச் சரியாக ஊகிப்பாயானால், அதனை உனக்கே பரிசளித்து விடுகிறேன். உனக்குத் தெரியா விட்டால் அதைச் சொல்வது அவ்வளவு சுலபமான தல்ல!' என்றார் படர்வர் ஊர்வர்.

எனவே, பெயரே இல்லாத அந்த மந்திரவாதி பூதக்கண்ணாடி ஊடாகப் பார்த்தான். அது வாஸ் தவத்தில், ஆடைகள் எதுவுமே அணியாத மக்கள் ஓடிக் கொண்டிருக்கும் பட்டினத்தைப் போன்று அது தோன்றியது! அது பயங்கரமானதாக இருந்தது! அவை ஒன்றை ஒன்று எவ்வாறு அடித்து, அரைத்து, கிள்ளி, கடித்துச் சண்டை போட்டுக் கொண்டன என்பதைப் பார்ப்பது இன்னும் பயங்கரமானதாக இருந்தது! கீழே இருந்தனவெல்லாம் மேலே வர வேண்டி இருந்தன; மேலே இருந்தனவெல்லாம் கீழே போகவேண்டி இருந்தன. 'பார்! பார்! அவனுடைய கால் என்னுடையதைப் பார்க்கிலும் நீளமானது! சரி! அவன் ஒழிக! காதுக்குப் பின்னால் ஒரு சிறு கட்டி யுள்ள யாரோ ஒருவன் அங்கே இருக்கிறான்! ஆபத்தற்ற சிறிய கட்டி; ஆனாலும் அது அவனுக்குத்

www.padippakam.com



தொந்தரவு தருகின்றது: அது அவனுக்கு மேலும் தொந்தரவு தரப்போகின்றது! அவர்கள் அவனை இழுத்து, அவனைத் துண்டாக வெட்டி, அவனுடைய சிறிய கட்டிக்காகவே அவனை அவர்கள்சாப்பிட்டார்கள். சமாதானத்துடன் தனியாக இருப்பதைத் தவிர வேறு எதையும் விரும்பாது, ஒரு சிறிய சீமாட்டியைப் போல அமைதியாக ஒருத்தி அமர்ந்திருந்தாள். எனவே, அவர்கள் அவளுக்குப் பின்னாலே சென்று, அவளுடன் சண்டை போட்டு, அவளை அவர்கள் பிய்த்துத் தின்றார்கள்!

'எவ்வளவு வசீகரமானது!' என்றான் மந்திரவாதி.

'ஆம். ஆனால் அது என்னவென்று நீ நினைக்கிறாய்?' என்று படர்வர் ஊர்வர் கேட்டார்.

'அதைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது' என்றார் மற்றவர். 'இது உண்மையில் கோபன்ஹேகன் அல்லது இன்னொரு பட்டணம். அவை எல்லாம் ஒரே மாதிரித்தான் தெரிகின்றன! என்ன இருந்தாலும், ஒரு பட்டணம்!'

'அது சாக்கடைத் தண்ணீர்!' என்றார் படர்வர் ஊர்வர்.

www.padippakam.com

# டேனிஷ் கதை மேதையும்



# இக் கதைகளும்

டென்மார்க் மனித நேயம் மிக்கவர்கள் வாழும் அழகிய சிறிய நாடு. இது வட ஐரோப்பாவில் வட கடலுக்கும், பால்டிக் கடலுக்கும் நடுவே அமைந்துள்ளது. இது ஜட்லாந்து தீபகற்பம், ஜீலாந்து, ஃபுனென், போர்ன்ஹோம் ஆகிய தீவுகள் மற்றும் 480 சிறிய தீவுகளையும் உள்ளடக்கிய நாடு. ஜட்லாந்து தீபகற்பம் நாற்பத்திரண்டு மைல் நிலப் பரப்பில் ஜேர்மனியுடன் இணைந்துள்ளது. பீச் காடுகளும் மணல் மேடுகளும், சுண்ணாம்புப் பாறைகளும் நிறைந்த இயற்கைக் காட்சிகள் இந்நாட்டுக்கு அழகு சேர்க்கின்றன. ஆனாலும், எழுபது சதவீத நிலம் விவசாயத்துக்குப் பயன்படுகிறது. பாலுற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலே டென்

படிப்பகம்

www.padippakam.com



மார்க் முக்கியமானது. புவியியற் சூழல் மீன்பிடித் தொழிலை ஊக்குவித்துள்ளது. கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அதன் பங்களிப்புக் கணிசமானது.

மக்களினதும், எண்ணங்களினதும், பொருள் வசதிகளினதும் சந்திப்பு நிலையமாக டென்மார்க் திகழ்ந்துள்ளது. சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளையும் உள்ளடக்கிய ஸ்கண்டினேவிய நாடுகளுக்கும், பால்டிக் கடலுக்கும் டென்மார்க் மேற்கு நுழைவாயிலாகவும் அமைந்துள்ளது. இதுவே மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கான பாலமாகவும் திகழ்கின்றது. கிறிஸ்துவத்தின் புரட்சிகரச் செல்வாக்கு மட்டும் அல்லாமல், பிரஞ்சிய விழுக்தி எண்ணங்களும், ஜேர்மனிய மனோரதியக் கற்பனைக் கோலங்களும், தேசிய எழுச்சிகளும் டென்மார்க் மூலமே ஸ்கண்டினேவிய நாடுகளிலே பரவின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிகளிலே ஸ்கண்டிநேவிய நாடுகளிலே எழுந்து நிலைப்பாடு கொண்ட சோஷலிஸ சிந்தனைகளுக்குப் பேச்சாளர்களையும், அமைப்பாளர்களையும் டென்மார்க்கே அளித்து செழுமைப் படுத்தியது.

டென்மார்க்கின் பொருளாதார வாழ்க்கை சிறப்பானது. வாழ்க்கைத் தரம் உலகின் மிகவும் உயர்ந்த ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது. பதினோரம் நூற்றாண்டில் டென்மார்க் ஒரு வல்லரசாகவும் திகழ்ந்தது. இங்கிலாந்தின் பெரும் பகுதியே அதன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், ஐரோப்பாவில் எழுந்த வல்லரசுப் போட்டிகளினால், டென்மார்க் அழிவின் விளிம்பிற்கே இட்டுச் செல்லப்பட்டது. ஈற்றில் 1864இல் நடைபெற்ற பிரஷ்ய - அஸ்திரியப் படையெடுப்புகளினால் டென்மார்க்கின் சகல ஆதிபத்திய ஆசைகளும் நொருங்கின.

www.padippakam.com



ஆனாலும், கடலோடிகளாகத் திகழ்ந்த டேனிஷ் மக்கள், தமிழ் மக்களுடனும் தமிழ் மொழியுடனும் பதினாறாம் நூற்றாண்டியிலேயே தொடர்பு வைத்துக் கொண்டனர். தமிழ்நாட்டில், தரங்கம்பாடியிலே நிலைகொண்டு (அவர்களால் அது ரங்கூபார் என அழைக்கப்பட்டது) கிறிஸ்துவ சமயப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். அவர்கள் உறவால் தமிழ் அச்சுக்கலை ஆதாயம் பெற்றதுடன், தமிழ்மொழிக்குச் சில சொற்களையும் உபகரித்தனர்.

பதினேழாம் நூற்றாண்டில், இலங்கையின் தமிழ்ப் பகுதிகளிலே தமது ஆட்சியை ஊன்றும் வாய்ப்பினை ஒல்லாந்தருடனான போட்டியில் இழந்தனர். இருப்பினும், திருக்கோணமலைத் துறைமுகத்தினைச் சில தினங்களுக்கேனும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர் என்பது வரலாறு.

தமிழ் மொழியுடனான தொடர்பில் புதியதொரு அத்தியாயம் 1983ஆம் ஆண்டிற்குப் பின்னர் துலங்குவதாயிற்று. அவ்வாண்டில், இனப் படுகொலைக்கு அஞ்சி உலக நாடுகளுக்கு அகதிகளாகச் சிதறி ஓடிய ஈழத் தமிழர்களுள் ஒரு பகுதியினர் டென்மார்கிலே தஞ்சம் புகுந்தனர். இவர்கள் இப்பொழுது டேனிஷ் மொழிக்கும் தமிழ் மொழிக்குமிடையில் சங்கையான புரிந்துணர்வினை ஏற்படுத்தச் சிரத்தை ஊன்றி உழைக்கிறார்கள். அந்தச் சிரத்தையின் ஓர் இன்றியமையாத கோலமே ஹன்ஸ் கிறிஸ்டியன் அனசனின் இலக்கிய வல்லபத்தைத் தமிழ் மொழி மூலம் பயிலுதலும் சுவைத்தலுமாகும்.

வடமொழிக்கு காளிதாஸன், தமிழுக்கு கம்பன், ஆங்கிலத்துக்கு சேக்ஸ்பியர் என்பது போல, டேனிஷ் மொழிக்கு ஓர் அருட்கொடையாகக் கிடைத்தவர் **ஹன்ஸ் கிறிஸ்டியன் அனசன் (Hans Christian Anderson)** ஆவர். டேனிஷ் இலக்

www.padippakam.com



கியம் ஸ்கண்டிநேவிய பாரம்பரியத்தினைப் பிரதிபலித்த போதிலும், வலுவான ஐரோப்பிய செல்வாக்கினைப் பிரதிபலிக்கின்றது. உலக இலக்கியத்திற்கு மகத்தான பங்களிப்புச் செய்த முதலாவது டேனிஷ் இலக்கிய மேதை அனசனே எனச் சகலராலும் ஒருமுகமாகப் பாராட்டப் படுகின்றார். இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜே. வி. ஜென்சன் என்பவர் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றாராயினும், உலக இலக்கிய மேதைகளின் வரிசையிலே சிறப்பிடம் பெறுபவர் அனசனே ஆவர். உலகின் குழந்தைகள் மத்தியிலே கதை கேட்கும் ஆசை நிலைத்து நிற்கும் வரையிலும், இவருடைய புகழும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி.

டென்மார்க்கின் தலைநகரமான கோபன்ஹேகன் துறைமுகத்தின் சிறப்பு **land mark** ஆக விளங்குவது பாறையில் அமைந்துள்ள கடற் கன்னிச் சிலையாகும். அனசனின் கற்பனா ஆற்றலிலே சிருஷ்டியான கனவுலகப் பாத்திரமே கடற் கன்னி. இலக்கியத்தினால் உயிர்ப்பும் சாகாவரமும் பெற்ற கலை வடிவம். மேற்பாதி மனித உருவத்திலும், கீழ்ப்பாதி மீன் உருவத்திலுமுள்ள அழகிய கடற் கன்னிகள் கடலுக்கு அடியில் வாழ்வதாக அவர் கதைகள் எழுதினார் கடற் கன்னிச் சிலை பற்றிய வரலாறும் சுவாரஸ்யமானது.

காதல் உணர்வுகளும், அதற்காக மேற்கொள்ளப்படும் தியாகங்களும் அற்புதமாகச் சித்திரிக்கப்படும் இந்தக் கதையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பலே நடன நிகழ்ச்சி 1909ஆம் ஆண்டு, டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹேகனில் அமைந்துள்ள றோயல் தியேட்டரில் நடைபெற்றது. இதனைப் பார்த்த தனவந்தர் கார்ல் ஜகொப்சன்

www.padippakam.com



அந்தச் சின்னக் கடற் கன்னிக்கு ஒரு நினைவுச்சின்னம் எழுப்புதல் வேண்டும் என்ற தீவிர எண்ணத்தைத் தமது மனசிலே வளர்த்துக் கொண்டார். அவர் டென் மார்க்கின் அதி சிறந்த கலைப் பாதுகாவலர். இந்தச் சிலையை உருவாக்கும் பொறுப்பு எட்வட் எரிசன் என்னும் சிற்பி வசம் ஒப்படைக்கப்பட்டது. பலே நடனத்திலே சிறிய கடற் கன்னியாக நடனமாடிய எலன் பிறைஸ் டீ பிளேன் என்ற அழகி சிலைக்கு **model**ஆக அமர்தல் வேண்டும் என்றும் தீர்மானிக் கப்பட்டது. எலன் பிறைஸ் அந்தச் சிலையின் முகம் வடிக்கப்படுவதற்கு மட்டுமே மாடலாக அமர்ந்தார். உடலின் வடிவமைப்பை அமைப்பதற்கு நிர்வாண மாக அமரச் சம்மதிக்காதபடியால், உடற் பகுதியை உருவாக்குவதற்கான மாடலாகச் சிற்பி தமது இளம் மனைவியைப் பயன்படுத்தினார் என்பர். லங்கே லினையில் அமைந்துள்ள பாறையிலே இச்சிலை 1913ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23ஆம் நாளன்று வைக்கப்பட்டது. இந்தச் சிலைக்கு இப்பொழுது 83 வயதுகள் ஆகிவிட்டபோதிலும், மாறாத யௌவனத் தினையும் சௌந்தர்யத்தினையும் அது சதா சிந்திக் கொண்டு, உலகெல்லாம் வாழும் கலாபிமானிகளை மயக்கிக் கொண்டிருக்கிறது.

ஹன்ஸ் கிறிஸ்டியன் அனசன் டென்மார்க்கில் உள்ள ஒடென்ஸே என்ற இடத்தில் 02.04 1805ஆம் நாளிலே பிறந்தார். தந்தை ஏழை; சப்பாத்துத் தைக்கும் தொழிலாளி. ஆனாலும் படித்தவர். ‘நான் அவருடைய முழு அன்பையும் பெற்றேன்—அவர் எனக்காகவே வாழ்ந்தார்’ என்று அனசன் தமது தந்தையைப் பற்றி நினைவு கூர்ந்தார். தாய் மூட நம் பிக்கைகள் கொண்ட படிப்பறிவற்றவர். ‘என்னைப் பிரபுவைப் போல வளர்த்தாள்’ எனத் தாயைப் பற்றிக்கூறினார். ‘என்வாழ்க்கையின் கதை’ என்னும்,

www.padippakam.com



அவருடைய சுயசரிதமும் ஓர் அற்புத இலக்கியமாகும். 'என்னுடைய வாழ்க்கை ஓர் அழகிய கதை' என்கிற மகுட வசனத்துடன் அதனைத் துவங்குகின்றார்

அவர் இளம் வயதில் எவ்வளவோ இன்னல்களை அநுபவித்திருக்கிறார். இருப்பினும், கடவுளின் அநுக்கிரகத்தால், தேவதைகள் வழி நடத்தத் தாம் ஓர் உயர்ந்த இலட்சியத்திற்காக வாழ்வதாகக் கற்பித்து அவர் மகிழ்ந்தார். அவர் உணர்ச்சி மயமானவர். கற்பனா உலகத்தில் வாழப் பழகியவர். பதினோராவது வயதில் தந்தையை இழந்தார். பதினான்காம் வயதிலே கோபன்ஹேகன் நகரிலுள்ள றோயல் தியேட்டரில் சேர்ந்தார். பாடகனாகவோ, நடனகாரனாகவோ, நடிகனாகவோ வரலாம் என நினைத்தார். குரல் உடைந்தது ஆனால் அவர் மனம் தளரவில்லை. நாடகங்கள் எழுதினார். அவை நிராகரிக்கப்பட்டன. இருப்பினும், அவருடைய முயற்சிகள் தியேட்டரின் இயக்குநர்களுள் ஒருவரான ஜோனாஸ் கொலின் என்பவரின் அன்பினைச் சம்பாதித்தது. அவருடைய ஆதரவினால் முறையான கல்வி பெற்றார். இந்தக் கல்வி கற்ற காலமும் அவருக்கு இன்பமான அநுபவமாக அமையவில்லை.

1827 ஆம் ஆண்டில், 'சாகும் குழந்தை' என்கிற அவருடைய முதலாவது கவிதை பிரசுரமாயிற்று. தொடர்ந்து எழுதினார். கவிதைகள், கதைகள், நாவல்கள், நாடகங்கள், பயண நூல்கள் என பல தரப்பட்டனவாக அவருடைய இலக்கிய அக்கறைகள் வெளிப்பட்டன. இருப்பினும், அனசனுடைய ஓங்கு புகழ் 1835 ஆம் ஆண்டிலிருந்து 37 ஆண்டுகளாக அவர் எழுதிய கனவுலகக் கதைகளிலும், குழந்தைகள் கதைகளிலுமே பெரிதும் தங்கியிருப்பதாக இலக்கிய வல்லாளர்கள் கருதுகிறார்கள். சிறுவர் இலக்கியத்திற்கு ஒரு புதிய, வலுவான பரிமாணத்தினை வகுத்த

www.padippakam.com



மையினால், உலக இலக்கியத்தின்—இத்துறையின் மூலவராகவும் ஆதர்ஷமாகவும் உயர்ந்தார்.

நாட்டார் கதைகள் (folk lore) நீதிக்கதைகள் (fables) கனவுலக் கதைகள் (fairy tales) ஆகியன குழந்தைகளுடைய கலா ரஸனையை ஈர்ப்பனவாகக் காலங் காலமாக நிலைத்துள்ளன. கதை உலகத்துக்கும் அதன் மூலம் இலக்கிய உலகத்துக்கும் குழந்தைகளுடைய கவனத்தைத் திருப்புதல், அவர்களை நற்குடி மக்களாக வளர்த்தெடுப்பதற்குப் பயனுள்ள உபாயமாகும். இந்தக் கதைகளிலே மிருகங்களும் மரங்களும் மட்டுமல்லாமல், அன்றாட வாழ்க்கையிலிருந்து வேறுபட்ட கனவுலகத் தேவகன்னிகைகளும், தேவதூதர்களும், பிசாசுகளும், நிழல்களும், தூணும் துரும்புகளுங்கூட மனித மொழி பேசும் பாத்திரங்களாகச் சித்திரிக்கப்படும். இந்த உத்தியை உபயோகித்துப் பல ஞானியரும் மேதைகளும் மனித வாழ்க்கைக்குச் சிறப்பாகப் பயன்படும் விழுமியங்களையும், அவை எவ்வாறு மானுஷீக மகத்துவத்திற்குப் பங்களிப்புச் செய்கின்ற என்ற ஞானங்களையும், மக்கள் மத்தியிலே வித்தி வளப்படுத்தினார்கள். இத்தகைய இலக்கியங்களும், இதிகாச மரபுகளும் பண்டைய மொழிகளுக்கு இலககிய வளமாகவும் ஊற்றாகவும் அமைந்தன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தும், அக்காலத்திலே உருவான பொருளியல் நாகரிகத்தினை உள்வாங்கி முகிழத் துவங்கிய இலக்கிய உருவங்களையும் தமது வெளிபாட்டுச் சாதனங்களாகப் பயன்படுத்திய இலக்கிய மேதை அனசன், கனவுலக் கதைகள் என்கிற பழைமை சார்ந்த உருவத்தினை மிகவும் சமத்காரமாகவும் ஞானத்துடனும் கையாண்டு உலக இலக்கியத்துக்குத் தமது பங்களிப்பினை நிறைவாகச் செய்துள்ளார்.

www.padippakam.com



'சக்கரவர்த்தியின் புதிய ஆடைகள்' என்னும் அவருடைய கதை மிகவும் பிரபலமானது. ஏமாற்றுக்காரரின் கற்பிதத்தைக் கண்ணாற் பார்ப்பதாகப் பெரியவர்கள் பாசாங்கு செய்கிறார்கள். 'அவர் மேல் ஒன்றுமில்லையே!' என்று ஒரு குழந்தை கத்துகிறது. வயது வந்தவர்கள் தமது அந்தஸ்துகளையும், அங்கீகரிக்கப்பட்ட செல்வாக்குகளையும் பாதுகாப்பதற்காகப் பொய் பேசும் இயல்பினர். குழந்தை உள்ளம் மாசுபடாதது. சுய ஆதாயம் நத்தாதது. சுயம்புவான உண்மையைப் பேச வல்லது. இத்தகைய மனித இயல்புகளை இக்கதை அச்சாவாகச் சித்திரிக்கின்றது.

இவ்வகையாக அனசன் எழுதியுள்ள கனவுலகக் கதைகளின் எண்ணிக்கை சுமார் இருநூறு. பிற்காலத்தில் 'உருவகக் கதை' என்று எழுந்த இறுக்கமான ஒரு கதை வடிவத்துக்கு அனசனின் இந்தக் கதைகளிலே பல, முன்னோடிகளாகத் திகழ்ந்தன என்பதை இனங்கண்டு இலக்கிய ஆர்வலர்கள் மகிழலாம்.

தற்கால உருவகக் கதை இலக்கியத்திறகுப் புதிய பரிமாணம் சேர்த்த பெருமை கலீல் கிப்ரானைச் சாரும். தாய்மை பற்றி அவர் எழுதிய உருவகக் கதை சகாவரம் பெற்றது. உருவகக் கதை பற்றிய இலக்கணத்தை நன்கு உள்வாங்கியது கிப்ரானின் இலக்கியப் பணி.

அனசனின் ஒரு தாயின் கதை (இத்தொகுதியின் மகுடக் கதையாக, 'தாய்' என்கிற பெயரிலே இடம் பெறுவது) தாயுள்ளத்தின் சகல உணர்ச்சிகளையும், அவள் மேற்கொள்ளும் தியாகத்தின் சகல பரிமாணங்களையும் மிக நேர்த்தியாகவும் நேர்மையாகவும் சித்திரிக்கின்றது. ஈற்றில், குழந்தையின் இழப்பினை எதற்காக ஒரு தாய் தாங்கிக் கொள்ளுகிறாள் என்பதற்கான விளக்கம் சிறுகதைக்கான சடுதியான திருப்பமாக மிக அற்புதமாக அமைகின்றது.

www.padippakam.com



ஓர் உந்நத இலக்கியப் படைப்பு, காலங்களைக் கடந்து, நாட்டின் எல்லைகளைக் கடந்து, என்றும் உளவான மனிதநேயத்தின் சுடர்மிகு ஜோதியைப் பிரகாசித்துக் காட்டுதல் வேண்டும். இந்த இலக்கணத்தினை முழுமையாக அநுசரித்து நிற்பதினாலும், தாயை மகுடக் கதையாகத் தெரிவு செய்ய நேர்ந்துள்ளது. இன்றைய தமிழ் ஈழத்திலே நடக்கும் சமர்களிலே எத்தனை தாய்மார்கள் எப்படி எல்லாம் துன்பங்களை அநுபவிக்கின்றார்கள்? இந்தச் சோகத்தின் கொடுமைகளை அந்த அன்னையர் எப்படித்தான் தாங்குகிறார்கள்? அவர்கள் அடையக்கூடிய அமைதி எதிலே வேரூன்றியுள்ளது? இவற்றிற்கு விடைதேடும் சலன நெஞ்சங்களுக்கு 'தாய்' ஒரு மகத்தான மருந்து!

கடற் கன்னியின் புகழ் குறித்த பிரஸ்தாபம் ஏலவே வந்துள்ளது. எளிமையான முறையிலே, எத்தகைய உடல் உணர்ச்சிகளும் பின்னிப் பிணையாத வகையிலே, ஓர் அமரத்துவ காதற் காவியம் கனவுலகக் கதை என்கிற வடிவத்திலே பின்னப்பட்டிருக்கின்றது. இதனை வாசிக்கும் பொழுது, அனசனின் இலக்கிய மேதமையினால் மட்டுமே இதனைச் சாத்தியமாக்குதல் சாலும் என்கிற மலைப்பு மேலோங்கவே செய்யும். அனசனின் சொந்த வாழ்க்கையில் இரண்டு காதல் தோல்விகள் ஏற்பட்டன. அவருடைய முதற் காதல் அவரது இருபத்தைந்தாம் வயசிலே ஏற்பட்டது. அந்தக் காதலுக்குரியவளுடைய பெயரைத் தனது புதிய நாவலின் கதாநாயகிக்குச் சூட்டப்போவதாகவும் கூறியிருக்கின்றார். அவர்களின் கடைசிச் சந்திப்பு றோயல் தியேட்டரில் நடைபெற்றது. அவள் தன் குடும்பத்தினருடன் அமர்ந்திருந்ததினால், அனசனால் அவளுடன் பேச முடியவில்லை. தியேட்டரிலேஇருந்து வெளியே வரும்பொழுது, அவருடைய கைகளை இரகசியமாகப் பற்றி, கண்ணீர் மல்கும்

www.padippakam.com



கண்களுடன், 'எப்பொழுதும் உங்களைக் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று இரகசியமாகக் கூறினாள். அடுத்த தினம் அவள் பிரிவுக் கடிதம் கிடைத்தது. ஈடேறாக் காதலின் சின்னமான அந்தக் கடிதத்தினை, எப்பொழுதும் தமது தோல் பையிலே கொண்டு திரிந்தார். இந்தக் காதலைப் பற்றி, 'இதயத்தின் சுருதிகள்' என்ற மகுடத்திலே, சோகம் மண்டிய அநேக கவிதைகளாகப் புனைந்தார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பதினைந்து ஆண்டுகள் கழித்து, அவரது நாற்பதாவது வயதிலே, 'சுவீடிஷ் குயில்' என்றழைக்கப்பட்ட புகழ்பெற்ற சுவீடிஷ் பாடகியான ஜென்னி லின்ட்மீது காதல் வசமானார். றோயல் தியேட்டரிலே அவளுடைய பாடல் நிகழ்ச்சி ஒன்று 1845இல் நடைபெற்றது. பின்னர், அவள் டேனிஷ் நண்பர்களுக்கு பிரியாவிடை விருந்தொன்று அளித்தாள். அதிலே அனசனும் கலந்து கொண்டார். பிரதம அதிதி, 'இனி எல்லா டேனிஷ்காரரும் அவளுடைய சகோதரர்களாக வாழ்வார்கள்' என்று தமது பேச்சினை முடித்தார். ஜென்னி லின்ட் பதிலளித்த பொழுது, தான் டேனிஷ் மக்கள் மத்தியிலிருந்து ஒரேயொரு சகோதரரை மட்டும் தேர்ந்தெடுப்பதாகக் கூறி, 'அனசன், நீங்கள் என் சகோதரராக இருப்பீர்களா?' என்று கேட்டாள. அவள் என்ன சொல்லுகிறாள் என்பது அவருக்கு விளங்கிவிட்டது. தான் அவரைக் காதலிக்கவில்லை என்பதைத் தெரிவிக்க அவள் தேர்ந்தெடுத்த பாணி அதுவாகும்! இந்த நிகழ்ச்சி அவருடைய காதற் கனவுகளை நொறுக்கியது. கடற் கன்னியின் காதல் ஏக்கங்களும், ஈற்றில் ஏற்படும் நிராசையும், அனசனின் சொந்த வாழ்க்கையைப் பிரதிபலித்தனவா?

அனசனின் கதைகள் பலவும் மனிதனை,

www.padippakam.com



அவன் இயல்புகளை, அவன் எதிர்நோக்கும் பிரச் சினைகள், அவனுடைய சூழல் ஆகியவற்றையும் ஆழ்ந்த அநுதாபம் மிக்கப் பரிசிலனைக்கு உட்படுத்து கின்றன. மனித இயல்புகள் பற்றிய ஆழ்ந்த சிந்தனை களின குறியீடாகவே 'நிழல்' கதையைத் தரிசிக்க வேண்டும். 'துளிநீர்' என்ற கதையை வளர்ந்து வரும் நகரங்கள் பற்றிய அதிர்ச்சி அறிவித்தல் என்றுகூடக் கொள்ளலாம். 'கூலக்கோதுமை' தற்கால உருவகக் கதையின் அச்சாவான கோலத்தினைக் கொண் டுள்ளது. கர்த்தாவுக்கும் கருவிகளுக்கு மிடையிற் காலம் காலமாக நடைபெறும் பிணக்குகள் பற்றிய பிறிதொரு தரிசனமே 'பேனாவும் மைக்கூடும்'. சமூ கத்தில் ஏற்பட்டுள்ள ஏற்றத் தாழ்வுகளின் அவலக் கோலங்களையும், மனித நேயத்தின் தவிப்பையும் 'சிறிய தீக்குச்சிப் பெண்' நம்முன் நிறுத்துகின்றது. உண்மை—செய்தி—வதந்தி என்கிற சமாசாரங்களை அம்மானையாடுகின்றது 'பூரண மெய்'. சிறாரைப் புதியதோர் கற்பனா உலகத்திற்குள் அழைத்துச் செல்லுகின்றது 'தம்பலினா'. அதீத ஆசைகளைச் 'சிவப்புச் சப்பாத்துகள்' சித்திரிக்கின்றது. பழைய கதைக்கு ஒரு புதிய வடிவம் என்கிற சேதனையுடன் எழுதப்பட்டது 'முட்டாள் ஜாக்'. அபத்தக் கதை வேணுமா? 'அச்சிலே போட்டாற்கூட இது உண்மை யற்றதாகவே கருதப்படும்' என்று 'உயரப் பாய்ச்சல் காரர்' கதையை முடிக்கின்றார். இவ்வாறு, டேனிஷ் இலக்கிய மேதை ஹன்ஸ் கிறிஸ்டியன் அனசனின் அனைத்து அக்கறைகளினதும் வண்ணங்களையும் வகைகளையும் தொட்டுக் காட்டும் வகையில் அமைத் துள்ள கதைகளின் தமிழாக்கம் இந்நூலில் இடம் பெறுதல் திட்டமிடப்பட்ட ஒரு செயற்பாட்டின் விளைவே ஆகும். இருப்பினும் அந்த இலககிய மகா மேதையின் அனைத்துக் கோலங்களையும் எல்லைக் கட்டுடைய இந்தத் தொகுப்பிலே அடக்குதல் சாலா

www.padippakam.com

என்பது விறலியின் அச்சுப்பிழை என்கிற மயக்கம் ஏற் படுமா? பாணப் பெண், பதினாறு வயசுப்பெண் ஆகிய அர்த்தங்களிலே விறலி என்கிற பழந்தமிழ்ச் சொல் பயிலப்படுகின்றது. Tommelise, ஆங்கில மொழி மூலமாக தம்பலினா என்று தமிழிலும் உலா வருவதை அறிவேன். எனவே, அதனையே தமிழ்ப் பெயராக ஞானஸ்நானம் செய்யலாம் எனத் தீர்மானித்தேன். உண்மையில் இது ஒரு வகை Compromise தான். மொழிபெயர்ப்பிலே Compromise — விட்டுக் கொடுத் தல் — சில சமயங்களிலே நியதியாகவும் தர்மமாகவும் விடிவதை இந்நூலாக்கத்தின் போது உணர்ந்தேன். இதனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களோ தெரியாது. ஆனால், என் தளத்தின் நியாயத்தினைச் சொல்ல எனக்கு உரிமையுண்டு.

இறுதியாக, ஆனாலும் முக்கியமாக ஒன்று. சுவீ டன், நோர்வே, டென்மார்க் ஆகிய ஸ்கண்டிநேவிய நாடுகளிலே தற்பொது Kron என்னும் நாணயமே புழக்கத்தில் உண்டு. முன்னர் Skilling என்கிற நாணயம் வழங்கிற்று என்பது இன்றைய தலைமுறை யினருக்குத் தெரியாமல் இருக்கலாம். Skilling என்பதை நமக்கு ஓரளவு பரிச்சயமான Shilling என்கிற ஆங்கில ஓசையையும் முறையையும் பின் பற்றி இங்கு பயின்றுள்ளேன். இதுவும் Compromise தான்! மீண்டும் உங்கள் ஆசிக்கு நன்றி.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com




# BUSK, STEENSGAARD & PARTNERE

தர்மன் தர்மகுலசிங்கம் டேனிஷ் அகதி கவுன்ஸலில் மொழிப்பெயர்பாளராய் பணியாற்றி, இப்பொழுது தம் மனைவியுடன் நான்கு பிள்ளைகளுடனும் வாழும் வையேனில் தபால்திணைகளத்தில் பணியாற்றுகிறார்.அவர் சுறுசுறுப்பானவர், நேசமனப்பான்மைமிக்கவர்.டேனிஷ் சமூகத்துடன்இணைந்து, கலாசாரத்தினை த வயப்படுத்தும் ஆற்றல் உள்ளவர். இதன் பிரதிப்பலிப்பாகவே அவர் டென்மார்க்கின் ஹன்ஸ் கிறிஸ்டியன் அனஸன்அவர்களுடை அமர கதைகளை தமிழாக்குவதிலே சிரத்தை ஊன்றினார்.அவருடனான உரையாடல்கள் மூலமே தமிழர் பின்னணி கலாச்சாரம் ஆகியவற்றிலே நான் உள்ளொ பெற்றேன். அவருடைய இந்தத் தமிழாக்கம் அநேக தமிழர்களுக்கு இன்பந்தருமெனப்பூரணமாய் நம்புகிறேன்.



படிப்பகம்